

குற்றம், தண்டனை, மரண தண்டனை

அ. மார்க்ஸ்

கருப்புப் பிரதிகள்

குற்றம், தண்டனை, மரண தண்டனை
அ. மார்க்ஸ்

முதற்பதிப்பு: டிசம்பர் 2013
வெளியீடு: கருப்புப் பிரதிகள்
பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை
சென்னை 600 005 பேச: 9444272500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com
முகப்பு: விஜயன்
உள்வடிவமைப்பு: ஜீவமணி
அச்சாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை 600 005

விலை: ரூ 100.00

kuRRam, thaNdanai, maraNa thaNdanai
A. Marx

First Published: December 2013
by Karuppu Pradhigal
B55, Pappu Masthan Darga, Lloyds Road,
Chennai 600 005, Tamil Nadu, South India
Mobile: 94442 72500
Email: karuppupradhigal@gmail.com
Cover: Vijayan
Layout: Jeevamani
Printed by: Jothy Enterprises, Chennai 600 005

Price: Rs. 100

என் அன்பிற்குரிய மாணவர்கள்
தகட்டூர் ரவி மற்றும் தய்.கந்தசாமி
இருவருக்கும்.



கருப்புக் குறிப்புகள்

இடஒதுக்கீட்டை அவதூறு செய்யும் பார்ப்பனர்களும் மீடியாக்களும் எப்படி 'தகுதி திறமை' பாதிக்கப்படுவதாய் சொல்வார்களோ அது போன்றது நமது நாட்டின் ஜனநாயக தூணில் அமர்ந்தவாறு தீர்ப்பெழுதிவரும் தண்டனை அதிபர்கள் உதிர்க்கும் வார்த்தைகள் "பொதுச் சமூகத்தின் கூட்டு மனநிலையை திருப்திப்படுத்த வேண்டியுள்ளது."

இலட்சக்கணக்கான சேரிச் சிறைச்சாலைகளாய், சாதிய சதிக்கூடங்களாயும் சிதறிக்கிடக்கும் மக்களுக்குள் இவர்கள் ஒருவருக்கு மரண தண்டனை வழங்குவதற்கு மட்டும் எப்படி கூட்டு மனநிலையை உருவாக்க இயலும்? இப்பிரதியை வாசிக்க நேர்கையில் நமக்கு உருவாகும் கருத்து. மரணத்தை வழங்கியேத் தீருவது என்பதில் வேண்டுமானால் ஆதிக்கசாதி நீதிபதிகளுக்குள் 'கூட்டு மனநிலை' உருவாகக்கூடும் என்பதே.

ஈழத்தமிழர் படுகொலைகளை மையப்படுத்தி மிகச் சமீபத்தில் தமிழர் என்றும் தமிழ்த்தேசிய ஓர்மை என்கிற பொய்மைகள் வெறும் தோற்ற மாயைதான் என்பதை ராமதாசின் சாதிய அரசியல் நிரூபித்துக் காட்டியதோடு, 'தலித் அல்லாதார்' என்கிற சாதியக் கூட்டு மனநிலையை மறுமலர்ச்சி செய்ய முயல்வதை வேண்டுமானால் கூட்டு மனநிலையாய் கொள்ளமுடியும். அதேபோன்று கொலை செய்வதையும், கொள்ளை அடித்தலையும் வெறியேற்றப்பட்ட ஒரு இந்து மனநோயாக மாற்றியதிலும், அவற்றை மோடியும் பா.ஜ.கவும் குஜராத்தின் தேர்தல் வெற்றியாக்கிக் கொண்டதிலும் வேண்டுமானால் ஒரு கூட்டு மனநிலையாக்கத்தை உணரலாம்.

மதச்சார்பின்மை, சாதி ஒழிப்பு, பகுத்தறிவுச் சிந்தனை என்கிற ஆக்கச் சிந்தனைகள் விதந்தோதப்பட்ட தமிழகத்திற்குள் ஈழப் பிரச்சினையை மட்டும் முன்வைத்து பேரறிவாளனின் மரண தண்டனைக்கெதிராக மட்டும் போராடிக் கொண்டு

அஃப்சலின் மரணத்தை கண்டு கொள்ளாததோடு, அப்சலுக்கு தண்டனை வழங்கியதில் பெரும் முனைப்புக் காட்டிய பா.ஜ.க., இந்து வெறிக் கொலைகாரக் கும்பலோடு எவ்விதக் கூச்சமுமன்றி ஈழக் கூத்தடிக்கவும், தமிழகத்தையும், பெரியாரையும் காட்டிக்கொடுக்கவும் முயலும் நெடுமாறன் மாதிரியான கெடுமாறன்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசியர்களின் வெளிப்பாடுகளில் வேண்டுமானால் பார்ப்பன – வேளாள கூட்டு மனநிலைகளை காண முடிகிறது. மாறாக 'கூட்டு மனநிலைகள் சமூக ஜனநாயகம்' என்கிற ஆக்க சிந்தனைகள் இந்து பெருநோயின் அழிவிலும், வீழ்ச்சியிலும் உருவாக்கப்படவேண்டியவை என்பதே எதார்த்தம்.

இச்சூழலில், இந்துத்துவ எதிர்ப்பிலும் பார்ப்பன எதிர்ப்பிலும், பாசிச எதிர்ப்பிலும் பெரும் உயிர்ப்போடு செயல்பட்டு வரும் அ. மார்க்ஸ் எல்லாவித மரணதண்டனைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து எதிர்வினையாற்றி வருபவர். இப்புரிதலோடு இந்தியாவில் மரண தண்டனைகளை வழங்குகிற நீதி 'அரசர்'களின் பின்புலங்களை படுகொலை செய்யப்படுகிற கைதிகளின் சமூகப் பிண்ணனிகளையும் விவாதக் களமாக்குகிறார்.

'தீர்ப்பெழுதும் போதே நீதி செத்துவிடுகிறது' என்கிற உன்னத மனிதஉரிமை முழக்கத்தை நீண்ட காலமாய் முன்வைத்து இயங்கிவருகிற அ. மார்க்ஸின் மரண தண்டனைக்கெதிரான தத்துவ, அரசியல், பண்பாட்டினை நிலைப்பாடாய் கொண்டுள்ள இக்கட்டுரைகளையும் அஃப்சலுக்கு தூக்கு தண்டனை தீர்ப்பளித்த காலத்தில் வெளியான அவரது 'அஃப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா?' என்கிற தொகுப்பினையும் இணைத்து முழு நூலாக கொண்டு வருவதிலும், கருப்புப்பிரதிகள் அதன் மன நிறைவை எய்துகிறது. நூலை பதிப்பிக்க வாய்ப்பளித்த தோழர் அ. மார்க்ஸிற்கும், தோழி அமுதா, தோழர்கள் ஷோபாசக்தி, மதிவண்ணன், புனிதபாண்டியன், பானு தமயந்தி, மெலிஞ்சிமுத்தன், அறிவொளி, ஜீவமணி, விஜயன், விஜய். ஆனந்த் (பெங்களூரு), தேவதாசன் உள்ளிட்ட உற்ற நண்பர்கள் குழாமிற்கு நன்றியறிதல்களை சமர்ப்பிக்கின்றேன்.

தோழமை சார்ந்து

நீலகண்டன்



உள்ளே...





முன்னுரை

நமது அரசு மற்றும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கான நியாயங்களை நாளுக்கு நாள் வழங்கிக் கொண்டே உள்ளன. ஒரு ஜனநாயக அரசிற்குரிய நியதிகளை எல்லாம் மீறி, கட்டிய மனைவிக்கும் பெற்ற மகனுக்குக்கும் கூடத் தெரியாமல், மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில், உயிர்களைப் பறிக்கும் நிலையை நமது அரசு மேற்கொள்வது மட்டுமின்றி அதை நியாயப்படுத்தவும் செய்கிறது. இப்படி இரகசியமாகத் தூக்கிலிடுவதை வெளிப்படையாக நியாயப்படுத்துகிறார் உள்துறை அமைச்சர் ஷிண்டே. கருணை மனுக்களின் தற்போதைய நிலை குறித்த உண்மைகளைச் சொல்ல இயலாது எனக் கையை விரிக்கிறது குடியரசுத் தலைவரின் செயலகம்.

இன்னொரு பக்கம் எந்தப் பிரச்சினையிலும் இறுதி நீதியை வழங்கும் அதிகாரமிக்க உச்ச நீதிமன்றம் இந்த உயிர்ப் பிரச்சினையில் தான் ஏற்கனவே வழங்கியுள்ள தீர்ப்புகள் சில தவறானவை என வெளிப்படையாக அறிவிக்கிறது. தூக்குக் கொட்டடி வாசலில் கடந்த பல ஆண்டுகளாக நின்று கொண்டுள்ள, குறைந்த பட்சம் 14+3=17 கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனைகள் தவறானவை என முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் அறிவிக்கின்றனர். அவர்களுக்கு மன்னிப்பையேனும் அளியுங்கள் எனக் குடியரசுத் தலைவரிடம் மனு அளிக்கின்றனர்.

இவை குறித்து இந்நூலில் உள்ள பலகட்டுரைகள் மிக விரிவாகவும், உரிய சட்ட நுணுக்கங்களின் பின்னணியிலும் ஆராய்கின்றன.

மேல்முறையீட்டு மனுவை விசாரித்து மரண தண்டனையை உறுதி செய்யும் உச்ச நீதிமன்ற அமர்வுகளில் சில, கிட்டத்தட்டக்

கசாப்புக் கடைகளைப் போல வரும் வழக்குகள் அனைத்திலும் மரண தண்டனைகளை வாரி வழங்குவதையும், சில அமர்வுகள் எல்லா வழக்குகளிலும் தண்டனையைக் குறைத்து ஆணையிடுவதையும் பார்க்கிறோம். எந்த அமர்வின் முன் தன் மனு வர வேண்டும் எனத் தேர்வு செய்யும் உரிமை இல்லாத மனுதாரருக்குத் தன் உயிர் பறிக்கப்படுவதும், நிலைக்கப் போவதும் முற்றிலும் அவரது 'அதிர்ஷ்டம்' சார்ந்த விஷயமாகிவிடுகிறது. அதிர்ஷ்டத்தை நம்பாதவர்கள் வேறு ஏதாவது விளக்கங்களை முயற்சித்துக் கொள்ள வேண்டியதுதான். இந்த அபத்தம் குறித்தும் உள்ளே உள்ள கட்டுரைகள் விரிவான ஆதாரங்களுடன் பேசுகின்றன.

இந்த நூலுக்கான கடைசிக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போதுதான் தேவேந்திர சிங் புல்லார் வழக்கில் நீதியரசர்கள் ஜி.எஸ். சிங்வியும், எஸ்.ஜே. முகோபாத்யாவும் பயங்கரவாதக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்குகளில் மரண தண்டனை நிறைவேற்றத்திற்கான நீண்டகால தாமதங்களால் ஏற்படும் மன உளைச்சல்களைக் கணக்கில் கொண்டு, அம் மரணதண்டனை குறைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்க இயலாது எனத் தீர்ப்பளித்திருந்தனர். இது ஏப்ரல் 12 (2013) அன்று அளிக்கப்பட்டது. சரியாக அடுத்த இருபதாம் நாள் அதே அமர்வு மகேந்திரநாத் தாஸ் வழக்கில் தண்டனை நிறைவேற்றத்திற்கான 12 ஆண்டு கால தாமதத்தைக் கணக்கில் கொண்டு அவரது தண்டனையைக் குறைத்து ஆணையிட்டுள்ளது.

இந்த முரண் எதைக் காட்டுகிறது? மேலோட்டமாகப் பார்க்கும்போது, குடியரசுத் தலைவர் கருணை அளிக்க மறுத்தபோதும், தண்டனை வழங்கலில் ஏற்பட்ட காலதாமதத்தை முன்னிட்டு நீதிமன்றம் தலையிட்டு தண்டனையைக் குறைக்கலாம்; ஆனால் பயங்கரவாதக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களுக்கு இது பொருந்தாது என்பதே நீதிமன்றத்தின் கருத்து என நாம் புரிந்து கொள்கிறோம். எனினும் இந்த இரு தீர்ப்புகளையும் கூர்ந்து நோக்கும் போது அவைகளுக்கிடையே உள்ள முரண்பாடு பல நுணுக்கமான சட்ட முரண்களைச் சுமந்துள்ளது வெளிபடுகிறது.

தண்டனை நிறைவேற்றத்திற்கான கால தாமதத்தைக் கணக்கில் கொண்டு மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க

உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு என்பது "திரிவேணிபென் எதிர் குஜராத் அரசு" என்னும் வழக்கில் 1989ம் ஆண்டு ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல்சட்ட அமர்வு ஒன்று அளித்த தீர்ப்பின் ஊடாக மலர்ந்த ஒரு நீதி நெறி. பயங்கரவாதக் குற்றங்களுக்கு இது பொருந்தாது என எதுவும் அத் தீர்ப்பில் கூறப்படவில்லை. தவிரவும், திரிவேணிபென் தீர்ப்பு ஒரு முக்கிய நிபந்தனையை உள்ளடக்கியிருந்தது. நீதிமன்றம் காலதாமதத்தின் தன்மையையும் தண்டனை அறிவிக்கப்பட்டதற்குப் பிந்திய சூழல்கள் சட்டபூர்வமானவைதானா என்பதையும் மட்டுமே கணக்கில் கொள்ளவேண்டும்; எக்காரணம் கொண்டும் காலதாமதத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு தண்டனை வழங்கப்பட்டபோது வழக்கு தொடர்பாகக் கூறப்பட்ட முடிவுகளை விவாதிக்கக் கூடாது என்பதே அந் நிபந்தனை *(The delay jurisdiction would not enable the Court to reopen the conclusions reached by the Court while finally maintaining the sentence of death)*.

ஆனால் சிங்வி அமர்வு புல்லார் தீர்ப்பின் இந்த முக்கிய நிபந்தனையைப் புறக்கணித்தது. தண்டனைக் குறைப்பு குறித்த முறையீட்டில் தீர்ப்பு வழங்க, அது காலதாமதத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல், புல்லாருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோது முன்வைக்கப்பட்ட முடிவை, அதாவது புல்லார் ஒரு பயங்கரவாதக் குற்றவாளி என்கிற முடிவைத் தன் இன்றைய தீர்ப்புக்குப் பயன்படுத்திக் கொண்டது. ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல்சட்ட அமர்வு ஒன்று அளித்த ஒரு தீர்ப்பை இரண்டு நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வு மீறியது சட்டநெறிமுறைகட்கு ஏற்புடையதல்ல.

சிங்வி அமர்வு அத்தோடு நிறுத்திக்கொள்ளவுமில்லை. கால தாமதத்தின் தன்மையையும் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. தண்டனை நிறைவேற்றத்தில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு அது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தது. மே 2001 முதல் மே 2005 வரை புல்லார். சார்பாகப் பலரும் தண்டனைக் குறைப்பு மனுக்களையும் பல்வேறுபட்ட அழுத்தங்களையும் உள்நாட்டிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் கொடுத்த வந்தனராம். "காலதாமதத்திற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது" எனக் கூறி புல்லாரின் தண்டனைக் குறைப்பு மனுவைத் தள்ளுபடி செய்தது.

1993 செப்டம்பர் 10 அன்று, அன்றைய இளைஞர் காங்கிரஸ் தலைவர் மணீந்திரசிங் பிட்டா தன் பரிவாரங்களுடன் வந்து கொண்டிருந்தபோது நடத்திய ஆர்.டி.எக்ஸ் குண்டுத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். 17 பேர் காயமடைந்தனர். பிட்டா காயங்களுடன் உயிர் தப்பினார். தேடப்பட்ட புல்லாரை ஃப்ராங்பர்ட் விமான தளத்தில் வைத்துக் கைது செய்த ஜெர்மன் அரசு அவரை இந்திய அரசிடம் ஒப்புவித்தது. தடா சட்டத்தில் விசாரிக்கப்பட்ட அவருக்கு வழங்கபட்ட மரண தண்டனையை நீதியரசர் அர்ஜித் பசாயத் தலைமையிலான மூவர் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு 2002ல் 2:1 என்ற வீதத்தில் உறுதி செய்தது. புல்லாரின் ஒப்புதல் வாக்குமூலம் பிற சான்றுகளால் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி நீதியரசர் எம்.பி. ஷா மற்ற இருவரும் வழங்கிய மரண தண்டனைக்கு மறுப்பு தெரிவித்தார்.

புல்லாரைக் கைது செய்து ஒப்படைத்த ஜெர்மன் அரசு தனது நாட்டில் மரண தண்டனை இல்லாததால், ஒப்படைப்பு நெறிமுறைகளின்படி தமது நாட்டில் இல்லாத ஒரு தண்டனையை அவருக்கு வழங்கலாகாது என இந்திய அரசைக் கேட்டுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்திய அரசு மனம் இளகவில்லை. புல்லாரின் கருணை மனுவை நிராகரிக்குமாறு உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்தது. மூவர் கொண்ட அமர்வில் ஒருவர் மறுப்புரைத்தாலும் கருணை அளிக்கப்பட வேண்டும் என்கிற நியதியை மீறி இந்தப் பரிந்துரை அளிக்கப்பட்டது. கலாம் தனது பதவிக் காலம் முழுவதும் அதன்மீது எந்த முடிவும் எடுக்கவில்லை. கலாம் போய் பிரதிபா வந்தபின்னும் உள்துறை அமைச்சகம் தனது முடிவை மறு பரிசீலனை செய்யத் தயாராக இல்லை.

2011ல் இத்தகைய நீண்ட கால தாமதத்தைக் காட்டித் தனது தண்டனையைக் குறைக்க வேண்டுமென புல்லார் உச்ச நீதிமன்றத்தை நாடினார். இதை அறிந்த உள்துறை அமைச்சகம் புல்லாரின் கோப்பைக் குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து திரும்பப்பெற்றது. அன்றைய உள்துறை அமைச்சர் சிதம்பரம், புல்லார் ஒரு பயங்கரவாதக் குற்றவாளி என்பதால் அவருக்குக் கருணை அளிக்க இயலாது எனக் குறிப்பு எழுதி மீண்டும்

குடியரசுத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பினார். 2011 ஜூன் 13 அன்று பிரதிபா படீல் புல்லாரின் மனுவை நிராகரித்தார். புல்லார் தான் தொடுத்திருந்த வழக்கை இந்த நிராகரிப்பிற்கு எதிராக மாற்றிக் கொண்டார்.

இப்போது மகேந்திரநாத் தாஸ் வழக்கிற்கு வருவோம். அவரது கருணை மனுவைப் பரிசீலித்த குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், தாஸ் முன்கூட்டித் திட்டமிட்டுக் கொலை செய்யவில்லை என்பதை எடுத்துக் காட்டி, ஏதோ ஒரு சமனற்ற மனநிலையில் செய்யப்பட்ட குற்றத்திற்காக அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டியதில்லை என உள்துறை அமைச்சகத்திற்குக் குறிப்பு அனுப்பினார் (செப் 30, 2005). மத மற்றும் அறவியற் கருத்துக்கள் மற்றும் கவுன்சிலிங் மூலம் அவரைத் திருத்த இயலும் என்றும் குறிப்பிட்டார். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உள்துறை அமைச்சகம் இது தொடர்பாக எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. பிரதீபா பதவி ஏற்ற பின்னும் இது தொடந்தது. அக்டோபர் 12, 2010 அன்று தாசின் கருணை மனுவை நிராகரிக்குமாறு உள்துறை அமைச்சகம் கருத்துத் தெரிவித்ததை ஏற்று பிரதீபா தாசின் மனுவை நிராகரித்தார்.

இது தொடர்பாகத் தாஸ் தொடர்ந்திருந்த வழக்கில் அவருக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கிய சிங்வி அமர்வு அதற்குச் சொன்ன காரணங்களில் ஒன்று, அக்டோபர் 12 அன்று உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவர் பிரதீபா படீலின் முன் வைத்த ஆவணங்களில் முந்தைய குடியரசுத் தலைவர் இது குறித்துத் தெரிவித்த கருத்தை அவரது கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்பது. அதாவது கருணை மனுவை நிராகரித்த குடியரசுத் தலைவருக்கு அவ்வழக்கு மற்றும் மனு தொடர்பான உரிய தகவல்கள் தெரிவிக்கப்படாத நிலையில் அவர் அதைச் செய்திருந்தால் அந் நிராகரிப்பு செல்லாது என்றாகிறது.

ஆனால் புல்லார் வழக்கில் குறைந்தபட்சம் இதுபோன்ற இரு முக்கிய தகவல்கள் குடியரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப் படவில்லை. புல்லாருக்கு மரண தண்டனை வழங்கிய அமர்வில் பங்குபெற்ற மூன்று நீதிபதிகளில் ஒருவர் மரண தணடனையை ஏற்கவில்லை என்பதும், புல்லாருக்கு மரண தண்டனை வழங்குவது 1962ம் ஆண்டின் குற்றவாளிகள் ஒப்படைப்புச் சட்ட விதிக்கு எதிரானது (Section 34C of the

Extradition Act, 1962) என்கிற முக்கிய தகவல்கள்தான் அவை. இந்த உண்மைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலேயே புல்லாரின் கருணை மனு குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை சிங்வி அமர்வு கண்டுகொள்ளவில்லை.

எப்படிப் பார்த்தாலும் சிங்வி - முகோபாத்யாயா அமர்வு மூன்று வார இடைவெளிக்குள் ஒரே மாதிரியான இவ் இரு வழக்குகளிலும் அளித்துள்ள முரண்பட்ட தீர்ப்புகளை யாரும் விளக்கிவிட இயலாது. இத்தகைய விளக்க இயலா நிலை மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்கிற கருத்திற்கு வலு சேர்க்கிறது.

OOO

இந்நூலில் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ள "அஃப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா எனும் குறுநூல் 2006ல் குருவிற்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டு, நாடெங்கிலும் இந்துத்துவ சக்திகள் அவரது உயிரைக் காவு கேட்டுக் கொண்டிருந்த பின்னணியில் வெளியிடப்பட்டுப் பெரிய அளவில் தமிழ்ச் சூழலில் வரவேற்பிற்குள்ளானது. டெல்லியில் இக்குறுநூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, எங்கள் கைக்குக் கிடைத்த ஒரு வாரத்தில் அதை மொழிபெயர்த்து, அடுத்த சில நாட்களில் அதை வெளியிடவும் செய்தோம். ராம் புனியானியின் கட்டுரை மொழியாக்கமும், அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களுக்கு நான் எழுதிய கடித வடிவக் கட்டுரையும் தமிழ் மொழியாக்கத்தில் கூடுதலாய் இணைக்கப்பட்டன. டெல்லி நண்பர்கள், "கலாம், உங்கள் ஊர்க்காரராயிற்றே, தமிழில் உள்ள இந்த வெளியீட்டை ஒருவேளை அவர் முழுமையாகப் படிக்கலாம். அவரை ஒரு குழுவாய்ச் சென்று சந்திக்கப் போகிறோம். அப்போது கொடுக்கிறோம்" என அதைக் கேட்டு வாங்கிக் கொண்டார்கள். 'மனித நீதிப் பாசறை' அமைப்பின் சார்பாக, 'விடியல் வெள்ளி' இதழின் அன்றைய ஆசிரியர் குலாம் முகம்மது அவர்கள் இக்குறுநூற் பிரதிகளை நூற்றுக் கணக்கில் வாங்கித் தமிழகமெங்கும் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டு மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

நான்காண்டுகளுக்கு முன் முஸ்லிம் சிறை கைதிகளின் விடுதலைக்காக நாங்கள் கூட்டிய மாநாட்டிற்காக பேரா. எஸ்.ஏ.ஆர். கீலானி சென்னைக்கு வந்தபோது கருப்புப் பிரதிகள்

நீலகண்டனை அவருக்கு அறிமுகம் செய்து இந்தக் குறுநூற் பிரதியை அவரிடம் அளித்தபோது அவர் நெகிழ்ந்து போனார்.

அன்று அஃப்சல்குரு உயிருடன் இருந்தார். இன்று அவர் நம்முடன் இல்லை. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு எனத் தன்னைப்பற்றிப் பீற்றிக் கொள்ளும் இந்திய அரசு, ஒரு திருடனினும் கேவலமாக நள்ளிரவில் அவரது கொட்டடிக்குள் புகுந்து யாருக்கும் தெரியாமல் அவரது உயிரைக் காவுகொண்டது. உயிருடன் இருந்தபோதும் இறுதி நேரத்தில் அவர் தனது அன்பு மனைவியையும் ஆசை மகனையும் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அவரது உயிர் பறிக்கப்பட்ட உடலுக்கும் அஞ்சலி செலுத்தி, இறுதிக் கடமைகளை ஆற்றவும் அவரது குடும்பத்தாருக்கு வாய்க்கவில்லை.

அப்பட்டமான ஓட்டு வங்கி அரசியலுக்காக, காஷ்மீர மக்கள் மேலும் அந்நியப்பட்டுப் போவது குறித்துக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல் அஃப்சல் விஷயத்தில் அற்பத்தனமாகவும் கொடூரமாகவும் நடந்து கொண்டது காங்கிரஸ் அரசு. அஃப்சலின் வழக்கு நடத்தப்பட்டு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட வரலாறு ஒன்று போதும், ஏன் மரண தண்டனை சட்டநூற்களிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு. நமது அரசியல்வாதிகள், அரசு நிர்வாகம், உளவுத்துறை, நீதிமன்றம் அனைத்தும் இணைந்து மேற்கொண்ட படுகொலை அது. அவ்வழக்கு விசாரணையில் இருந்தபோது நாள்தோறும் அருகிருந்து செய்தி அனுப்பிய பத்திரிக்கையாளர் அஞ்சலி மோடியின் அற்புதமான கட்டுரையும் (Chronicle of a Death Foretold : The Story of Mohammed Afsal, EPW, March 16, 2013), புகழ்பெற்ற வழக்குரைஞரும், அரசியல் சட்ட வல்லுனருமான ஏ.ஜி. நூரானியின் How a Life Was Rendered 'Extinct', Frontline, May 31, என்கிற கருத்துச் செறிவும், இலக்கிய நயமும், சட்ட நுணுக்கங்களும் மிக்க ஆய்வும் அஃப்சல் குரு வழக்கில் இந்திய நீதிமன்றங்கள் எவ்வாறு அநீதிமன்றங்களாக நடந்து கொண்டன என்கிற கொடுமையை விளக்கப் போதுமானவை.

ஒரு கைதி, அவர் கைது செய்யப்பட்ட கணத்திலிருந்தே வழக்குரைஞரை அமைத்துக்கொள்ள உரிமை பெற்றவர் ஆகிறார். ஆனால் அஃப்சலுக்கோ விசாரணைக் காலத்தின் பெரும்பகுதியும் வழக்குரைஞர் யாருமில்லாமலே கழிந்தது.

பிறகும் கூட அவருக்காக நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள் அவருக்குத் துரோகம் இழைத்தனர். “ஆம் நான் அஃப்சலைச் சித்திரவதை செய்தேன். அவன் ஆசன வாயில் பெட்ரோலை ஊற்றினேன். அவனுக்கு எலெக்ட்ரிக் ஷாக் கொடுத்தேன்” என்றெல்லாம் விளாவாரியாகப் பேட்டிகொடுத்த டி.எஸ்.பி டிராவின்டர்சிங், பத்திரிக்கையாளர் சந்திப்பில் எல்லோருக்கும் முன் அவரை மிரட்டிய உதவி ஆணையரும். என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட் என அறியப்பட்டவனும், ஊழலில் சேர்த்த பணத்தை ரியல் எஸ்டேட்டில் முடக்கி அதில் வந்த தகராறில் தொழிற் கூட்டாளி ஒருவனால் ஒரு நாயைப் போலச் சுட்டுக் கொல்லப்பட்டவனுமான ராஜ்பீர் சிங், இவர்கள் யாரும் முறையாக விசாரிக்கப்படவில்லை.

விசாரணை நீதிமன்றம், உயர் நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் ‘தீர்ப்புகளை’ எழுதிய மாண்புமிகு நீதியரசர்கள் திங்ரா, உஷா மேஹ்ரா, ப்ரதீப் நவ்ஜோக், பி. வெங்கட்ராம ரெட்டி, பி.பி. நவ்லேகர் எல்லோரும் அஃப்சலுக்கு மரண தண்டனை வழங்குவதற்கும், அதை உறுதிப்படுத்துவதற்குமான நியாயங்களுக்கு ஏற்பட்ட பஞ்சத்தின் விளைவாக, தேசபக்திச் சொல்லாடல்களில் சரண் புகுந்தனர். பாராளுமன்றத் தாக்குதலின் விளைவாக இந்தியா ஒரு போரின் விளிம்புவரை அல்லவா சென்று திரும்பியது என வியந்தனர் உயர் நீதிமன்ற நீதிபதிகள். சமூகத்தின் கூட்டு மனச்சாட்சியைத் திருப்தி செய்வதற்கு இந்த மரண தண்டனை அவசியம் என்றனர் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள். “(அஃப்சல்) தேசத் துரோகத்தைத் திரும்பத் திரும்பச் செய்யும் மனச் சாய்வுடையவன். அவன் இந்தச் சமூகத்தின் தீமை, அவன் வாழ்வு அழித்தொழிக்கப்படவேண்டும்” எனக் கொஞ்சமும் கூசாமல் தீர்ப்பெழுதினர் உச்ச நீதியரசர்கள்.

நூரானி சொல்வார்: தேசத் துரோகத்தைத் திரும்பத் திரும்பச் செய்யும் மனச் சாய்வுடையவன் என்கிற குற்றச்சாட்டை, வழக்கு தொடுத்த காவல்துறை கூட முன்வைக்கவில்லை. ஒரு நீதிபதி இப்படிச் சொன்னாரே... ஒரு கீழ்த்தரமான சினிமா வில்லனைப் போல உன் உயிரை வாங்காமல் இருக்க மாட்டேன் என வசனம் எழுதும் வழக்கம் உலக நீதி வழங்கு வரலாற்றில் எங்கேனும் உண்டா? மரண தண்டனை தவிர்க்க இயலாது என வரும்போது மிகுந்த தயக்கம், வேதனை, பச்சாதாபம்,

ரொம்பவும் மோசமான குற்றமாயினும் கூட சொற்களில் மிகுந்த கட்டுப்பாடு ஆகியவற்றுடன்தானே அந்த இறுதி வரிகளை எழுதுவது வழக்கம்?

"சமூகத்தின் கூட்டு மனச்சாட்சியை திருப்தி செய்வதற்காகத்தான் மரணதண்டனை வழங்கலாயிற்று" என்கிற தீர்ப்பு வாசகங்கள் பலராலும் விமர்சிக்கப்பட்டாயிற்று. நூரானி கேட்பார்: இத்தகைய சொற்களைத் தயக்கமின்றிப் பயன்படுத்திய இந் நீதிபதிகள் எந்த அளவிற்கு வழக்கு தொடர்பான சிக்கலான உண்மைகளையும் சட்ட நுணுக்கங்களையும் நியாயமாகவும், நடுநிலையுடனும், உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமலும் எதிர் கொண்டிருப்பர்?

குற்றவியல் வழக்குகளைப் பொருத்தமட்டில் அங்கே தேசபக்தி அல்லது வேறு வகைக் கருத்தாடல்களுக்கு இடமில்லை. நீதிமன்றத்தின் பணி அதன் முன் வைக்கப்பட்டுள்ள தொடர்புடைய உண்மைகளையும், ஆதாரங்களையும், சாட்சியங்களையும் நடு நிலையோடு ஆய்வு செய்து, ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளின் வழிநின்று தீர்ப்பு எழுதுவதே.

லார்ட் மேன்ஸ்ஃபீல்டை மேற்கோள் காட்டி நூரானி கூறுவார்: "அரசின் காரணங்கள் தீர்ப்பில் செல்வாக்கு செலுத்துவதை அரசியல் சட்டம் அனுமதிப்பதில்லை. இந்தப் பிரபஞ்சமே இடிந்து விழுந்தாலும் நீதியை உரைப்பதே நீதிமன்றத்தின் கடன்". எனில் யுத்தத்தையோ, தேசபக்தியையோ, கூட்டு மனச் சாட்சியையோ காரணம் காட்டி நீதிக்குப் புறம்பாக ஓர் உயிரைப் பறிப்பது என்ன நியாயம்?

ஆனாலும் மரண தண்டனை அல்லது போலி என்கவுண்டர் முதலான விவாதங்களில் பெரும்பான்மைச் சமூகத்தின் பொதுப் புத்தி இவற்றிற்கு ஆதரவாக இருப்பதே நாம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினை. சமூகக் கருத்துருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஊடகங்கள், அதுவும் மாநில மொழி ஊடகங்கள் பொதுப் புத்தியில் ஆதிக்கம் செலுத்தும் மரண தண்டனை ஆதரவுக் கருத்துக்களுக்கு வலு சேர்ப்பவையாகவே உள்ள நிலை மேலும் கவலைக்குரிய ஒன்றாக உள்ளது. அஃப்சலின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபோது நமது தமிழ் ஊடகங்கள் அதை எவ்வாறு எதிர் கொண்டன என்பது குறித்து மிக விரிவான ஒரு ஆய்வை 'கவனிக்கிறோம்' என்கிற ஊடகக் கவனிப்பு

வலைத் தளம் ஒன்றில் மீனா முன்வைத்திருந்தது இங்கே குறிபிடத்தக்கது (மீனா, “அப்சல் குரு: இரண்டாவது முறை தூக்கிலிட்ட நாளிதழ்கள்” <http://gavanikkirom.blogspot.in/2013/02/blog-post.html?m=l>. இதே தளத்தில் இது குறித்த அவரது மேலும் இரு கட்டுரைகளையும் காணலாம்.) இந்து குழும இதழ்களான இந்து நாளிதழ் மற்றும் ஃப்ரன்ட்லைன் மாதமிருமுறை இதழ்கள் ஆகியன பொதுப் போக்கின் விதி விலக்குகள். இந்த இதழ்களில் வெளி வந்த பல கட்டுரைகள், குறிப்பாக வி. வெங்கடேசனின் கட்டுரைகள் இந்த நூல் உருவாக்கத்தில் பெரிதும் பயன்பட்டன.

○○○

ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோது அதற்கு எதிராகத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாடொன்று சென்னை எல்.எல்.ஏ அரங்கில் நடத்தப்பட்டது. அதில் நான் ஆற்றிய உரையும் இந்தத் தொகுப்பில் இடம் பெறுகிறது. உறுதிப்பாடுகளின் சாத்தியமின்மை என்கிற பின் நவீனக் கருத்தாக்கத்தினடியாக மரண தண்டனை வழங்கலின் அபத்தத்தை அதில் விளக்கியுள்ளேன்.

மரணதண்டனைக்கு எதிராகத் தமிழில் பல வெளியீடுகள் வந்துள்ளன. நமது சட்டங்கள், நீதிமன்றங்கள் அவற்றை அணுகுதலில் உள்ள பிரச்சினைகள், ‘அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டன வழங்கப் படவேண்டும்” என்கிற நெறி உணர்த்தும் பொருள் முதலியன குறித்த சற்று ஆழமான கருத்துக்கள் இத் தொகுப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. மரண தண்டனை அளித்தலின் அறவியற் சிக்கல்களை ஒரு கட்டுரை விரிவாக விவாதிக்கிறது. எங்களின் முன்னோடி மறைந்த மனித உரிமைப் போராளி டாக்டர் பாலகோபால் அவர்கள் இது குறித்து எழுதியுள்ளவை இக்கட்டுரை ஆக்கத்தில் பெரிதும் பயன்பட்டன.

இக்கட்டுரைகள் சில எனது முகநூல் மற்றும் வலைத் தளத்தில் வெளிவந்தபோது படித்துக் கருத்துச் சொன்ன நண்பர்களுக்கு என் நன்றிகள். அஃப்சல் குரு வழக்கு பற்றிய குறுநூலை வெளியிட்ட கருப்புப் பிரதிகள் இந்நூலையும் வெளியிடுகிறது. அதற்கும் என் நன்றிகள்.

மே 23, 2013 — **அ. மார்க்ஸ்**
கும்பகோணம்



1. இந்திய அரசின் சமீபத்திய சாதனை: அஜ்மல் கசாப் தூக்கு

ஆமாம், அப்படித்தான் இந்திய அரசு பீற்றிக்கொள்கிறது. 2008 நவம்பர் 27 தொடங்கி கடும் பாதுகாப்புடன் மும்பை ஆர்தர் ரோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்த இளம் கைதியை, 110 கோடி இந்திய மக்களுக்கும் தெரியாமல், மூன்று நாட்களுக்கு முன் புனேயிலுள்ள எரவாடா சிறைக்குக் கொண்டுசென்று நேற்று (நவம்பர் 21) காலை ஏழரை மணிக்குத் தூக்கிலிட்டு, மதியத்திற்குள் சிறை வளாகத்திலேயே புதைத்துக் கதை முடித்தது குறித்து இந்திய அரசு அப்படித்தான் பெருமை கொள்கிறது. இந்திய மக்களுக்கு என்ன, மன்மோகனுக்கும் சோனியாவுக்கும் கூடத் தெரியாதாம் என்றும் செய்திகள் கசியவிடப் படுகின்றன.

‘ஆபரேஷன் எக்ஸ்’ என இந்த இரகசியத் தூக்கிற்குப் பெயரிட்டு, அதற்கான கோப்புக்கு ‘சி-7096’ என்கிற எண்ணிட்டு அதில் மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே சென்ற 7ம்தேதி கையெழுத்திட்டாராம். உள்துறைச் செயலர் ஆர்.கே.சிங், அயலுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கரமேனன் என விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கிடையில் மட்டுமே இத் திட்டம் பகிர்ந்துகொள்ளப்பட்டதாம். 2009 முதல் 19 கோடி ரூபாய் செலவில், கசாப் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கொட்டடியைக் காத்துக் கொண்டிருந்த 200 இந்திய-திபெத் எல்லைக் காவல் படையினருக்கும் கூடத் தெரியாமல் கசாப்பை அங்கிருந்து எரவாடா சிறைக்கு அகற்றி, நேற்று காரியத்தை முடித்தார்களாம். ‘ஆபரேஷன் ஜெரோனிமா’ என்கிற பெயரில் அமெரிக்க அரசு படு இரகசியமாக ஒசாமா பின்லேடனின் கதையை முடித்து உடலைக் கடலில் எறிந்ததே, அந்த நடவடிக்கைதான் இந்த ‘ஆபரேஷன் எக்ஸின்’ ரோல் மாடலாம்.

இதெல்லாம் அரசு தந்துள்ள தகவல்களின் அடிப்படையில் இன்றைய நாளிதழ்கள் எழுதிக் குவித்துள்ளவை. சுமார் 309 பேர்கள் இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டு இந்தியச் சிறைகளில் தூக்குக் கயிற்றை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். இதில் ராஜிவ் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரும் அடக்கம். குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் மேசையில் சுமார் 22 கருணை மனுக்கள் காத்திருக்கின்றன. இதில் 2001ம் ஆண்டு பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட அப்சல் குருவின் மனுவும் அடக்கம். இவ்வளவு பேரையும் தாண்டி ஒப்பீட்டளவில் சமீபமாக மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட கசாப்பை அவசர அவசரமாகத் தூக்கிலிட்டுப் பெருமை கொள்கிறது இந்திய அரசு.

நவம்பர் 27, 2007ல் கசாப் கைது செய்யப்பட்டான். 2010 மே 6 அன்று விசாரணை நீதிமன்றம் அவனுக்கு மரண தன்டனை விதிக்கிறது. 2011 பிப்ரவரி 21ல் மும்பை உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தது. 2012 ஆகஸ்ட் 29ல் உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. சென்ற மாதம் 16ம்தேதி உள்துறை அமைச்சு கசாபின் கருணை மனுவை நிராகரிக்குமாறு குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்தது. பரிந்துரையை அப்படியே ஏற்ற குடியரசுத் தலைவர் இந்த மாதம் (நவம்பர்) 5ம் நாள் கருணை மனுவை நிராகரித்துக் கையெழுத்திட்டார். அடுத்த இரண்டாம் நாள் மகாராஷ்ட்ர அரசு கசாப்பைச் சாகும்வரை தூக்கிலிடும் ஆணையில் கையெழுத்திட்டது. அடுத்த இரண்டு நாட்களில் தூக்கிலிடப்போகும் செய்தி 17ம் தேதி அன்று கசாபுக்குத் தெரிவிக்கப்பட்டது. 19ம்தேதி படு இரகசியமாக அவன் எரவாடா சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டான். 21ல் தூக்கில் தொங்கவிடப்பட்டான். அரசு மிகத் துரிதமாகத்தான் வேலை செய்துள்ளது. துரிதமாக மட்டுமல்ல, கச்சிதமாகவும் காரியத்தை முடித்துள்ளது.

இவ்வளவு விரைவாக ஒரு கருணை மனுவின் மீது குடியரசுத் தலைவர் முடிவெடுத்தது இந்திய வரலாற்றிலேயே இது இரண்டாவது தடவை என்கிறார்கள். அப்படி என்ன அவசரம் என்கிற கேள்வியை எல்லோரும் எழுப்பிவிட்டனர். பொதுவாக இது போன்றவற்றில் வரிசைப்படி முடிவெடுப்பதுதான் வழக்கம். இது குறித்துக் கேட்டபோது, "அதுதான் வழக்கமென்றாலும்

அப்படித்தான் செய்ய வேண்டுமென விதி ஏதுமில்லை" எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தின் 72 மற்றும் 161வது பிரிவுகள் குடியரசுத் தலைவருக்கும் மாநில ஆளுநர்களுக்கும் மரண தண்டனைக் கைதிகளை மன்னித்து ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளன. அதேபோல பிற தண்டனைகளையும் அவர்கள் குறைக்கலாம். எனினும் அமைச்சரவையின் ஆலோசனையின் அடிப்படையிலேயே அவர்கள் இதைச் செய்ய இயலும். ஒருவேளை அமைச்சரவை மன்னிப்பு அளிக்கக்கூடாது எனப் பரிந்துரைத்தும்கூடக் குடியரசுத் தலைவரின் கருணை மனம் அதை ஏற்கவில்லையாயின், அவர் பரிந்துரையைத் திருப்பி அனுப்பி, அமைச்சரவையை மறுபரிசீலனை செய்யச் சொல்லலாம். மன்னிப்பு அளிக்கக் கூடாது என மறுபடியும் அமைச்சரவை பரிந்துரைத்தால், ஒன்று அவர் அதை ஏற்கலாம் அல்லது தன் பதவிக்காலம் முடியும் வரை மனுவின்மீது முடிவெடுக்காமலேயே இருந்துவிட்டுப் போகலாம்.

பாராளுமன்ற ஆட்சி முறையில் அமைச்சரவையே கூடுதல் அதிகாரம் உள்ளதாயினும் இவ்வாறு மன்னிப்பு அளிப்பது குடியரசுத் தலைவருக்கும் ஆளுநர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள ஒரு சிறப்பு அதிகாரம். சட்டபூர்வமான அதிகாரம் என்பதைக் காட்டிலும் அது அவர்களுக்கு அளிக்கப்பட்ட அற அடிப்படையிலான அதிகாரம். குடியரசுத் தலைவர் என்பவர் குடிமக்களின் தந்தைக்குச் சமமானவர். அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தவறிழைக்கும்போது அற அடிப்படையில் அவர் தலையிட வேண்டியவர். அத்தகைய பரந்த விசாலமான மனம் அவருக்குத் தேவை. சுமார் எட்டாண்டுகளுக்கு முன் சென்னை உயர் நீதிமன்றக் கிளையை மதுரையில் துவக்கிவைத்த அன்றைய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு பேசியது இன்னும் என் நினைவில் உள்ளது. நீதிபதிகள் நீதிவழங்கும் மனவிசாலிப்பை என்னேரமும் வளர்த்துத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற பொருளில் அவர் பேசியிருப்பார். மன்னிப்பு வழங்கும் ஒரு உன்னதமான இடத்தில் அமர்ந்துள்ள ஒருவர் இத்தகைய எல்லையற்ற கருணை மனம் உடையவராக இருக்க வேண்டும்.

ராஜேந்திர பிரசாத், ராதாகிருஷ்ணன் போன்றோர் இத்தகைய கருணை மனம் கொண்டவராக இருந்துள்ளனர் என இது குறித்து ஆய்வு செய்துள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர். அமைச்சரவையின் பரிந்துரைகளை மறு பரிசீலனை செய்யுமாறு வற்புறுத்தி அவர்கள் பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளனர். ஆர். வெங்கட்ராமன், சங்கர் தயாள் சர்மா ஆகிய இரு குடியரசுத் தலைவர்கள் மட்டுமே அமைச்சரவைகளின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொண்டனர் எனச் சொல்கிறார்கள். மிக உறுதியான ஒரு காங்கிரஸ்காரரும் நேரு குடும்ப விசுவாசியுமான பிரணாப் முகர்ஜி இப்போது அந்த வரிசையில் சேர்ந்துள்ளார். காங்கிரஸ் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அடுத்த நாள் தொடங்க இருந்த பாராளுமன்றத் தொடரில் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர் கொள்ள வேண்டிய சூழல், விரைவில் நடக்க உள்ள நாடாளுமன்றத் தேர்தல், பால் தாக்கரேயின் மரணத்தை ஒட்டி இங்கே கிளர்ந்துள்ள வலதுசாரி இந்துத்துவ மனநிலை ஆகிய பின்னணியில் காங்கிரஸ் கட்சி மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப மேற்கொண்ட ஒரு முயற்சிக்கு முகர்ஜி துணைபோயுள்ளார். கருணையுள்ள குடியரசுத் தலைவர் என்பதைக் காட்டிலும் விசுவாசமான காங்கிரஸ்காரர் என்கிற பெயரைத் தக்க வைப்பதற்கே அவர் முன்னுரிமை அளித்துள்ளார்.

இப்படி நான் சொல்லும்போது ஏன் ஒரு பயங்கரவாதிக்குக் கருணை காட்டியிருக்க வேண்டும் என்கிற கேள்வி பல திசைகளிலிருந்தும் வீசப்படுவதை என்னால் உணர முடிகிறது. இந்திய மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்து அதுதான். ஏ.கே. ரகத் துப்பாக்கியைக் கையில் ஏந்தி 156 அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்த பத்துப் பேர்களில் ஒருவனாக எத்தனை முறை அவனை அவர்கள் தொலைக்காட்சிகளில் பார்த்திருப்பார்கள். இத்தகைய பயங்கரவாதிக்கு எப்படி ஒரு நாட்டின் குடியரசுத் தலைவர் கருணைகாட்ட முடியும். நிச்சயமாக கசாப், லக்சர் ஏ தொய்பாவால் பயிற்றுவித்து அனுப்பப்பட்ட ஒரு பயங்கரவாதி என்பதையும். 2008 நவம்பர் 26 அன்று அவர்கள் மேற்கொண்ட பயங்கரவாதச் செயலை ஏற்கவே இயலாது என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க இயலாது.

ஆனால் இங்கொன்றை மனதில் நிறுத்தவேண்டும். குடியரசுத் தலைவரின் கருணை என்பது கருணை காட்டப்படுபவர் செய்த

குற்றத்தின் தன்மை, அளவு, நீதிமன்றம் எந்த அடிப்படையில் அந்தத் தண்டனையை அளித்தது என்பதைப் பொருத்தது அல்ல. கருணை காட்டுவது என்பது முற்றிலும் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு, முற்றிலும் இதர மனிதநேய அடிப்படைகளில் செய்யப்படுவது. இன்றைய இந்து நாளிதழில் வி. வெங்கடேசன் குறிப்பிட்டுள்ள ஒரு தகவலை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். பரமானந்த சரண் என்பவருக்குத் தன் மனைவியை எரித்துக் கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது, அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் சரணின் கருணை மனுவை நிராகரித்தார்.

எனினும் சரண் தூக்கிலிடப்படுவதற்கு முன்னதாக அவரது மாமனார் இன்னொரு கருணை மனுவை அனுப்பிவைத்தார். இறந்துபோன தனது மகளுக்கும் சரணுக்கும் பிறந்த ஐந்து வயது மகனின் எதிர்காலத்தை உத்தேசித்து அவருக்குக் கருணை அளிக்கக் கோரியது அம்மனு. இந்த மனுவின் அடிப்படையில் உள் துறை அமைச்சகம் அளித்த பரிந்துரையை ஏற்று அவருக்குக் கருணை அளிக்கப்பட்டது (1962).

மனித உரிமை அமைப்புகள் இன்று கசாப் தூக்கிலிடப்பட்டதைக் கண்டிப்பதும் இந்த நோக்கிலிருந்துதான். கசாப் என்கிற நபரைத் தூக்கிலிட்டதற்காகக் கண்டிக்கவில்லை. மரண தண்டனை யாருக்குமே அளிக்கப்படக் கூடாது என்பதற்காகவும், அது கசாபுக்கு நிறைவேற்றப்பட்ட விதத்திற்காகவும்தான் நாம் அதைக்கண்டிக்க வேண்டியுள்ளது. மரண தண்டனை கூடாது என்பதற்கு அறம் சார்ந்த காரணம் தவிர நடைமுறை ரீதியாகவும் சில காரணங்களை நாம் சொல்ல இயலும். முதலாவது வழக்கு விசாரணையில் நிகழக்கூடிய தவறின் விளைவாக ஒருவருக்குத் தவறாக மரண தண்டனை வழங்க வாய்ப்புண்டு. எனவே திருப்பிச் சரிசெய்ய இயலாத இத்தண்டனையை யாருக்கும் வழங்கக்கூடாது. தற்போது உச்ச நீதிமன்றம் 13 பேர்களுக்குத் தான் வழங்கியுள்ள மரண தண்டனை தவறானது என ஏற்றுக் கொண்டுள்ளது. தவறான சட்ட முன்னுதாரணங்களைப் பின்பற்றியதன் விளைவு இது எனவும் அது கூறியுள்ளது. முன்னாள் நீதிபதிகள் பதினான்கு பேர் அவர்களுக்குக் கருணை அளிக்கப்பட வேண்டும் எனக் குடியரசுத் தலைவரைக் கேட்டுள்ளனர். ஒரு வேளை அவர்கள் இதற்குள் தூக்கிலிடப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

கசாபுக்கு இந்த அடிப்படையில் மன்னிப்பு அளிக்கத் தேவையில்லை என ஒருவர் கருதலாம். தான் லக்சர் அமைப்பால் அனுப்பப்பட்டுப் படுகொலைகளைச் செய்ததை அவனே ஏற்றுக் கொண்டபின் மரண தண்டனை வழங்கலில் என்ன தவறு ஏற்பட இயலும் எனத் தோன்றலாம். ஆனால் சட்ட வல்லுனர்கள் கசாப் விசாரணையில் சில சட்ட ரீதியான தவறுகள் (technical errors) இழைக்கப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டியுள்ளனர் (V. Venkatesan, 'Gaps in Kasab's Case', Frontline, Nov 3-16, 2012). அவற்றில் சில:

1. அஜ்மல் கசாப் 'மைனர்' (சிறு வயதினன்) ஆக இருக்க வாய்ப்பு உள்ளதா என அறிய மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டுமென அவனுக்காக நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் எஸ்.ஜி. அப்பாஸ் காசிமி கேட்டபோது நீதிபதி எம்.எல். தகலியானி அதற்கு அனுமதி அளிக்கவில்லை. பின்னால் இது பிரச்சினையாகிவிடும் என்பதை உணர்ந்த அரசு வழக்குரைஞரே பின்னால் இப்படி ஒரு சோதனைக்காக மனுச் செய்தபோது அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. எனினும் அவ்வாறு பெறப்பட்ட சோதனை முடிவை வேறொரு நிபுணரிடம் காண்பித்து கருத்துக் கேட்க வேண்டுமென்ற காசிமியின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது. எக்ஸ்-ரே பட அடிப்படையிலான இச்சோதனை முடிவு முற்றிலும் சரியானது எனச் சொல்ல இயலாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2. அரசுத் தரப்பு, அதாவது பிராசிகியூஷன் சாட்சிகள் நேராக வராமல், எழுத்து மூலம் சாட்சியம் அளிக்க நீதிபதி தகலியானி அனுமதி வழங்கினார். இதன் மூலம் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு கசாபின் வழக்குரைஞர் காசிமிக்கு மறுக்கப்பட்டது.

3. கசாபும் மற்ற தீவிரவாதிகளும் வந்த படகு முதலியவற்றை நேரடியாகப் பார்க்க காசிமிக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

4. இருபதாயிரம் பக்கங்களுள்ள குற்றப்பத்திரிக்கையை வாசிக்க காசிமிக்கு அளிக்கப்பட்ட எட்டு நாள் அவகாசம் போதவில்லை. மேலும் அவகாசமளிக்க அவர் கோரியபோது நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க மறுக்கிறார் என அவரை நீக்கினார் நீதிபதி. புகழ்பெற்ற வழக்குரைஞர் ஃபாலி.

எஸ் நாரிமன் அவ்வாறு வழக்குரைஞரை மாற்ற நீதிபதிக்கு அதிகாரமில்லை என இது குறித்து எழுதியுள்ளார்.

5. உயர் நீதிமன்ற விசாரணையின் போது கசாபுக்காக நியமிக்கப்பட்ட இரு வழக்குரைஞர்களும் பாதுகாப்பைக் காரணமாகச் சொல்லி கசாபைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. கசாபுக்கு இன்னொருமுறை வயதுப் பரிசோதனை செய்ய வேண்டும் என அவர்கள் வைத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. அதேபோல கசாபை உளவியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையையும் உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

6. இறுதியாக உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தபோது கசாபிற்காக நியமிக்கப்பட்ட (amicus curiae) புகழ்பெற்ற வழக்குரைஞர் ராஜு ராமச்சந்திரன் ஒருமுறைகூட கசாபைச் சந்திக்க முயற்சிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் மரணதண்டனையை உறுதி செய்தபின் கசாபுக்குக் கருணை மனு எழுதிக் கொடுப்பதிலும் அவர் உதவவில்லை, தன் கைப்படக் கசாபால் எழுதப்பட்ட சில வரிகளே அடங்கிய மனுவே குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தக் குறைபாடுகள் அனைத்தையும் கூட கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை என்கிற அடிப்படையில் பொருட்படுத்தாது விட்டாலும் மேலும் இரு நடைமுறைக் காரணங்கள் கசாப் தூக்கிலிடப்படுவதற்கு எதிராக உள்ளன. அவை:

1. இந்த வழக்கு விசாரணையில் இன்னும் பல முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அவர்கள் பிடிபடும்போது, அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் முக்கிய சாட்சி ஒன்றைக் கசாபைத் தூக்கிலிட்டதன் மூலம் நாம் இழந்துவிட்டோம்.

2. இது போன்ற பயங்கரவாதக் குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்குவதே சரியான அச்சுறுத்தலாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது. இதைவிட அபத்தமான கருத்து ஏதும் இருக்க இயலாது. உயிரைப் பணயம் வைத்துக் களத்தில் இறங்கும் தற்கொலைப் படையினரை, நீங்கள் பிடிபட்டால்

மரண தண்டனை கிடைக்கும் எனச் சொல்வது எப்படி ஒரு அச்சுறுத்தலாக அமையும்? மாறாக தூக்கிலேற்றியதன் மூலம் நாம் இன்று லக்சர் போன்ற பயங்கரவாத இயக்கங்கள் மத்தியில் கசாபைத் தியாகியாக்கியுள்ளோம். இது, இன்னும் இதுபோன்ற "தியாகிகளை" உருவாக்குவதிலேயே கொண்டு நிறுத்தும். பாகிஸ்தானின் முக்கிய அரசியல் விமர்சகரும், அதன் இராணுவப் பொருளாதாரம் குறித்த ஒரு சிறந்த நூலை எழுதியுள்ளவருமான ஆயிஷா சிதீகா இந்தக் கருத்தை இன்று உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது (பார்க்க: Turning Memory into Asset, The Hindu, Nov 22, 2012). லக்சரும் அதன் துணை அமைப்பான ஜமா அத் உல் தாவாவும் கசாபின் சொந்த மாவட்டமான ஒகாராவில் தற்போது மிக வலுவாக உள்ளதையும், கசாபின் நினைவை அவர்கள் தமது இயக்கத்திற்கு ஆள்சேர்க்கவும், பொருள்சேர்க்கவும் பயன்படும் விலை மதிப்பற்ற சொத்தாக மாற்றப் போவதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கசாப் தன் கடைசி ஆசை என எதையும் கேட்கவில்லை எனவும், தான் தூக்கிலிடப்படப் போவதைத் தன் தாய்க்குத் தெரிவிக்குமாறு மட்டுமே கேட்டுக் கொண்டதாகவும் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. தூக்குமேடை ஏறுமுன் தன் தாய்க்குச் சேதி தெரிவிக்கப்பட்டதா என மீண்டும் ஒருமுறை கேட்டானாம். மேற்கு பஞ்சாபின் ஒகாரா மாவட்டத்திலுள்ள ஃபரிட்கோட் எனும் ஊரில் மிகவும் ஏழ்மையான ஒரு தள்ளுவண்டி வியாபாரியின் குடும்பத்தில் ஐந்து பிள்ளைகளில் ஒருவனாகப் பிறந்தவன் அஜ்மல் இமான் கசாப். கொடிது கொடிது இளமையில் வறுமை என்பாரே நம் ஔவை, அத்தகைய இளமை வறுமையால் படிப்பை இழந்தவன். லக்சர் அமைப்பில் இணைந்து பயிற்சி பெற்று இந்தியாவை நோக்கித் தன், இந்த இறுதிப் பயணத்தை மேற்கொள்ளுமுன் ஒருமுறை தாயிடம் விடைபெறச் சென்றான். அப்போது அவர் "வேண்டாம்" எனத் தடுத்ததாக விசாரணை ஒன்றில் கூறியுள்ளான் கசாப். ஒரு வேளை அந்த நினைவு சாகப்போகும் தருணத்தில் அவனை அலைக்கழித்திருக்கும்போலும். அதனால்தான் அம்மாவுக்குச் சொன்னீர்களா எனத் திரும்பத் திரும்பக் கேட்டிருப்பான் போலும்.



2. ஏன் இந்தக் கொலைவெறி: அப்சல் இரகசியத் தூக்கு

சற்று முன் வீரப்பனின் கூட்டாளிகளும் 1993ல் கண்ணிவெடி வைத்து 22 அதிரடிப் படை வீரர்கள் எனக் குறிப்பிடப்படுபவர் கொன்ற வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டவர்களுமான சைமன், ஞானப் பிரகாசம், பிலவேந்திரன், மாதையன் ஆகிய நால்வரது தண்டனை நிறைவேற்றத்தைத் தடை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது நிரந்தரத் தடை இல்லை என்றபோதிலும் அஜ்மல் கசாப், அஃப்சல் குரு இருவரையும் மூன்று மாதத்திற்குள் அடுத்தடுத்துத் தூக்கிலிட்டுக் கொன்றதைப் போல இவர்களையும் கொல்ல இருந்த உடனடிச் சூழல் தற்போது விலகியுள்ளது.

இந்த நால்வரது கருணை மனுக்களையும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி சென்ற வாரம் ஏற்க மறுத்ததை ஒட்டி அவர்கள் உடனடியாகத் தூக்கிலிடப்படக் கூடிய நிலை உருவானது. சென்ற ஞாயிறன்று அவர்கள் தூக்கிலிடப்படலாம் என்கிற நிலையில் மனித உரிமை ஆர்வலர்கள், இவர்கள் நால்வரின் சார்பாக உச்ச நீதிமன்றத்தை நாடி இந்தத் தடையைப் பெற்றுள்ளனர்.

இந்தியச் சட்டங்களின்படி உச்ச நீதிமன்றம் ஒருவருக்கு மரண தண்டனையை உறுதி செய்தால் அவருக்குக் குடியரசுத் தலைவரிடம் கருணை மனு அளிக்க உரிமையுண்டு. அரசியல் சட்டத்தின் 72-ம் பிரிவின்படி அவருக்கு மன்னிப்பு அளித்துத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க அவருக்கு அதிகாரமுண்டு. எனினும் அவர் இதைத் தன்னிச்சையாகச் செய்துவிட இயலாது. அரசிடம், அதாவது உள்துறை அமைச்சகத்திடம் கருத்தைக் கேட்டு அந்த அடிப்படையில் குடியரசுத் தலைவர் முடிவெடுக்க வேண்டும்.

உள்துறை அமைச்சகம் கருணை மனுவை நிராகரிக்கப் பரிந்துரை செய்த போதிலும் குடியரசுத் தலைவர் அப்படிச் செய்யாமல் காலந்தாழ்த்தலாம். முந்தைய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டீல் 35 பேர்களின் மரண தண்டனைகளை ஆயுள் தண்டனைகளாகக் குறைத்து ஆணையிட்டார். அதற்கும் முந்தைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பதவிக் காலத்தில் தனஞ்சய் சட்டர்ஜி என்பவருக்கு மட்டும் தண்டனை நிறைவேற்றப்பட்டது (2004).

குடியரசுத் தலைவராக ஆவதற்கு முதல் நாள் வரையிலும் விசுவாசமான காங்கிரஸ் காரராகத் தீவிர அரசியல் செய்து வந்த பிரணாப் பதவியேற்ற மூன்று மாதத்திற்குள் ஆறு பேர்களின் கருணை மனுக்களை நிராகரித்துச் 'சாதனை' புரிந்துள்ளார். அவர்களில் இருவரது தண்டனைகள் இரகசியமாக நிறைவேற்றப்பட்டும் விட்டன.

நீதிமன்றங்களால் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட பின் நீண்ட காலம் ஒருவர் தூக்கிலிடப்படாமல் இருந்து இறுதியில் கருணை மனு நிராகரிக்கப்பட்டு அவர் தூக்கிலிடப்படக் கூடிய நிலை ஏற்பட்டால், இது தொடர்பாக இடைக்காலத்தில் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏற்படக்கூடிய அச்சம், கவலை, துயரம், மன அழுத்தம் (agony of suspense) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர் மீண்டும் தனது தண்டனை நிறைவேற்றத்திற்கு எதிராக உச்ச நீதி மன்றத்தை நாடலாம் எனக் குறைந்த பட்சம் நான்கு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது.

சென்ற ஏப்ரலில் (2012) தேவேந்திரபால்சிங் புல்லார், நரேந்திரநாத் தாஸ் என்கிற இருவர் இவ்வாறு 11 ஆண்டுகளுக்குப் பின் தூக்கிலிடப்பட இருந்த நிலையில் நீதிமன்றம் மேற்சொன்ன அடிப்படையில் அதற்கு இடைக்காலத் தடை விதித்து வழக்கை விசாரணக்கு எடுத்துக் கொண்டது. அதேபோல ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கும் சென்ற ஆண்டில் தண்டனை நிறைவேற்றத்திற்குத் தேதி நிச்சயிக்கப்பட்ட நிலையில் தமிழகத்தில் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டதையும் அதை ஒட்டி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடை பெறப்பட்டதையும்

அறிவோம். இவ்வழக்கும் முன் குறிப்பிட்ட புல்லார் வழக்குடன் இணைத்து விசாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது வீரப்பன் கூட்டாளிகளின் வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வு புல்லார் வழக்குத் தீர்ப்பு வந்தவுடன் அதனடிப்படையில் இதுவும் தீர்மானிக்கப்படும் என அறிவித்துள்ளது.

புல்லார் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதிமன்றம் இந்திய அளவில் இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டு நீண்டகாலமாகக் காத்திருப்பவர்களின் பட்டியலை அரசிடம் கோரிப் பெற்றுக்கொண்டது. காத்திருக்கும் எல்லோரது வழக்குகளும் இதன்மூலம் அதன் ஆய்வுக்குட்பட்டதாகின. இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு உதவி செய்ய (amicus curiae) அந்தியாருஜினா என்கிற மூத்த வழக்குரைஞரையும் நியமித்தது. அவர் அஃப்சல் குரு உள்ளிட்ட அனைவரது வழக்கு விவரங்களையும் சேகரித்துத் தந்துள்ள நிலையில் விசாரணை, சென்ற ஏப்ரல் 19 (2012) அன்று முடிவுற்றது. தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னதாக அவசர அவசரமாக ஒரு திருடனைப்போல டில்லி திகார் சிறைக்குள் நுழைந்த இந்திய அரசு சென்ற 9-ந் தேதி அன்று காலை எட்டரை மணிக்கு அஃப்சல்குருவின் மனைவி, பதின்வயது மகன் உள்ளிட்ட யாருக்கும் தெரியாமல் சுருக்கிட்டு அவரது உயிரைப் பறித்துக் கொண்டது.

நீதிமன்றத்தின் பார்வையில் வழக்கு இருப்பது ஒரு பக்கம்; தூக்கிலிடப்படுவதற்கு முன்னம் ஒரே ஒருமுறை மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட நெருங்கிய உறவினர்களைச் சந்திக்க வாய்ப்பளிக்கும் உலக அளவில் கடைபிடிக்கப்படும் அடிப்படை மனித நாகரீகமும் மறுக்கப்பட்டது இன்னொருபுறம். இவை இன்று இந்திய அளவில் மரண தண்டனை குறித்த மிகப் பெரிய விவாதத்தையும் இந்திய அரசின் மீதான கண்டனத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

சென்ற 2001 டிசம்பர் 13 அன்று இந்தியப் பாராளுமன்றத்தை ஜெய்ஷ் ஏ முகம்மத் என்கிற தீவிரவாதிகள் தாக்கினர், தாக்குதலில் ஈடுபட்ட ஐவரும், ஒன்பது படைவீரர்களும் அப்போது கொல்லப்பட்டனர். இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்தான் அஃப்சல். டெல்லிப்

பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். கீலானி, அஃப்சலின் நெருங்கிய உறவினர் ஷவ்கத் குரு, அவரது மனைவி அஃப்சான் ஆகியோரும் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டனர்.

கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட இவர்களில் கீலானி, அஃப்சான் ஆகியோர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். தகவல் மறைப்பு என்பதற்காகப் பத்தாண்டு காலச் சிறைவாசத்திற்குப் பின் ஷவ்கத் இரண்டாண்டுகளுக்கு முன் விடுதலை ஆனார். 2005 ஆகஸ்ட் 4 அன்று அஃப்சலுக்கு மட்டும் மரண தண்டனையை உறுதி செய்தது உச்ச நீதி மன்றம்.

காஷ்மீர் தீவிரவாதியாக இருந்து இந்தியப் படையிடம் சரணடைந்தவர் அஃப்சல். சரணடைந்தவர்களை அவ்வளவு எளிதாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இந்தியப் படையினர் அனுமதிப்பதில்லை. அடிக்கடி அதிரடிப்படை அலுவலகத்துக்கு அழைக்கப்படுவார்கள். உளவு வேலைக்கு நிர்பந்திக்கப்படுவார்கள். கைது செய்து வைத்துக் குடும்பத்தாரிடம் காசு வாங்கிக்கொண்டு விடுவிப்பார்கள். ஒரு சிறிய மருந்து விற்பனை நிறுவனத்தைத் தொடங்கி அமைதியான குடும்ப வாழ்க்கைக்குத் திரும்ப முனைந்த அஃப்சலுக்கும் இவ்வளவும் நடந்தது. அதிரடிப்படை அலுவலகத்தில்தான் பாராளுமன்றத் தாக்குதலில் பங்கேற்றுக் கொல்லப்பட்ட முகம்மதும், இன்னும் கைது செய்யப்படாத தாரிக்கும் அஃப்சலுக்கு அறிமுகமானார்கள். இந்த அறிமுகமே இன்று அஃப்சலின் உயிர் பறிப்புக்குக் காரணமாகியது.

இன்று அஃப்சலை இந்தத் தாக்குதலுடன் தொடர்பு படுத்தக்கூடிய நேரடி சாட்சிகள் அனைவரும், ஒன்று குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் (கீலானி, அஃப்சான்) அல்லது கொல்லப்பட்டுள்ளனர் (முகம்மது) அல்லது தலைமறைவாகியுள்ளனர் (தாரிக்). இறுதியில் அஃப்சலே அஃப்சலுக்கு எதிரான சாட்சியாக நிறுத்தப்பட்டார். சித்திரவதைகளினூடாகப் பெற்ற வாக்குமூலம் அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. நீதிமன்றங்களில் அவருக்கு வாதிட முறையான வழக்குரைஞர்கள் இல்லை. விசாரணை நீதிமன்றத்தில் அவருக்காக நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்

அவரிடம் மிகவும் வெறுப்புடன் நடந்து கொண்டார். உயர் நீதிமன்றத்தில் அவருக்காக வாதிடுவதாக வந்தவர் அஃப்சலைத் தூக்கிலிடாமல் விஷ ஊசி செலுத்திக் கொல்லலாம் என நீதிமன்றம் முன் தெரிவித்தார். அப்படி எந்த விருப்பையும் அஃப்சல் அவரிடம் தெரிவித்ததில்லை என்ற போதும் அவர் இப்படிச் சொன்னார்.

விசாரணைத் தரப்பு முன்வைத்த வாதங்களிலும் பல ஓட்டைகள் இருந்தன. அஃப்சல் பயன்படுத்திய 'சிம்' கார்டு ஒன்று முக்கிய ஆதாரமாக அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. அந்த சிம் அவருக்கு விற்கப்படுவதற்கு முன்பாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது. அஃப்சல் தாக்குதலில் தொடர்பு கொண்டிருந்தார் என்பது டெல்லி விசாரணையில் 'கண்டுபிடிக்கப்பட்டு', அவரைக் கைது செய்ய ஆணை அனுப்பப்படும் முன்னரே அவர் காஷ்மீரில் கைது செய்யப்பட்டிருந்தார். இப்படி நிறையச் சொல்லலாம். இது குறித்து தீர்ப்பு வந்தபோது நிறைய எழுதியுள்ளேன். (இந்நூலின் பின்னிணைப்பாக அது உள்ளது.)

இப்படி சந்தேகத்திற்கிடமின்றி அஃப்சல் மீதான குற்றம் நிறுவப்படாமலேயே அவருக்கு மரண தண்டனை விதித்தது நீதிமன்றம். "(அஃப்சலுக்கு) மரண தண்டனை அளிப்பதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனச்சாட்சி திருப்தியுறும்" என நீதிபதி தீர்ப்பில் கூறியது கடும் விமர்சனத்திற்குள்ளாகியது. சட்டம், சாட்சியம், ஆதாரம் மற்றும் முந்தைய தீர்ப்புகளின் வழி நின்று மட்டுமே நீதி வழங்க இயலும். சமூகத்தின் மனச்சாட்சி, அரசியல் கோரிக்கைகள், மத நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலெல்லாம் தீர்ப்பு வழங்கிவிட இயலாது. ஆனால் இந்திய நீதிமன்றங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இப்படியெல்லாம் சொல்லித்தான் தீர்ப்புகள் வழங்குகின்றன. தவிரவும் சமூகத்தின் கூட்டு மனச்சாட்சி அஃப்சல் கொல்லப்படத்தான் வேண்டும் எனக் கூறுகிறது என்பதை நீதிபதி எந்த அளவுகோலை வைத்து அளந்தார்?

"தண்டனை நிறைவேற்றம் குறித்து மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது" என இரகசியத் தூக்கிற்குக் காரணம் சொல்கிறார் உள்துறை அமைச்சர் ஷிண்டே. விதிப்படி

ஏன் நெருங்கிய உறவினர்களுக்குத் தெரிவிக்கவில்லை எனக் கேட்டால், "விரைவுத் தபாலில் செய்தி அனுப்பினோம். அவர்களுக்குக் கிடைக்கவில்லை" எனச் சொல்லிப் புன்னகைக்கிறார். உலகின் மிகப் பெரிய ஜனநாயகம் இப்படி மக்களையும், எதிர்க் கருத்துக்களையும், ஆர்பாட்டங்களையும் கண்டஞ்சுவதை என்னென்பது? தூக்கிலிட்ட கையோடு காஷ்மீர் முழுவதும் ஊரடங்குச் சட்டம், தொலைக்காட்சிகளுக்கு சென்சார், எஸ்.எம்.எஸ் சேவை முடக்கம் என நடவடிக்கைகள் தொடர்ந்தன. அஃப்சலின் வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கச் செல்லவும் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

தனி நபர்கள் யாரேனும் இப்படி விதிமுறைகளை மீறுவதைக்கூட சகித்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு அரசு, ஒரு மக்கட் தொகுதி என்பன ஏற்றுக்கொண்ட விதிகளையும் நெறிமுறைகளையும் மீறாதிருப்பது அவசியம். ஏனெனில் அப்போதுதான் அது மக்கட் தொகுதியின் சராசரி விருப்பை சரியாக நிறைவேற்றுவதாக அமையும்.

மரண தண்டனைக்கு மன்னிப்பு அளிப்பது என்பது நீதிமன்றத்தின் உரிமை அல்ல. இஸ்லாமிய நாடுகளில் மன்னிப்பு அளிக்கும் உரிமை குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருக்கும். ஜனநாயக அரசுகளில் அரசே மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொள்கிறது. தனிப்பட்ட நபர்களின் பொறுப்பில் விடாமல் அரசு அதை மேற்கொள்வது என்பது மன்னிப்பில் பழிவாங்கலுக்கு இடமிருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் அமைகிறது. அதேபோல மன்னிப்பு என்பதில் குற்றத்தின் தன்மை, அளவு ஆகியவை முக்கியப் பங்கு வகிப்பதில்லை. தண்டனை அளிக்கப்பட்டவரின் குடும்பம், எதிர்காலம், நன்னடத்தை, ஒட்டுமொத்தமான சமூக நலன் ஆகியவற்றிற்கு மன்னிப்பளிப்பதில் முக்கிய பங்குண்டு.

வெறும் சட்ட விதிகளுக்கு அப்பால் கருணை, அன்பு, மனிதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் மன்னிப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மன்னிப்பு வழங்கும் அதிகாரம் நீதித் துறையிடமிருந்து விலக்கப்படுகிறது.

ஆனால் இந்திய அரசோ மன்னிப்பை அரசியலாக்குகிறது. இன்று இரகசியமாகத் தூக்கிலிடப்பட்டவர்கள் இருவரும்

முஸ்லிம்கள். பிரதான எதிர்க்கட்சியான வலதுசாரி இந்துத்துவ பாரதீய ஜனதா கட்சி அஃப்சலை உடனடியாகத் தூக்கிலிட வேண்டுமெனத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தது. முஸ்லிம் ஓட்டுகளுக்காகத் தேசப் பாதுகாப்பை அரசு கைவிட்டு விடுகிறது என்று அது அரசைக் குற்றம் சாட்டி வந்தது. இந்தக் குற்றச் சாட்டினடியாகப் பெரும்பான்மைச் சமூகத்தின் வாக்குகளை இழக்க விரும்பாத இந்திய அரசு இப்படி இரகசியத் தூக்குகளை நிகழ்த்திக் கொண்டுள்ளது. பா.ஜ.க-வைப் பொருத்த மட்டில் அதற்கு நீதி என்றால் மரண தண்டனைதான். இத்தகைய பிரச்சினைகளில் மரண தண்டனைக்குக் குறைவான எதையும் அது தண்டனையாகக் கருதுவதில்லை. நீதியையும் பழிவாங்கலையும் அது பிரித்துப் பார்ப்பதில்லை. அஃப்சலின் மரணத்தை அக்கட்சியினர் லட்டு தின்று கொண்டாடும் காட்சிகள் அன்றைய ஊடகங்களில் இடம் பெற்றன.

இன்று இந்திய அரசும் பா.ஜ.க வழி நின்று நீதியையும் பழிவாங்கலையும் ஒன்றாக்கியுள்ளது. குறுகிய அரசியல் நலன்களுக்காக அப்படிச் செய்துள்ளது. அப்படிச் செய்ததன் மூலம் இன்று காஷ்மீர் மக்களிடமிருந்து அது மேலும் அந்நியமாகியுள்ளது. பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாத அமைப்புக்கள் இந்தியாவைப் பழி வாங்கப்போவதாக அறிவித்துள்ளன. இதற்கு எதிர்வினையாகப் பாகிஸ்தானில் மரண தண்டனையை எதிர் நோக்கி இருக்கும் இந்தியரான சரபத் சிங்கை அது தூக்கிலிடலாம். அஃப்சல் பாகிஸ்தானை ஆதரித்தவரல்ல. தீவிரவாதத்தில் வெறுப்புற்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியவர். இந்திய அரசு தனது குறுகிய அரசியல் நலன்களுக்காக இவை எதையும் கவனத்தில் கொள்ளாமல் அடிப்படை நெறிகளிலிருந்து பிறழ்ந்துள்ளது.

சமூகம் நாகரிகத்தில் மேம்படுவது அதன் தண்டனைக் கலாச்சாரதில் (penal culture) வெளிப்படும். தண்டனைகள் மேலும் மேலும் மனிதாயப் படுவதே சமூகம் நாகரிகமடைந்து வருவதன் அடையாளம். இப்படிக் குடும்பத்தவர்களுக்கும் அறிவிக்காமல் தூக்கிலிட்டு உயிரைப் பறிப்பது இதற்கு எதிர்மாறானது.



3. மரண தண்டனை
தீர்ப்பு வழங்கப்படும்போது நீதி செத்துவிடுகிறது

'விளிம்பு நிலை ஆய்வுகள்' எனச் சொல்லப்படும் Subaltern Studeis தொகுப்பில் ஒரு கட்டுரை. பேராசிரியர் ரணஜித் குகா எழுதிய 'சந்திராவின் மரணம்'. காலனிய ஆட்சி நிலைபெற்று அரசு எந்திரம், சட்ட ஒழுங்கு, நீதி வழங்கு நிறுவனங்கள் முதலியன திடப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டம். தேச வழமைகள், வெகு மக்கள் நீதி என்பனவற்றினிடத்தில் சட்டத் தொகுப்பு, அரச நீதி முதலியன ஒழுங்கமைக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சூழல். வங்காளக் கிராமம் ஒன்றில் அடித்தள சாதி ஒன்றில் பிறந்தவள் இளம் விதவை சந்திரா. கிராமத் தலைவனுக்கும் சந்திராவுக்கும் இடையில் விரிந்த உறவில் சந்திரா கருவுறுகிறாள்.

பக்கத்துக் கிராமத்தில் வசிக்கும் சந்திராவின் தாயிடம் (அவளும் ஒரு விதவை) இச்செய்தியை தெரிவிக்கும் அந்தத் தலைவன் சந்திராவின் கருவைக் கலைத்துவிடச் சொல்லி எச்சரிக்கிறான். கலைக்காவிட்டால் சந்திரா சமூக விலக்கு செய்யப்படுவாள். அன்றைய நிலையில் அது ஒரு கடுமையான தண்டனை. மகளை இக்கொடிய தண்டனையிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் இறங்குகிறாள் சந்திராவின் தாய்.

கிராமத்து வைத்தியனை அணுகுகிறாள். வெறும் பெண்களாக வந்து கேட்டால் எப்படி மருந்து தருவது என்கிறான் அவன். தனது மூத்த மகனின் மாமனாரை அழைத்து வந்து பாத்திரம் பண்டங்களை எல்லாம் ஈடாகத் தந்து மருந்து வாங்கிச் செல்கிறாள் சந்திராவின் தாய்.

பக்கத்து வீட்டுச் சிறுபெண் ஒருத்தியை அனுப்பி சந்திரா அழைத்து வரப்படுகிறாள். இரவில் வைத்தியம் தொடங்குகிறது. இரண்டு முறை மருந்து கொடுத்து ஒன்றும் நடக்கவில்லை. மூன்றாம் முறை மருந்து கொடுக்கும்போது உதிரப் பெருக்கெடுத்து சந்திரா செத்துப் போகிறாள். அவள் உடல் ரத்த உறவினரால் அடக்கம் செய்யப்படுகிறது.

காலனிய அரசின் சட்ட ஒழுங்கு நிறுவனம் செயல்படத் தொடங்குகிறது. சந்திராவின் மரணத்திற்குக் காரணமாக அவளது அன்னை குற்றம் சாட்டப்படுகிறாள். அவளின் சம்பந்தி, வைத்தியன், சந்திராவை அழைத்து வந்த சிறுமி முதலானோர் குற்றத்திற்கு உடந்தை, சந்திராவைப் பெற்றவளின் வாக்குமூலம் _ அதாவது மகளை ஊர் விலக்கு என்று கொடும் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்கு அவள் மேற்கொண்ட சோக முயற்சியின் கதை நீதி வழங்குச் சொல்லாடலில் (Judicial discourses) குற்றமாக வடித்தெடுக்கப்படும் பாங்கை விரிவாக விளக்கிச் சொல்வார் குகா. எப்போதோ படித்தது. பாசம் மிகுந்த அபலை ஒருத்தி மகளைக் காப்பாற்ற மேற்கொண்ட முயற்சி கொலைக் குற்றமாகக் கட்டமைக்கப்படுகிறது. நெருங்கிய உறவினர்களின் உறவுக் கடமைகள் கொலைக்கு உடந்தையாக வரையறுக்கப்படுகின்றன.

இத்தகைய சட்ட நீதி வழங்கு நடைமுறைகளின் நோக்கமென்ன? ஒன்று: வெகு மக்களினூடாக ஊடுருவி அவர்களைச் சட்ட ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குடிமக்களாக மாற்றும் சட்ட ஒழுங்குச் செயற்பாடு. மற்றது: சட்டப்பூர்வமான உண்மைகளைக் கட்டமைப்பது, ராஜீவ் கொலை வழக்கில் இருபத்தாறு பேருக்கு ஒட்டுமொத்தமாய்த் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டபோது சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் தீர்ப்பு குறித்துச் சொன்ன சொற்கள் குகாவின் மேற்சொன்ன முடிவுகளை உறுதி செய்கின்றன. கார்த்திகேயன் சொன்னார்:

“உண்மையே வெல்லும் என நிறுவப்பட்டுவிட்டது. உண்மைகளின் அடிப்படையில் ராஜீவ் கொலைகாரர்களைக் கண்டுபிடிப்பதை என் கடமையாக நினைத்திருந்தேன். இந்திய அரசு மென்மையானதல்ல என்பதையும் பயங்கரவாதச்

செயல்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதையும் பயங்கரவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்".

ஆனால் கார்த்திகேயன் கட்டமைத்துத் தந்த உண்மைகளில் பலவற்றை நீதிபதி நவநீதம் அவர்களைப் போல நம்மால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. நம்முடைய பார்வையில் இவர்களில் பலர் கொலைகாரர்களாகத் தென்படவில்லை. நம்முடைய உண்மையும் காவல்துறையின் உண்மையும் எங்கே வேறுபடுகின்றன?

கீழ்க்கண்டவாறு ஒரு வாக்குமூலம் அமைகிறது என்று வைத்துக்கொள்வோம்:

"அவன் ஒரு ஈழத்துப் பையன். பெற்றோர் அமைதிப் படைத் தாக்குதலில் செத்துப் போயிட்டாங்களாம். அகதி. அவன் பேசுற தமிழ் எனக்கு ரொம்பப் பிடிக்கும். என் மகனின் நண்பனாக வந்த அவன் எனது அன்பிற்குரியவன் ஆனான். இந்த வயதில் இத்தனை இழப்புகளைச் சந்தித்த அவனுடைய சோகமான முகம் என்னை எப்போதும் வாட்டும். வீட்டுக்கு வரும் நேரங்களில் ஒரு வேளை சோறு போடுவதில் எனக்கொரு ஆறுதல். பேட்டரி, பிலிம்ரோல் எனச் சின்னச் சின்னப் பொருள்கள் சமயத்தில் கேட்பான். வாங்கித் தருவேன். அன்றும் அவன் வந்திருந்தான். முகமெல்லாம் வேர்த்திருந்தது. பரபரப்பாக இருந்தான். சாப்பிடச் சொன்னேன். படுக்கச் சொன்னேன். மாத்திரை வாங்கி வந்து கொடுத்தேன். இரண்டு நாள் கழித்து ஊருக்குப் போகிறேன் என்றான். பெங்களூருக்கு ஒரு டிக்கட் வேண்டுமென்றான். அவனிடம் காசு இல்லை என்பது எனக்குத் தெரியும். நான் டிக்கட் வாங்கி வந்து கொடுத்தேன். ஆட்டோவில் அழைத்துச் சென்று பஸ் ஏற்றிவிட்டேன். அவன் போய்விட்டான்."

இந்தச் சொற்குவியலை ஒரு 'கலைடாஸ்கோப்'புக்கு ஒப்பிடலாம். வெவ்வேறு கோணங்களில் சாய்க்கும்போது வெவ்வேறு அர்த்தங்கள். மனித நேய எழுத்தாளர் ஒருவருக்கு இது ஒரு பாசமுள்ள அன்னையின் பரிவுமிக்க சொற்கள். இந்தச் சொற்குவியல் அவருக்கு ஒரு மனித நேயக் கதையாடலுக்கான கச்சாப் பொருள். ஒரு புலனாய்வுக் குழுத் தலைவருக்கோ இது ஒரு சட்ட ஒழுங்குக் கதையாடலுக்கான மூலப் பொருள்.

ஏற்கெனவே 'குற்றச் செயல்' என வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்வு தொடர்பான 'உண்மை'. சொற்கூட்டத்திற்கும் அதன் வெவ்வேறு அர்த்தங்களுக்குமான உறவில் ஒன்றை மட்டும் உருவி எடுத்து இங்கே 'சட்டப்பூர்வமான உண்மை' கட்டமைக்கப்படுகிறது.

மேற்கண்ட அந்த வாக்குமூலத்தை மீண்டும் ஒருமுறை வாசியுங்கள். கொலைக்குத் தேவையான ஆர்.டி.எக்ஸ். வெடிகுண்டை வெடிக்க வைக்கும் 'பாட்டரி'களை வாங்கித் தந்தது, கொலையாளியைப் பாதுகாத்தது, தப்புவதற்கு உதவி செய்தது முதலான நிகழ்வுகள் 'உண்மை'யானவையா? 'உண்மையற்றவையா?' 'குற்றவாளி'யே நிகழ்வின் உண்மையை ஏற்றுக் கொள்கிறார். இப்போது சொல்லுங்கள் நிகழ்வு உண்மையா? இல்லையா? இந்தக் கேள்விக்கு உறுதியான (certitude) விடை சாத்தியமாகத் தோன்றவில்லை.

உறுதிப்பாடுகளின் சாத்தியமின்மை (impossibility of certitude), நிகழ்வுகளின் ஒற்றைத் தன்மை (singularity of the events) ஆகிய கருத்தாக்கங்கள் இன்று தத்துவத்தில் வற்புறுத்தப்படுவது இங்கே குறிப்பிடத்தக்கது. பொது விதிகள், பொது வரையறைகள், பொது மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் 'நிகழ்வு'களை நீங்கள் பரிசீலிக்க இயலாது. ஒவ்வொரு நிகழ்விற்கும் அதற்கான தனித்தன்மைகள் உண்டு. அந்தத் தனித்தன்மைகளை புறக்கணிக்கும்போது அங்கே நீதி, உண்மை ஆகியவை சாத்தியமில்லாமல் போய்விடுகின்றன.

குற்றத்திற்கு உடந்தையான நிகழ்வுகளில் மட்டும்தான் இந்தப் பிரச்சினை என்பதல்ல. 'வரலாறு', 'குற்றச் செயல்', 'கொலை' என்பதெல்லாம் கூட இப்படி உறுதிப்பாடுகளின் பிடியில் அகப்படாமல் நழுவி விடுவதைக் கொஞ்சம் சிந்தித்தால் விளங்கிக் கொள்ள முடியும். எது கொலை, எது மோதல், எதுவரை போர்? நாற்பத்திரண்டு பேரை உயிருடன் எரித்தவனைக் கொலையாளியாகக் கருத மறுக்கும் சட்ட ஒழுங்குச் சொல்லாடல் எரித்தவனைக் கொன்றவனைக் கொலையாளியாகக் குற்றம் சாட்டும். ஆனால் கொன்றவனோ அதை ஒரு புரட்சிகரக் கடமையாக நம்பலாம். காஷ்மீரப் போராளிகளுக்குத் தாங்கள் நடத்துவது விடுதலைப் போர். இந்தியப் பத்திரிகைகளுக்கு அது பயங்கரவாதம். எப்படியும் எதையும் கட்டமைக்கலாம்.

கதையாடல்கள் எதையும் செய்யும். எப்படியும் வரையறுக்கும். எல்லாவற்றையும் நியாயப்படுத்தும்.

பொது விதிகள், குற்றவியல் நடைமுறைகள், தண்டனைச் சட்டங்கள், நீதிமன்றத்தின் புனிதம் ஆகிய பெருங்கதையாடல்களின் கீழ் மேற்கொள்ளப்படும் உறுதியான முடிவுகள், நிறுவப்படும் சட்டபூர்வமான உண்மைகள் ஆகியவற்றில் உள்ளார்ந்து பொதிந்து கிடக்கும் வன்முறை, பொறுப்பின்மை ஆகியவை சிந்திக்கத்தக்கன. இருபத்தாறு பேரும் கொலையாளிகள் என்கிற 'உண்மையை' நிறுவி அத்தனை பேருக்கும் மரண தண்டனை வழங்குகிறார் ஒரு நீதிபதி. ஒரு வேளை சட்டபூர்வமான மேல்முறையீட்டு வாய்ப்பு இல்லாதிருந்தால் இந்நேரம் அவர்கள் தூக்கில் தொங்கியிருப்பர். மேல் முறையீட்டு நீதிபதி அவர்களில் இருபத்திரெண்டு பேர்கள் மீதான குற்றச்சாட்டு 'உண்மை' எனப் போதிய அளவிற்கு நிறுவப்படவில்லை என விடுதலை செய்கிறார். ஆனால் இருபத்தாறு பேரையும் மரணக் கொட்டிலுக்கு அனுப்ப ஆணையிட்ட முதலாமவர் தீர்ப்பின் பொறுப்பிலிருந்து கைகழுவிக் கொள்கிறார். அவர் சொன்ன தீர்ப்பிற்கு அவர் பொறுப்பற்றவர் ஆகிறார். பெருங்கதையாடல்கள் அவரைக் காப்பாற்றி விடுகின்றன. இதைத்தான் பெருங்கதையாடல்களின் வன்முறை என்கிறோம். நீதி சாத்தியமில்லை என்கிறோம். தீர்ப்புகள் வழங்கப்படும் போது நீதி செத்துவிடுகிறது என்கிறோம். தீர்ப்புகளை என்றென்றைக்குமாய் ஒத்தி வைப்போம் என்கிறோம். அரசும் நீதிமன்றங்களும் தண்டனையைத்தான் வழங்க முடியுமே தவிர நீதியை வழங்க இயலாது என்கிறோம்.

அப்படியானால் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதா? என்ன செய்கிறீர்கள் நீங்கள்? மரண தண்டனை வேண்டாமெனத் தொடங்கிக் கடைசியில் தண்டனைகளே வேண்டாம் எனச் சொல்வது அராஜகம் இல்லையா? உங்களின் இறுதி நோக்கம் குழப்பம்தானே? என்றெல்லாம் பொரிந்து தள்ளி இந்தத் தத்துவார்த்தச் சிக்கலின் கூர்மையை மழுங்கடிப்பதில் பொருளில்லை. காந்தியடிகள் சொல்வார்:

> "வன்முறையாளர்களைக்கூட தண்டனை என்கிற பெயரில் சிறையிலடைப்பதை நான் விரும்பவில்லை. கொள்ளைக்காரர்களையும் ஏன் கொலையாளிகளையும் கூடத்

தண்டிப்பதை என் அகிம்சைக் கோட்பாடு ஏற்கவில்லை. மரண தண்டனை என்பதை எந்த வகையிலும் என் மனசாட்சி ஏற்கவில்லை.''

மரண தண்டனையை மட்டுமல்ல, தண்டனை என்பதையே காந்தி ஏற்கவில்லை. ஆனால் நீதி சாத்தியமா என்கிற கேள்வியினடியாக காந்தி இந்த முடிவை வந்தடையவில்லை; 'அகிம்சை' என்கிற இன்னொரு பெருங்கதையாடலினடியாக அவர் இதைச் சொல்கிறார். இது குறித்து நாம் இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். தண்டனை என்கிற கருத்தாக்கத்தையே காந்தி மறுப்பதை மட்டும் இங்கே குறித்துக் கொள்வோம்.

நான் தண்டனை வேண்டாமென்பதைக் கூட இப்போது முன் வைக்கவில்லை. நீதி வழங்கு முறையின் உள்ளார்ந்த வன்முறையை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். முடிந்தவரை நமது நீதி வழங்குமுறையைச் சனநாயகப்படுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் நிகழ்வின் தனித்தன்மைகளைப் புறக்கணிக்கக் கூடாது. அந்த வகையில் நமது கவனத்தில் உடனடியாக வரக்கூடியவை:

1. நீதி சாத்தியமில்லை என்கிற பிரச்சினைப்பாட்டைக் கவனத்திற்கொண்டு, மாற்ற முடியாத தண்டனையாகிய மரண தண்டனையை ரத்து செய்வது.
2. நீதி வழங்கு முறையில் குற்றவாளிகள், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரையும் உள்ளடக்குவது, தண்டனை வழங்கு முன்பாக குற்றவாளியிடமே கருத்துக் கேட்பதற்கான சாத்தியக் கூறு இன்றைய இந்தியக் குற்றவியல் நடைமுறைகளிலேயே இருக்கிறதென்றாலும் அதை நீதிபதிகள் முறையாகப் பயன்படுத்துவதில்லை.
3. இஸ்லாமியத் தண்டனை முறைகள் மிகவும் கொடுமையானவை என்றொரு கருத்து உண்டு. ஆனால் இஸ்லாமிய நீதி வழங்கு முறையில் 'குற்றச் செய'லால் பாதிக்கப்பட்டவர்களையும் உள்ளடக்குவது என்கிற ஒரு நல்ல அம்சம் உண்டு. அதாவது குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் நேரடியான உறவினர்கள் நினைத்தால் 'குற்றவாளி'யை மன்னிக்கலாம். மரண தண்டனையில் இருந்து தப்புவிக்கலாம். சமீபத்தில் கூட வளைகுடா நாடொன்றில் பணிபுரிந்து

கொண்டிருந்த ஒரு கேரள இளைஞர், இன்னொரு ஊழியரைக் கொன்ற வழக்கில் கொல்லப்பட்டவரின் மனைவியும் குழந்தைகளும் கொன்றவரை மன்னித்து மரண தண்டனையிலிருந்து விலக்களித்துள்ள செய்தி இந்திய நாளிதழ்களில் வெளிவந்துள்ளது. ஆனால், ராஜீவ் கொலை வழக்கில் அவரது மனைவி சோனியா 'குற்றவாளிகளை' மன்னித்தும் கூட அவர்களது மரண தண்டனையை ரத்து செய்வதற்கான முகாந்திரங்களில் ஒன்றாக இதனை இந்திய நீதி வழங்கு முறை ஏற்றுக்கொள்ளாதது கருதத்தக்கது.

எனினும் இஸ்லாமியச் சட்டத்தில் மன்னிப்பு வழங்கும் இறுதி அதிகாரத்தைப் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது உறவினர்களின் பொறுப்பில் கையளிப்பது என்பதிலும் பிரச்சினைகள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் மனம் பழிவாங்கும் நோக்கில் இறுக்கமாக அமைந்துவிடும் பட்சத்தில் 'மன்னிப்பு' என்பதற்கு வாய்ப்பில்லாமலே போய்விடுகிறது. மன்னிப்பு வழங்கும் இறுதி அதிகாரம் நிர்வாகத் தலைமையிடம் (குடியரசுத் தலைவர்) உள்ளபோது அரசியல் காரணங்கள் மன்னிப்பை சாத்தியமில்லாமல் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்பது போலவே (எ.டு.: அப்சல் குரு, அஜ்மல் கசாப்) இங்கும் அத்தகைய வாய்ப்பு தனிநபர் பழிவாங்கும் நோக்கில் ஏற்பட்டு வருகிறது. தவிரவும் இப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் மன்னிப்பது என்பதிலும் கூட சவூதி போன்ற நாடுகளில் இடைத்தரகர்கள் செயல்படுவதும், ஊழலுக்கு வாய்ப்புளது குறித்துச் சில தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

ஆக நிகழ்வின் தனித்தன்மை, உறுதிப்பாடுகளின் சாத்தியமின்மை (Impossibility of Certitude) உண்மைகளின் கட்டமைப்பில் பொதிந்து கிடக்கும் வன்முறை, நீதி வழங்கு முறையில் மூன்றாம் நபராகக் காட்சியளிக்கும் (குற்றவாளி, பாதிக்கப்பட்டவர், நீதிமன்றம்) நீதி வழங்கு நிறுவனத்தின் பொறுப்பின்மை ஆகியவற்றின் அடிப்படையில்தான் நிறைவேற்றப்பட்ட பின்பு மீண்டும் திருத்திக் கொள்ள முடியாத (irreversible) மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்கிறோம்.

இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிற மரண தண்டனை முறை சாகும் வரை தூக்கில் தொங்கவிட்டுக் கொல்வது _

சித்திரவதையற்றது, கண நேரத்தில் நிகழ்வது, தூக்கிலிட்ட மறுகணமே ரத்த நாளங்கள், நரம்பு, மூச்சு மண்டலங்கள் பாதிக்கப்பட்ட மரணம் நிகழ்கிறது என்றெல்லாம் மரண தண்டனை தேவை என வாதிடும் சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுவர். தூக்கில் வீழ்கிற தொலைவு குறைவாகவோ அதிகமாகவோ இல்லாமல் அளவாகச் செய்வதன் மூலம் மூச்சுத் திணறலோ, தலை துண்டிப்போ நிகழாமல் மரணம் சம்பவிக்கிறது என்றும் அவர்கள் வாதிடுவர். இதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவரது உயரம், கழுத்தளவு, எடை முதலியவை முதல் நாளே அளக்கப்படுகிறது.

இத்தனை எச்சரிக்கைகளும் அவமானங்களும் (humiliations) மேற்கொள்ளப்பட்ட பின்பும்கூட நமது தூக்குமுறை வலி நிறைந்ததாகவும் இழிவுமிக்கதாகவுமே உள்ளது. தூக்குத் தண்டனையை நிறைவேற்றுகிற சிறை ஊழியர்களின் கூற்றுக்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சே அம்பாலா சிறையில் தூக்கிலிடப்பட்டபோது (1950) தூக்கு மரடிததிலேயே அவரது உடல் பதினைந்து நிமிடங்கள் தொங்கித் துடித்த பின்புதான் உயிர் பிரிந்தது. இரு குழந்தைகளைக் கொன்ற பில்லா (29), ரங்கா (27) ஆகிய இருவரும் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை தூக்கிலிடப் பட்டபோதும் (14, பிப்ரவரி 1982) இப்படித்தான்.

சிறை ஊழியர்கள் மரணக் குழியில் இறங்கித் தொங்கிக் கொண்டிருப்பவரின் கால்களையும் கைகளையும் பிடித்து இழுத்து பின்புதான் உயிர் பிரிகிறது. கழுத்தெலும்பு படக்கென ஒடியாமல் இப்படி மூச்சுத் திணறித் துடித்து மரிப்பதன் விளைவாக கண்கள் துருத்தி வெளியில் வந்து மலம், நீர், சளி, விந்து, இரத்தம் முதலியன வெளியேறி மரணம் கோரமாக நிகழ்கிறது.

சிறை மருத்துவர் ஒரு ஏணி வழியாக ஏறி, ஆடும் உடலைச் சிறை ஊழியர்கள் பிடித்துக் கொள்ள, மார்புத் துடிப்பைச் சோதனை செய்து மரணத்தை உறுதி செய்கிறார். பின் சிறிது நேரம் கழித்து உடல் இறக்கப்படுகிறது.

சிறைக்கு வெளியே உறவினர்கள் பதறி நிற்கின்றனர். இந்திரா காந்தியைக் கொலை செய்த சதியில் பங்குபெற்றவர் எனச் சொல்லி கேகர் சிங் தூக்கிலிடப்பட்டபோது அவரது ரத்த

உறவினர்கள் வெளியில் கதறிக் காத்திருந்த சோகக் காட்சியை பத்திரிகை படித்தவர்கள் மறந்துவிட இயலாது.

இத்தகைய இழிவுச் சாவுக்கு பிறகு உறவினர்கள் பெரும்பாலும் பிணத்தை எடுத்துச் செல்வதில்லை. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தூக்குகளில் உறவினர் விரும்பினாலும் பிணம் ஒப்படைக்கப்படுவதில்லை. பெரும்பாலும் சிறை ஊழியர்களே உடலையும் அப்புறப்படுத்தி அழிக்கின்றனர்.

தூக்கு மரம் ஏறும் தியாகிகள் வீர வசனம் பேசி, கயிற்றை முத்தமிட்டு மரணத்தைத் 'தழுவி'க் கொள்வதாகத்தான் நமது கதையாடல்கள் அமைகின்றன. ஆனால் பெரும்பாலும் சோக ஓலங்களோடும் வேதனைக் குரல்களோடும், கட்டாயமாகவும்தான் தூக்கு நிகழ்த்தப்படுகிறது. தன்னுடன் மலேசியப் பொதுவுடமைக் கட்சியை நிறுவிய போராளி ஒருவர் தூக்கிலிடப்பட்டதையும் அவரது கடைசி நாளையும் என் தந்தை விவரித்தபோது சின்ன வயதில் நான் நெஞ்சுறைந்து அமர்ந்திருக்கின்றேன். இரவு முழுவதும் பாரதி பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாராம் அந்த தோழர். நள்ளிரவிற்குப் பிறகு பாடல்கள் அழுகையாகவும் புலம்பல்களாகவும் மாறினவாம்.

தூக்கிலிடப்படுபவர்கள் பெரும்பாலும் அடித்தளச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களது மரணத்தால் துன்புறுவோரும் ஏழைய எளிய மக்கள். தீர்ப்பிற்கும் தூக்குமரம் ஏறுவதற்கும் இடைப்பட்ட நீண்ட இடைவெளி ஏற்படுத்தும் மனச் சிதைவுகள் பற்றியெல்லாம் சட்ட ஒழுங்கு நிறுவனம் கவலை கொள்வதில்லை.

மரண தண்டனை நீக்கத்தைப் பொருத்தமட்டில் அரசும், அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இரு குரலில் பேசுவதை நாம் கவனிக்க வேண்டும். மரண தண்டனைக்கு எதிர்ப்பு 1931ல் தொடங்கி நமது நாட்டில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பகத்சிங்கும் அவரது சகாக்களும் தூக்கிலிடப்பட்டபோது (1931) அன்றைய சட்டமன்றத்தில் மரண தண்டனைக்கு எதிராக ஒரு தனி நபர் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அன்றைய பிரிட்டிஷ் அரசின் உள்துறை அமைச்சகம் அதனை நிராகரித்தது. விடுதலைக்குப் பிந்திய இந்தியப் பாராளுமன்றத்தில் (1956) காங்கிரஸ் அரசு அதனை நிராகரித்தது. 1958, 1962 ஆகிய

ஆண்டுகளில் மேலவையில் மரண தண்டனை ஒழிப்புத் தீர்மானங்கள் இயற்றப்பட்ட போது சட்ட மறுபரிசீலனைக் குழுவின் பார்வைக்கு அதனை அனுப்பி விட்டு அரசு ஒதுங்கிக் கொண்டது. 1967ல் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ஆணையம் அறிக்கை 1971ல் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. மரண தண்டனை தொடர வேண்டும் என்பதே அதன் பரிந்துரையாக இருந்தது.

1975ம் ஆண்டு, இன்றைய பாரதீய ஜனதாவின் முந்தைய வடிவமாகிய பாரதீய ஜனசங் கட்சியினர், மகாவீரரின் நினைவாக மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் எனவும் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனைகள் எல்லாவற்றையும் குறைக்க வேண்டும் எனவும் குடியரசுத் தலைவரிடம் மனுக் கொடுத்தனர்.

1983ம் ஆண்டு, பாராளுமன்றத்தில் மரண தண்டனை குறித்த விவாதம் எழுந்தபோது ரத்து செய்ய வேண்டும் என்கிற கருத்திற்கு ஆதரவாகப் பேசினார் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி. ஆனால் அன்றைய உள்துறைத் துணை அமைச்சர் என்.ஆர். லஸ்கார், அரசு இதனை ஏற்காது எனக் கைவிரித்தார்.

மரண தண்டனையைக் கண்டித்த காந்தியின் கொலையாளியையும் தூக்கிலிட்டனர். மரண தண்டனை ஒழிப்பிற்கு ஆதரவாகப் பேசிய இந்திராவின் கொலையில் தொடர்புடையவர் எனவும் ஒருவர் தூக்கிலிடப்பட்டார். நாடெங்கிலும் கடுமையான எதிர்ப்புகளுக்கிடையில் இந்தத் தூக்கு நிறைவேற்றப்பட்டது. மகாவீரரின் பெயரைச் சொல்லி மரண தண்டனையை ரத்து செய்யக் கோரியவர்கள் இன்று ராஜீவ் கொலையாளிகளைத் தூக்கிலிடுவதற்கு ஆதரவாக உள்ளனர்.

விரிவான நடைமுறைகள், பல்லாயிரக்கணக்கான பக்கங்களில் குற்றப்பத்திரிகைகள், தீர்ப்பு, உண்மை வென்றது என அறிக்கைகள், மேல் முறையீடு, தண்டனை உறுதி, இடைக்காலத் தடைகள், தடை நீக்கங்கள், கருணை மனுக்கள், கருணை நிராகரிப்பு, உலகு முழுக்க அறிவிக்கப்பட்டு குறித்த நேரத்தில் தண்டனை நிறைவேற்றம் _ தனது குடிமக்களின் உடல் மீதான தனது இறையாண்மையை அரசு இப்படித்தான் நிறைவேற்றிக் கொள்கிறது. சமூக ஒழுங்கைக் குலைக்கக்கூடிய இருப்புகளை நீக்குவதன் மூலம் சமூகத் தூய்மையைக் காக்கும் பொறுப்பு

தனக்குள்ளதாக அது உரிமை கோருகிறது. இந்த உரிமையை அரசு எக்காரணம் கொண்டும் இழக்கத் தயாராக இல்லை. மரண தண்டனை என்கிற அச்சுறுத்தல் இருந்தால்தான் சமூக ஒழுங்கு குலையாமல் இருக்கும் என்கிற தர்க்கத்தை மட்டுமே முன்வைத்து இந்த உரிமையை அது தக்க வைத்துக் கொள்கிறது.

பாராளுமன்றம், சனநாயகம் ஆகியன குறித்த அடிப்படைக் கேள்விகளோடு இணைந்த பிரச்சினை இது. மேலை நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு பாராளுமன்றம் அந்த இடத்தைப் பிடித்த போது அதிகார வடிவங்களில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படாமல் அரசின் இறையாண்மை அதிகாரங்கள் அனைத்தும் அப்படியே பாராளுமன்றத்திடம் மாற்றீடு செய்யப்பட்டது. எனவே அரசனுக்குப் பதிலாக பாராளுமன்றம் அமைந்தது. புரட்சிக்குப் பிந்திய அரசுகளில் சோவியத் அமைப்புகள் அந்த இடத்தில் அமர்ந்தன. சனநாயகம் என்பது பொருளிழந்தது. சிவில் சமூகம் பலமிழந்து கிடப்பது தொடர்ந்தது.

அரசிற்கும் சிவில் சமூகத்திற்குமிடையில் பொதுவெளி ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அது திறந்த வடிவமுடையதாகவும் பரந்துபட்ட குழுக்களை ஒன்றிணைப்பதாகவும் அமைய வேண்டும். அரசு மற்றும் அரசியல் கட்சிகள் மீதான அழுத்தக் குழுவாக அது செயல்பட வேண்டும். மரண தண்டனைக்கு எதிரான அத்தகைய ஒரு இணைவு தமிழகத்தில் உருப்பெறுவது வரவேற்கத்தக்கது.

ஆனால் ஒன்றைக் கவனத்தில் நிறுத்துவது அவசியம். இது ஒரு மனித உரிமைப் பிரச்சினை. நீதி வழங்குதலில் உள்ளார்ந்து அமையும் சிக்கலின் விளைபொருளான வன்முறைக்கு எதிராக மனித உரிமையை நிலைநிறுத்தும் முயற்சி என்கிற அடிப்படையிலேயே நாம் மரண தண்டனையை எதிர்க்க வேண்டும். இதை ஒரு தமிழர் பிரச்சினையாகவோ, இனப் பிரச்சினையாகவோ மட்டும் சுருக்கிப் பார்த்தல் இயலாது. பகத்சிங்கிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மட்டுமல்ல கோட்சேக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையையும் எதிர்க்கும் நெஞ்சுரம் நமக்கு வேண்டும். அரசுகள் விதிக்கும் மரண தண்டனையை மட்டுமல்ல குடி அரசுகளாகவும், சமயங்களில் அரசுகளை விடவும் சனநயாக மாற்றுகளுக்கு வாய்ப்பே இல்லாதவையாகவும் உள்ள இயக்கங்கள் விதிக்கும் மரண

தண்டனையையும் எதிர்க்கும் நேர்மையும் திராணியும் நமக்குத் தேவை. போர்க்களத்திற்கு அப்பால் திருடுதல், விபச்சாரம் முதலான சாதாரணக் குற்றங்களுக்காகவும்கூட இன்று அரசுகளை விடவும் அதிகமாக மரண தண்டனை விதிக்கும் இயக்கங்கள் உலகில் உள்ளன. அதுபோல தூக்கு முதலான சட்டபூர்வமான கொலைகளைத் தவிர மோதல் என்கிற பெயரில் ஒழித்துக் கட்டப்படும் அரச கொலைகளும் உண்டு. இவற்றையும் நாம் எதிர்க்க வேண்டும். இத்தகைய நெஞ்சுரமும் நேர்மையும் உள்ளவர்கள் நம்மில் எத்தனை பேர்? ஒரு இனத்தைக் காக்கும் பெரும் போரின் நடுவே மனித உரிமைவாதங்கள் பொருந்தாது என்று சொல்லி இயக்கங்கள் நிறைவேற்றும் மரண தண்டனைகள் சரியானவைதான் என நாம் சொல்வோமேயானால் சமூக ஒழுங்கு, சட்டப்பூர்வமான அரசு என்கிற பெரும் கதையாடல்களுக்கு முன்னால் நம்முடைய நியாயங்கள் நிற்காது என்பதை நாம் உணர வேண்டும்.

(மரண தண்டனைக்கெதிராக சென்னையில்
தமிழ் எழுத்தாளர்கள் நடத்திய மாநாட்டில் பேசிய உரை)



4. உச்ச நீதிமன்றம் தான் தவறாக மரண தண்டனை வழங்கிவிட்டதாகச் சொல்வதன் பொருள் என்ன?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் நால்வருக்குத் தனது தலைமையில் அமர்ந்த உச்ச நீதிமன்ற அமர்வு மரண தண்டனை அளித்ததில் தவறு நிகழ்ந்துள்ளது என நீதியசர் கே.டி. தாமஸ் இரண்டு நாட்கள் முன்னதாகக் கூறினார். சென்ற ஜூலை 25 (2012) அன்று புகழ்பெற்ற முன்னாள் நீதிபதிகள் 14 பேர் அப்போதுதான் பதவி ஏற்றிருந்த குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து நமது நீதி வழங்கு வரலாற்றில் இதுவரை காணாத வகையில் மனு ஒன்றை அளித்தனர். ஆறு வழக்குகளில் மரண தண்டனை அளிக்கப்பட்டு, இந்தியாவின் பல்வேறு சிறைகளிலும் அடைபட்டுக் கிடக்கும் 13 பேர்களின் மரண தண்டனைகளை, குடியரசுத் தலைவருக்கு அரசியல் சட்டத்தின் 72-ம் பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு அம்மனுவில் வேண்டப்பட்டிருந்தது.

ஒன்றைச் சொல்ல வேண்டும். மரண தண்டனை ஒழிப்பு என்கிற அடிப்படையிலிருந்து அவர்கள் இதைக் கோரவில்லை. அவர்களில் சிலர் மரண தண்டனை ஒழிப்பில் அக்கறை உள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் இந்தக் கோரிக்கை அந்த அடிப்படையிலிருந்து எழவில்லை, மாறாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள இந்த மரண தண்டனைகள் அனைத்தும் தற்போதைய நீதி வழங்கு நெறிமுறைகளுக்கு மாறாகவும் தவறாகவும் அளிக்கப்பட்டுள்ளது என்கிற அடிப்படையிலேயே அவர்கள் இதைக் கோரினர். ஓய்வு பெற்ற இந்நீதிபதிகள் தன்னிச்சையாக இதைக் கூறவில்லை. உச்ச நீதிமன்றம் தனது சமீபத்திய மூன்று வழக்குகளில் தீர்ப்பளிக்கும்போது முன்னதாக

அது ஏழு வழக்குகளில் அளித்துள்ள மரண தண்டனைகள் "தவறுதல் அல்லது அறியாமையின்" (per incurium) கரணமாக அளிக்கப்பட்டவை என ஏற்றுக் கொண்டுள்ளது.

சந்தோஷ் குமார் பாரியார் *(6 SCC 498/2009)*, திலிப் திவாரி *(1 SCC 775/2010)*, ராஜேஷ் குமார் *(13 SCC 706/2011)* ஆகியவைதான் இந்த மூன்று வழக்குகள், தற்போது நடைமுறையில் உள்ளன மிக அடிப்படையான கட்டுப்படுத்தும் நெறியான (binding dictum), "அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்க வேண்டும்" எனும் நிபந்தனைக்கு மாறானவையாக மேற்குறித்த ஏழு வழக்குகளின் தீர்ப்புகளும் அமைந்துவிட்டன என்று உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளதன் அடிப்படையிலேயே பதினான்கு நீதிபதிகளும் இந்த மனுவைக் குடியரசுத் தலைவரிடம் அளித்தனர்.

"மரண தண்டனை வேண்டுமா, கூடாதா என்கிற அகன்ற விவாதத்திற்குள் நாங்கள் செல்லவில்லை. மரண தண்டனை என்பதை மிக்க நேர்மையுடனும், நடுநிலையுடனும் நீதியுடனும் மனச்சாட்சியின் உறுத்தலுடனுந்தான் கையாள வேண்டும். தவறாகத் தண்டனை வழங்கப்பட்ட ஒருவரைத் தூக்கிலிடுவது நமது குற்ற நீதி வழங்கு முறையின் நம்பகத் தன்மையையும், இத்தகைய தண்டனை நிறைவேற்றுகிற அரசு அதிகாரத்தையும் எதிர்காலத்தில் கேள்விக்குள்ளாக்கிவிடும்" என அவர்கள் அம் மனுவில் எச்சரித்திருந்தனர்.

குற்ற நீதி வழங்குமுறையில் மாற்றங்கள்

மேலே செல்லுமுன் குற்ற நீதி வழங்குமுறை குறித்து ஒரு சொல். 'குற்றம்' என்பதையும், அதற்குரிய 'தண்டனை'யையும் நமது சட்டங்கள் வரையறுக்கின்றன. நீதிமன்றங்கள் இவற்றின் வழி நின்று நீதி வழங்க வேண்டும். ஆம், நீதிமன்றங்கள் என்பன நீதி வழங்கும் நிறுவனங்கள் தானே ஒழிய அவை பலரும் நினைப்பதுபோல தண்டனை வழங்கும் நிறுவனங்கள் அல்ல. இது குறித்துப் பின்னர் சற்று விரிவாகப் பார்ப்போம்.

சட்ட நூற்களின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்புகளை வழங்குகின்றன என்பதில் இரு அம்சங்கள் கவனத்திற்குரியன. சட்டங்கள் என்பன நிரந்தரமானவை அல்ல. சமூக வளர்ச்சிப் போக்கில் சட்டங்கள் மாறுகின்றன. மனித சமூகம் மேலும் மேலும்

மனிதாயப் படுகிறது. அதன் அனுபவங்கள் விசாலிக்கின்றன. ஒரு காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் முற்றிலும் வேறுபட்ட இன்னொரு சூழலில் பொருந்தா. அனுபவங்களின் ஊடாகச் சட்டங்களின் வரையறைகளிலும், அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் செய்வதும் தண்டனைகளை மேலும் மேலும் மனிதாயப்படுத்துவதும் தேவையாகின்றன. இது குறித்தும் பின்னர் விரிவாகக் காண்போம்.

ஒரு எடுத்துக்காட்டு: பாலியல் வன்புணர்ச்சி தொடர்பான சட்டங்கள் 1886ல் பிரிட்டிஷ் ஆட்சியில் உருவாக்கப்பட்டன. அதில் பல குறைபாடுகள், குறிப்பாகப் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி கிடைப்பதற்கு வாய்ப்பில்லாத வகையில் இருந்தன. குற்றம் புரிந்த ஆண் தப்பிப்பதற்கு ஏதுவான ஒரு ஆணாதிக்க மனநிலையில் உருவான அச்சட்டம் சமூக வளர்ச்சிப் போக்கிலும், சமூகத்திலும், பெண்கள் மத்தியிலும் உருவாகும் விழிப்புணர்வின் விளைவாகவும் இன்று பல மாற்றங்களுக்கு உள்ளாகி வர்மா ஆணைய அறிக்கை வரை வளர்ந்துள்ளது. 1973ல் மதுரா என்கிற பழங்குடிப் பெண் வன்புணர்ச்சி செய்யப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து பெண்ணிய அமைப்புகள் போராடின. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நீதி கிடைக்காத அளவிற்கு இது தொடர்பான நம் சட்டங்கள் எவ்வளவு ஆணாதிக்கத் தன்மையுடன் உள்ளன என்பது குறித்து தேசிய அளவில் விவாதமொன்று உருவாவதற்கு இது வழி வகுத்தது. 1980ல் மும்பையில் ஒரு மிகப் பெரிய மாநாடு நடத்தப்பட்டு விரிவான நெறிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டன.

இவ்வாறு ஒரு பிரச்சினை குறித்துத் தீவிரமாகச் சிந்திப்பவர்கள் உருவாக்கும் நெறிமுறைகள் அனைத்தையும் ஏற்கும் அளவிற்குச் சமூகம் இணையாகப் பக்குவப்பட்டு விடுவதில்லை. எனினும் இவ்வாறு உருவாகி மேலெழும் நெறிமுறைகளிலிருந்து சமூகம் முற்றிலும் ஒதுங்கிக் கொள்ளவும் இயலாது. சமூக மதிப்பீடுகள் மாற்றமடைகின்றன. இந்த முரண்பாடுகளின் ஊடாகத்தான் சமூக வளர்ச்சி நடைபெறுகிறது. மும்பை மாநாடு உருவாக்கிய நெறிகள் அனைத்தும் சட்டமாக்கப்படவில்லை ஆயினும் 1983ல் இந்த அடிப்படையில் வன்புணர்ச்சி தொடர்பான சட்டத்தில் பல முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

"வன்புணர்ச்சி", "ஒப்புதலுடன் கூடிய உறவு (consensual sex)" ஆகியவற்றின் வறையறைகள், விசாரணை முறை (in camera proceedings), குறைந்தபட்ச மற்றும் அதிகபட்சத் தண்டனைகளை அதிகரித்தல் என்றெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக சட்டத்தில் மாற்றங்கள் உருவாயின. கணவனாக இருந்த போதிலும், பிரிந்துள்ள மனைவியின் மீது மேற்கொள்ளும் விருப்பத்திற்கு மீறிய பாலியல் அத்துமீறலை வன்புணர்ச்சியாகவே கருதுதல் முதலியனவும் இன்று சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் கணவனாக இருந்த போதிலும், ஒரே வீட்டில் வாழ்ந்த போதிலும் மனைவியின் ஒப்புதலின்றி மேற்கொள்ளப்படும் புணர்ச்சியை வன்புணர்ச்சியாகவே கருத வேண்டும் என்பது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் அதுவும் கூட மாறலாம்.

இப்படிச் சட்டங்கள் காலப் போக்கில் மாறுவது என்பது ஒன்று. மற்றது சட்ட நூல்களில் கூறப்பட்டதற்கு அப்பால் சமூக வளர்ச்சிப் போக்கு மற்றும் பன்னாட்டு நீதி வழங்கு நெறிமுறை வளர்ச்சி ஆகியவற்றின் ஊடாக இருக்கும் சட்டங்களுக்கு நீதிமன்றங்கள் புதிய விளக்கங்களை அளித்துப் புதிய நெறிமுறைகளை உருவாக்குவது என்பது மற்றொன்று. உச்ச நீதிமன்றத்தின் விரிந்த ஒரு அமர்வு இவ்வாறு ஒரு புதிய விளக்கத்தை அளிக்கும்போது, பின் அதுபோன்ற வழக்குகளில் இந்த விளக்கம் ஒரு கட்டுப்படுத்தும் நிபந்தனையாக (binding dictum) ஆகிவிடுகிறது, இத்தகைய புதிய விளக்கத்தின் ஊடாக உருவாகும் அடிப்படைக் கோட்பாடு (ratio decidendi) மீற இயலாத ஒரு வழிகாட்டு நெறி அல்லது 'வரைநெறி' (ratio) ஆகிவிடுகிறது, ஒரு விரிந்த நீதிமன்ற அமர்வு (எ.கா: ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வு) உருவாக்கிய ஒரு அடிப்படை நெறியை, அதைவிடக் குறுகிய ஒரு அமர்வு (எ.கா: மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வு) மாற்றி அமைத்துவிட இயலாது.

மரண தண்டனை தொடர்பான அப்படியான ஒரு அடிப்படை வரைநெறியை (ratio) உருவாக்கிய ஒரு தீர்ப்புதான் அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்க இயலும் என்கிற பச்சன்சிங் வழக்குத் தீர்ப்பு. சமூகம் மேலும் மேலும் மனிதாயப்பட்டு வருவதற்கேற்ப நமது தண்டனைக்

கலாச்சாரமும் மனிதாயப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பச்சன் சிங் தீர்ப்பின் பின்னணியும் முக்கியத்துவமும்

'பச்சன்சிங் எதிர் பஞ்சாப் அரசு' (SCC 2 684/1982) என்கிற புகழ்பெற்ற வழக்கில் நீதியரசர் பகவதி அவர்களின் தலைமையில் அமர்ந்த ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு உருவாக்கிய மரண தண்டனை தொடர்பான அடிப்படை நெறி உருவாக்கப்படும் வரை கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை என்பதே இயல்பான தண்டனையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் 1898ம் ஆண்டு உருவாக்கப்பட்ட குற்ற நடைமுறைச் சட்டத்தின் 367 (5)வது பிரிவின்படி, மரண தண்டனைக்குரிய குற்றமொன்றில் ஒரு நீதிமன்றம் மரண தண்டனை அல்லாமல் குறைந்த (அதாவது சிறை) தண்டனை அளித்தால் அதற்கான விளக்கத்தை அது அளிக்க வேண்டும். அதாவது மரண தண்டனை என்பது விதி. ஆயுள் தண்டனை என்பது விதி விலக்கு. 1950ல் உருவான நமது அரசியல் சட்டமும் இதை ஏற்றுக் கொண்டது 1956 வரை இது நீடித்தது.

1898ம் ஆண்டு உருவாக்கப்பட்ட குற்ற நடைமுறைச் சட்டம் 1973 வரை நீடித்தது. 41வது சட்ட ஆணையப் பரிந்துரைகளின் (41st Law Commission) அடிப்படையில் 1973ல் இதில் இரு முக்கிய, வரவேற்கத்தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருத்தப்பட்ட சட்டத்தின் 235 (2) பிரிவின்படி தண்டனை வழங்குமுன் நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்டவரிடம் தண்டனை குறித்து அவரது கருத்தைக் கேட்க வேண்டும். 354 (3) பிரிவின்படி மரண தண்டனை வழங்கப்படும் வழக்குகளில் அதற்கான "சிறப்புக் காரணங்களை" நீதிமன்றம் குறிப்பிட வேண்டும். இந்த இரு முக்கிய பிரிவுகளே பின்னர் "அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்கிற வரைநெறி உருவாவதற்கு இட்டுச் சென்றது. அதன் வழியாக ஆயுள் தண்டனை என்பது விதியாகவும், மரண தண்டனை என்பது விதிவிலக்காகவும் மாறியது.

1973ம் ஆண்டு குற்ற நடைமுறைச் சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னதாக அதே ஆண்டில், ஜக்மோகன்சிங்

வழக்கில் உச்சநீதிமன்றம் மரண தண்டனை நீக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியது, 35வது சட்ட ஆணையப் பரிந்துரையில் (1967) 'இந்தியா போன்ற சமூக பொருளாதார வேறுபாடுகள் நிறைந்த நாடுகளில் மரண தண்டனையை நீக்க இயலாது' எனக் கூறப்பட்டிருந்ததன் அடிப்படையில் இப்படித் தீர்ப்பளிக்கப்பட்டது.

பச்சன் சிங் வழக்கில் நீதியரசர் பகவதி தலைமையில் அமைந்த அமர்வு (1982), 1973ம் ஆண்டுச் சட்டத் திருத்தங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து அது அளித்த விளக்கம் இரு முக்கிய அம்சங்களைக் கொண்டிருந்தது.

அ. மரண தண்டனை அளிப்பதற்குச் சிறப்புக் காரணங்களைக் கூற வேண்டும் எனச் சொல்ல வரும்போது, குற்றத்தின் சூழலை மட்டுமின்றிக் குற்றவாளியின் சூழலையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அது வலியுறுத்தியது. "தண்டனையின் அளவை நிர்ணயிக்கும்போதோ, அல்லது கொலைக் குற்றம் உட்பட (இ.த.ச 302) வெவ்வேறு குற்றங்களுக்கான தண்டனைகளைத் தேர்வு செய்யும்போதோ நீதிமன்றம் அந்தக் குறிப்பிட்டக் குற்றத்தின் தன்மையில் மட்டுமின்றி, குற்றவாளியின் சூழலிலும் உரிய கவனம் செலுத்த வேண்டும்" என்கிற கூற்றில் (i) குற்றத்தின் தன்மை, அளவு, நோக்கம், பாதிக்கப்பட்டவரின் தகுதி முதலானவற்றோடு (ii) குற்றவாளி யார், அவரது நிலை, பின்புலம், குடும்பம், வயது உட்பட அவரது சூழல்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனப் பொருளாகிறது. குற்றவாளியின் சூழல் என்பதில் அவரது மன அமைப்பு, சாதி முதலான சமூகக் காரணிகள் அவர் மீது செலுத்திய பிடிப்பு முதலியனவும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

ஆ. மரண தண்டனை வழங்கப்படுகிற நபரின் இருப்பு சமூகத்திற்கு மிகப் பெரிய ஊறாகவும் (menace), அவர் திருத்தப்படவே முடியாத நபராகவும் இருக்க வேண்டும் என்பது பச்சன்சிங் வழக்கு அளிக்கும் அடுத்த முக்கிய

நிபந்தனை. இந்த நிபந்தனை உண்மையில் தண்டனையின் அளவைத் "தணிக்கும் காரணி" (mitigating factor). அதாவது, ஒருவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டுமானால் அவர் இப்படியாகத் திருத்தப்பட முடியாத, சமூகத்தின் நிரந்தரத் தொல்லையாக இருக்கிறார் என்பது நிறுவப்பட வேண்டும்.

ஒரு எடுத்துக்காட்டு: சமீபத்தில் நடைபெற்ற டில்லி பாலியல் வன்கொடுமைக் குற்றம் மிகக் கொடூரமானது என்பதை அறிவோம். அதில் பங்குபெற்ற ஒரு 16 வயதுப் பையன் மிகக் கொடூரமாக நடந்து கொண்டதும் தெரியும். ஆனால் குற்றத்தின் இந்தத் தன்மைகள் மட்டுமே அவனுக்கு மரண தண்டனை அளிக்கப் போதா. அவன் ஒரு சிறுவன். இன்னும் திருந்தக்கூடிய வாய்ப்பு உள்ளவன். சிறு வயதிலேயே ஏழ்மை காரணமாக வீட்டைவிட்டு வெளியேற நேர்ந்தவன். இதனூடாகத் தன் சிறு பிராயத்தை, கல்வி வாய்ப்பை எல்லாம் தொலைத்தவன். இவை அவனை மரண தண்டனையிலிருந்து விலக்கி வைக்கக் கூடிய தணிக்கும் காரணிகளாகச் செயல்படும். தண்டனையின் நோக்கம் பழிவாங்கலோ (revenge), ஈடு செய்தலோ (retribution) அல்ல. குற்றத்தை உணர்ந்து திருந்தி வாழ வைத்தலே அதன் முதன்மையான நோக்கம் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

இந்தப் பதின்மூவருக்கும் தவறாக மரண தண்டனை அளித்தது எப்படி?

பச்சன்சிங் வழக்கில் உச்ச நீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு ஒன்று இத்தகைய அடிப்படை நெறி ஒன்றை உருவாக்கிப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் வேறொரு வழக்கில் இந் நெறிமுறை மீறப்பட்டது. ராவ்ஜி என்கிற ராம்சந்திரா என்னும் வழக்கில் (2 SCC 175/1996) இரு நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு ஒன்று, "குற்ற விசாரணை ஒன்றில் பொருத்தமான தண்டனை அளிப்பதற்குக் கவனத்தில் கொள்ள வேண்டியது அக் குற்றத்தின் தன்மை, அளவு ஆகியவைதானே தவிர குற்றவாளியின் சூழல், தன்மை அல்ல" என பச்சன்சிங் வழக்கில் உருவான அடிப்படை நெறிமுறைக்கு மாறான நெறி ஒன்றை வரையறுத்தது.

ராவ்ஜி வழக்கில் உருவாக்கப்பட்ட இந் நெறிவரையின் அடிப்படையில் குற்றத்தின் தன்மையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு, பச்சன்சிங் நெறிவரையில் கூறப்பட்ட குற்றவாளியின் சூழல், தன்மை ஆகியன கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல் குறைந்தபட்சம் ஆறு வழக்குகளில் ஏழு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள உண்மையை உச்ச நீதிமன்றம் பதிமூன்றாண்டுகளுக்குப் பின் சந்தோஷ் குமார் பாரியார் என்னும் வழக்கில் (2009) கண்டுபிடித்தது. "அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்கிற நிபந்தனை, 'ஆயுள்தண்டனைதான் விதி, மரண தண்டனை ஒரு விதிவிலக்குதான்' என்பதை நிறுவியுள்ளது. விதிவிலக்குகளை மிக அரிதாகவே பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு நிறுவப்பட்ட சட்ட நடைமுறை. எனவே அரிதினும் அரிதான வழக்கு என்னும் நிபந்தனை நீதிமன்றத்தின் மீது ஒரு அசாதாரணமான சுமையை ஏற்றுகிறது. தனது விருப்பாக அது மரண தண்டனையை தேர்வு செய்தால், அரிதினும் அரிது என்னும் நிபந்தனையில் பொதிந்துள்ள விதிவிலக்குகளைத் திருப்தி செய்ய அது முற்றிலும் புறவயமாக உண்மைகளை மதிப்பிட வேண்டும்" எனக் கூறிய உச்ச நீதிமன்றத்தின் பாரியார் அமர்வு, ராவ்ஜி வழக்கைப் பின்பற்றிக் கடந்த ஒன்பதாண்டுகளில் குறந்த பட்சம் ஆறு வழக்குகளில் தவறுதலாகத் (per incurium) தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது எனத் திட்டவட்டமாக அறிவித்தது. இந்த ஆறு வழக்குகளில் ஏழு பேர் இப்படித் தவறுதலாக மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.

சந்தோஷ் குமார் பாரியார் பணத்திற்காக ஒரு சிறுவனைக் கடத்திச் சென்று கொன்றான். எத்தகைய கொடூரமான குற்றமானாலும் குற்றவாளியின் சூழலைக் கணக்கில் கொள்ள வேண்டும் எனக் கூறிய உச்ச நீதிமன்றம் அவனது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து ஆணையிட்டது. பாரியாரின் சூழலிலிருந்த தண்டனைகளைக் குறைக்கும் காரணிகள், அவனது வழக்கை அரிதினும் அரிது அல்ல என முடிவு செய்யப் போதுமானது என நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. குற்றவாளி ஒரு பின்தங்கிய சமூகப் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வந்தவன் என்கிற உண்மை குற்றத்தின் தன்மையை நீர்க்கச் செய்யாது என்ற போதிலும், அந்தப் பின்னணியை ஒரு தணிக்கும் சூழலாகக் (mitigating circumstance)

கொள்ளலாம் எனவும், அவன் திருந்துவதற்கு உள்ள வாய்ப்பு கணக்கில் கொள்ளப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் கூறியது. திருந்தி மறுவாழ்வு வாழ பாரியாருக்கு சாத்தியமே இல்லை என வழக்கு தொடுத்திருப்போர் (prosecution) நிறுவுதல் என்பது அவருக்கு மரண தண்டனை வழங்குவதற்கு முன்நிபந்தனையாக உள்ளது என பச்சன்சிங்கை மேற்கோள்காட்டி நீதிமன்றம் இறுதியுரைத்தது.

பாரியார் வழக்கு விசாரணையில் இருந்தபோதே, தீர்ப்பு வருவதற்குச் சற்று முன்னதாக அங்குஷ் மாருதி ஷிண்டே என்னும் வழக்கில் *(6 SCC 667/2009)* ஆறு பேர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையும் பச்சன்சிங் நெறிவரைக்கு எதிரானது என்கிற வகையில் இதையும் சேர்த்து மொத்தம் *(7+6=13)* பதின்மூன்று பேர்களது மரண தண்டனைகள், அவை தவறாக வழங்கப்பட்டவை என்கிற அடிப்படையில் குறைக்கப்பட வேண்டும் எனப் பதினான்கு நீதிபதிகள் கையொப்பமிட்ட மனு குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்ட பின்னணி இதுவே. இரண்டு நாட்களுக்கு முந்தைய நீதியரசர் கே.டி. தாமசின் கருத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் அவரது அமர்வால் தவறாக மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி ஆகியோரையும் சேர்த்துக் குறைந்தபட்சம் பதினேழு பேர்களுக்கு உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டுகளில் தவறாக மரண தண்டனைகளை வழங்கியுள்ளது எனலாம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடியாகப் பெறப்பட்ட எண்ணிக்கை இது. ஒப்புக்கொள்ளப்படாத தவறுகளையும் சேர்த்துக் கொண்டால் இந்த எண்ணிக்கை இன்னும் பெரிய அளவில் அதிகமாகலாம்.

நல்லவேளையாக இவர்களில் 16 பேருக்கு தண்டனைகள் இதுவரை நிறைவேற்றப்படாததால் இன்று அவர்கள் தூக்குக் கயிற்றில் இருந்து தப்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ராவ்ஜி என்பவர் ஏற்கனவே தூக்கிலிடப்பட்டுவிட்டார். இந்தத் தவறை நீதி மன்றம் எப்படித் திருத்திக் கொள்ளும்?

குறிப்பு 1:

மனுவில் கையொப்பமிட்ட 14 நீதியரசர்கள்: பி.பி. சாவந்த், ஏ.பி. ஷா, பிலால் நஸ்கி, பி.கே. மிஸ்ரா, ஹோஸ்பெட் சுரேஷ், பனசந்த் ஜெயின்,

பிரபா ஸ்ரீதேவன், சிவசுப்பிரமணியம், பி.சி. ஜெயின், எஸ்.என். பார்கவா, பி.ஜி. கோல்சே படீல், ரன்விர் சஹாய் வர்மா, பி.ஏ. கான், பி.எச். மார்லபள்ளி.

இதுவும் இதர முக்கிய தகவல்களும் வி. வெங்கடேசனின் கட்டுரை மற்றும் நீதியரசர் ஏ.கே. கங்குலி அவர்களின் பேட்டி ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டன (Frontline, Sept 7, 2012).

குறிப்பு 2:

பாரியார் அமர்வு 'சைபண்ணா எதிர் கர்நாடக அரசு' (2005) என்கிற இன்னொரு வழக்கையும் சுட்டிக் காட்டியது. ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த சைபண்ணா பரோலில் சென்று தன் மனைவியையும் மகளையும் கொலை செய்கிறார். ஆயுள் தண்டனை அனுபவிப்பவர் கொலை செய்தால் அவருக்குக் கட்டாயமாக மரண தண்டனை அளிக்க வேண்டும் என்கிற விதிப்படி (இ.த.ச 303) உச்சநீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது.

ஆனால் முன்னதாக 'மிது எதிர் பஞ்சாப் அரசு' (1983) என்னும் வழக்கில் உச்ச நீதிமன்றம் இ.த.ச 303 பிரிவை ரத்து செய்திருந்தது. ஏனெனில் முன் குறிப்பிட்ட 1973ம் ஆண்டு குற்ற நடைமுறைச் சட்டத்தின்படி குற்றவாளியிடம் என்ன தண்டனை கொடுக்கலாம் என்பது குறித்து நீதிமன்றம் கேட்க வேண்டும்; ஏன் மரண தண்டனை தேர்வு செய்யப்படுகிறது என்பதற்குச் சிறப்புக் காரணங்கள் சொல்ல வேண்டும். பச்சன்சிங் வழக்கினூடாக உருவாக்கப்பட்ட நெறிவரையின்படி அரிதினும் அரிதான வழக்கு என நிறுவ வேண்டும். ஆயுள் தண்டனையிலுள்ளவர்களுக்கு இப்படியான சூழலில் மரண தண்டனை கட்டாயம் என்றால் இப்படி அவரிடம் தண்டனை குறித்துக் கேட்பது, மரண தண்டனை வழங்குவதற்குச் சிறப்புக் காரணங்கள் சொல்வது, அரிதினும் அரிது என நிறுவுவது முதலியன தேவையற்றதாகி விடுகின்றன. இந்த முரணின் அடிப்படையில் 303வது பிரிவு ரத்து செய்யப்பட்டது.

சைபண்ணாவுக்கு மரண தண்டனை அல்லாமல் வழக்கில் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கினால் ஒரே நேரத்தில் ஒருவர் எவ்வாறு இரு ஆயுள் தண்டனைகளை அனுபவிக்க இயலும் என்கிற கேள்வியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நீதிமன்றம் 303வது பிரிவின்படி அவருக்கு மரண தண்டனை அளித்தது. பாரியார் வழக்கு விசாரணையின் போது இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிமன்றம் சைபண்ணா வழக்கில்

தான் அளித்த மரண தண்டனை, மிது மற்றும் பச்சன்சிங் தீர்ப்புகளுக்கு முரணாக உள்ளதால் தவறு என ஏற்றுக் கொண்டது.

எனினும் சென்ற ஜனவரி 4 அன்று சைபண்ணாவின் கருணை மனுவை பிரணாப் முகர்ஜி நிராகரித்தார். நிராகரிக்க வேண்டும் என மீண்டும் ஒரு முறை உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் அவர் இதைச் செய்தார். உச்ச நீதிமன்றம் இதைத் தவறு எனச் சொன்னால் என்ன, 14 முன்னாள் நீதியரசர்கள் கருணை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டால் என்ன, தான் ஒரு 'இரும்பு இதயம் கொண்ட அரசு' எனக் காட்டிக் கொள்கிறது இந்திய அரசு. பிரதீபா பட்டீலைப் போலன்றி அரசுக்குத் தாளம் போடுகிறார் பிரணாப்.

தொகுத்துப் பார்க்கும்போது நமக்கு எழும் கேள்விகள்: அரிதினும் அரிது என்பது முற்றிலும் புறவயக் காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றதா? அரிதினும் அரிது என்கிற விலக்கின் பயன் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளதா?.



5. 'அரிதினும் அரிது' முறையாகத் தீர்மானிக்கப் படுகிறதா?

குற்ற விசாரணை மற்றும் நீதி வழங்கு நிறுவனங்கள் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மற்றும் தண்டிக்கப்பட்டவர்கள் மீது காட்டும் வெறுப்பு, அலட்சியம் முதலியன, அவர்கள் இழைத்த அல்லது இழைத்ததாகக் கருதப்படுகிற குற்றங்களின் மீது அவர்கள் கொண்டுள்ள வெறுப்பு அல்லது ஆத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவானது என்பதைக் காட்டிலும் குற்றத்தைச் செய்தவர்கள் மீது அவர்கள் கொண்டுள்ள வெறுப்பின் அடிப்படையில்தான் உருவாகிறது என்னும் பொருளில் மறைந்த மனித உரிமைப் போராளி டாக்டர் கே. பாலகோபால் அவர்கள் கட்டுரை ஒன்றில் கருத்துரைத் திருப்பார். தண்டனை வழங்கப்பட்டவர்கள், குறிப்பாக மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள், பொதுவில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறவர்கள் பெரும்பாலோர், ஏன் கிட்டத்தட்ட தொண்ணூறு சதத்திற்கு மேற்பட்டோர் அடித்தள சாதி, வர்க்கம் மற்றும் சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதும், விசாரணை செய்பவர்கள் மற்றும் நீதி வழங்குபவர்கள் பெரும்பான்மையும் இதற்கு நேர் மாறாக இருப்பதும்தான் இதற்குக் காரணங்கள்.

தண்டிக்கப்பட்டுச் சிறைகளில் வதியும் கைதிகள், கைதிகளுக்கான பிரிட்டிஷ் காலச் சட்டங்கள் வழங்குகிற அடிப்படை உரிமைகள் மற்றும் குறைந்தபட்ச வசதிகளும் அளிக்கப்படாமல் மிகக் கேவலமாகவும் கொடுமையாகவும் நடத்தப்படுவதற்கும் இத்தகைய கண்ணோட்டங்களே பின்புலமாக உள்ளன. இவர்களுக்கு நீதிமன்றம் கொடுத்துள்ள தண்டனைகள் போதாது, இன்னும் கடுமையாக நடத்தப்படவேண்டும்

என்கிற மனநிலை பொதுவாகச் சமூகத்தில் நிலவுகிறது. ஊடகங்களும் அதையே பிரதிபலிக்கின்றன. அஃப்சல் குரு மரண தண்டனை நிறைவேற்றப் பிரச்சினையில் 'தினமணி', 'தினமலர்', 'தினத்தந்தி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' உள்ளிட்ட பெரும்பான்மையான நாளிதழ்கள் ('இந்து' தவிர) குறைந்த பட்ச ஊடக அறமுமின்றி வெறுப்பைக் கக்கியது இதற்கொரு சமீபத்திய சான்று.

நீதி வழங்கும் பொறுப்பில் அமர்ந்துள்ளவர்கள், அந்தப் பொறுப்பில் அமர்ந்துள்ளதாலேயே எல்லாவற்றையும் புறவயமாக (Objective) அணுகித் தீர்ப்பளிக்கிறார்கள எனச் சொல்ல இயலாது. தமது வாழ்நிலையினூடாக, உருவான சார்பு மனநிலையுடன் பார்ப்பவர்களும் உளர். தமது விரிந்த படிப்பு மற்றும் தொடர்ந்த பயிற்சியினூடாக விசாலித்த இதயத்தினூடாகவும் உருவாகியுள்ள அகவயக் கண்ணோட்டங்களின் தாக்கங்களுக்கு ஆட்படுபவர்களும் உளர். புகழ்பெற்ற வழக்குரைஞரும் எழுத்தாளருமான ஏ.ஜி. நூரானி ஒருமுறை சொன்னதுபோல 'குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டவருக்கு நீதி கிடைப்பதற்கான ஒரே உத்தரவாதம் அன்று தீர்ப்பை எழுதும் வாய்ப்புப் பெற்று அந்த நாற்காலியில் அமர நேர்ந்த நீதிபதியின் நல்ல மனந்தான். வேறு எதுவுமில்லை'.

இந்திய நீதிமன்றங்களால் மரண தண்டனை வழங்கப் பட்டவர்களின் வழக்குகளை எல்லாம் ஆராய்ந்தால் ஒரே மாதிரியான குற்றத்தைச் செய்த, அல்லது ஒரே குற்றத்தில் ஒரே அளவு பங்குபெற்ற இரண்டு அல்லது மூன்று குற்றவாளிகளுக்கு (அல்லது குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு) எப்படி வெவ்வேறு நீதிமன்ற அமர்வுகள் வெவ்வேறு தீர்ப்புகளை எழுதி, எப்படி ஒருவர் தூக்கில் தொங்குவதற்கும், ஒருவர் தண்டனைக் குறைப்பிற்கும், ஒருவர் விடுதலையாகி வீட்டுக்குச் செல்லவும் நேர்ந்தது என்பதை அறிந்து அதிர்ச்சி அடையலாம். ஒருவர் தூக்கில் தொங்க நேர்வது என்பது 'திடீரென தலையில் இடி விழுவது போல ஒரு எதிர்பாராத கொடூரம்' என அமெரிக்க நீதியரசர் பாட்டர் ஸ்டூவர்ட் ஒருமுறை கூறியதைச் சுட்டிக் காட்டுவார், மும்பை வழக்குரைஞரும் இது குறித்து விரிவாக ஆய்வு செய்பவருமான யுக் மொஹித் சவுத்ரி. நான்கு பேர் வீதியில் மழையில் நனைந்து கொண்டு செல்லும்போது திடீரென ஒருவர் தலையில் இடி விழுந்து அவர் மட்டும் மரணமடைய

நேர்வது போலத்தான் மரண தண்டனைகளும் உலகெங்கிலும் விதிக்கப்பட்டு விடுகின்றன. அதை எதிர் பார்க்கவும் முடியாது, தடுத்துக் கொள்ளவும் முடியாது. அதனால்தான் மரண தண்டனை விதிப்பை ஒரு 'திருவுளச் சீட்டுக் குலுக்கலுடன்' (lethal lottery) ஒப்பிடுவார்கள். சாதாரண சீட்டுக் குலுக்கல் அல்ல. மரணச் சீட்டுக் குலுக்கல்.

மொஹித் சவுத்ரி சொல்லும் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். முதலில் ஹர்பன்ஸ் சிங் வழக்கு (1982). ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரைக் கொன்ற வழக்கில், இந்தக் குற்றச் செயலில் சம அளவில் பங்கு பெற்ற ஜீடாசிங், கஷ்மீரா சிங், ஹர்பன்ஸ் சிங் என்கிற மூவரது மரண தண்டனையை அலகாபாத் உயர் நீதிமன்றம் சென்ற அக்டோபர் 1975ல் உறுதி செய்தது. மூவரும் தனித்தனியாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். (i) ஜீடாசிங்கின் மேல்முறையீட்டை ஒய்.வி. சந்திரசூட், வி.ஆர். கிருஷ்ணய்யர், என்.எல். உன்ட்வாலியா ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு தள்ளுபடி செய்தது. ஜீடாசிங் தூக்கிலிடப்பட்டார். (ii) கஷ்மீராசிங்கின் மரண தண்டனையை எம். ஃபசல் அலி மற்றும் பி.என். பகவதி என்னும் இரு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. (iii) ஹர்பன்ஸ் சிங்கின் மேல்முறையீடு மற்றொரு உச்ச நீதிமன்ற அமர்வால் தள்ளுபடி செய்யப்பட்டு அவரும் ஜீடாசிங்குடன் தூக்கு மேடை ஏற இருந்த தருணத்தில் அவர் மறு முறையீடு செய்தார், இம்முறை அவரது தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்த உச்ச நீதிமன்றம் குடியரசுத் தலைவரது மன்னிப்பிற்குப் பரிந்துரைத்தது. அவ்வாறே மன்னிப்பும் வழங்கப்பட்டது.

அதேபோல தர்மேந்திரசிங் (2002) என்பவரும் ஹோராஜ் ராம் (2003) என்பவரும் தங்களின் மனைவியரின் நடத்தைகளில் சந்தேகம் கொண்டு அவர்களையும், பிறந்த குழந்தைகளையும் கொன்றனர். இந்த இரு தனித்தனி வழக்குகளில் முன்னவருக்கு மரண தண்டனையும் பின்னவருக்கு ஆயுள் தண்டனையும் அளிக்கப்பட்டது. மூன்று குழந்தைகளைப் பலி கொடுத்து ஏதோ ஒரு பூசை செய்த தாமு (2000) என்பவருக்கு மரண தண்டனையை ஆயுளாகக் குறைத்த உச்ச நீதிமன்றம் அதே போன்ற காரணத்திற்காக ஒரு குழந்தையைப் பலி கொடுத்த

சுஷில் முர்முவுக்கு (2004) மரண தண்டனையை உறுதி செய்தது. தாமுவை மரண தண்டனையிலிருந்து விடுவித்தபோது சொன்ன காரணம், "அறியாமை மற்றும் மூட நம்பிக்கையின் விளைவாக" அவர் இப்படிச் செய்து விட்டார் என்பது. இதே காரணம் அளவில் இதைவிடக் குறைந்த குற்றம் செய்த முர்முவுக்கும் பொருந்தும்தானே.

பச்சன்சிங் வழக்கில் "மரண தண்டனைகள் தன்னிச்சையாகவும் மனம்போன போக்கிலும்" (arbitrarily and freakishly) அளிக்கப்படுவதாக நீதியரசர் பகவதி குறிப்பிட்டதற்கு இவற்றைவிட வேறு என்ன சான்றுகள் இருக்க முடியும்? முந்தைய கட்டுரையில் குறிப்பிட்ட சந்தோஷ்குமார் பாரியார் வழக்கில் உச்ச நீதிமன்றம் "அரிதினும் அரிது" என்பதைக் கண்டறிவதற்கு சீரான அணுகல் நெறி எதையும் இதுவரை கண்டறியவில்லை என்பதை ஏற்றுக் கொண்டது நினைவிற்குரியது.

மொஹிட் சவுத்ரி மூன்று உச்ச மூன்று நீதிபதிகள் பங்கு பெற்ற வெவ்வேறு உச்ச நீதிமன்ற அமர்வுகள் எவ்வாறு மரண தண்டனைகளைக் கையாண்டன எனச் செய்துள்ள ஒப்பாய்வு மிக முக்கியமான ஒன்று. நீதிபதி அர்ஜித் பசாயத் பங்குபெற்ற அமர்வுகளின் முன் வந்த 12 மரண தண்டனைகள் உறுதி செய்யப்பட்டன. இருவரது ஆயுள் தண்டனைகள் மரண தண்டனையாக உயர்த்தப்பட்டன. கீழ் நீதிமன்றங்களில் விடுதலை செய்யப்பட்ட இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆக நீதிபதி பசாயத் முன் வந்த 22 வழக்குகளில் 16 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட யாரையும் அவர் விடுதலை செய்யவும் இல்லை. அது மட்டுமல்ல ஐந்து வழக்குகளில் அவர் வழங்கிய 11 மரண தண்டனைகள் தற்போது "அறியாமை மற்றும் தவறுதலாக" (per incurium) வழங்கப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

நீதியரசர் எஸ்.பி. சின்ஹா அவர்களின் முன் 17 வழக்குகள் வந்தன. அவர் ஒரு வழக்கில் கூட மரண தண்டனையை உறுதி செய்யவில்லை. யாருடைய ஆயுள் தண்டனையையும் மரண தண்டனையாக உயர்த்தவில்லை. விடுவிக்கப்பட்ட யாருக்கும்

மரண தண்டனை வழங்கவுமில்லை. கீழ் நீதிமன்றங்களில் மரண தண்டனை வழங்கப்பட்ட மூவரை அவர் விடுதலை செய்தார்.

நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணனின் முன் வந்த 13 வழக்குகளில் 6 பேருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவரும் ஆயுள் தண்டனை எதையும் மரண தண்டனையாக்கவோ, விடுதலை செய்யப்பட்டவருக்கு மரண தண்டனை வழங்கவோ இல்லை. மரண தண்டனை வழங்கப்பட்ட ஒருவரை அவர் விடுதலை செய்தார்.

ஆக, நீதிபதி பசாயத் வழங்கிய மரண தண்டனை வீதம் 73 சதம். நீதிபதி பாலகிருஷ்ணன் 46 சதம். நீதிபதி சின்ஹாவின் மரண தண்டனை வீதம் சுழி. உச்ச நீதிமன்றம் உறுதி செய்யும் மரண தண்டனைகளின் சராசரி வீதம் 19 சதம் என்பதை இவர்களின் வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் இவர்கள் ஒவ்வொருவரின் அகநிலை உருவாக்கத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

உச்ச நீதிமன்றத்தில் 14 அமர்வுகள் (benches) உள்ளன. இதில் எந்த அமர்வுக்குத் தன் முறையீடு அனுப்பப்படும் எனத் தீர்மானிக்கும் உரிமை தனது மரண தண்டனை குறித்து மேல்முறையீடு செய்ய வந்தவருக்குக் கிடையாது. ஒரு வேளை அது நீதியரசர் சின்ஹாவின் அமர்வு முன் வந்தால் அவரது மரண தண்டனை குறைக்கப்படுவதற்கான வாய்ப்பு நீதிபதி பசாயத்துடன் ஒப்பிடும்போது, கிட்டத்தட்ட நூறு சதமாக இருக்கும். நீதிபதி பாலகிருஷ்ணன் முன் வந்தால் அது சுமார் 50 சதமாக இருக்கும். உச்ச நீதிமன்றச் சராசரியுடன் ஒப்பிடும்போது நீதிபதி பசாயத்தின் முன் ஒருவரது மேல் முறையீடு வராமல் வேறு எந்த ஒரு அமர்வின் முன்னாவது விசாரணைக்கு வரக்கூடிய அதிர்ஷ்டம் வாய்க்குமேயானால் அவர் மரண தண்டனையிலிருந்து தப்புவதற்கு நான்கு மடங்கு வாய்ப்பு அதிகமாகிறது. நீதிபதி பசாயத் முன் ஒருவரது முறையீடு வருமேயானால் இந்தப் பிறவியில் குற்றம் மட்டுமல்ல முற்பிறவியில் ஏதேனும் பாவமும் செய்திருக்க வேண்டும் என அவர் சமாதானம் செய்து கொள்ள வேண்டியதுதான். வேறென்ன சொல்ல முடியும்?

புறநிலை எதார்த்தங்கள், முந்தைய வரைநெறிகள், சான்றுகள் எல்லாவற்றையும் காட்டிலும் தீர்ப்பை எழுதும் நீதிபதிகளின்

அகநிலைக் கண்ணோட்டங்கள், மனநிலை ஆகியவற்றைச் சார்ந்தே மரண தண்டனைக் கைதிகளின் விதி உள்ளது. சுவாமி சிரத்தானந்தா வழக்கிலும் பச்சன்சிங் வழக்கிலும் உச்ச நீதிமன்றமும் இதை ஏற்றுக் கொண்டுள்ளது. ஒருவேளை மரண தண்டனை அளிப்பது தொடர்பான அனைத்து விதிகள் நெறிகள் ஆகியவற்றை ஒரு கணினியில் உள்ளீடு செய்து தீர்ப்பை எழுதும் பொறுப்பை அதனிடம் கையளித்தால் இன்றுள்ளதைவிட நீதியான தீர்ப்புகளைப் பெறமுடியும் போல. இயந்திரங்களைக் காட்டிலும் மனித மனங்கள், அதிலும் நீதி வழங்கும் மனங்கள் இப்படி இறுகிப் போகிற கொடுமையை என்ன சொல்வது?

ஒரே மாதிரியான சூழலில் குற்றங்களுக்குக் காரணமான, அல்லது ஒரே குற்றத்தில் சம அளவு பங்குபெற்ற வெவ்வேறு குற்றவாளிகளுக்கு வெவ்வேறு விதமாகத் தண்டனை வழங்குவது குடிமக்களுக்குச் சமப் பாதுகாப்பை வழங்கும் அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவிற்கும், குடிமக்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்கும் 21-வது பிரிவிற்கும் எதிரானது என்பதை அரசியல் சட்டத்தின் காவலர்களான நமது உச்ச நீதிமன்றமும் குடியரசுத் தலைவரும் கண்டுகொள்வதில்லை.

தன்னிச்சையாகவும், அகவயமான நிலைப்பாடுகளாலும் மனம்போன போக்கில் (arbitrary) மரண தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தவிர டாக்டர் பாலகோபால் சொன்னது போல சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலும் (discriminatory) மரண தண்டனைகள் வழங்கப் படுகின்றன. உச்ச நீதிமன்றம் இதையும் ஏற்றுக்கொண்டுள்ளது. ராஜேந்திர பிரசாத் வழக்கில் (1979) நீதியரசர் கிருஷ்ணய்யர், மரண தண்டனை விதிப்பதில் வர்க்க மற்றும் நிற வேறுபாடுகளும் கூட (class and colour bias) ஒரு பங்கு வகிக்கின்றன போலும் என்றார். நிறம் என்பது நமது சூழலில் சாதியை அர்த்தப்படுத்துவதாகவே கொள்ள வேண்டும். பச்சன்சிங் வழக்கில் இதை மீண்டும் ஒலித்த நீதியரசர் பகவதி, "ஏழைகளும் அடித்தள மக்களுமே (poor and downtrodden) இந்தக் கொடுந் தண்டனைக்கு அதிகம் பலியாகின்றனர்" என்று கூறி மரண தண்டனை விதிப்புகளில் சமூக ஏற்றத்தாழ்வுகளின் பங்கைச் சுட்டிக் காட்டினார்.

மரண தண்டனை விதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக உள்ளதைச் சுட்டிக்காட்டும் மொஹித் சவுத்ரி, "ஜனவரி 1, 2000 முதல் டிசம்பர் 31, 2009 வரை கடந்த ஒன்பது ஆண்டுகளில் 30 வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனைகளை வழங்கியுள்ளது. இவர்களில் 14 பேருக்கு இலவசச் சட்ட உதவிகளின் மூலமே வழக்குகள் நடத்தப்பட்டன. கீழ் நீதிமன்றங்களில் மேலும் பலரது வழக்குகள் இலவசச் சட்ட உதவிகளின் மூலமே நடத்தப்பட்டன." என்கிறார். இந்தப் 14 பேரில் 12 பேருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனைகள் தவறானவை என உச்ச நீதிமன்றம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தப் பன்னிரண்டு பேரில் ராவ்ஜி ஏற்கனவே தூக்கிலிடப்பட்டுவிட்டார். இவரது வழக்கும் இலவசச் சட்ட உதவியின் மூலமே நடத்தப்பட்டது. இலவசச் சட்ட உதவியில், அமர்த்தப்படும் வழக்குரைஞர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கப்படுவதில்லை. பெரும்பாலும் இளைஞர்கள், போதிய அனுபவம் இல்லாதவர்களே இலவசச் சட்ட உதவி பெறுபவர்களுக்கு வழக்குரைஞர்களாக நியமிக்கப் படுகின்றனர். இவர்களில் பலர் அக்கறையோடு வழக்கை நடத்துவதில்லை என்பதோடு, சில நேரங்களில் அவர்களே தமது கட்சிக்காரர்களை வெறுப்போடு அணுகுவதும் உண்டு, அஃப்சல் குருவுக்கு நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள் இப்படி அவரிடம் வெறுப்புடன் நடந்து கொண்டது குறித்து முன்பே குறிப்பிட்டுள்ளேன். அஜ்மல் கசாப் வழக்கு சர்வதேச கவனம் பெற்றதால் அவருக்குத் தகுதியான வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களும் பொறுப்புடன் செயல்பட்டனர். எனினும் அவர்களின் முக்கிய வேண்டுகோள்கள் பலவற்றையும் நீதிமன்றங்கள் நிராகரித்தன. உலகெங்கிலும் இப்படிப்பட்ட நிலைதான். அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி ரூத் கின்ஸ்பெர்க், "மரண தண்டனை உறுதி செய்யப்படுவதற்காக உச்ச நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகள் எதிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக விசாரணை நீதிமன்றங்களில் முறையாக வழக்கு நடத்தப்பட்டதில்லை" எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

மரண தண்டனையை நீக்க முடியாது என 35வது சட்ட ஆணையம் உறுதிபடக் கூறியதற்கு ஆதாரமாக இந்தியாவின் விரிந்த பரப்பு, பலதரப்பட்ட மக்கள், அவர்களுக்கிடையேயான

கல்வி முதலான அம்சங்களில் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியது, இந்தக் கருத்துரையின் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றமும் ஜக்மோகன்சிங் (1973), பச்சன்சிங் (1982), சசி நாயர் (1992) ஆகிய வழக்குகளில் மரண தண்டனையைச் சட்டத்திலிருந்து நீக்க முடியாது எனக் கூறியது. ஆனால், எந்தக் காரணங்களுக்காக மரண தண்டனையை நீக்க இயலாது என்று சட்ட ஆணையம் சொன்னதோ அந்தக் காரணங்களுக்காகவே மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதுதான் மேலே உள்ள அனுபவங்கள் உணர்த்தும் உண்மை.

இப்போது நம்முன் எழும் கேள்விகள்: ஒரு நாகரிகச் சமூகத்தில் தண்டனைகளின் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை மரண தண்டனை நிறைவேற்றுகிறதா?



6. குற்றம், சமூகம், சட்டம்,
தண்டனை, மரண தண்டனை

காந்தியிடமிருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். மரண தண்டனை பற்றிக் கேட்டபோது அவர் இப்படிச் சொன்னார்: “வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கூட தண்டனை என்ற பெயரில் சிறையில் அடைப்பதை நான் விரும்பவில்லை. கொள்ளைக்காரர்களும் ஏன் கொலையாளிகளும் கூட தண்டிக்கப்படுவதை என் அகிம்சை அணுகல்முறை ஏற்கவில்லை. மரண தண்டனை என்பதை எந்த வகையிலும் என் மனச்சாட்சி ஏற்கவில்லை.” சுருங்கச் சொல்வதானால் மரண தண்டனை என்ன, எந்தத் தண்டனையுமே கூடாது என்பதுதான் தண்டனை குறித்த காந்தியின் கருத்தாக இருந்தது எனலாம். யாரையும் தண்டிப்பதற்கான தகுதி நமக்கு, அதாவது நமது சமூகத்திற்கு இல்லை என அவர் கருதுவதாகத் தெரிகிறது.

காந்தியின் பல கொள்கைகள் இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாதவை. தண்டனைகளே கூடாது என்றால் எப்படி? அதனால்தான் அவரது கொள்கைகளை இன்று யாருமே பொருட்படுத்துவது இல்லை. அவர் உயிருடன் இருந்தபோது அவர் கட்சிக்காரர்களே அவரது பேச்சைக் கேட்டதில்லை. அவர் இறந்த பின் அவரது ‘வாரிசு’களாகக் கருதப்பட்டவர்கள் புதிய இந்தியாவை நிர்மாணிப்பதில் உதாசீனப்படுத்தியது முதலில் அவரது கொள்கைகளைத்தான். நாம் உட்பட யார் அந்த இடத்தில் இருந்திருந்தாலும் அப்படித்தான் செய்திருப்போம்.

ஏன்? இன்றைய சமூக நடைமுறைகளுக்கு அவை பொருந்தாது என்பதுதான்.

ஆனால் இந்தப் பிரச்சினையை இப்படி உடனடி நடைமுறை சார்ந்து பார்க்காமல் தர்க்க பூர்வமாகப் பார்த்தால் என்ன ஆகும்? "இன்றைய நடைமுறைக்கு ஒன்று பொருந்தாது" என்கிற எடுகோளை எடுத்துக் கொள்வோம். அப்படியானால் "இன்றைய நடைமுறையை" சரி என ஏற்றுக் கோள்கிறோமா? நமது நோக்கம் இன்றைய நடைமுறைகளை, இன்றைய சமூக அமைப்பை ஏற்றுக் கொள்வதுதானா? நிச்சயமாக இல்லை. இன்றைய நடைமுறையும் அமைப்பும் மாற்றப்பட வேண்டியவை என்கிறபோது, இன்றைய நடைமுறைக்கும் அமைப்பிற்கும் பொருந்தாது என்பதற்காக ஏதொன்றையும் கைவிடுவது என்பது எப்படிச் சரியாக இருக்கும்?

இந்த எளிதில் விடை கூற இயலாத கேள்வியை நாம் அடிக்கடி எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நடைமுறையில் இருப்பவர்கள் இப்படியான பிரச்சினைகளை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்.

குற்றம், சட்டம், தண்டனை ஆகியவற்றிலும் நாம் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சட்டங்கள் இல்லாவிட்டால் சமூக ஒழுங்கு சிதையும். வலுவானவர்களிடமிருந்து எளியவர்களைக் காக்க சட்டங்கள் தேவை என்பதுதான் சட்ட ஒழுங்கு நிறுவனங்கள் முன்வைக்கும் நியாயம். ஆனால் சமூக மாற்றம் என்கிற நோக்கில் இயங்குபவர்கள் இதை ஏற்க மாட்டார்கள். சட்டங்களின் நோக்கம் என அவர்கள் நேரெதிரான ஒரு கருத்தை முன் வைப்பார்கள். அவர்களின் கருத்துப்படி சட்டங்கள் என்பன எளியவர்களிடமிருந்து வலியவர்களைக் காப்பாற்றுவதற்காக, அவர்களாலேயே உருவாக்கப்பட்டவை. உண்மைதான். சொத்துரிமை என்கிற சட்டத்தை எடுத்துக் கொள்வோமே. ஏராளமான நிலங்களையும், மூலதனத்தையும் வைத்துக் கொண்டு சுரண்டிக் கொழுப்பவர்களைச் சுரண்டப்படுகிறவர்களிடமிருந்து பாதுகாப்பதுதான் சொத்துரிமை குறித்த சட்டங்களின் நோக்கம்.

சரி, சட்டங்களே வேண்டாம் என ஒதுக்கினால் என்ன ஆகும்? அது எளியவர்களை இன்னும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளாதா? நூறு ஏக்கர் நிலமுள்ள ஒருவன் அருகிலுள்ள இரண்டு ஏக்கர் நிலமுடைய ஒருவனது நிலத்தை ஆக்ரமித்துக் கொள்வதையும், ஒரு கார்பொரேட் நிறுவனம்

தனது தேவைகளுக்காக விவசாயிகளின் நிலங்களை எடுத்துக் கொள்வதையும் சொத்துரிமை என்கிற சட்டம் இல்லாத சூழல் எளிதாக்கிவிடாதா? இன்னொரு எடுத்துக்காட்டு இந்த நிலையை மேலும் எளிதாகப் புரிந்து கொள்ள உதவும். வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்பது தலித் மக்களை அதிகாரத்திலும் எண்ணிக்கையிலும் பெரும்பான்மையாக உள்ள உயர் சாதியினரிடமிருந்து தலித் மற்றும் பழங்குடியினரைப் பாதுகாக்க நமக்குத் தேவையாக இருக்கிறது. இதை வேண்டாம் எனச் சொல்லிவிட இயலுமா?

இதுபோன்ற சிலவற்றைச் சுட்டிக்காட்டித்தான் சட்டங்கள் எல்லாமே எளியவர்களை வலியவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காகவே உள்ளன என்கிற கருத்து மிக எளிதாகப் பொதுப்புத்தியில் பதிக்கப்படுகின்றது. இந்த இடத்தில் நாம் என்ன பார்வையைக் கொண்டிருக்க முடியும்? எவ்வளவுதான் சட்டங்கள் ஊறுமிக்கவையாக இருந்தபோதிலும், வலியவர்களைப் பாதுகாப்பதே அவற்றின் நோக்கமாக இருந்தபோதும், சட்டங்கள் இல்லாத நிலை எளியவர்களைப் பொருத்தமட்டில் இன்னும் மோசமானதாக இருக்கும். எனவே சட்டங்களை நாம் ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில், அவற்றின் சமூக உள்ளடக்கங்கள் மற்றும் அவற்றின் அடிப்படையிலான சட்ட நடைமுறைகள் ஆகியவை குறித்த கடும் விமர்சனச் செயற்பாடுகளை நாம் எந்நாளும் கைவிட்டுவிட முடியாது.

அதேபோல ஒரு சமூக அமைப்பிற்குள் சட்டம் வன்மையாகச் செயல்பட வேண்டுமானால் அது அச் சமூகம் முழுமைக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். ஆனால் சட்டங்கள், குற்ற வரையறைகள் என்பன பல்வேறு வேறுபாடுகள் நிறைந்த ஒரு சமூக முழுமைக்கும் ஒரேபோல இருக்க இயலாது. ஒரு சமூகப் பிரிவினரது அற மதிப்பீட்டில் குற்றமாகக் கருதப்படுவது இன்னொரு சமூகப் பிரிவினரில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம். எனினும் ஒரே சீரான சட்டத் தொகுதியும் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே இந்தச் சீரான சட்டத் தொகுதி எல்லோருக்கும் நியாயம் செய்வது இல்லை, அப்படி இல்லாதவரைக்கும் அது குறைபாடுடைய சட்டத் தொகுப்புதான் என்கிற புரிதலும் குற்ற உணர்ச்சியும் சட்டத்தைக் கையாள்பவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் ரொம்பவும்

சிந்திக்கிற, நீதி வழங்கு அனுபவமிக்க மனங்களிடமும் கூட அந்தப் புரிதல் இருக்காது என்பதுதான் பிரச்சினை. இச்சூழலில் நமது பணி அத்தகைய குற்ற உணர்வைத் திரும்பத் திரும்பச் சமூகத்தின் முன் வைத்துக் கொண்டே இருப்பதுதான்.

சட்டம் உருவாக்கும் தடைகளும் தண்டனைகளும் மட்டுமல்ல அது வழங்கும் தடையற்ற உரிமைகளும் கூட ஏற்றத்தாழ்வான சமூகங்களில் வலியவர்களால் எளியவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது என்பதையும் நாம் மறந்துவிட இயலாது. பேச்சுரிமை, கருத்துரிமை என்பதெல்லாம்கூட இப்படி வலியவர்களால் எளியவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும். ஆக சட்டங்கள் எப்போதும் முழுமையற்றவை, குறைபாடுடையவை என்கிற உணர்வுடன் அவற்றைக் கையாளும்போதுதான் குற்ற விசாரணை நடைமுறையும் அது சார்ந்த நீதி மற்றும் தண்டனை வழங்கலும் மனிதாயப்படும்.

சில நேரங்களில் இது போன்ற தொடர்ச்சியான விமர்சனங்கள் விவாதங்கள், முன்னோடி முயற்சிகளின் ஊடாகவும் விளைவாகவும் சட்டங்கள் மேலும் மனிதாயப் படுதலை நோக்கி நகரும்; அதாவது திருத்தப்படும். சிலநேரங்களில் இத்தகைய மாற்றங்கள் நீதியியல் அடிப்படையிலான கொள்கை உருவாக்கங்களுக்கு (judicially evolved principles) இட்டுச் செல்லும். முன்னதற்கு எடுத்துக்காட்டாக நமது குற்ற நடைமுறைச்சட்டத்தில் 1973ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களைச் சொன்னால், இரண்டாவதற்கு எடுத்துக்காட்டாக பச்சன் சிங் வழக்குத் தீர்ப்பைச் சொல்லலாம்.

எனவே "சட்ட வழமை" (legal order) என்பது சமூக வளர்ச்சியினூடாக வளர்ச்சியுற்று வருகிறது. ஆனால் அது தன்னிச்சையாக வளர்ச்சி பெறுவதில்லை. "சமூக அற ஒழுங்கின்" (normative order) எதிரொளிப்பாகவே அது நடைபெறுகிறது. நடைமுறையில் குறைபாடுகள் இருந்தபோதும் சமூக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மாதிரியான விழுமியங்களையே 'சமூக அற ஒழுங்கு' அல்லது 'சமூக விழுமியத் தொகுதி' என்கிறோம். சட்ட வழமைக்குப் பின்னால் இந்த சமூக அற வழமைத் தொகுதி உள்ளது. காலப்போக்கில் சமூக

விழுமியங்கள் மேலுயர்கின்றன, மனிதாயமடைகின்றன, ஜனநாயகப்படுகின்றன. அதற்குத் தக சட்ட வழமையும் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டியதாகிறது.

ஒன்றை மனங்கொள்ளவேண்டும். இவ்வாறு சமூகத்தில் வளர்ந்து வரும் அற ஒழுங்கு அல்லது விழுமியத் தொகுப்பு என்பது பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களின் தொகுப்பு அல்ல. பெரும்பான்மையான மக்களின் நடைமுறையில் உள்ளதைக் காட்டிலும் இன்னும் ஒரு உயர் தளத்தில் அற ஒழுங்கு (Normative Order) உருப்பெறுகிறது. எடுத்துக்காட்டாக ஒன்று: சாதி மற்றும் தீண்டாமை வேறுபாடு என்பது சமூகத்தில் பெரும்பான்மையாக உள்ள ஒரு வழமை. இங்குள்ள ஒரு பெரும்பான்மை மதத்தால் கோட்பாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. ஆனால் நமது சமூக அற ஒழுங்கில் (Normative Order) அதற்கு இடம் கிடையாது; அது ஏற்கத் தகாத ஒன்று. இந்த அடிப்படை நமது சட்ட வழமையிலும் ஏற்கப்பட்டு தீண்டாமை மற்றும் சாதி வேறுபாடு ஒரு குற்றம் ஆக்கப்பட்டுள்ளது. இப்படி நிறையச் சொல்லலாம். இந்தச் சட்ட ஒழுங்கின் வலிமையும் நியாயப்பாடும் சமூக அற ஒழுங்கின் அடிப்படையிலேயே பெறப்படுகிறது. சட்ட விதிக்கு வேறென்ன மகத்துவம் இருக்க இயலும். அச்சில் எழுதப்பட்ட சட்ட விதியை மீறினால் என்ன கேடு வந்துவிடப் போகிறது? உண்மையில் குற்றச் செயல் என்பது சட்டத்தை மீறுவதல்ல. சமூக ஒழுங்கைச் சிதைப்பதாலேயே ஒன்றைக் குற்றம் என்கிறோம். அது சமூக விழுமியத் தொகுதியில் ஒரு கிழிசலை ஏற்படுத்துகிறது.

மேலே செல்வதற்கு முன் ஒன்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது. இந்தச் சமூக அற ஒழுங்கு என்பது சராசரியாகச் சமூகத்தில் நடைமுறையில் உள்ள மதிப்பீடுகளைக் காட்டிலும் இன்னொரு உயர்ந்த தளத்தில் இயங்கினாலும் இதுவும் கூட முழுமையானதோ குறைபாடற்றதோ அல்ல.

1. மிக்க ஏற்றத் தாழ்வுகளும் குறைபாடுகளும் உள்ள ஒரு சமூகம்,
2. அதனினும் மேம்பட்ட விழுமிய வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் குறைபாடுகள் நிறைந்த ஒரு சமூக அற ஒழுங்கு,
3. இதனடியாக வெளிப்படுகிற ஒரு சட்ட வழமை

ஆகியவற்றினூடே இங்கு குற்ற விசாரணை நடைமுறையும் தண்டனை வழங்கலும் செயல்படுகின்றன.

ஆக ஒரு குற்றச் செயல் என்பது இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக அற ஒழுங்கு வரையறுத்துள்ள எல்லையை மீறுவது என்பதாகிறது. இந்தக் குற்ற நடவடிக்கையின் மூலம் யாரோ ஒருவர் அல்லது சிலர் பாதிக்கப்படுவது என்பதைக்காட்டிலும் இதன் மூலம் சமூக அற ஒழுங்கில் ஏற்படும் கிழிசலே கவலைக்குரியது உடனடியாகச் சரிசெய்யப்பட வேண்டியது. எந்தக் குற்றமும் அது திருடு, வன்புணர்ச்சி அல்லது கொலை எதுவாக இருந்தாலும் அது முதலில் சமூகத்திற்கு எதிரானது; இரண்டாவதாகத்தான் அது பாதிக்கப்பட்டவருக்கு எதிரானது என்பதை உலக அளவில் இன்றைய சட்டவியலும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தக் கருத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். சமூகத்தின் பிரதிநிதி என்பதாக அறிவித்துக் கொண்டு நீதி தேடும் முகமையாக அரசு இடைபுக இது வழிவகுக்கிறது என்பது இக் குறைபாடுகளில் ஒன்று. வன்முறையே வடிவமாக உள்ள ஒரு அரசு குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவர்களின் அப்பாவித்தனத்தின் பின் ஒளிந்துகொண்டு மேலும் ஒரு வன்முறையைச் செய்ய இது வழிவகுக்கிறது. எனினும் இக்கருத்து பழிக்குப் பழி, இன்னொரு கொலை என்பதாகவெல்லாம் அமையாமல் நடந்த குற்றச் செயலின் மூலம் கிழிந்த அல்லது பாதிக்கப்பட்ட சமூக அற ஒழுங்கைச் சரிசெய்தல் என்பதை நோக்கி நீதி வழங்கலின் தளத்தை விரிவுபடுத்துகிறது.

ஒரு சிவில் குற்றத்திற்கும் (எ.கா: மோசடி) கிரிமினல் குற்றத்திற்கும் நீதி வழங்கலில் ஒரு முக்கிய வேறுபாடுண்டு. சிவில் குற்றங்களில் நீதி வழங்கல் என்பது பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வது. கிரிமினல் குற்றங்களில் நீதி வழங்கல் என்பது சமூகத்திற்கு ஏற்பட்ட ஊறைச் சரிசெய்வது. கிரிமினல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்துவிடவும் முடியாது.

இந்த இடத்தில் பொது நீதி வழங்கல் (public justice) என்பதற்கும் பழிவாங்கு நீதி (retributive justice) என்பதற்கும் உள்ள வேறுபாடு கருதத் தக்கது. பொது நீதி வழங்கலில்

பழி வாங்கலுக்கு இடமில்லை. குற்றச் செயலுக்குக் குற்றம் புரிகிறவன் மட்டுமே பொறுப்பல்ல; சமூகத்திற்கும் அதில் சம அளவு அல்லது சொல்லப்போனால் கூடுதல் பொறுப்பிருக்கிறது என்பதையும், அதேபோல குற்றச் செயலின் பாதிப்பு என்பது அதனால் பாதிக்கப்பட்டவனுக்கு மட்டுமின்றி சமூகத்திற்கே அதிக பாதிப்பு நிகழ்ந்துள்ளது என்பதையும் பொது நீதி வழங்கல் ஏற்றுக் கொள்கிறது. எனவே அது குற்றச் செயலுக்குத் தனி மனிதனை மட்டும் பொறுப்பாக்குவதில்லை. எனவே அது அந்தத் தனி மனிதனுக்குத் தண்டனை வழங்குவதை மட்டுமே நீதி வழங்கலாக நினைப்பதில்லை. பொது நீதி அமைப்பு என்பது சமூகத்தின் பிரதிநிதியாக நின்று சமூகத்தின் அற ஒழுங்கில் ஏற்பட்டுள்ள ஊறைச் சரி செய்வதில் முனைப்புக் காட்டுகிறது. தான் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகம் முழுமையானதல்ல. அது குறைபாடுகள் நிறைந்தது என்பதை உணர்ந்து செயல்படுகிறது. தனது பக்கம் குறைபாட்டை வைத்துக் கொண்டு அது எவ்வாறு மரண தண்டனை போன்ற ஒரு கொடுந் தண்டனையை வழங்க இயலும்?

நீதி வழங்கு முறையின் குறைபாடு அல்லது போதாமை (imperfection) என்பதை மரண தண்டனை எதிர்ப்பாளர்கள் தமது முக்கிய வாதங்களில் ஒன்றாக முன்வைப்பர். எந்த நீதி வழங்கு முறையும் தவறுதலுக்கு அப்பாற்பட்டவை அல்ல, சட்டங்களுக்கு விளக்கமளிப்பது, தவறான சாட்சியங்களை ஏற்றுக் கொள்வது, தனிமனித விருப்பு வெறுப்புகளின் அடியாகச் செயல்படுவது ஆகியவற்றின் அடிப்படையில் தவறுதலாக மரண தண்டனை வழங்கப்பட்ட நிகழ்வுகளை இந்திய அனுபவங்களின் அடிப்படையிலும், உலக அளவு எடுத்துக்காட்டுகளின் மூலமும் நிறுவுவர். நாமும் சிலவற்றை முந்தைய கட்டுரைகளில் பார்த்தோம். இந்த அடிப்படையில் திருப்பித் திருத்த இயலாத மரண தண்டனையை ஒருவருக்கு அளிப்பது என்ன நியாயம் என்கிற கேள்வியை அவர்கள் முன்வைப்பர். நாம் இங்கே பேசிக் கொண்டிருக்கும் சமூக அற ஒழுங்குக் குறைபாடு என்பது இதிலிருந்து முற்றிலும் வேறானது என்பதை விளக்கத் தேவையில்லை.

வாய்ப்பு மறுக்கப்படுதல், மனித கண்ணியம் இழிவுக் குள்ளாதல், நீதி, சுதந்திரம் முதலியன பொருளற்றுப் போதல்

என ஒரு சமூக மனிதன் அச் சமூகத்திலிருந்தும் அதன் அற ஒழுங்கிலிருந்தும் அந்நியப்பட்டுப் போவதற்குப் பல காரணிகள் உண்டு. ஆல்பர்ட் காமூ சொல்வதுபோல எல்லா மனிதர்களும் அடிப்படையில் சமூக ஒழுங்குகளை மீறக் கூடியவர்களாகவே உள்ளனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர் positive law எனச் சொல்லும் கருத்தாக்கத்தை நாம் பரிசீலிக்க வேண்டும். காமூவைப் பொருத்த மட்டில் சமூக அற ஒழுங்கிற்குப் பொறுப்பாக ஒரு குடிமகனை வைத்திருக்கும் பொறுப்பு சமூகத்திற்கு இருக்கிறது. மனிதனைச் 'சமூக மிருகம்' (social animal) என வரையறுக்கும் ஸ்பினோசாவின் கருத்துக்கு இது எதிரானது. சமூகத்துடன் ஒத்திசைந்து வாழ்தலே நல்லது என மனிதனின் பகுத்தறிவு அவனுக்குச் சொல்கிறது. எனவே அவன் சமூகச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன் ஆகிறான் என்பது ஸ்பினோசாவின் கருத்தினடியாக வந்தடையும் முடிவு. காமூவின் கருத்துப்படி மனிதன் சமூக மிருகமல்ல. சமூக விதிகளை மீறுவதே அவனது இயல்பு. எனவே அவ்வாறு மீறாமல் வைத்திருக்கும் பொறுப்பு சமூகத்திற்கு உள்ளது. இங்குதான் அவர் positive law என்கிற கருத்தை முன்வைக்கிறார். சமூகம் தன்னைக் குறைபாடற்றதாகவும் நீதியாகவும் அமைத்துக் கொள்ளாதபோது அவன் அதன் விதிகளிலிருந்தும் அதன் அற ஒழுங்கிலிருந்தும் பிறழ்வானேயானால் தவறு யார் பக்கம் இருக்கிறது? மனிதர் மீது பகுத்தறிவு ஒரு கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது என்றே கொண்டாலும் சமூக அநீதிகள் அந்தக் கட்டுப்பாடுகளை வலுவிழக்கச் செய்யக் கூடியவையாக உள்ளன

ஆக,

1. சமூக அற ஒழுங்கில் உள்ள குறைபாடு,

2. சமூக அற ஒழுங்கிற்கும் எதார்த்தமாக உள்ள சமூக நிலைகளுக்கும் உள்ள முரண்பாடு,

3. குற்றவாளியின் குறை எனப் பல காரணிகள் குற்றச் செயலுக்குக் காரணமாகின்றன.

சமீபத்திய டெல்லி பாலியல் வன்முறையை எடுத்துக் கொள்வோம். ஐந்து ஆண்கள் ஒரு பெண்ணுடல் மீது செலுத்திய வன்கொடுமை அது. அதில் ஒரு சிறுவனின் பங்கு ரொம்பக்

கொடூரமாக இருந்தது என்கிறார்கள். ஒரு சிறுவனுடைய உள்ளத்தில் இத்தனைக் கொடூரம் குடிபுகுந்தது எங்ஙனம்? அந்தச் சிறுவன் சிறு வயதிலேயே வீட்டைவிட்டு ஓடி வந்து நகரத்தில் வாழ நேரிட்டவன். அதன் மூலம் அவன் தனது சிறு பிராயத்தையும், குழந்தைமையையும், கல்வியையும் இழந்தவன். பள்ளி சென்று சக குழந்தைகளோடு வளர வேண்டிய சூழலில் பெரு நகரமொன்றில் அவனது வயதுக்கு மீறியவர்களோடு தனது சிறார் பருவத்தைக் கழிக்க நேர்ந்தவன். இத்தகையவன் இப்படி ஆனதன் பொறுப்பை அவன் தலை மீதே சுமத்துவது எப்படிச் சரியாகும்?

ஆனால் அதுதான் இப்போது நடக்கிறது. எப்படியும் அவனைத் தூக்கில் தொங்கவிட்டே ஆக வேண்டும் என்கிற திசையில் இன்று அரசு நகர்கிறது. 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு மரண தண்டனை கூடாது என்கிற சட்ட விதியையும் மாற்றி அவனுக்கு மரண தண்டனை வழங்க முயற்சிக்கப்படுகிறது. இதன்மூலம் சமூக அற ஒழுங்கையும் அது வளர்ந்து வந்த திசையிலிருந்து பின்னோக்கி நகர்த்த முயற்சிக்கிறது.

டெல்லி பாலியல் கொடுமையில் இன்னும் பல்வேறு அம்சங்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு பெண் இப்படித் தன் காதலனோடு முன்னிரவு வரை சுற்றித் திரியலாமா என்கிற ஆணாதிக்க மதிப்பீடுகளிலிருந்து, இன்றைய சூழலில் ஒரு பெண் தன்னை ஒரு ஆளுமைமிக்க சமூக உயிரியாக முன்நிறுத்திக் கொள்வதைக் கண்ட மரபு வழிப்பட்ட ஆண் மனது துணுக்குறுவதிலிருந்து, சமூக ரீதியாக இன்று பெரு நகரங்கள் பிளவுற்றுக் கிடக்கும் சூழல் உட்பட டெல்லி வன்முறையின் காரணிகள் எனப் பலவற்றைச் சுட்டிக்காட்ட இடம் உண்டு. அதில் ஒரு காரணி மட்டுமே குற்றவாளிகளில் குவிந்திருந்ததாகக் கருதப்படும் வக்கிரம். சமூகம் தன்னிடம் இத்தனை குறைபாடுகளை வைத்துக் கொண்டு கொடுந் தண்டனை ஒன்றை எப்படிக் குற்றவாளிகளுக்குத் தர இயலும்?

சமூகம் குறைபாடுடையதாக இருக்கும் வரை அதில் கொடுந் தண்டனைக்கு இடமில்லை.



7. மரண தண்டனை கொடுங் குற்றங்களுக்கு எதிரான அச்சுறுத்தும் கருவி என்பது சரிதானா?

மரண தண்டனையை நீதிமன்றங்களும் பிற நிறுவனங்களும் நியாயப் படுத்தும்போது முக்கியமாக இரண்டு அம்சங்களை முன்வைப்பர். ஒன்று, சமூகத்தின் அறச் சீற்றத்தைத் தணிக்க வேண்டி இந்தத் தண்டனை அளிக்க வேண்டியதாயிற்று என்பது. மற்றது இப்படியான கொடுங் குற்றங்கள் சமூகத்தில் நிகழாமல் தடுப்பதற்கு ஒரு அச்சுறுத்தும் கருவியாக மரண தண்டனை தேவையாக இருக்கிறது என்பது.

இரண்டுமே குற்றச் செயல்களுக்குக் குற்றம் புரிந்த தனி மனிதனை மட்டுமே பொறுப்பாக்கி, சமூகத்தின் பொறுப்பைக் காட்சியிலிருந்து மறைக்கின்றன. ஊன்றிக் கவனித்தால் குற்றங்களுக்கு நீதி வழங்கல் என்பதைப் பழி வாங்கும் வாய்ப்பாக அணுகும் நோக்கிலேயே இப்படிச் சொல்லப்படுகிறது என்பதை உணரலாம். ராஜீவ் கொலையாக இருக்கட்டும், பாராளுமன்றத் தாக்குதலாக இருக்கட்டும், நிறைய அப்பாவிகளும் பாதுகாப்புப் படை வீரர்களும் கொல்லப்பட்ட கொடும் நிகழ்வுகள் அவை என்பதை யாரும் மறுக்க இயலாது. எதிர்காலத்தில் எந்த நியாயம் அல்லது அரசியலின் அடிப்படையிலும் இவ்வாறு அப்பாவிகள் கொல்லப்படுவதை நாம் ஏற்க இயலாது.

ஆனால் இந்த இரு நிகழ்வுகளிலுமே மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள் நேரடியாகக் குற்றத்தில் பங்குபெற்றவர்கள் அல்ல. குற்றச் செயலில் தெரிந்தோ தெரியாமலோ ஏதோ ஒரு வகையில் சிறு உதவிகள் புரிந்தவர்கள்தான் இவர்கள். நேரடியாகப் பங்கு பெற்றவர்கள் ஒன்று கொல்லப்பட்டனர் அல்லது தற்கொலை செய்து கொண்டனர் அல்லது இன்னும் பிடிபடவில்லை. ஒருவேளை இவர்கள் எல்லோருமோ

சிலரோ பிடிபட்டிருந்தால் நிச்சயம் அவர்களுக்குத்தான் மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கும். இப்போது மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள் அப்போது விடுதலை செய்யப்பட்டிருப்பர் அல்லது குறைந்த தண்டனை அளிக்கப்பட்டிருப்பர். ஆக குற்றத்தின் நேரடிப் பங்கேற்பாளர்கள் கிடைக்காததற்காக இப்படிக் கிடைத்தவர்களைப் 'பதிலி'யாகத் தூக்குக் கொட்டடிக்கு அனுப்புவது எப்படி அற அடிப்படையிலோ சட்ட அடிப்படையிலோ நியாயமாகும்?

அரசும் நீதிமன்றங்களும் இப்படிப் 'பதிலி' மரண தண்டனைகளை நிறைவேற்றுவது என்பது பழிவாங்கலன்றி வேறென்ன? ஒரு முன்னாள் பிரதமரைக் கொன்றுவிட்டு, பாராளுமன்றத்தைத் தாக்கிவிட்டு யாரும் பதிலுக்குக் கொல்லப்படாமல் தப்புவதை ஒரு இறையாண்மை மிக்க அரசும் அதன் நீதி வழங்கும் நிறுவனமும் எப்படி அனுமதிக்க இயலும்? குற்றத்தில் நேரடியாகப் பங்கேற்றவர்கள் கொல்லப்பட்டபோதும் சட்டத்தின் அடிப்படையைக் காட்டியும், உரிய சடங்குகளை நிகழ்த்தியும் நாங்கள் பதிலுக்கு ஒருவரையேனும் கொன்றாக வேண்டும் என்பதுதானே இந்த மரண தண்டனைகளின் நியாயம்.

'பழிவாங்கல்' (revenge) அல்லது 'பதிலுக்குப் பதில்' (retribution) என்பது போன்ற பண்பாட்டு வளர்ச்சி பெறாத காலத்து மொழியில் இன்றைய ஜனநாயகக் குடியரசு பேசலாகாது என்பதனாலேயே 'அச்சுறுத்தல்'' (deterrance), 'அறச் சீற்றம்' (moral outrage) முதலான மொழிகளில் தஞ்சம் புகுகின்றனர். இதன்மூலம் தனிநபர் பழிவாங்கலுக்கும் (private vengeance) பொது நீதிக்கும் (public justice) இடையிலான வேறுபாட்டை அழிக்கின்றனர். தனிநபர் பழிவாங்கல் என்பது குற்றத்திற்குக் குற்றவாளியை மட்டுமே பொறுப்பாக்கிச் சமூகப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும். அது வழங்கும் 'நீதி' என்பது குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவர் (victim) அல்லது அவரது சந்ததியினருக்கு மட்டுமான 'நீதி'யாகவே இருக்கும். ஆனால் பொது நீதி என்பதோ பாதிக்கப்பட்டவர், குற்றமிழைத்தவர் என குற்றச் செயலின் இரு முனைகளில் உள்ளவர்களுக்குமே நீதி வழங்கும். ஆம், இந்தக் குறைபாடுகள் நிரம்பிய சமூகத்தின் உறுப்பினராகவும் விளைபொருளாகவும் உள்ள குற்றவாளி தண்டனை வழங்கப்பட வேண்டியவராக மட்டுமின்றி நீதி வழங்கப்பட வேண்டியவராகவும் உள்ளார்.

எதார்த்தத்தில் 'அச்சுறுத்தல்'

மரண தண்டனை என்பது எதார்த்தத்தில் ஒரு அச்சுறுத்தலாக இல்லை என்பதற்கு உலக அளவிலிருந்தும் இந்திய எடுத்துக்காட்டுகளிலிருந்தும் ஏராளமான ஆதாரங்களை மரண தண்டனை எதிர்ப்பாளர்கள் முன்வைக்கின்றனர். முன்னாளைய திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தை அடிப்படையாகக் கொண்டு மோகன் குமாரமங்கலம் செய்துள்ள ஒரு ஆய்வை பச்சன் சிங் வழக்கில் நீதியரசர் பகவதி எடுத்துக்காட்டுவார். இங்கு 1945க்கும் 1950க்கும் இடைப்பட்ட காலத்தில் மரண தண்டனை வழங்குதல் தடுக்கப்பட்டிருந்தது. இந்த ஐந்தாண்டு காலத்தில் இப்பகுதியில் 962 கொலைக் குற்றங்கள். நிகழ்ந்தன. அடுத்த ஐந்தாண்டுகள் (1951-1956) இந்தத் தடை நீக்கப்பட்டு கொலைக் குற்றங்களுக்கு மீண்டும் மரண தண்டனைகள் வழங்கப்பட்டன. இப்போது கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை 967 ஆக அதிகரித்திருந்ததே தவிரக் குறையவில்லை.

யுக் மொஹித் சிங் முன்வைக்கும் இன்னொரு ஆய்வைக் காணலாம். பச்சன்சிங் தீர்ப்பு இந்திய மரண தண்டனை வரலாற்றில் ஒரு எல்லைக்கல் என்பதை அறிவோம். 'அரிதினும் அரிது' என்கிற நிபந்தனையின் அடிப்படையில் மரண தண்டனை வழங்கல்களும், நிறைவேற்றங்களும் வரலாறு காணாத வகையில் குறைந்தன. கொலை வழக்கு என்றாலே மரண தண்டனை என்கிற நிலை மாறியது.

பச்சன் சிங் தீர்ப்பிற்கு முன்னதாக, 1974-1978 காலகட்டத்தில், இந்தியாவில் 85,000 கொலைகள் நடந்தன. 25 பேர் தூக்கிலிடப் பட்டனர். அதாவது இலட்சம் கொலைகளுக்கு 34 தூக்குகள் நிறைவேற்றப்பட்டன. 1980க்குப் பின் 1995 வரை கொலைகளுக்காக 83 பேர் தூக்கிலிடப்பட்டனர். அதாவது, இலட்சம் கொலைகளுக்கு 8.2 பேர் (0.0082 சதம்) என்பதாகத் தூக்கிலிடப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்தது, பிந்தைய காலங்களில் இன்னும் அதிகப் பேருக்குக் கருணை அளிக்கப்பட்டது. 1995க்குப் பின் தூக்கிலிடப்படுபவர்களின் வீதம் 0.0042 சதமாகவும், 1999க்குப் பின் இது 0.0002 சதமாகவும் மேலும் குறைந்தது. 2005க்குப் பின் நடைபெற்ற 2,30,293 கொலைகளில் ஒருவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அதாவது நிறைவேற்று வீதம் சுழி (தனஞ்சய் சட்டர்ஜி, அஜ்மல், அஃப்சல் ஆகியோரின்

தண்டனை நிறைவேற்றங்களுக்கு முன்னதான தரவு). இந்தத் தரவுகள் கிட்டத்தட்ட முற்றிலும் சரியானவை. பிற குற்றங்களைப் போல கொலைக் குற்றங்கள் அவ்வளவு எளிதாக மறைக்க இயலாதவை. குற்றங்கள் தொடர்பான இந்திய அளவிலான வருடாந்திரக் கணக்கெடுப்புகள் இவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்கின்றன.

ஆக, பச்சன் சிங் தீர்ப்பிற்குப் பின் மரண தண்டனை நிறைவேற்றல் மிகப் பெரிய அளவில் குறைந்துள்ளது. மரண தண்டனை கொலைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என நம்புகிறவர்களின் வாதப்படி இந்நிலை கொலைக் குற்றங்கள் பெரிய அளவில் அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றிருக்க வேண்டும்.

ஆனால் உண்மை வேறுவிதமாக உள்ளது. மக்கள் தொகைக்கும் கொலைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள வீதம் குறித்த வருடாந்திரத் தரவுகள் வேறுவகையான முடிவுக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. 1952ல் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 2.81 கொலைகள் நடந்தன. படிப்படியாக 1959ல் இது 3ஆக அதிகரித்தது. 1978 வரை இது 2.5க்கும் 3க்கும் இடையில் ஏற்ற இறக்கங்களுடன் இருந்தது. அடுத்து படிப்படியாக இது அதிகரித்து கொலை வீதம் 1992ல் 4.6ஐ எட்டியது. 1992 லிருந்து இது தொடர்ந்து குறையத் தொடங்கி 2007ல் 2.8ஆகக் குறைந்தது. அதற்குப் பின் 2012 வரை இது அதே அளவில் தொடர்கிறது.

மரண தண்டனையை நீக்கினால் கொலைக் குற்றங்கள் அதிகரிக்கும் என்கிற கருத்தை இந்தத் தரவுகள் தவிடு பொடியாக்குகின்றன. இப்படிக் கொலைகளின் வீதம் குறைந்ததற்குச் சமூகப் பொருளாதார வளர்ச்சிகள் காரணமாக இருக்கலாம் எனச்சொல்லவும் வழியில்லை. இந்தியாவைப் பொருத்தமட்டில் இந்த இடைக் காலத்தில் அப்படி ஒன்றும் சமூக வளர்ச்சிக் குறியெண்கள் மாறிவிடவில்லை. தனி நபர் வருமான வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, குழந்தை பிறப்பு இறப்பு வீதங்கள், மனித வளர்ச்சிக் குறியெண் ஆகிய சமூக வளர்ச்சிக் காரணிகள் எல்லாவற்றுடனும் ஒப்பிட்டு இவற்றுக்கும் கொலை வீதங்கள் குறைவதற்கும் எந்தப் பொருத்தமும் இல்லை என்பதை

மொஹித் சவுத்ரி நிறுவி உள்ளார். இந்த வளர்ச்சி எண்கள் எல்லாம் அதிகரித்த போதும் கொலை வீதம் குறைந்தே உள்ளது.

ஒரே ஒரு சமூக வளர்ச்சிக் குறியெண் மட்டுமே இந்தவகையில் நம் கவனத்தை ஈர்க்கிறது. ஆண் பெண் பாலியல் வீதம், அதாவது 1000 ஆண்களின் எண்ணிக்கைக்கு எத்தனை பெண்கள் உள்ளனர் என்பது ஒரு முக்கியமான சமூக வளர்ச்சி எண். பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கைக்கு எந்த அளவிற்குச் சமமாக உள்ளதோ அந்த அளவிற்குச் சமூகம் வளர்ச்சியுற்றிருப்பதாகப் பொருள். இந்த ஆண் பெண் வீதம் அதிகரிக்கும்போது, அதாவது பெண்களின் எண்ணிக்கை ஆண்களுக்குச் சமமாக உயர உயரச் சமூகத்தில் கொலைகளின் வீதம் குறைகிறது. இது வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதும் தான்.

எந்த வகையிலும் மரண தண்டனை வீதத்திற்கும் கொலை வீதத்திற்கும் தொடர்பில்லை, மரண தண்டனை வீதம் குறைவதனால் கொலைக் குற்றங்கள் பெருகுவதற்கான சான்றுகள் இல்லை என்பதே இந்தத் தரவுகளிலிருந்து நாம் வந்தடையும் முடிவு.

மரண தண்டனை அல்லது பொதுவில் தண்டனை ஒரு அச்சுறுத்தல் என்பது அற அடிப்படையில் சரியாகுமா?

அச்சுறுத்தல் என்கிற அடிப்படையில் தண்டனையை விளக்குவோர் மூன்று காரணங்களைச் சொல்வர். அவை

1. தண்டனை கிடைக்கும் என்கிற அச்சம் மக்களைக் குற்றச் செயல்களிலிருந்து தடுக்கும்.

2. தண்டனை கிடைக்கும் என்கிற அச்சம் ஒரு குற்றவாளியை மீண்டும் குற்றம் புரிவதிலிருந்து தடுக்கும்.

3. ஒரு குற்றவாளிக்குக் கொடுக்கப்படும் தண்டனை மற்றவர்களைக் குற்றச் செயல்களிலிருந்து தடுக்கும். கடுமையான குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்கிற கருத்து இந்த அடிப்படைகளிலிருந்துதான் உருவாகிறது.

இதில் முதலாவது காரணத்தை மட்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சரி எனலாம். அதையும் கூட முழுமையாகச் சரி எனச் சொல்ல இயலாது என்பதைத் தொடர்ந்து நாம் பார்த்து வருகிறோம். இரண்டாவது காரணம் முற்றிலும் ஏற்புடையதல்ல. ஒரு குற்றவாளி மீண்டும் குற்றம் புரிவதைத் தண்டனை குறித்த அச்சம் தடுக்கும் எனில் அந்த மனிதனிடம் ஏதோ ஒரு மாறாத அம்சம் இருந்து குற்றச் செயலை நோக்கித் தூண்டுகிறது எனப் பொருளாகிறது. உளவியல் ரீதியில் வக்கிரமான ஒரு மன நோயாளிக்கு வேண்டுமானால் இது பொருத்தமாக இருக்குமே ஒழிய எல்லா மனிதர்களுக்கும் இது பொருந்தாது. அப்படியே இருந்தாலும் கூட அவனை மீண்டும் குற்றச் செயலிலிருந்து தடுப்பதற்கான வழி அவனுக்கு மீண்டும் தண்டனை கொடுப்பதல்ல. மாறாக அவனை நாம் ஏதோ ஒரு வகையில் சீர்திருத்த (reform), சிகிச்சையளிக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தம் என்பது ஏதோ ஒரு வகையில் அவனை ஓரிடத்தில் தடுத்து வைத்துத் திருத்துவது என்கிற அளவில் மட்டுமே அது தண்டனையாக இருக்க முடியும்.

தவிரவும் மீண்டும் ஒருவர் குற்றச் செயலில் ஈடுபடுவது என்பது அவரை மட்டும் பொருத்த விஷயமல்ல. அவரை அச் செயலை நோக்கித் தள்ளுகிற அவரது சூழலும் கவனத்திற்குரிய ஒன்று. அந்த வகையில் சீர்திருத்தம் என்பது குற்றவாளியை மட்டுமல்ல குற்றச் சூழலையும் சீர்திருத்துவதாக இருக்க வேண்டும். மொத்தத்தில் எந்தத் தண்டனையும் குற்றவாளியைச் சீர்திருத்துவதை நோக்கியே அமைய வேண்டும். சீர்திருத்தத்தில், தடுத்து வைத்தல் போன்ற தண்டனை அம்சம் தவிர்க்க இயலாது என்ற போதிலும், அந்தத் தண்டனை அவரை உள்நோக்கிச் சிந்திக்கவும் அதனடிப்படையில் தனது குற்றச் செயலுக்காக வருந்தவும் வைப்பதை நோக்கியே இருக்க வேண்டும். அச்சுறுத்தல் என்பது இந்த வகையில் தண்டனையின் நோக்கமாக இருக்க இயலாது. அதுவும் மரண தண்டனை என்பது இதற்கு எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. ஒருவரைத் தூக்கிலேற்றித் துள்ளத் துடிக்கக் கொல்லுவதன் மூலம் எப்படி அவரைத் தன் குற்றம் பற்றிச் சிந்திக்க வைத்துத் திருத்த இயலும்?

ஒருவருக்குக் கொடுக்கப்படும் தண்டனை மற்றவரை அச்சுறுத்தி அவரைக் குற்றச் செயலிலிருந்து தடுக்கும் என்கிற

மூன்றாவது காரணியையும் முற்றிலும் ஏற்க இயலாது. சவுதி அரேபியா போன்ற நாடுகளில் பொது இடத்தில் தலையைச் சீவி அதை எல்லோரும் கட்டாயமாகக் காண வேண்டும் என்பது கொடூரமானது மட்டுமல்ல, ஏற்புடையதுமல்ல. ஒருவர் குற்றம் செய்துவிடக்கூடாது என்பதற்காக இன்னொருவர் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்பது என்ன நியாயம்? ஒரு குற்றச் செயலுக்குக் குற்றவாளி மட்டுமின்றி அவரது சூழலும் அதில் பங்குவகிக்கிறது என்கிற நிலையில், அவரைத் தண்டிப்பது மட்டுமே தீர்வாக்கப்படும்போது, தண்டிக்கப்படும் அவர், தனது சூழலின் குற்றத்திற்கும் பொறுப்பேற்றுத் தண்டனையைச் சுமக்க வேண்டியவராகிறார். அத்தோடு இப்போது மற்றவர்கள் எதிர்காலத்தில் குற்றம் செய்துவிடக் கூடாது என்கிற பொறுப்பையும் ஏற்று அவருக்காகவும் தண்டனையைச் சுமக்க வேண்டியவராகிறார்.

தண்டனை என்பது ஒருவரைத் தன் குற்றச் செயல் குறித்து உள் நோக்கிச் சிந்திக்க வைத்துத் திருத்தும் முகமாகத்தான் இருக்க முடியுமே ஒழிய மற்றவர்களுக்கு உதாரணம் காட்டுவதற்காக ஒருவரைத் தூக்கில் தொங்கவிடவோ சிறையில் அடைக்கவோ இயலாது.



முகம்மது அஃப்சல் குரு தூக்கிலிடப்படத்தான் வேண்டுமா?

(சில முக்கிய ஆவணங்களின் தொகுப்பு)

பொய்யாய் சிக்க வைக்கப்பட்டு
தூக்கு மரம் வரை சென்று
திரும்ப நேர்ந்த போதிலும்
சோர்ந்து துவண்டிடாமல்
அஃப்சலின் மரண தண்டனையை எதிர்த்து
இயக்கம் காணும்
பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். கீலானிக்கும்,
பத்திரிகையாளர்கள் முன் அஃப்சல்
மிரட்டப்பட்டு பேச வைக்கப்பட்டதை
நீதிமன்றத்தில் சொல்லத் துணிந்த
ஒரே பத்திரிகையாளரான
'ஆஜ்தக்' நிருபர் ஷம்ஸ் தஹுருக்கும்



1. ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை

"ஒரு நாடு அதன் குற்றவியல் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு என்னவிதமான வழிமுறைகளைப் பயன் படுத்துகிறது என்பதை வைத்தே அதன் பண்பாட்டுத் தரத்தை மதிப்பிட முடியும்."

"ஒரு குற்றவியல் நீதி வழங்கு அமைப்பின் முதற்கடமை உண்மையைத் தேடி அதை ஆதாரங்களுடன் நிறுவுவதன் மூலம் நீதியைப் பரிபாலிப்பதே. நோக்கங்கள் மட்டுமின்றி அதற்கான வழிமுறைகளும் அவற்றைப் போலவே நல்லதாக இருக்க வேண்டும் என்பது முக்கியம். நோக்கங்கள் எத்தனை சிறப்பாக இருந்த போதிலும் தவறான வழிமுறைகளினால் தனி நபர்களின் கண்ணியமும் மனித உரிமைகளும் பாதிக்கப்படக்கூடாது. சமூக நலனும் தனி மனிதனின் நலனும் ஒன்றையொன்று பாதிக்காமல் பரஸ்பரம் இணைந்திருக்க வேண்டும்.

... பாராளுமன்ற தாக்குதல் வழக்கிற்கான உச்சநீதிமன்றத் தீர்ப்பில் காட்டப்பட்ட மேற்கோள்கள்

முகம்மத் அஃப்சல் தூக்கிலிடப்பட்டால் அது இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலத்தின் மீது தொடுக்கப்பட்ட மிகப் பெரிய தாக்குதலாக இருக்கும் என நான் நம்புகிறேன். எப்படி என்கிறீர்களா? இம்மரண தண்டனை காவல்துறையில் வளர்ந்து வரும் சட்ட விரோதப் போக்கை மேலும் வலுப்படுத்தும். காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடைமுறைகளுக்கு அது தீங்கு விளைவிக்கும். இந்து பாசிசச் சக்திகளுக்கு ஊக்கமளிக்கும். மேற்சொன்ன அனைத்தையும் வலுவான உண்மைகளின் அடிப்படையில் நான் இப்போது நிறுவிக் காட்டுகிறேன். அதன்பின், உங்களது தேசத்தின் பெயரால்

முகம்மத் அஃப்சலைத் தூக்கில் தொங்கவிட விரும்புகின்றீர்களா என நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

காவல் துறையின் சட்ட விரோதத் தன்மை

இந்திய பாராளுமன்றத்தின் மீதான தாக்குதல் நமது ஜனநாயகத்திற்கு எதிரான மிகப்பெரிய சவால் என்பது உண்மையே. அது வெற்றியடைந்திருந்தால், உலகின் இப்பகுதி முழுவதிலும் நீண்ட கால அளவிலான பின் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும். இந்தக் காரணத்தினாலேயே காவல்துறையும் இதர புலனாய்வு நிறுவனங்களும் இக்குற்றச் செயல் குறித்து நேர்மையாகவும் தீவிரமாகவும் விசாரணை மேற்கொள்வது அவசியமாகிறது. ஆனால் புலனாய்வு நிறுவனங்கள் இந்த விஷயத்தில் மிகவும் மோசமாக நடந்து கொண்டன. பொய்யான சாட்சியங்களை உருவாக்கின. பின் இதன் அடிப்படையில் பத்திரிகைகளில் செய்திகளை வரவழைத்து நாட்டு மக்களின் உணர்வுகளைத் தம் நோக்கத்திற்குத் தகவமைத்தன.

பாராளுமன்றத் தாக்குதல் குறித்த சதியைத் திட்டமிட்ட, முக்கிய குற்றவாளிகள் என அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட மசூத் அஸார், காஸி பாபா, தாரிக் அகமத் ஆகிய மூவரையும் இப்புலனாய்வு நிறுவனங்கள் கைது செய்யத் தவறின. பின்னர், பாராளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்ட அய்வரில் ஒருவர் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை ஆப்கானிஸ்தானுக்கு கடத்தியவர்தான் எனச் சொல்ல முயன்றன. ஆனால் இது அப்பட்டமான ஒரு பொய் என்பது விரைவில் அம்பலமானது. உண்மையில், பாராளுமன்றத்தைத் தாக்கியவர்களின் அடையாளங்கள் இதுவரை நமக்குத் தெரியாது. ஏனெனில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர்.

டெல்லி காவல்துறைச் சிறப்பு பிரிவின் துணையுடன் இப்புலனாய்வுத் துறையினர் நால்வரைக் கைது செய்து பாராளுமன்றத் தாக்குதல் குறித்துச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டினர். அவர்களைக் கைது செய்த பின், தமது புலனாய்விலுள்ள, குறைபாடுகளை இட்டுக்கட்டும் பொருட்டு ஊடகங்களின் மூலம் விசாரணைகளைத் தொடர்ந்தனர். லோடி சாலையிலுள்ள சிறப்புப் பிரிவு அலுவலகத்தில் பத்திரிகையாளர்களின் சந்திப்பு ஒன்றை 2001, டிசம்பர் 20 அன்று அவர்கள் நடத்தினர். அங்கே

தேசிய அளவிலான ஊடகங்களின் முன்னிலையில் முகம்மத் அஃப்சலைத் தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ளச் செய்தனர். ஆனால் பின்னர் நீதிமன்றத்தில் புலனாய்வு அலுவலர் டி.சி.பி. அஷோக் சந்த் அப்படி ஒரு சந்திப்பே நடத்தப்படவில்லை என "நான் சொல்வதெல்லாம் உண்மை" என உறுதியளித்துச் சொன்னார். இந்தப் போலீஸ் அதிகாரி உண்மை சொல்கிறேன் என்கிற உறுதியின் கீழ் இப்படிப் பொய் சொல்லியதை டெல்லி உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் கவனத்தில் எடுத்துக் கொண்டன.

குற்றம் சாட்டப்பட்டவர்களை எங்கே, எப்போது கைது செய்தோம் என்பது குறித்து காவல்துறை சொன்ன பொய்களையும் மேற்படி நீதிமன்றங்கள் பதிவு செய்து கொண்டன. கைதுக் குறிப்பு (arrest memo) உட்பட பல ஆவணங்களையும் காவல்துறை பொய்யாய்த் திரித்து அமைத்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் சித்திரவதை செய்து போலி வாக்கு மூலங்களை அளிக்க நிர்பந்திக்கப்பட்டனர். புலனாய்வில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஏமாற்றுகளின் விளைவாக, குற்றம் சாட்டப் பட்டவர்களில் இருவர் அவர்களுக்கு எதிராக எந்த ஆதாரங்களும் இல்லை என நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். எஸ்.ஏ.ஆர். கீலானியும் ஷவ்கத் குருவின் மனைவி நவ்ஜோத் சந்துவுமே அவ்விருவரும். ஷவ்கத் குருவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை உச்சநீதிமன்றத்தால் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கவும் பட்டது.

அஃப்சல் குருவுக்கு எதிராக நேரடி சாட்சியங்கள் எதுவுமில்லை என நீதிமன்றம் சுட்டிக் காட்டிய பின்னும் கூட உச்ச நீதிமன்றம் அவரது மரண தண்டனையை இன்று உறுதி செய்துள்ளது.

நேரடி சாட்சியமின்மை

தடை செய்யப்பட்ட எந்த ஒரு அமைப்பிலும் முகம்மத் அஃப்சல் உறுப்பினராக இருந்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதை உச்சநீதிமன்றம் வெளிப்படையாகக் கூறியுள்ளது. இன்னும் சொல்லப் போனால் 'பொடா' சட்டத்தின் கீழான குற்றச் சாட்டுகளிலிருந்தும் அஃப்சலை அது விடுதலை செய்துள்ளது. பொடா சட்டம் 3(2) பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட தண்டனை விலக்கப்பட்டுள்ளது. அவர் எந்த ஒரு பயங்கரவாத

அமைப்பிலும் உறுப்பினராக இருந்தார் என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர வேறு நேரடி ஆதாரம் எதுவுமில்லை என்பதால் பொடா சட்டம் 3(5) பிரிவின் கீழான தண்டனையும் விலக்கப்பட்டுள்ளது. "ஒப்புதல் வாக்குமூலத்தின் படியும் கூட அவர் எந்த ஒரு பயங்கரவாதக் கும்பல் அல்லது அமைப்பிலும் உறுப்பினராக இருந்தார் என்பது அய்யத்திற்குரியதே என்பதையும் நாங்கள் சொல்ல முடியும்" என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

காவல்துறை சார்பாக 80சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் கூட அஃப்சலுக்கு ஏதேனும் ஒரு பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு இருந்ததாகக் குற்றம் சாட்டவில்லை. உண்மைகள் இப்படி இருந்தும் கூட காவல்துறையும் ஊடகங்களில் ஒரு சிலவும் இன்னும் அஃப்சலை ஒரு JeM (ஜய்ஷர்-ஏ-முகம்மத்) உறுப்பினர் (activist) என்றே குறிப்பிடுகின்றன. சிறப்புப் பிரிவிலுள்ள மத உணர்வு கொண்ட, ஊழல் பேர்வழிகளான சில அதிகாரிகள் மேற்கொண்ட இத்தகைய பொய்யான, சட்ட விரோதப் புலனாய்விற்கு அஃப்சல் தன் உயிரை விலையாகக் கொடுக்க வேண்டுமா? முக்கிய புலனாய்வு அதிகாரியான (ஏ.சி.பி.) ரஜ்பீர் சிங், கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் இன்று சிறப்புப் பிரிவிலிருந்து நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இந்த ரஜ்பீர் சிங் இந்நூல் வெளியிடப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின் தனது ரியல் எஸ்டேட் வியாபாரத் தகராறு ஒன்றில் சுட்டுக் கொல்லப்பட்டான். - அ.மா) இன்னொரு அதிகாரியும் கூட ஊழல் குற்றச்சாட்டின் பேரில் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அபூர்வங்களிலும் அபூர்வமான வழக்கு

இந்தியச் சட்டத்தின் கீழ் அபூர்வங்களின் அபூர்வமான வழக்கில் மட்டுமே மரண தண்டனை வழங்க முடியும். அஃப்சல் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு கடுமையானது (serious) என்பதில் அய்யமில்லை. ரொம்பக் கடுமையானதுதான். ஆனால் குற்றச்சாட்டு எத்தனை கடுமையானது என்பதல்ல பிரச்சினை. அஃப்சலுக்கு இதில் என்ன பங்கு என்பதும் இயற்கை விதி மற்றும் சட்ட நியாயங்களின் படி இம் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதா என்பதுமே கேள்வி.

அஃப்சலுக்கு எதிராக நேரடி சாட்சியம் ஏதுமில்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள உச்சநீதிமன்றம் இந்த ஊழல் அதிகாரிகளின் மீதும், அவர்களின் பொய்யான, சட்ட விரோதமான புலனாய்வுக்காக எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் இன்று அது இந்த மரண தண்டனையை உறுதி செய்துள்ளது. ஏனெனில் இந்தியக் குடிமக்களின் உணர்வுகளைத் தணிப்பதற்கு அஃப்சல் மரண தண்டனைக்குள்ளாக்கப்படுவது அவசியம் என அது நம்புகின்றது.

தீர்ப்பிலிருந்து ஒரு வாசகம்:

"பலரும் மரணமடைவதற்கும் பெரும் இழப்புகளுக்கும் காரணமான இந்தச் சம்பவத்தால் இந்தத் தேசம் முழுவதும் அதிர்ச்சியடைந்துள்ளது. குற்றவாளிக்கு மரண தண்டனை அளிக்கப்படுவதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனசாட்சி திருப்தியுறும். சமூக ஒற்றுமை, தேச ஒருமைப்பாடு, இந்தியாவின் இறையாண்மை ஆகியவற்றிற்கு எதிராக இந்தப் பயங்கரவாதிகள் மற்றும் சதிகாரர்கள் முன் வைத்துள்ள இச்சவாலை, இந்தத் துரோக நடவடிக்கையின் சதிகாரன் என நிறுவப்பட்டுள்ளவனுக்கு உச்ச பட்ச தண்டனையை அளிப்பதன் மூலமே ஈடுசெய்ய முடியும். மனுதாரர் ஒரு சரணடைந்த தீவிரவாதி; தேசத் துரோக நடவடிக்கைகளைத் தொடரும் மன நிலையுடையவன். இவன் ஒரு சமூகத் தீமை. இவன் இல்லா தொழிக்கப்பட வேண்டும். எனவே நாங்கள் இம் மரண தண்டனையை உறுதி செய்கிறோம்."

தன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றத்திற்கு எதிராகத் தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கும் கூட அனுமதிக்காமல் சக குடிமகன் ஒருவனைத் தூக்கில் தொங்க விடுவதன் மூலமாகத்தான் இந்திய மக்களின் கூட்டு மனச்சாட்சி திருப்தியுறுமா?

போலீஸ் விசாரணையின்போது (interrogation) வழக்கறிஞரின் உதவியைப் பெறுவதற்கு அஃப்சல் அனுமதிக்கப்படவில்லை என்பதை உச்சநீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. "விசாரணையின் போது வழக்கறிஞரின் உதவி பெறுவதென்பது காவலில் வைக்கப்பட்டுள்ளவரைச் சுற்றியுள்ள அச்சுறுத்தும் சூழலை ஒருவகையில் ஈடு செய்வதாகவும், அவரது உரிமைகள் மற்றும் காவல் துறையின் கடமைகள் குறித்த ஒரு வழிகாட்டலை

அவருக்கு அளிப்பதாகவும் அமையும்" என்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

அஃப்சலுக்கு சட்ட உதவி மறுக்கப்பட்டமை:

பொருளாதார ரீதியாக ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அஃப்சல். வழக்கறிஞரை வைத்துக் கொள்ளும் அளவிற்கு அவருக்கு வசதியில்லை. குற்றம் சாட்டப்பட்ட நால்வரில் தண்டனை வழங்கப்படக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ளவராக இருந்தபோதிலும் அஃப்சலுக்கு மட்டுமே வழக்கறிஞர் யாருமில்லை. தனக்கு ஒரு வழக்கறிஞரை நியமிக்குமாறு அவர் சிறப்பு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். எட்டு வழக்கறிஞர்களின் பெயர்களடங்கிய பட்டியலொன்றையும் அவர் தந்திருந்தார். எனினும் தேசத் துரோகிகள் எனத் தாங்கள் அழைக்கப்பட நேருமோ என்கிற அச்சத்தின் விளைவாக அவ்வழக்கறிஞர்கள் அவருக்காக வாதிடுவதற்காக மறுத்துவிட்டனர். மூத்த வழக்கறிஞரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராம் ஜெத் மலானி அவர்கள் கீலானிக்காக வாதிட முன்வந்தபோது சிவசேனைக் குண்டர்கள் அவரது மும்பை அலுவலகத்தைச் சூறையாடினர். இந்து பாசிச சக்திகளின் தேச பக்தி இப்படியாகத்தான் உள்ளது.

இறுதியாக 2002, ஜூலை 12ம் தேதி அன்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஒரு இளம் வழக்குரைஞரை சட்ட உதவுனராக (amicus curiae) நியமித்தும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய அஃப்சலுக்கு உரிமை அளித்தும் ஆணை ஒன்றை இட்டார். கிரிமினல் விசாரணை என்பது குற்றவியல் சட்ட அறிவைக் கோரும் ஒரு விஷயம் என்பதையும், ஒரு சாதாரண மனிதன் சட்ட உதவியின்றி குறுக்கு விசாரணை செய்ய முடியாது என்பதையும் எல்லோரும் அறிவர்.

அஃப்சல் சட்ட உதவி பெறுவதற்கு முயற்சித்தார். எஸ்.ஏ.ஆர். கீலானியைக் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட அகில இந்திய குழுவிற்கும், உச்சநீதிமன்றத்தில் அவருக்காக வாதாடிய வழக்கறிஞருக்கும் அவர் எழுதிய கடிதங்களை வாசித்தால் சட்டபூர்வமாகத் தன்னைக் காத்துக் கொள்ளும் அவரது முயற்சிகள் எவ்வளவு குரூரமாக மறுக்கப்பட்டன என்பது விளங்கும்.

அஃப்சலின் இந்தக் கதைக்கு செவி சாய்க்காமலேயே அவரைத் தூக்கிலிடுவதன் மூலம் தேசியத்தை உறுதி செய்ய முடியும் என ஊடகத்தின் ஒரு பிரிவினரும் இந்து பாசிஸ்டுகளும் நினைக்கின்றனர். 'பயங்கரவாதத்திற்கெதிராக' அமெரிக்கா நடத்திக் கொண்டிருக்கும் போர் உமிழ்ந்துள்ள இஸ்லாமிய வெறுப்புக் கருத்தியலுக்குப் பலியானவர்களே இவர்கள். ஆனால் எல்லை கடந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக ஸ்காரியா மவ்சோயியை விசாரிக்கும் அமெரிக்க நீதிபதிகள் ஒப்பீட்டளவில் அதிக இரக்கத்துடன் நடந்து கொண்டுள்ளது கவனத்திற்குரியது. செப்டம்பர் 11, 2001இல் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதல் சதியில் ஈடுபட்டிருந்த போதிலும் ஸ்காரியாவிற்கு மரண தண்டனை வழங்கப்படவில்லை. ஏன் தெரியுமா? "மோசமான குடும்பச் சூழலின் விளைவாக அவர் அனாதை இல்லங்களில் வளர்க்கப்பட்டார். நிலையற்ற குழந்தைப் பருவமே அவருக்கு உரியதாயிற்று. உறுதியற்ற குடும்ப வாழ்வு, உணர்வு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆதரவற்ற தன்மை, இறுதியில் தாயுடன் ஏற்பட்ட விரோதம் ஆகியவற்றால் குடும்பத்தை விட்டு அவர் வெளியேறினார்" என்றெல்லாம் காரணங்கள் கூறப்பட்டன.

ஸகாரியாவின் கதைக்கு அமெரிக்க நீதிமன்றம் செவி சாய்த்தது போல அஃப்சலின் கதையை நமது நீதிமன்றங்கள் கேட்டிருக்குமானால், காஷ்மீர் பள்ளத்தாக்கின் கதையிலிருந்தும், ஒடுக்குமுறை, வல்லாதிக்கம் ஆகியவற்றின் ஊடான அதன் வதைக்கப்பட்ட வரலாற்றிலிருந்தும் அஃப்சலின் கதையைப் பிரித்துத் தனியே பார்க்க இயலாது என்பதைப் புரிந்து கொண்டிருக்கும். இந்திய அரசுக்கும் காஷ்மீர மக்களுக்குமிடையிலான மோதலின் அரசியல் பின்னணியை கணக்கிலெடுக்காமலும் புரிந்து கொள்ளாமலும் முகம்மத் அஃப்சலுக்கு நீதி வழங்குவது சாத்தியமில்லை.

அஃப்சலின் கதை:

2004 அப்டோபர் 21ஆம் தேதி 'காஷ்மீர் டைம்ஸ்' இதழ் அஃப்சல் மனைவியின் விண்ணப்பத்தை வெளியிட்டிருந்தது. அந்தக் கடிதத்தை இந்த வெளியீட்டில் இணைத்துள்ளோம். தபஸ்ஸுமின் கடிதத்திலிருந்து காஷ்மீர மக்களைச் சூழ்ந்துள்ள துயரை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

உச்சநீதிமன்றத்தில் தனக்காகத் தோன்றிய மூத்த வழக்கறிஞர் சுஷில்குமாருக்கு எழுதிய நீண்ட கடிதத்தில் அந்த உண்மைகளை அஃப்சலும் உறுதி செய்துள்ளார். எனினும் இந்தக் கடிதங்களில் கண்டுள்ள உண்மைகள் நீதிமன்றங்களுக்கு முன் இதுவரை பதிவு செய்யப்பட்டதே இல்லை.

அஃப்சல் மற்றும் தபஸ்ஸுமின் வாழ்க்கைகளை அறியும் போது தான் இந்த மரண தண்டனைக்கு எதிராகக் காஷ்மீர மக்கள் எத்தனை தூரம் கொதித்துப் போயிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கத் தொடங்கும். இம்மரண தண்டனைக்கெதிரான தமது ஆத்திரத்தையும், எதிர்ப்பையும், வேதனையையும் வெளிப்படுத்துவதற்காக காஷ்மீர மக்கள் இன்று வீதிகளில் குவிந்து கொண்டுள்ளனர். காஷ்மீர மக்களைப் பொருத்த மட்டில், இந்திய அரசின் காஷ்மீர்க் கொள்கைக்கு எதிரான ஒரு குறியீடாகவே அஃப்சல் இன்று மாறியுள்ளார். காஷ்மீரத் தலைவர்களால் நிறைவேற்றிக் கையெழுத்திடப்பட்ட ஒரு தீர்மானமும் இங்கே தொகுக்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. காஷ்மீர மக்களின் உணர்வுகளை அது எதிரொலிக்கிறது.

1980களில் இந்திய அரசு எவ்வாறு மக்பூல் பட்டைத் தூக்கிலிட்டுக் கொன்றது என்பதை காஷ்மீர மக்களுக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டுகிறது அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள இம்மரண தண்டனை. அந்த மரண தண்டனைக்குப் பின்னரே காஷ்மீரிகள் ஆயுதந் தாங்கிய போராட்டத்தைத் துவங்கினார். கருத்தியல் ரீதியாக வேறுபட்டுள்ள காஷ்மீரிகள் எல்லோரையும் இன்று அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை ஒன்றிணைத்துள்ளது.

அரசின் பழிவாங்கலும், நீதிமன்றத்தின் மூலம் செய்யப்படுகிற கொலையும் காஷ்மீர மக்களுக்கு என்றும் நீதியை வழங்கிவிட இயலாது, காஷ்மீரப் பள்ளத்தாக்கிலும் நமது நாட்டிலும் அமைதியை நிலை நாட்டிவிட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, பழைய தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்வது புத்திசாலித்தனமில்லையா? முகம்மத் அஃப்சலின் உயிரைக் காப்பாற்றுவதற்காக நிகழ்த்தும் போராட்டம் இந்திய ஜனநாயகத்திலுள்ள அர்த்தமுள்ள நல்ல அம்சங்களுக்காக

நடத்தும் போராட்டம். ஆனால் பழி வாங்கும் நோக்கிலும், மரண தண்டனையை நிறைவேற்றியே ஆக வேண்டும் எனவும் எழுப்பப்படும் குரல்கள் இந்திய அரசிலும் சிவில் சமூகத்திலும் படிந்துள்ள மனிதாயமற்ற எதேச்சதிகாரப் பண்புகளின் வெளிப்பாடே.

அஃப்சலின் கதையை அவரது சொற்களிலேயே வாசியுங்கள். என்ன மாதிரியான சமூகத்தில் நீங்கள் வாழ விரும்புகிறீர்களெனத் தீர்மானியுங்கள்.

அக்டோபர் 2006 **புதுடில்லி நந்திதா ஹஸ்கர்**



2. எஸ்.ஏ.ஆர். கீலானிக்காக வழக்காடுவதற்கான அகில இந்தியக் குழுவிற்கு முகம்மத் அஃப்சல் எழுதிய கடிதம்

பெறுநர்:

தலைவர்

S.A.R. கீலானிக்காக வழக்காடுவதற்கான அகில இந்தியக் குழு, புதுடில்லி.

மேன்மைக்குரிய இக்குழுவின் முன் மிக்க மரியாதையுடன் நான் இதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். பாட்டியாலா இல்லத்தில் செயல்பட்ட சிறப்பு செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் நான் மும்முறை விண்ணப்பத்தும் கூட பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எனக்கு (முகம்மத் அஃப்சல்) போலீசையோ, இல்லை வேறு யாரையுமோ, நீதிமன்றத்தின் முன் பதிவு செய்யப்பட்ட அவர்களின் சாட்சியங்களையுமோ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஒரு சாட்சி கூட என்னாலோ என் வழக்குரைஞராலோ குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. பெரும்பாலான சாட்சிகளை நான் அதற்கு முன் பார்த்ததே இல்லை. அவர்களின் பொய்யும் புனைவும் நிறைந்த, அவர்களாகவே இட்டு கட்டிச் சொல்லிய கூற்றுகளை எவ்வித விவாதமோ, குறுக்கு விசாரணையோ இன்றி நீதிமன்றம் பதிவு செய்து கொண்டே போனது. பேச்சற்ற ஊமையாய், எந்த ஆதரவுமற்ற வெறும் பார்வையாளனாய் நான் நின்றிருந்தேன். மிகச் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே நான் பேச அனுமதிக்கப்பட்டேன்.

என்னைப் பேட்டி கண்ட தேசிய தொலைக்காட்சியான 'ஆஜ் தக்'கின் நிருபர் ஷம்ஸ் தஹீரை நான் குறுக்கு விசாரணை செய்ய

அனுமதிக்கப்பட்டபோது, பேட்டியின்போது நான் போலீசால் மிரட்டி வற்புறுத்தலுக்குள்ளானதை அவர் உறுதி செய்தார். எஸ்.ஏ.ஆர். கிலானிக்கு இக்குற்றத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை நிறுவும் விதமாக ஒரு கேள்விக்கு நான் பதிலளித்தபோது அத்தனை பத்திரிகையாளர் முன்பும் நான், போலீஸ் அதிகாரி (ஏ.சி.பி.) ரஜ்பீர் சிங்கால் நான் மிரட்டி அச்சுறுத்தப்பட்டதை அவர் குறிப்பிட்டார்.

விசாரணை தொடர்ந்து கொண்டே இருந்தது. ஆனால் விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் மற்றும் வாக்கு மூலங்களின் பதிவுகள் எனக்கு வழங்கப்படவில்லை. எனவே நீதிமன்றம் என்னென்ன விஷயங்களைப் பதிவு செய்து கொண்டது என்பதை நான் அறிய இயலாமலிருந்தது.

திஹார் சிறையின் கடுங்காவல் அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த எனக்கு வெளியிலுள்ளவர்களுடனும் வழக்கறிஞர்களுடனும் தொடர்பு கொள்வது மிகவும் கடினமான ஒரு காரியம். ஒரு வாரத்திற்குப் பின், நான் மரண தண்டனையை ஏற்றுக் கொண்டதாகவும், தூக்கில் தொங்கவிடப்பட்டு கொல்லப்படுவதை மட்டுமே நான் ஏற்காமல் விஷ ஊசி மூலம் கொல்லப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதாகவும் என் வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்தில் கூறியதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளிவந்த செய்தி ஒன்றின் மூலம் அறிந்து கொண்டேன். எனது ஒப்புதல் இல்லாமலும் எனக்குத் தெரியாமலும் என் வழக்கறிஞர் தாமாகவே கூறிய இப்பொய்க் கூற்றை நான் ஏற்கவில்லை. மறுக்க விரும்புகிறேன். எனது வழக்கறிஞரின் இக்கூற்று என் மேல் முறையீட்டு நடவடிக்கையையே கேலிக் கூத்தாக்கிவிட்டது.

பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் நான் அறியாமலும், விரும்பாலும், நோக்கமில்லாமலும் ஈடுபடுத்தப்பட்டதின் அளவும் ஆழமும், தொடக்கம் முதலே, காவல்துறையால் பெரிதுபடுத்தப்பட்டது. உணர்ச்சி மயப்படுத்தப்பட்டது. எனது ஆதரவின்மையையும், சட்டம் குறித்த அறியாமையையும், சரியான சட்ட உதவியைப் பெற இயலாமற் போனமையையும் காவல் துறை சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. பாராளுமன்றத் தாக்குதலைத் திட்டமிட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் அவர்கள்

தோற்றுப் போனதையும், அவர்களது இயலாமையையும் மறைப்பதற்காக நான் பலிகடாவாக்கப்பட்டேன். மக்கள் முட்டாளாக்கப்பட்டார்கள். இந்த உண்மைகள் அனைத்தையும் மனதிற் கொண்டு மேன்மை தாங்கிய உங்களை நான் வேண்டிக் கொள்வது யாதெனில் பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் நான் பொய்யாக ஈடுபடுத்தப்பட்டது குறித்த உண்மையை மக்கள் முன்னும் உச்ச நீதிமன்றத்தின் முன்னும் அம்பலப்படுத்த வேண்டும். மேன்மை தாங்கிய உங்கள் குழு எனது இப் பணிவான வேண்டகோளை அனுதாபத்துடன் கவனத்தில் எடுக்க வேண்டுகிறேன். நான் என்றும் உங்களுக்கு கடமைப்பட்டவனாக இருப்பேன்.

தேதி: 26.01.2004 நன்றி.
இடம்: சிறை எண். 2, உங்கள் பணிவுள்ள
திஹார், புதுடெல்லி. **முகம்மத் அஃப்சல்**

த/பெ. ஹபிபுல்லாஹ் குரு (Late)
வார்டு எண். 7, கடுங்காவல் வார்டு,
சிறை எண் 2, திஹார், புதுடெல்லி.



3. தனது வழக்கறிஞர் சுஷில்குமார், மூத்த வழக்கறிஞர், உச்சநீதிமன்றம், அவர்களுக்கு முகம்மத் அஃப்சல் எழுதிய கடிதம்

மரியாதைக்குரிய திரு. சுஷில் குமார்,

ஹலோ!

எனது வழக்கை எடுத்துக் கொண்டு எனக்காக வாதிட நீங்கள் முடிவு செய்துள்ளதை அறிந்து மிக்க நன்றியுடையவனாக உள்ளேன். மிக்க கடமைப்பட்டவனாக உணர்கிறேன். இந்த வழக்கின் தொடக்கம் முதலாகவே நான் புறக்கணிக்கப்பட்டேன். ஊடங்களின் முன்னோ, நீதிமன்றங்களின் முன்னோ உண்மைகளைச் சொல்ல எனக்கு வாய்ப்பு வழங்கப்படவே இல்லை. மும்முறை விண்ணப்பித்தும் கூட சிறப்பு நீதிமன்றம் எனக்கென வாதிட ஒரு வழக்கறிஞரை நியமிக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைகளுக்கான ஒரு வழக்கறிஞர் "அஃப்சல் தூக்கில் தொங்கி சாக விரும்பவில்லை. விஷ ஊசியால் கொல்லப்படவே விரும்புகிறார்" என்று கூறினார். இது அப்பட்டமான பொய். என் வழக்கறிஞரிடம் நான் இப்படிச் சொன்னதே இல்லை. அந்த வழக்கறிஞர் என்னாலோ, என் குடும்பத்தாலோ தேர்வு செய்யப்பட்டவரல்லர். எனது ஆதரவற்ற நிலையும், ஒரு நல்ல வழக்கறிஞரை வைத்துக்கொள்ள இயலாத நிலையுமே அவர் என் வழக்கறிஞராக அமைந்ததற்குக் காரணம். கடுங்காவல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும், அந்த மனித உரிமைகளுக்கான வழக்கறிஞருடன் நான் தொடர்பு கொள்ள இயலாதிருந்ததாலும் அவரை மாற்றுவதற்கோ உயர்நீதிமன்றத்திடம் மரணம் குறித்து என் தேர்வாகச் சொல்லப்பட்டது பற்றிய எனது மறுப்பைத் தெரிவிப்பதற்கோ இயலாமற் போய்விட்டது. உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்னரே நான் இதை அறிய நேரிட்டது.

காஷ்மீர் மாநில சிறப்புக் காவல் படையினரால் (STF) பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் நான் சிக்க வைக்கப்பட்டேன். சிறப்பு காவல் படையுடன் இணைந்து செயல்படும் டெல்லி சிறப்புக் காவல் துறையினர் (Spl. Police) வடிவமைத்த குற்றச்சாட்டை அப்படியே ஏற்றுக்கொண்ட சிறப்பு நீதிமன்றம் எனக்கு மரண தண்டனை விதித்தது. காவல் துறை அதிகாரி (ACP) ரஜ்பீர் சிங் என்னை மிரட்டி, வற்புறுத்தி ஊடகங்களின் முன்பு நான் குற்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். என் மீது வழங்கப்பட்ட மரண தண்டனையில் இந்த ஊடங்கள் ஏற்படுத்திய தாக்கமும் ஒரு முக்கிய பங்குவகித்தது. (ஊடகங்களின் முன் நான் மிரட்டப்பட்டது) ஒரு தொலைக்காட்சி நிருபரால் ('ஆஜ் தக்'கின் ஷம்ஸ் தஹிர்) சிறப்பு நீதிமன்றத்தின் முன் உறுதி செய்யப்பட்டது.

ஸ்ரீநகர் பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்ட நான் STF தலைமையகத்திற்கு கொண்டு வரப்பட்டேன். அங்கிருந்து STFம் டெல்லி சிறப்புக் காவல் துறையும் என்னை புது டெல்லிக்குக் கொண்டு வந்தனர். ஸ்ரீநகரில் உள்ள பரம்போரா காவல் நிலையத்தில் எனது பொருட்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. கடுமையாகத் தாக்கப்பட்டேன். யார் முன்னாவது நான் உண்மையைச் சொன்னால் என் மனைவியும் குடும்பத்தினரும் கடுமையான பின் விளைவுகளைச் சந்திக்க நேரும் என மிரட்டப்பட்டேன். 'வாரண்டோ' அல்லது வேறு எந்த ஆவணங்களுமோ இன்றி எனது சகோதரர் ஹிலால் அஹமது குருவும் கைது செய்யப்பட்டு 2-3 மாதங்கள் வரை காவல் துறையால் சிறை வைக்கப்பட்டிருந்தார். ஏ.சி.பி. ரஜ்பீர் சிங்தான் இதை என்னிடம் முதலில் தெரிவித்தது. அவர்கள் விரும்புகிறவாறு நான் பேசினால் என் குடும்ப உறுப்பினர்களை விட்டுவிடுவதாகவும் சிறப்புக் காவல் துறையினர் என்னிடம் கூறினார். எனது வழக்கை பலவீனப்படுத்துவதன் மூலம் சிறிது காலத்திற்குப் பின் விடுதலை அடைய வழி வகுப்பதாகவும் பொய்யாக உறுதி அளித்தனர்.

என் குடும்பத்தின் பாதுகாப்பிற்கே நான் அதிக முன்னுரிமை அளித்தேன். கடந்த ஏழு ஆண்டுகளாக சிறப்புக் காவல் துறையினர் (STF) எவ்வாறு காஷ்மீர் மக்களைக் கொல்கின்றனர், இழுத்துச் சென்று கொல்வதன் மூலம் எவ்வாறு இளைஞர்களைக்

காணாமற் போகச் செய்கின்றனர் என்பதை நான் அறிவேன். பல்வேறு விதமான சித்ரவதைகள், காவல் கொலைகள் ஆகியவற்றின் நேரடி உயிர்ச் சாட்சியாய் நான் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன். STFன் அச்சுறுத்தல்களாலும், சித்திரவதைகளாலும் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் (JKLF) சரணடைந்த போராளியான நான் படையினர், எல்லைக் காவல் படையினர் (BSF), சிறப்புக் காவல் படையினர் (STF) போன்ற பல்வேறு பாதுகாப்பு முகமைகளால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டேன், மிரட்டப்பட்டேன், வேதனைக்குள்ளாக்கப்பட்டு வந்தேன். STF என்பது ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட நிறுவனமல்ல; யாருக்கும் பொறுப்பானதுமல்ல; மாநில அரசால் ஊட்டி வளர்க்கப்படும் ஒரு ஓடுகாலிக் கும்பல். காஷ்மீரிலுள்ள எந்த வீட்டிற்குள்ளும், எந்தக் குடும்பத்திற்குள்ளும் அவர்கள் எந்நேரமானாலும், இரவென்றும் பகலென்றும் பாராமல் நுழைவார்கள். STF-ஆல் யாரேனும் தூக்கிச் செல்லப்பட்டார்கள் என்றால், அது அவரின் குடும்பத்திற்கு தெரிந்தது என்றால் அவரது சவத்திற்கு ஈமச் சடங்கு செய்வதற்காக மட்டுமே அவர்கள் காத்திருப்பர். உடல் கிடைக்கும் என்பதும் கூட ஒரு நம்பிக்கை தான். பெரும்பாலும் (தூக்கிச் செல்லப்பட்டவர்) என்ன ஆனார் எனத் தெரியாமற் போவதே வாடிக்கை. 6000 இளைஞர்கள் இதுவரை காணாமற் போயுள்ளனர். இந்தப் பின்னணியில், இத்தகைய அச்சம் மிகுந்த சூழலில் என்னைப் போன்றவர்கள் STFன் கரங்களில் சிக்கி எல்லாவிதமான மோசமான விளையாட்டிற்கும் தயாராக இருப்பது தவிர்க்க இயலாதது. வேண்டும் பணத்தைக் கொடுத்துத் தம்மை இத்தகைய விளையாட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள முடிந்தவர்கள் தவிர, என்னைப் போன்ற பணமில்லாதவர்கள் இவர்களின் மோசமான சதிகளில் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டியதுதான். பரம்போரா காவல் நிலையத்தில் கூட ஒரு காவலன், பெயர் அக்பர், என்னிடம் 5000 ரூபாய் பிடுங்கிக் கொண்டான். 2000 ஆண்டு முதல் சோபோரில் நான் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவி வணிகம் செய்து வருகிறேன். (பாராளுமன்றத்) தாக்குதலுக்குப் பலகாலம் முன்பே போலி, மருந்துகள் விற்று வருவதாகக் குற்றம் சாட்டி என்னைக் கைது செய்வதாக அவன் மிரட்டினான். சிறப்பு நீதி மன்றத்திற்கும் வந்திருந்தான். எனக்கெதிராகச் சாட்சியும் சொன்னான்.

பாராளுமன்றத் தாக்குதலுக்கு முன்பே அவனுக்கு என்னைத் தெரியும். நீதிமன்ற அறையில், காஷ்மீரி மொழியில், என் குடும்பம் பாதுகாப்பாக இருப்பதாகச் சொன்னான். மறைமுகமாக எனக்கு இடப்பட்ட ஒரு மிரட்டல் இது என்பதை சிறப்பு நீதிமன்றம் அறிந்திருக்கவில்லை. சாட்சியத்தின் போது நான் அவனைக் (குறுக்கிட்டு) கேட்டிருப்பேன். ஆனால் அவனது சாட்சியத்தை நீதிமன்றம் பதிவு செய்யத் தொடங்கும் முன்பே அந்த எச்சரிக்கையை அவன் செய்துவிட்டான். விசாரணை முழுவதும், சாட்சிகள், காவல்துறையினர், ஏன் நீதிபதியும் கூட எனக்கெதிரான ஒற்றை எதிரியாக மாறி நின்றனர். ஊமையாகவும், ஆதரவற்ற பார்வையாளனாகவும் நான் எல்லாவற்றையும் பார்த்திருந்தேன். என்னுடைய பாதுகாப்பா இல்லை எனது குடும்பத்தின் பாதுகாப்பா என்ற கேள்விக்கு இடையில் நான் விரக்தியுற்று, வேதனையுற்றுக் குழம்பிக் கிடந்தேன். இறுதியில் என் குடும்பப் பாதுகாப்பைத் தேர்வு செய்தேன். அவர்களைக் காப்பாற்றினேன். அதன் விளைவே நான் இன்று மரணக் கொட்டிலில் காத்திருப்பது.

இரண்டாவது: சரணடைந்த ஒரு போராளி என்பதால் எனக்கு எந்த அரசு வேலையும் கிடைக்கவில்லை. எனவே நான் 1997-98ல் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள் விற்பனையைக் 'கமிஷன்' அடிப்படையில் தொடங்கினேன். சரணடைந்த போராளிகளுக்கு அரசுப் பணிகள் வழங்கப்படுவதில்லை. அவர்கள் சிறப்புக் காவல் படைகளிலோ (SPO/STF) இல்லை காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படைகளால் ஊட்டி வளர்க்கப்படும் ஓடுகாலிக் கும்பல்களிலோதான் வேலை செய்தாக வேண்டும். ஒவ்வொரு நாளும் போராளிகளால் SPOக்கள் கொல்லப்படுகின்றனர். இந்நிலையில் தான் நான் எனது கமிஷன் வியாபாரத்தைத் தொடங்கினேன். இதன் மூலம் மாதம் ரூ. 4000 முதல் 5000 வரை சம்பாதிக்க முடிந்தது. இந்தப் போலீஸ் உளவாளிகள் (SPO) சிறப்புக் காவல் படைகளில் சேராமலுள்ள சரணடைந்த போராளிகளை துன்புறுத்துவது வழக்கம். இதனால் 1998-2000 முதல் நான் உள்ளூர் SPOவுக்கு ரூ. 300 சில சமயங்களில் ரூ. 500 கொடுக்கத் தொடங்கினேன். அப்போது தான் நான் என் வணிகத்தைத் தொடர முடியும். இல்லாவிட்டால் SPO என்னை பாதுகாப்புப் படைகள் முன் கொண்டு போய் நிறுத்திவிடும். SPOக்களில் ஒருவர் ஒரு முறை என்னிடம், தாங்களும்கூட தங்கள்

உயரதிகாரிகளுக்கு இப்படிப் பணம் கொடுக்க வேண்டியுள்ளதைச் சொன்னார். கடுமையான உழைப்பின் விளைவாக என் வியாபாரம் வளர்ச்சியுற்றது. ஒரு நாள் காலை பத்து மணி இருக்கும். இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் வாங்கியிருந்த ஒரு 'ஸ்கூட்டரில்' சென்று கொண்டிருந்தேன். குண்டு துளைக்காத ஜிப்சி வேனில் வந்த STF படையினர் என்னை இழுத்துச் சென்றனர். பல்ஹாலன் முகாமிற்கு நான் இட்டுச் செல்லப்பட்டேன். அங்கே வினய் குப்தா என்ற காவல்துறை உதவி கண்காணிப்பாளர் (DSP) என்னைச் சித்திரவதை செய்தார். என் உடலில் மின்சாரம் பாய்ச்சினார். என் மீது குளிர்ந்த நீரை ஊற்றினார். பெட்ரோல், மிளகாய்த் தூள் எனப் பல்வேறு (சித்திரவதை) நுட்பங்களையும் என் மீது பிரயோகித்தனர். நான் ஆயுதங்கள் வைத்திருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஆனால் ஒரு மாலை நேரத்தில் DSP யின் கீழ் பணியாற்றும் காவல்துறை ஆய்வாளர்களில் ஒருவரான ஃபரூக் என்பவர் அவருக்கு (DSP) ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால் என்னை விட்டு விடுவதாகவும் இல்லாவிட்டால் கொன்று விடுவதாகவும் சொன்னார். பின் அவர்கள் என்னை ஹும்ஹமா STF முகாமிற்கு இட்டுச் சென்றனர். அங்கே திராவிந்தர் சிங் என்ற அதிகாரி (DSP) என்னைச் சித்திரவதை செய்தார். சித்திரவதை ஆய்வாளர் (torture inspector) என அவர்களால் அழைக்கப்படும் ஷாந்தி சிங் என்பவன் ஒரு தொலைபேசிக் கருவியின் மூலம் சுமார் மூன்று மணி நேரம் என் உடலில் மின்சாரம் பாய்ச்சினான். உடலில் மின்சாரம் பாயும் போதே நான் தண்ணீர் குடிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டேன். இறுதியில் நான் ஒரு லட்சம் கொடுக்கச் சம்மதித்தேன். அதற்காக என் குடும்பத்தினர் என் மனைவியின் நகைகளை விற்றனர். அப்படியும் 80,000 ரூபாயைத்தான் அவர்களால் ஏற்பாடு செய்ய முடிந்தது. ஆதனால் 2-3 மாதங்களுக்கு முன்பு நான் ரூ. 24,000 கொடுத்து வாங்கிய ஸ்கூட்டரையும் அவர்கள் விற்றனர். இப்படியாக ஒரு லட்ச ரூபாயை பிடுங்கிக் கொண்ட பின்னரே என்னை விடுதலை செய்தனர். காவல் துறையால் பாதிக்கப்பட்ட தாரிக் என்பவரும் அந்த ஹும்ஹமா STF முகாமில் இருந்தார். STF உடன் நான் ஒத்துப் போவதே நல்லது என அவர் என்னிடம் அறிவுரை கூறினார். இல்லாவிட்டால் அவர்கள் தொடர்ந்து துன்புறுத்துவார்கள். சாதாரண வாழ்க்கையை சுதந்திரமாக வாழ அனுமதிக்க மாட்டார்கள் என்றார். இது என் வாழ்க்கையில்

திருப்பு முனையாக அமைந்தது. தாரிக் சொல்லிய வழியைப் பின்பற்றுவது என முடிவு செய்தேன். 1990-1996 ஆண்டுகளில் நான் டெல்லி பல்கலைக்கழகத்தில் படித்தவன். 'டியூஷன் சென்டர்கள்' பலவற்றில் பணியாற்றிய அனுபவம் எனக்குண்டு. வீடுகளுக்குச் சென்று 'டியூஷன்' சொல்லிக் கொடுப்பதும் உண்டு. இந்தத் தகவலை புட்காமைச் சேர்ந்த அஷாக் ஹுசேன் என்கிற அதிகாரி (SSP) ஒருவரின் மைத்துனனான அல்டாஃப் ஹுஸைன் என்பவன் அறிந்தான். அதன் பின் அவனே என் குடும்பத்தை நிர்வகிப்பவனாக மாறினான். இல்லை, என் குடும்பத்திற்கும் ஹும்ஹமா அதிகாரி (DSP) திராவிந்தர் சிங்கிற்கும் இடையில் ஒரு தரகனானான். தனது 12ஆம் வகுப்புப் படிக்கும் முதல் குழந்தையும், 10ஆம் வகுப்பு படிக்கும் இரண்டாம் குழந்தையும் தீவிரவாத அச்சுறுத்தலால் வெளியே சென்று 'டியூஷன்' பயில இயலாமலிருப்பதால் அவ்விருவருக்கும் நான் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றான். இவ்வாறு நான் அல்டாஃபின் குடும்பத்திற்கும், அல்டாஃபிற்கும் நெருக்கமானேன். ஒரு நாள் அவன் என்னை திராவிந்தர் சிங்கிடம் (DSP) அழைத்துச் சென்றான். நான் ஒரு சின்ன வேலை செய்ய வேண்டுமென அவர் சொன்னார். எனக்கு டெல்லி நன்கு பழக்கமான நகரமாகையால் ஒருவரை அழைத்துச் சென்று அங்கே ஒரு வீட்டை வாடகைக்கும் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்பதே அந்த வேலை. எனக்கு அந்த மனிதனைத் தெரியாது. ஆனால் அவன் காஷ்மீரி இல்லை என்பதை மட்டும் புரிந்து கொண்டேன். ஏனெனில் அவனுக்குக் காஷ்மீரி மொழி தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் திராவிந்தர் சிங் சொல்லிவிட்டதால் எனக்கு வேறு வழி இல்லை. நான் அவனை டெல்லிக்கு இட்டுச் சென்றேன். ஒரு நாள் என்னிடம் அவன் ஒரு கார் வாங்க விரும்புவதாகச் சொன்னான். இதற்காக நான் அவனுடன் கரோல் பாக் வரை சென்றேன். பின் அவன் டெல்லியில் பல மனிதர்களைச் சந்தித்தான். எனக்கும் முகம்மத் என்கிற அவனுக்கும் திராவிந்தர் சிங்கிடமிருந்து பல்வேறு போன் அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. ஒரு நாள் முகம்மத் காஷ்மீருக்கு நான் போக விரும்பினால் போகலாம் எனச் சொன்னான். 35,000 ரூபாய் பணமும் கொடுத்தான். இது உனக்கு என்னுடைய பரிசு என்றும் அவன் சொன்னான். 6 அல்லது 8 நாட்களுக்கு முன்புதான் இந்திர விஹாரில் என் குடும்பத்திற்கென ஒரு அறையை வாடகைக்கு எடுத்திருந்தேன்.

இந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்காததால் என் குடும்பத்துடன் நான் டெல்லியில் வாழ்வதென முடிவு செய்திருந்தேன். பாராளுமன்றத் தாக்குதலுக்குப் பின் ஏகப்பட்ட நெருக்கடிகள் இருந்ததால் 'ஈத்' பெருநாளுக்குப் பின் திரும்புவதாகச் சொல்லி எனது வாடகை வீட்டின் சாவிகளை அதன் உரிமையாளரான பெண்ணிடம் கொடுத்தேன். ஸ்ரீநகரில் நான் தாரிக்கைச் சந்தித்தேன். எப்போது நீ டெல்லியிலிருந்து வந்தாய் என அவன் கேட்டான். ஒரு மணி நேரதிற்கு முன்னால்தான் என நான் பதில் சொன்னேன். அடுத்த நாள் காலை நான் சோபூருக்குச் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் நிற்கையில் ஸ்ரீநகர் போலீஸ் என்னைக் கைது செய்து பரம்போரா காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தது. STF உடன் தாரிக்கும் இருந்தான். என் சட்டைப் பையிலிருந்து 35,000 ரூபாய் பணத்தை அவர்கள் கைப்பற்றினார்கள். பின் என்னை நேரடியாக STF தலைமையகத்திற்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து நான் டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டேன். என் கண்களை இறுக்கிக் கட்டினார்கள். இப்போது நான் சிறப்புக் காவல் துறையின் சித்திரவதைக் கூடத்தில் இருந்தேன்.

சிறப்புக் காவல் கூடத்தில் நான் 'கஸ்டடி'யில் இருந்தபோது முகம்மத் பற்றியும் மற்ற விஷயங்களையும் சொன்னேன். ஆனால் அவர்களோ நான் ஷவ்கத், அவர் மனைவி நவ்ஜோத் (அஃப்ஸன்), கீலானி ஆகிய நால்வருமே பாராளுமன்றத் தாக்குதலின் பின்னணியில் இருந்து செயல்பட்டவர்கள் என்று என்னிடம் கூறினார்கள். என் குடும்பத்தைச் சொல்லி அவர்கள் என்னை மிரட்டவும் செய்தனர். எனது தம்பி ஹிலால் அஹமத் குருவும் கூட STFன் 'கஸ்டடி'யில் உள்ளதாக ஒரு காவல்துறை ஆய்வாளர் கூறவும் செய்தார். நான் அவர்களுடன் ஒத்துழைக்காவிட்டால் அவர்களால் எனது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களையும் தூக்கிச் செல்ல முடியும். ஷவ்கத்தையும் அவர் மனைவியையும், கீலானியையும் சிக்க வைக்குமாறு என்னை அவர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் நான் அதற்கு இடம் கொடுக்கவில்லை. அது சாத்தியமில்லை என அவர்களிடம் நான் சொன்னேன். பின் அவர்கள், கீலானியைப் பற்றி நான் எதுவும் சொல்லக் கூடாது என்று சொன்னார்கள் (அதாவது கீலானிக்கும் இக்குற்றத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது பற்றி). சில நாட்களுக்குப் பின்னர் கைகளில் விலங்கிடப்பட்டு நான் ஊடகத்தினர் முன் நிறுத்தப்பட்டேன். அங்கே NDTV, ஆஜ்தக், ஸீ நியூஸ், சஹாரா

டி.வி. இன்னும் பலர் இருந்தனர். அதிகாரி (ACP) ரஜ்பீர் சிங்கும் அங்கிருந்தார். பாராளுமன்றத் தாக்குதலில் கீலானியின் பங்கு என்ன என்று ஷாம்ஸ் தஹீர் என்கிற நிருபர் கேட்டார். கீலானி குற்றமற்றவர் என்று சொன்னேன். இந்தக் கணத்தில் அதிகாரி (ACP) ரஜ்பீர் சிங் தனது நகரும் நாற்காலியிலிருந்து எழுந்து என்னை நோக்கிக் கத்தினார். கீலானி பற்றி எதுவும் பேசக்கூடாது என நான் முன்பே சொன்னேனில்லையா? என்று எல்லோர் முன்பும் சத்தம் போட்டார். ரஜ்பீர் சிங்கின் நடத்தை என் ஆதரவின்மையை அங்கே வெளிப்படுத்தியது. அச்சுறுத்தப்பட்டும் மிரட்டப்பட்டுமே அஃப்சலிடமிருந்து கூற்றுக்குள் தருவிக்கப்பட்டன என்பதையாவது அங்கிருந்து ஊடகத்தினர் அறிந்திருப்பர். பின்னர் ரஜ்பீர் சிங் அங்கிருந்த ஊடகத்தினரிடம் கீலானி பற்றிச் சொல்லப்பட்டதை விட்டு விடுமாறும் மக்கள் முன் அதைச் சொல்ல வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். அன்று மாலை ரஜ்பீர் சிங், நான் என் குடும்பத்துடன் பேச விரும்புகிறேனா என்று கேட்டார். ஆம் என்றேன். பின் நான் என் மனைவியுடன் பேசினேன். தொலைபேசியில் பேசி முடித்தவுடன், நான் என் மனைவியையும் குடும்பத்தையும் உயிருடன் பார்க்க வேண்டுமானால் காவல்துறையின் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார். டெல்லியில் பல்வேறு இடங்களுக்கு அவர்கள் என்னை இட்டுச் சென்றனர். பல்வேறு பொருள்களையும் முகம்மத் எங்கே வாங்கினான் என்று அவர்கள் காட்டினார்கள். பின் என்னை காஷ்மீருக்கு இட்டுச் சென்றனர். எதுவும் செய்யாமல் அங்கிருந்து மீண்டும் (டெல்லிக்கு) கொண்டு வந்தனர். குறைந்தபட்சம் 200 முதல் 300 வெற்றுக் காகிதங்களில் அவர்கள் என்னைக் கையெழுத்திடச் செய்தனர்.

சிறப்பு நீதி மன்றத்தில் உண்மைகளைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளிக்க படவேயில்லை. வழக்கு முடிவில் பேசுவதற்கு முழு வாய்ப்பும் அளிக்கப்படும் என நீதிபதி என்னிடம் சொன்னார். ஆனால் முடிவில் அவர் எனது கூற்றுக்கள் எதையும் பதிவு செய்யவில்லை. நீதிமன்றம் பதிவு செய்த எதையும் என்னிடம் காட்டவும் இல்லை. என் செல்லில் பதிவாகியிருந்த போன் எண்களைக் கவனமாகப் பார்த்திருந்தால், STFன் தொலைபேசி எண்களை நீதிமன்றம் கண்டிருக்க முடியும்.

என் ஆதரவற்ற நிலையையும் எத்தகைய சூழலை நான் கடந்து வந்துள்ளேன் என்பதையும் இப்போதாவது உச்சநீதிமன்றம் கணக்கிலெடுத்துக் கொள்ளும் என நம்புகிறேன். இந்தக் குற்றச் செயலில் என்னைப் பலிகடாவாக்கியுள்ளது STF. ஆனால் இதைத் திட்டமிட்டு நடத்தியது STFம் மற்றவர்களுமே. (அந்த விவரங்களை) நான் அறியேன். இந்த விளையாட்டில் டெல்லி சிறப்புக் காவல் துறைக்கும் ஒரு பங்கிருந்தது உறுதி. ஏனெனில் ஒவ்வொரு முறையும் என்னை அச்சுறுத்தி மவுனமாக இருக்குமாறு செய்தது அவர்கள்தான். என் மீது திணிக்கப்பட்ட மவுனம் (உடைந்து, என் குரல்) கேட்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படும் என நம்புகிறேன்.

எனது வழக்கை எடுத்துக் கொண்டதற்காக உங்கள் நல்ல உள்ளத்திற்கு மீண்டும் ஒருமுறை என் இதயம் கனிந்த நன்றிகளைச் சொல்லிக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

முகம்மத் அஃப்சல்

த/பெ. ஹபிபுல்லாஹ் குரு
வார்டு எண். 6, (கடுங்காவல் வார்டு)
சிறை எண் 1, திஹார்,
புதுடெல்லி - 110 064



4. ஒரு மனைவியின் வேண்டுகோள்

ஏசியன் ஏஜ்: 04.11.04

டிசம்பர் 13, 2001 அன்று இந்தியப் பாராளுமன்றத்தின் மீது தாக்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முகம்மத் அஃப்சல் என்பவரின் மனைவி நான். குற்றவியில் நீதிமன்ற நீதிபதி எஸ்.என். திங்ராவால் அஃப்சலுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேன்மை தாங்கிய டெல்லி உயர்நீதிமன்றம் அவரது மரண தண்டனையை உறுதி செய்துள்ளது. இப்போது இவ்வழக்கு மேன்மை தங்கிய இந்திய உச்சநீதிமன்றத்தின் முன் வந்துள்ளது.

இந்தியா முழுவதிலுமுள்ள மக்கள் பாராளுமன்றத் தாக்குதலைக் கண்டித்துள்ளனர். இது ஒரு பயங்கரவாத நடவடிக்கை என்பதையும் கண்டிக்கப்பட வேண்டியது என்பதையும் நானும் ஏற்றுக் கொள்கிறேன். எனினும் இத்தகைய கடுமையான குற்றம் சாட்டப்பட்டவர்கள் நியாயமாக நீதி விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்கு தண்டனை வழங்கும் முன் அவர்களின் குரலுக்கு முழுமையாகச் செவி சாய்க்க வேண்டும் என்பதும் கூட முக்கியமானதே. என் கணவரின் கதையை யாரும் இதுவரை கேட்கவில்லை எனவும் நீதிமன்றத்தில் அவர் (வழக்கு) சரியாக முன் வைக்கப்படவில்லை என்றும் நான் நம்புகிறேன்.

எங்களின் கதையைக் கேட்டுப் பின், எங்களுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை நீங்களே முடிவு செய்ய வேண்டும் என உங்களிடம் நான் வேண்டிக் கொள்கிறேன். காஷ்மீரிலுள்ள பல இளம் ஜோடிகளின் கதைதான் அஃப்சல் மற்றும் என்னுடைய கதையும். எங்கள் மக்களை எதிர் கொண்டுள்ள துயரைத்தான் எங்கள் கதையும் வெளிப்படுத்துகிறது.

மற்ற பல்லாயிரம் இளைஞர்களைப் போலவே அஃப்சலும் 1990இல் யிரிலிதி (ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி) தலைமையில் இயங்கிய இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார். பயிற்சிக்காகப் பாகிஸ்தான் சென்றார். அங்கு சில காலம் தங்கியும் இருந்தார். எனினும் பல்வேறு குழுக்களிடையே காணப்பட்ட வேறுபாடுகளால் அவர் சலிப்புற்றார். பாகிஸ்தான் ஆதரவுக் குழுக்களை அவர் ஆதரிக்கவில்லை. அவர் அங்கு மூன்று மாத காலமே தங்கியிருந்ததால் பயிற்சி எதையும் பெறவுமில்லை. காஷ்மீருக்குத் திரும்பிய அஃப்சல் கல்வியைத் தொடர்வதற்காக டெல்லிக்குச் சென்றார். எப்போதும் படிப்பதே அவரது விருப்பமாக இருந்தது. இயக்கத்தில் சேருமுன் அவர் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருந்தார்.

எல்லோரையும் போல சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப விரும்பிய என் கணவர் எல்லைக் காவற் படை (BSF) முன் சரணடைந்தார். மேலும் இரண்டு பேர்களைச் சரணடைவற்குத் தூண்டும்வரை அவரது சர்டிபிகேட்களைத் தர முடியாது என BSF தலைவர் சொல்லிவிட்டார். அவர் ஒரு சரணடைந்த போராளி என்று (மட்டுமே) ஒரு சான்றிதழ் வழங்கப்பட்டது. சரணடைந்த ஒரு போராளி காஷ்மீரில் வாழ்வது வெகு சிரமம் என்பதை ஒரு வேளை நீங்கள் புரிந்து கொள்ள இயலாமற் போகலாம். ஆனாலும் குடும்பத்துடன் காஷ்மீரில் வாழ்வதென்றே அவர் முடிவு செய்தார். 1997ல் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள் விற்கிற வணிகம் ஒன்றை அவர் காஷ்மீரில் தொடங்கினார். அடுத்த ஆண்டில் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். அவருக்கு 28 வயது, எனக்கு 18 வயது.

காஷ்மீரில் வாழ்ந்த காலம் முழுவதும் பாதுகாப்புப் படையினர் அவரைத் தொடர்ந்து தொல்லை செய்து வந்தனர். போராளிகள் என அவர்கள் சந்தேகப்படுபவர்களைப் பற்றி உளவு பார்க்கச் சொன்னார்கள். 22 ராஷ்ட்ரிய ரைஃபிள் படையைச் சேர்ந்த மேஜர் ராம் மோகன் ராய் என்பவர் அஃப்சலைச் சித்திரவதை செய்தார். அவரது அந்தரங்க உறுப்புகளில் மின்சார 'ஷாக்'குகள் கொடுக்கப்பட்டன. அவர் அவதூறு செய்யப்பட்டார். அவமானப் படுத்தப்பட்டார்.

இந்தியப் பாதுகாப்பு படையினர் அவரைத் தங்களின் முகாமிற்கு இட்டுச் சென்று சித்திரவதைக்கு ஆளாக்குவது வழக்கமாயிற்று. அவரிடமிருந்து தகவல்களைக் கறக்க அவர்கள் விரும்பினர். ஒரு நாள் இரவில் இந்தியப் பாதுகாப்புப் படையினர் வீடு புகுந்து எங்கள் எல்லோரையும் கேவலமாகத் திட்டிவிட்டு அஃப்சலை முகாமுக்கு இழுத்துச் சென்றனர். இன்னொரு முறை பல்ஹாலன் பதானில் உள்ள STF முகாமிற்கு அவர் இட்டுச் செல்லப்பட்டார்.

சில நாட்களுக்குப் பின் அவரை அவர்கள் ஹூம்ஹமா ஷிஜிதி முகாமிற்கு கொண்டு சென்றனர். உதவிக் காவல் கண்காணிப்பாளர்கள் (DSP) வினய் குப்தாவும், திராவிந்தர் சிங்கும் ஒரு லட்ச ரூபாய் பணம் கேட்டார்கள். நாங்கள் பணக்காரர்கள் அல்ல. அஃப்சலைச் சித்திரவதைகளிலிருந்து காப்பாற்ற வேண்டி திருமணத்தின்போது எனக்கு அளிக்கப்பட்ட கொஞ்ச நகைகள் உட்பட எங்களிடமிருந்த எல்லாவற்றையும் நாங்கள் விற்க வேண்டியதாயிற்று.

அஃப்சலை உறையும் நீருக்குள் நிற்க வைத்தனர். அவரது ஆசன வாய்க்குள் பெட்ரோல் செலுத்தப்பட்டது. ஷாந்தி சிங் என்ற ஒரு அதிகாரி அவரை அம்மணமாகப் பல மணி நேரம் தலைகீழாகக் குளிரில் தொங்க விட்டார். அவரது ஆணுறுப்பில் மின்சார அதிர்ச்சிகள் கொடுக்கப்பட்டன. பல நாட்கள் அவர் வைத்தியம் செய்து கொள்ள நேர்ந்தது.

அஃப்சல் ஏதோ தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதனால்தான் பாதுகாப்புப் படையினர் அவரிடமிருந்து தகவல் கறப்பதற்காக இத்தகைய சித்திரவதைகளைச் செய்திருப்பார்கள் என நீங்கள் நினைக்கலாம். காஷ்மீரில் நிலவும் சூழலை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தாம் ஈடுபடாவிட்டாலும் கூட காஷ்மீரில் உள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் குழந்தையும் இயக்கங்கள் குறித்த ஏதேனும் தகவலை அறிந்திருப்பார்கள். மக்களை உளவு சொல்பவர்களாக மாற்றுதவன் மூலம் சகோதரரைச் சகோதரருக்கு எதிராகவும், மனைவியைக் கணவனுக்கு எதிராகவும், குழந்தைகளைப் பெற்றோர்களுக்கு எதிராகவும் மாற்றுகின்றனர். அஃப்சல் தன்

குடும்பத்துடன் அமைதியாக வாழவே விரும்பினர். ஆனால் STF அவரை அதற்கு அனுமதிக்கவில்லை.

மக்களிடமிருந்து பணம் பறிக்கும் விஷயத்தில் சிறப்புக் காவல் படையினருக்குக் காஷ்மீரில் ரொம்பவும் கெட்ட பெயருண்டு என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தன் தேர்தல் அறிக்கையில் மஃப்டி சயீத் இந்த படை முழுவதையும் கலைத்து விடுவதாக வாக்குறுதி அளித்த போது அவர்கள் ரொம்பவும் அவமானப்பட நேர்ந்தது. தமது காவலில் உள்ளவர்களை கொடூரமான, அறிவற்ற, மனித விரோதமான சித்திரவதைகளால் கொல்வது உட்படப் பல வகை மனித உரிமை மீறல்களுக்கு STF படையினர் காரணமாக இருந்துள்ளதை அனைவரும் அறிவர்.

இந்ச் சூழல்கள்தான் வீட்டையும் குடும்பத்தையும் விட்டு வெளியேறி டெல்லியில் 'செட்டில்' ஆக அஃப்சலைத் தூண்டின. ஒரு வாழ்வைச் சம்பாதிப்பதற்காக அவர் கடுமையாகப் போராடினார். என்னையும் எனது நான்கு வயது மகன் காலிப்பையும் டெல்லிக்கு அழைத்துக் கொள்ளவும் முடிவு செய்தார். எந்த ஒரு குடும்பத்தையும் போலவே நாங்களும் அமைதியாக இணைந்து வாழவும், குழந்தைகளை வளர்த்து, நல்ல கல்வி அளித்து, ஆளாக்கி, சிறந்த மனிதர்களாக்குகிற கனவிலும் இருந்தோம். மீண்டும் என் கணவரை ஷிஜிதி படையினர் டெல்லியில் பிடித்தபோது அந்தக் கனவு சிதைந்தது.

முகம்மது என்பவரை காஷ்மீரிலிருந்து டெல்லிக்குக் கொண்டு வருமாறு STF என் கணவரைப் பணித்தது. STF முகாமில் அவர் முகம்மதையும் தாரிக் என்ற இன்னொருவரையும் சந்தித்தார். இவர்களைப் பற்றி அஃப்சலுக்கு எதுவும் தெரியாது. தனக்கு ஏன் இந்த வேலை கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும் அவர் சிந்திக்கவில்லை. இது எல்லாவற்றையும் அவர் நீதிமன்றத்தில் சொல்லவும் செய்தார். ஆனால் நீதிமன்றமோ இதில் பாதியை - அதாவது முகம்மதை அஃப்சல் டெல்லிக்கு அழைத்து வந்ததை மட்டும் நம்பியது. ஆனால் STF தான் முகம்மதை அழைத்துச் செல்ல அஃப்சலை நிர்பந்தித்தது என்பதை மட்டும் நம்பவில்லை.

கீழ் நீதிமன்றத்தில் அஃப்சலுக்காக வாதிட யாருமில்லை. பிறகு நீதிமன்றம் ஒரு வழக்கறிஞரை நியமித்தது. அவர்

அஃப்சலிடம் எதையும் கேட்டுக் கொள்வதில்லை. சாட்சிகளை குறுக்கு விசாரணையும் செய்யவில்லை. அந்த வழக்கறிஞர் மத உணர்வுள்ளவர். என் கணவரிடம் வெறுப்பைக் காட்டினார். இந்த வக்கீல் தனக்கு வேண்டியதில்லை என என் கணவர் நீதிபதி திங்ராவிடம் சொன்னபோது அவர் அதைக் கண்டு கொள்ளவில்லை. உண்மையில் விசாரணை நீதிமன்றத்தில் என் கணவரின் கருத்துக்கள் வாதிக்கப்படாமலேயே ஒழிந்தன. என் கணவர் எதையாவது சொல்ல விரும்பிய போதெல்லாம் நீதிபதி அதைக் கேட்கவே இல்லை. நீதிமன்றத்தில் வெளிப்படையாகவே அந்த நீதிபதி தன் மதச் சார்பை வெளிப்படுத்தவும் செய்தார்.

உயர்நீதிமன்றத்தில் மனித உரிமை வழக்குரைஞர் ஒருவர் அஃப்சலுக்காக வாதிடுவற்கு முன்வந்தார். என் கணவரும் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அஃப்சலுக்காக வாதிடுவதற்குப் பதிலாக அந்த வழக்குரைஞர் அஃப்சலைத் தூக்கில் தொங்கவிட வேண்டாம் எனவும், விஷ ஊசி மூலம் கொல்லுமாறும் நீதிமன்றத்தைக் கேட்பதில் தொடங்கினார். என் கணவர் சாவதற்கான எந்த விருப்பையும் தெரிவித்ததே இல்லை. STF ஆல்தான் (இந்த வழக்கில்) தான் சிக்க வைக்கப்பட நேர்ந்தது என்பதே அவரது நிலைபாடாக இருந்தது. எனவே அந்த வக்கீல் சொன்னதை அறிந்து என் கணவர் அதிர்ச்சியடைந்தார். எனினும் கடுங்காவல் சிறையில் பூட்டப்பட்டிருந்த அவரால் அந்த வழக்குரைஞரை மாற்ற இயலவில்லை.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே அந்த வழக்குரைஞர் எவ்வாறு தனது வழக்கை உரைத்தார் என்பதை அஃப்சல் அறிய முடிந்தது. எனவே உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யும்போது அந்த வழக்குரைஞரை ஏற்க மறுத்தார். அஃப்சலுக்காக ஒரு வழக்குரைஞரை ஏற்பாடு செய்ய என்னால் இயலாமற் போனது. டெல்யில் எனக்கு யாரையும் தெரியாது. இறுதியில் கீலானிக்காக வாதிடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவிடம் அஃப்சல் முறையிட்டார். அந்தக் குழு சுஷில் குமார் என்ற மூத்த வழக்கறிஞரை அஃப்சலுக்காக ஏற்பாடு செய்து உதவியது. எனினும் உச்சநீதிமன்றம் சாட்சியங்களுக்குள் போக முடியாது என்பதால் என்ன நேரும் என்று எனக்குத் தெரியவில்லை.

எனது கணவருக்கு மரண தண்டனை வழங்காமலிருப்பதற்கும் நேர்மையான நீதி விசாரணை கிடைப்பற்கும் உறுதி செய்ய வேண்டும் என உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். நீதிமன்றத்தில் வழக்குரைஞர் வைத்து வாதிடுவதற்கும், தன் கதையைச் சொல்வதற்கும் வாய்ப்பளிக்கப்படாத சக மனித உயிரி ஒருவர் கொல்லப்படுவதில் உங்களையும் ஓர் அங்கமாக்கிக் கொள்வதற்கு நிச்சயமாக உங்களின் மனச்சாட்சி இடம் கொடாது. நீதி விசாரணை தொடங்குவதற்கு முன்னதாகவே காவல் துறையினர் அவரை ஊடகங்களின் முன்பு பொய்யான வாக்கு மூலம் அளிக்க வைத்தனர். அவர்கள் அவமானப்படுத்தினார்கள். அடித்தார்கள். சித்திரவதை செய்தார்கள். வாயில் மூத்திரம் கூடப் பெய்தார்கள். இவற்றை நான் வெளிப்படையாகச் சொல்வதற்கு ரொம்பவும் வெட்கப்படுகிறேன். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை என்னைச் சொல்ல வைத்து விட்டது. இதை எல்லாம் எழுதி முன் வைப்பதற்கு எனக்கு ரொம்பவும் தைரியம் வேண்டியிருந்தது. ஆனாலும் ஆறே வயதுள்ள என் மகனுக்காக இதைச் செய்கிறேன்.

என் கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து நீங்கள் பேசுவீர்களா? எனக்காக நீங்கள் பேச முன் வருவீர்களா? நான் என் கணவரின் உயிருக்காகத்தான், என் மகனின் தந்தையின் உயிருக்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், இந்திய ஜனநாயகத்தின் மீதும், காஷ்மீரி முஸ்லிம்களிடம் நியாயமாக நடந்து கொள்ளும் அதன் திறன் மீதும் நம்பிக்கை இழந்து கொண்டுள்ள ஒரு காஷ்மீரிப் பெண்ணாக இருந்தும் கூட நான் பேசுகிறேன்.

ஸ்ரீநகர்
செப்டம்பர்

தபஸ்ஸும்



5. காஷ்மீரத் தலைவர்களால் கூட்டாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

முகம்மத் அஃப்சலுக்கு தன்னைக் காத்துக் கொள்வதற்கு எந்த வாய்ப்பும் அளிக்காமலேயே இந்திய உச்சநீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது என்கிற செய்தியை ஸ்ரீநகரில் புத்ஷா சோக்கிலுள்ள தாஜ் ஓட்டலில் 2005 செப்டம்பர் 24 அன்று நடைபெற்ற 'காவலில் வைக்கப்பட்டவர்கள் மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சமூகத்தினர் (SPDPR)' சார்பாக நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நாங்கள் கேட்க நேர்ந்த போது பேரதிர்ச்சியுற்றோம். காஷ்மீரி மக்கள் உயிர்களைக் காவு கொடுப்பதன் வாயிலாக இந்திய நீதிமன்றங்கள் தன் அரசியல் கூற்றுகளை வெளியிட்டு வருவதற்கு இது இன்னொரு எடுத்துக்காட்டாக அமைகிறது. இந்திய அரசியல்வாதிகள் ஒரு பக்கம் காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டுவது குறித்தும் (காஷ்மீர் மக்களிடம்) நம்பிக்கையை ஏற்படுத்துவது குறித்தும் பேசுகிறார்கள். இன்னொரு பக்கம் நேர்மையான நீதி விசாரணைகள் இல்லாமல் அஃப்சல் போன்ற காஷ்மீரிகளுக்கு மரண தண்டனை விதிக்கிறார்கள்.

பாராளுமன்றத் தாக்குதல் நிறைய உயிரிழப்புகளுக்குக் காரணமாகியது என்றும், தேசம் முழுவதும் அதிர்ச்சி அடைந்துள்ளது என்றும், குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குதல் மூலமே சமூகத்தின் கூட்டு மனச்சாட்சி திருப்தியுறும் என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

நேர்மையான நீதி விசாரணையில்லாமல், தனக்காக வாதிடுவதற்கு ஒரு வாய்ப்பும் அளிக்கப்படாமல் ஒரு காஷ்மீரிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது ஏன் இந்திய மக்களின் கூட்டு மனச்சாட்சியை அசைக்கவில்லை எனக் காஷ்மீர மக்களாகிய நாங்கள் கேட்கிறோம். நீதி விசாரணை முழுவதும் முகம்மத் அஃப்சல் தனக்காக ஒரு வழக்குரைஞரை நியமிக்கச்

சொல்லி நீதிபதிகளைக் கேட்டுக் கொண்டே இருந்துள்ளார். வழக்குரைஞர்கள் பலரின் பெயர்களையும் கூட அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆனால் அவர்களனைவரும் அவருக்காக வாதிட மறுத்துவிட்டார்கள். நேர்மையான நீதி விசாரணையை உறுதி செய்வதை விடவும் ஒரு காஷ்மீரியைச் சாக விடுவதே பெரிய தேசபக்தி என இந்திய வழக்குரைஞர்கள் நினைத்ததற்காக அஃப்சலையா குற்றம் காட்ட இயலும்?

உயர்நீதிமன்றத்தில் இந்திய மனித உரிமை வழக்குரைஞர் ஒருவர் அஃப்சலுக்காக வழக்காடுவற்காக முன் வந்து அஃப்சல் தூக்கில் சாகாமல் விஷ ஊசி மூலம் சாகவே விரும்புவதாக நீதிமன்றத்திடம் சொல்லியுள்ளார். அந்த வழக்கு முடிந்து தனக்கு மூன்று மரண தண்டனைகள் வழங்கப்படும் வரை இந்த வழக்குரைஞர் தன் (அஃப்சல்) சார்பில் இப்படி ஒரு மனுவைத் தாக்கல் செய்துள்ளது அஃப்சலுக்குத் தெரியாது.

உச்சநீதிமன்றத்தில் அஃப்சலுடன் குற்றம் சாட்டப்பட்டிருந்த இன்னொரு நபருக்காக வாதிட்டுக் கொண்டிருந்த மூத்த வழக்கறிஞரும் முன்னாள் சட்ட அமைச்சருமான சாந்தி பூஷன்ஜி, அஃப்சல் குற்றவாளி எனவும் அவர் மரண தண்டனைக்குத் தகுதியானவர் என்றும் கூறியுள்ளார். அவர் இதை நீதிமன்றத்திற்குள்ளும் அச்சு ஊடகத்திலும் தொடர்ந்து கூறி வந்துள்ளார்.

சரப்ஜீத் சிங்கின் வழக்கில் இந்தியப் பிரமரும் இந்திய ஊடங்களும் அவரது உயிரைக் காப்பாற்றவற்காகப் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் வேண்டி வருகின்றனர். இந்திய - பாகிஸ்தான் நட்புறவினூடாக சரப்ஜீத் சிங்கின் உயிர் காப்பாற்றப்படும். ஆனால் இதே தலைவர்கள், தேசப் பாதுகாப்பு என்கிற தவறான கருத்தாக்கத்தின் பலிபீடத்தில் அஃப்சலின் உயிரைப் பலி கொடுக்க நினைப்பது ஒரு முரணில்லையா?

அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்பதற்காக காஷ்மீர் முழுவதும் கையெழுத்து இயக்கம் தொடங்குவது என நாங்கள் தீர்மானிக்கிறோம்.

சையத் அலி கீலானி
ஷபீர் அஹமத் ஷா
முகம்மத் யாசீன் மாலிக்
மியான் அப்துல் கயூம்
நிஸார் அலி



6. SPDPR-க்கு அஃப்சல் எழுதிய கடிதம்

பெறுநர்

காவலில் வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சமூகம் (SPDPR)

மதிப்பிற்குரிய அய்யா,

2003, டிசம்பர் 13 பாராளுமன்றத் தாக்குதல் வழக்கு தொடர்பாக உங்களின் SPDPRக்குக் கீழ்கண்ட உண்மைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. ஸ்ரீநகர் (காஷ்மீர்) பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்ட சில நாட்களுக்கு பின் ஊடங்களின் முன், நான் டெல்லி சிறப்பு காவல் துறையால், அச்சுறுத்தி நிர்ப்பந்தித்து நிற்க வைக்கப்பட்டேன். டெல்லி சிறப்புக் காவல் துறை நிலையத்தில் என் விருப்பத்திற்கு மாறாக இந்த ஊடக நிகழ்வு அரங்கேற்றப்பட்டதை 'ஆஜ்தக்' தொலைக்காட்சி நிருபர் ஒருவர் உறுதி செய்துள்ளார். குற்றவியல் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்ட போது அவர் இதைச் சொன்னார்.

2. குற்றவியல் நீதிமன்றம்,

   (அ) என் தேர்வுக்குரிய ஒரு வழக்குரைஞரை நியமிக்காமலும்,

   (ஆ) நீதி விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட கூற்றுகளை எனக்குக் காட்டாமலும்,

   (இ) பல்வேறு சாட்சிகள் மற்றும் எனக்கெதிரான அவர்களின் சாட்சியங்கள் குறித்த எனது மறுப்புகளையும் கூற்றுகளையும் பதிவு செய்யாமலும்,

   என் குரலை மவுனமாக்கியது.

3. உயர்நீதிமன்றத்தில் எனக்காக காலின் கோன்ஸால்வ்ஸ் என்கிற மனித உரிமை வழக்கறிஞர் தோன்றினார். தூக்கில் தொங்க விடுவதை விட விஷ ஊசி மூலமே அஃப்சல் சாக விரும்புகிறார் என இந்த வழக்கறிஞர் நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டதை நான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழ் மூலம் அறிய வந்தபோது அதிர்ச்சிக்குள்ளானேன். திகார் சிறையின் கடுங்காவல் வார்டிலிருந்து எனது வழக்குரைஞரை நான் தொடர்பு கொண்ட போது அவர் என்னைச் சந்திக்க வரவுமில்லை. நான் கேட்டிராத ஒரு பொய்யான வேண்டுகோளை (தான் முன் வைத்தது) பற்றிச் சொல்லவுமில்லை.

4. உச்சநீதிமன்றத்தில் என்னுடன் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்குரைஞர் என்னைப் பற்றி வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்ததன் மூலம் இயற்கை நீதி எனக்குக் கிடைப்பதற்கும் வழியில்லாமல் செய்தார்.

இவ்வாறு இந்தச் சூழல்களின் பின்னணியில் நான் நீதி வழங்கப்படுவது இயற்கைதான். (சற்றே குழப்பமாக இவ்வாக்கியம் அமைந்துள்ளது. மூலப்படியைப் பார்க்கவும். அ.மா) மேற்கண்ட உண்மைகளை, SPDPR கவனத்திற் கொண்டு என் நியாயங்களை முன் வைக்கும் என நம்புகிறேன்.

உங்களின் உண்மையுள்ள
முகம்மத் அஃப்சல் குரு

வார்டு எண் 9, ஜெயில் எண் 5,
திஹார், புதுடெல்லி - 110 064



7. குறிக்கோள் அறிக்கை

பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் பொய்யாகச் சிக்க வைக்கப்பட்ட டெல்லிப் பல்கலைக்கழக ஆசிரியரான சையத் அப்துர் ரஹ்மான் கீலானி குற்றமற்றவர் என விடுதலை செய்யப்படுவதற்காகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களுமான சிலர் குழுவாக ஒன்றிணைந்த போது உருவானதே 'காவலில் வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சமூகம் (SPDPR)' என்கிற இந்த அமைப்பு. இந்தியச் சிறைகளில் வாழும் அரசியல் கைதிகள் தொடர்பான சிக்கலான அரசியல் பிரச்சினைகள் குறித்து நாங்கள் எங்கள் பிரச்சாரத்தின் ஊடாக அறிய வந்தோம்.

அரசியல் கைதிகள் பற்றிய பிரச்சினை இந்திய ஜனநாயகத்தின் எதிர் காலத்துடன் நேரடித் தொடர்புடையதாக உள்ளது. இதில் மிகவும் வருந்தத்தக்க நிலை என்னவெனில் நமது சமூகத்திலுள்ள பல ஜனநாயக சக்திகள் எங்கள் பிரச்சாரத்தின் நியாயங்களுக்குச் செவி சாய்க்க மறுத்ததே. திரு. கீலானியை ஒரு அரசியல் கைதி என வெளிப்படையாக ஏற்றுக் கொள்வற்கு அவர்கள் அஞ்சினார்கள். தேசத் துரோகி என்ற குற்றச்சாட்டைச் சுமக்க நேருமோ என்கிற அச்சமே இதற்குக் காரணம். ஒரு மயிரிழை ஆதாரம் கூட இல்லாமல் திரு. கீலானி மரண தண்டனை விதிக்கப்பட்ட போது இந்த அச்சமே பலரை மவுனமாக்கியது.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்கிற முழக்கத்தின் வெற்றியாகவே இந்த அச்சத்தை நாங்கள் காண்கிறோம். தேசப் பாதுகாப்பு என்கிற கோட்பாடு அடிப்படை ஜனநாயக மதிப்பீடுகள் மற்றும் வழமைகளை அழித்தொழித்துள்ளது. ஒரு குறிப்பான மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலோ, ஒரு குறிப்பான புவியியல் பகுதிக்குரியவர்கள் என்பதாலோ, ஒரு குறிப்பிட்ட இயக்கத்திற்கு

அனுதாபம் காட்டியவர்களாக இருந்ததாலோ மட்டுமே நூற்றுக் கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்கிற உண்மையை நாங்கள் அம்பலப்படுத்த விரும்புகிறோம். இந்தச் சிறைக் கைதிகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின் இஸ்லாமிய வெறுப்புக் கருத்தியலுக்குப் பலி கொடுக்கப்பட்டவர்கள் இவர்கள்.

அரசியல் கைதிகளின் உரிமைகளுக்காகப் போரிடுவதென்பது ஜனநாயக நியமங்களைக் காப்பதற்கான போராட்டத்திலிருந்து பிரிக்க இயலாததாயுள்ளது. இந்திய ஜனநாயகத்தை அர்த்தமுள்ளதாகவும் உயிருள்ளதாகவும் ஆக்குவதற்காக அர்ப்பணித்துக் கொண்ட நாம் எல்லோரும், நாடு முழுவதிலும் சிறையில் அடைபட்டுள்ள அரசியல் கைதிகளும் காவலில் வைக்கப்பட்டோரும் விடுதலை செய்யப்படுவதற்காக போராட வேண்டியவர்களாக உள்ளோம்.

- *SPDPR*



8. முகம்மத் அஃப்சல் தூக்கிடப்படத்தான் வேண்டுமா?

- ராம் புனியானி

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி, முகம்மத் அஃப்சல் குரு வரும் 2006 அக்டோபர் 20ஆம் தேதியன்று, சாகும் வரை தூக்கிலிடப்படப் போகிறார். பாதுகாப்புக் காவலர்கள் பலர் கொல்லப்படுவதக்குக் காரணமான பாராளுமன்றத் தாக்குதல் (2001 டிசம்பர் 13) வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் குரு. எந்த ஒரு பயங்கரவாத அமைப்பிலும் குரு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. தாக்குதலில் எந்த நேரடிப் பங்கும் அவருக்கு இருக்கவில்லை. நீதி விசாரணையில் 'சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டில்' கண்டுள்ள எந்தப் பிரிவுகளும் மதிக்கப்படவில்லை. தாக்குதலில் அவர் ஈடுபட்டதற்கான நேரடிச் சாட்சியம் ஏதுமில்லை என்பதை உச்ச நீதிமன்றம் குறித்துள்ளது. முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் தற்செயலானவையே. ஒரு பயங்கரவாத அமைப்பு அல்லது கும்பலுடன் தொடர்புடையவர் என்பது குறித்த 'பொடா' சட்டப் பிரிவின் கீழான குற்றச்சாட்டுகளை உச்சநீதிமன்றம் உட்பட மூன்று நீதி மன்றங்களுமே ஏற்கவில்லை. சாட்சியங்கள் இட்டுக் கட்டப்பட்டவை என்பதையும் நீதிமன்றம் குறித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக விசாரணையின் போது குரு தன்னைக் காத்துக் கொள்வதற்கான உருப்படியான சட்ட உதவி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளார். ராம்ஜெத் மலானி இவ்வழக்கில் வாதிட விருப்பம் தெரிவித்த போது இந்துத்துவக் குண்டர்கள் அவரது அலுவலகத்தைச் சூறையாடினர். 2006 ஜூலை 11 மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காகத் தோன்ற இருந்த வழக்குரைஞர்கள் இந்துத்துவ அமைப்பொன்றால் மிரட்டப்பட்டதை நாம்

கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்களின் போலி தேசபக்தியின் கோழைத்தனமான வெளிப்பாட்டிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. குரு மீது ஏதேனும் குற்றம் சாட்ட முடியுமானால் அவர் அந்தக் குற்ற நடவடிக்கைகளில் ஏதோ ஒரு வகையில் துணையாக (facilitator) இருந்தார் எனச் சொல்லலாமேயொழிய நேரடியாக இதில் பங்கு வகித்தார் எனச் சொல்ல முடியாது. "பெரும் (உயிர்) இழப்புகளுக்குக் காரணமான இச்சம்பவம் தேசம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. குற்றவாளிக்கு மரண தண்டனை அளிப்பதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனச்சாட்சியைத் திருப்தி செய்ய முடியும்" என உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் கூறியுள்ளது.

ஆக தேசத்தின் கூட்டு மனச்சாட்சியின் தாகத்தைத் திணிப்பதற்காகத்தான் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? இன்னொன்றையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். இங்கே சொல்லப்படும் மனச்சாட்சி எனப்படுவது ஆதிக்கத்திலுள்ள நடுத்தர வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் மனச்சாட்சிதான்.

மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்பதற்காக பெயர் பெற்ற மனித உரிமைப் போராளிகள் பலரும் தர்ணா போராட்டம் ஒன்றை நடத்தினார். வெளிப்படையாக இதற்கான வேண்டுகோள்களையும் விடுத்தனர். கருணை மன்னிப்பு (clemency) விண்ணப்பங்களையும் அனுப்பினர். இன்னொரு புறம் இன்னொரு வகையான போராளிகள் இந்தப் பயங்கரவாதிக்கு மரண தண்டனைக்குக் குறைவாக எதையும் தரக் கூடாது என மனுக்களை மிதக்க விட்டனர். போலீஸ் அதிகாரிகள் இட்டுக் கட்டிய கதையிலுள்ள ஓட்டைகளைச் சுட்டிக் காட்டி அதனடிப்படையில் இரக்கம் வேண்டி நின்றவர்களுக்கு எதிராக பல்வேறு உரைக் காட்சிகளை (talk shows) ஏற்பாடு செய்து கோபக் குரலில் குலவையிட்டனர்.

இந்த வழக்குடன் தொடர்புடையதாக இரு முக்கிய கேள்விகள் உள்ளன. ஒன்று: அபூர்வங்களிலும் அபூர்வமான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும். இரண்டு: உலகம் முழுவதும் கொடூரமான இம்மரண தண்டனையைக் கைவிட்டு வரும்போது நாம் இன்னும் அதை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? அடிப்படையான

முக்கிய பிரச்சினைகளைக் கீழறுத்துக் கவிழ்க்கும் இதர சிறிய பிரச்சினைகளில் ஒன்று வலது சாரி இந்துத்துவ சக்திகள் மற்றும் மக்களில் ஒரு பிரிவினரின் பித்துக்குளி தேசியம். பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றமும் கூட நிரூபிக்கப்பட்ட பின்னரே தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதையும், வழங்கப்படும் தண்டனை குற்றத்திற்கு ஏற்ற அளவிலேயே இருக்க வேண்டும் என்பதையும் ஏற்காத இம் மக்கட் பிரிவினரின் கருத்துக்கள் வலதுசாரி இந்துத்துவவாதிகளுடன் இணைந்து விடுகின்றன.

கேள்விக்குரிய விதிமுறைகளைப் பயன்படுத்தி போலீசால் கட்டமைக்கப்பட்ட அடித்தளத்தின்மீது நின்றே உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. இவ்வழக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ்வழிமுறைகளை நீதிமன்றமும் கண்டித்துள்ளது. குரு தூக்கிலிடப்படாமற் போவது, பாராளுமன்றத்தைக் காப்பதற்காக உயிரிழந்தவர்களுக்கு இழைக்கப்படும் அவமானம் என்பது எதிர்த் தரப்பினர் முன் வைக்கும் வாதம். காஷ்மீரிலும், ஏன் தென் ஆசியா முழுமையிலும் மேற்கொள்ளப்படும் அமைதி நடவடிக்கைகளின் கதி என்னவாகும் என்பது இத்துடன் தொடர்புடைய இன்னொரு பிரச்சினை. வலதுசாரி இந்துத்துவவாதிகளாலும் இன்னும் சிலராலும் பீய்ச்சி அடிக்கப்படும் பித்துக்குளி தேசியத்தை (Hysterical Nationalism) தொலைக்காட்சி விவாதங்களில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். முஸ்லிம் பேச்சாளர்கள் சிலரும் இதில் கலந்து கொண்டு தமது தேசபக்தியை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக் கொண்டு மன்னிப்பு வழங்குதலுக்கு எதிரான குருட்டுத்தனமான நிலைபாடுகளை முன் வைக்கின்றனர். ஒரு விவாதத்தின்போது, இவ்வழக்கில் மன்னிப்பு அளிக்கப்பட வேண்டும் என பகத்சிங்கின் வழித் தோன்றல்கள் கேட்க மாட்டார்கள் என்றார் பா.ஜ.க.வின் முக்தார் அப்பாஸ் நக்வி. அரங்கிலிருந்து பார்வையாளர்கள் ஆரவாரமாகக் கைதட்டினார்கள்.

உண்மை என்னவெனில் பகத் சிங்கின் வழித் தோன்றல்களான பேரா. ஜகன்மோகன் சிங்கும் புகழ்பெற்ற ஆவணப்படத் தயாரிப்பாளரும் மனித உரிமைப் போராளியுமான ஆனந்த் பட்வர்தனும் குருவுக்கு மன்னிப்பு அளிக்க வேண்டும் என்று மனு சமர்ப்பித்துள்ள செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

பா.ஜ.க. பேச்சாளர் கண்ணில் அது படாமலிருந்திருக்காது. என்ன செய்வது, சில சமயங்களில் ஒருவரின் அரசியல் முடிவுகளைத் திணிப்பதற்கு அறியாமையே ஒரு வரமாகி விடுகிறது. பத்திரிகைகளில் ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதுபவர்களின் கருத்துக்களும் இப்படித்தான் இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் இந்தப் பயங்கரவாதியின் ரத்தத்தை வேண்டுகிறார்கள். சமூகப் பொதுப் புத்தியின் நிலையை இதை விடச் சிறப்பாக எதுவும் எதிரொளிக்காது. வகுப்புக் கலவரம் என்பது இப்போது சமூகத்தில் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்றாகிவிட்டது. வகுப்புக் கலவரத்தில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. கேவலமாகப் பார்க்கப்படுவதில்லை. அதே சமயத்தில் பயங்கரவாதச் செயலுடன் நேரடியாகவன்றி ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்தால் கூட அவரை, மனச்சாட்சியின் உறுத்தலில்லாமல் தூக்கிலிடலாம். வகுப்பு வாதத் தேசபக்தியின் மோசமான வெளிப்பாடு இது.

உச்சநீதிமன்றம் எல்லா விதமான மரியாதைகளுக்கும் தகுதியான போதிலும், காவல்துறையின் புலன் விசாரணையை அது ஆராய்ந்திருக்க வேண்டும். அதிலுள்ள ஓட்டைகளைப் பார்த்திருக்க வேண்டும். அதுவே தீர்ப்பின் அடிப்படையாக இருக்க வேண்டும். ஒரு புலனாய்வில் பல ஓட்டைகள் உள்ளபோது அது எவ்வாறு காவல் துறையால் முன் வைக்கப்படுகிறதோ அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. முதன்மைக் குற்றவாளிகள் உயிருடன் இல்லாதபோதோ, அல்லது அவர்களில் சிலர் அகப்படாமல் உள்ள போதோ முழு உண்மைகளும் வெளிவந்துவிடுமா? அல்லது பழிதீர்க்கும் வெறியைத் தணிப்பதற்காக யாரையேனும், எப்படியேனும் தண்டித்துத்தான் ஆக வேண்டுமா? முஸ்லிம் பெயர் ஒன்றிற்கு உரியவனாக இருப்பதையும், காஷ்மீரில் பிறக்க நேர்ந்ததையும் விட இத்தகைய தண்டனைக்கு வேறு என்ன தகுதி இருக்க முடியும்?

காஷ்மீர் இப்போது நம்முடைய பண்ணை வயல் (real estate) ஆக மாற்றப்பட்டு விட்டது. சில ஆயிரம் தீவிரவாதிகளை எதிர்கொள்வதற்காக பல லட்சம் படையினரை அங்கே நாம் குவித்துள்ளோம். ஒவ்வொரு ஏழு காஷ்மீரிக்கும் ஒரு இந்தியப் படை வீரன் என அங்கு நிறுத்தப்பட்டுள்ளபோது

காஷ்மீரி மக்கள் இதனை ஒரு ஆக்கிரமிப்புப் படையாகப் பார்ப்பதில் என்ன வியப்பு? குருவுக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனை அவர் இழைத்ததாகச் சொல்லப்படும் குற்றத்திற்குப் பொருத்தமுடையதாக இல்லை என்பதோடு மரண தண்டனையே ஒரு காட்டுமிராண்டித்தனம் என்பதையும் சொல்லியாக வேண்டும். பயங்கரவாதி ஒருவருக்கு அளிப்பதன் மூலமே அதை கண்ணியப்படுத்திவிட முடியாது. மற்ற வகைகளில் அகிம்சை பற்றிப் பேசுபவர்களில் பலரும் கூட குருவைத் தூக்கிலிட வேண்டும் என்று கோரும் நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கும் அளவிற்கு உள்ளுக்குள் வகுப்பு வெறியூட்டப்பட்டவர்களாக உள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ்சுக்கும் அதன் பரிவாரங்களுக்கும் தங்கள் தேச பக்தியைக் காட்டிக்கொள்ள இது ஒரு பொன்னான வாய்ப்பாக உள்ளதை ஒருவர் புரிந்து கொள்ள இயலும். பயங்கரவாதிகளுடன் கந்தஹார் வரை அவர்களின் அமைச்சர்களில் ஒருவர் சென்று வந்த பாவத்தைக் கழுவுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இது அவர்களுக்குப் பயன்படக் கூடும். வகுப்புவாதச் சிந்தனையின் முன் உண்மை, மனித மதிப்பிடுகள் முதலியவை பொருட்படுத்த தக்கவையாக இல்லாமற் போகும் அளவிற்கு சமூகச் சிந்தனையை சார்புத் தன்மை உடையதாக்கியதில் ஆர்.எஸ்.எஸ். பெற்றுள்ள வெற்றியையும் ஒருவர் புரிந்து கொள்ள முடியும். நீதி என்பது பழிவாங்கலாக மாற்றப்பட்டுள்ளது.

தண்டனை என்பது சீர்திருத்தத்திற்கான வழிமுறை என்பதாகவும், ஏன் இத்தகைய குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன என்கிற சுய பரிசோதனைக்கு வழிவகுப்பதாகவும் அல்லாமல் மேலும் சமூகத்தை மத வெறியூட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. நிச்சயமாக யாரும் பயங்கரவாதிகளாகப் பிறப்பதில்லை. இத்தகைய வழி முறைகளை விரும்பித் தேர்வு செய்வதுமில்லை. இத்தகைய வன்முறைச் செயல்கள் நடைபெறுவதற்கான ஆழமான சூழல்கள் யாவை எனச் சிந்தித்தாக வேண்டும். உள்ளே புரையோடியுள்ள நோயின் வெளியே தெரியும் குறியே பயங்கரவாதம். வேறெங்கோ உள்ள அநீதிகளில் அது வேர் கொண்டுள்ளது. பயங்கரவாதிகளைக் கொல்வதன் மூலம் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியாது

என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அடிப்படையான காரணங்களைக் களைவதன் மூலமே அது சாத்தியம்.

நமது சமூகம் மற்றும் சட்ட அமைப்பின் இரட்டை நிலைகள் இன்று அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளன. வகுப்புவாத வன்முறையில் ஈடுபடுவோர் குற்றத் தண்டனைகளிலிருந்து தப்பித்துவிடுகிறார்கள்.. சில நேரங்களில் பதவி உயர்வு கூட பெறுகிறார்கள். எ.டு. மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த ராம்தியோ தியாகி. விசாரணைக் கமிஷனால் (குற்றமிழைத்தவர்கள் எனப்) பெயரிடப்பட்ட நூற்றுக்கணக்கான போலிஸ் அதிகாரிகள் இன்று அவர்களின் செயல்களுக்கான “வெகுமதிகளை” அனுபவித்து மகிழ்ந்து கொண்டுள்ளனர். மும்பை மற்றும் குஜராத் கலவரங்களைத் திட்டமிட்டு நடத்திக் காட்டிய தாக்கரேயையும் மோடியையும் நமது சட்டத்தின் நீண்ட கரங்களால் தொடக் கூட முடியவில்லை. மாறாக இந்த இனப் படுகொலைகளைத் தலைமை தாங்கி நடத்தியதன் மூலம் தமது அரசியல் பிடிமானத்தை இவர்கள் வலுப்படுத்திக் கொண்டுள்ளனர். மும்பைக் கலவரத்திற்குக் காரணமானவர்கள் தமது பொற்காலத்தை அனுபவித்துக் கொண்டுள்ள போது தொடர்ந்து நடைபெற்ற குண்டுவெடிப்புக் குற்றவாளிகள் மட்டும் அதற்குரிய தண்டனையை அனுபவித்துக் கொண்டுள்ளனர். சமூகத்தில் இருவகைச் சட்ட அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன என்கிற கருத்து இன்று வலுப்பட்டு வருகிறது. ஒன்று இந்துத்துவ வெறியர்களுக்கானது. பாதிரியார் ஸ்டெய்ன்ஸையும் குழந்தைகளையும் கொன்ற தாராசிங் தூக்குக் கயிற்றிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளான். இந்து தர்மக் காவலனாகப் ‘(ஹிந்து தர்ம ரக்ஷக்)’ போற்றப்படுகிறான். வகுப்புக் கலவரங்களை முன்னின்று செயல்படுத்தியவர்கள் எளிதாகத் தப்பித்து விடுகின்றனர். இன்னொரு சட்ட அமைப்பு சிறுபான்மையினருக்காகச் செயல்படுத்தப்படுவது. அவர்களைப் பொருத்த மட்டில் பயங்கரவாதத்துடன் நேரடியாகவன்றி ஏதேனும் ஒரு வகையில் சிறிய தொடர்பு இருந்தால் கூட அவர்கள் தூக்கிலிடப்படுவதற்கோ, கடுந்தண்டனைகள் வழங்கப்படுவதற்கோ அதுவே போதுமானது.

காஷ்மீரில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியப்படை ஒரு ஆக்ரமிப்புப் படையாகவே பார்க்கப்படுகிறது. ஆயிரக் கணக்கான அப்பாவிகள் படையினரால் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

சிட்சிங்புரத்தில் வெளிப்பட்டது அமிழ்ந்து கிடக்கும் பனிப்பாறையின் மேல் முனை மட்டுமே. 1984ல் மக்பூல் பட் தூக்கிலிடப்பட்டதென்பது பின்னர் காஷ்மீர் மக்கள் அந்நியப்படுவதற்கும், தீவிரவாதம் தலையெடுப்பதற்கும் காரணமாக வில்லையா? அதற்காக யாரை நாம் குற்றம் சாட்டுவது? குருவுக்காக தூக்கு மாட்டுபவரைத் தேடிக்கொண்டிருப்பவர்கள் அதே காரியத்தைத்தான் திருப்பிச் செய்கிறார்கள். இந்தக் கடும் குற்றத்துடன் தொடர்பில்லாதவரைத் தூக்கிலிடுவதை தேசம் பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு தூக்கிலிடுவதன் மூலம் என்ன மாதிரி விளைவுகள் இங்கே உருவாகும் என்பதை சற்றே நமது வகுப்புவாதப் பார்வையை விலக்கி வைத்துவிட்டு நாம் யோசிக்க வேண்டும். தூக்கிலிட வேண்டும் எனக் கூக்குரலிடுவோரின் பித்தேறிய தேசியத்தையும், இவர்களின் ஜுரப் பிதற்றலைத் தவிர்ப்பதற்காக அளிக்கப்பட்ட மரண தண்டனையை மறு பரிசீலனை செய்யவேண்டும் எனக் குரல் கொடுப்பவர்களின் மனிதாபிமானத் தேசியத்தையும் நாம் பிரித்தறிய வேண்டும். இன்று நாட்டில் நடைமுறையிலுள்ள இருவகைச் சட்ட அமைப்புகள் தொடர்பான பார்வையை இந்தத் தூக்கு நிச்சயமாக வலுப்படுத்தவே செய்யும்.

09, அக்டோபர் 2006



9. மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

அ. மார்க்ஸ்

நான் இதை அக்டோபர் 20, காலை 4 மணிக்கு எழுதத் தொடங்கியுள்ளேன். அஃப்சலின் உயிருக்காகக் குடியரசுத் தலைவரிடம் கருணை மனு மட்டும் சமர்ப்பிக்கப் பட்டிராவிட்டால் இந்நேரம் அவர் தூக்கில் தொங்க விடப்பட்டிருப்பார். திஹார் சிறையின் மரணக் குழியில் துள்ளத் துடிக்க அவர் உடலிலிருந்து உயிர் பறிக்கப்பட்டிருக்கும். இந்தப் பரிதாபத்திற்குரிய உயிரைப் பறித்ததன் மூலம் சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டி விட்டதாகவும், பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தையும் தேசத்தின் பாதுகாப்பையும் காப்பாற்றிவிட்டதாகவும் இந்திய அரசின் இரும்பு மனம் இன்னொரு முறை பெருமிதப்பட்டிருக்கும். ஆதரவற்ற இந்த அஃப்சலின் உயிரைப் பலி கேட்டு இந்தியா முழுமையும் இயக்கங்கள் நடத்திய இந்துத்துவப் பரிவாரங்கள் இனிப்பு வழங்கிக் குதூகலித்திருப்பர்.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் இன்று முழுமையாக ரத்தாகிவிடவில்லை. தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. ஒருவேளை, மேன்மை தங்கிய நமது குடியரசுத் தலைவர் தனது கருணையை-தேசப் பாதுகாப்பின் பெயரில் - வெளிப்படுத்த மறுப்பாரேயானால் இவை எதார்த்தமாய் நம் கண் முன் நிறைவேறும்.

இன்னும் எனக்கு நினைவிலுள்ளது. எண்பதுகளின் இறுதியில் அப்போது எனக்கு 39 வயது - இந்திரா காந்தியின் கொலையில் தொடர்புடையவர் என கேஹர் சிங் என்பவர், அஃப்சலைப் போலவே நேரடி சாட்சியங்கள் ஏதுமின்றிக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கு மர நிழலில் நின்றிருந்தார். இந்தியா முழுவதும் மனித உரிமையாளர்கள் கேஹரின் மரண தண்டனையை ரத்து செய்யக்

கோரி இயக்கம் நடத்தினர். காரணம் ஏதும் சொல்லாமலேயே கருணை மனுவை நிராகரித்தார் குடியரசுத் தலைவர். கேஹர் சிங்கின் குடும்பத்தாரைச் சந்திக்கவும் குடியரசுத் தலைவருக்கு அனுமதி மறுத்தது மத்திய அமைச்சரவை. காரணம் சொல்லாமல் மனுவை மறுத்ததையும், குடும்பத்தாரைச் சந்திக்க மறுத்ததையும் கேள்விக் குள்ளாக்கிய கேஹர் சிங்கின் முறையீட்டை ஏற்க மறுத்தது உச்ச நீதி மன்றம் (1989). சட்டத்தின், எல்லா வாயில்களும் அடைக்கப்பட்டு, கருணையின் எல்லாக் கதவுகளும் சாத்தப்பட்டு கேஹர் சிங் தூக்கில் தொங்குவதற்கான நாள் குறிக்கப்பட்டது. அவருக்கான தூக்கிலிடுபவரைப் பற்றியும், தூக்குக் கயிறு தயாரிப்பு குறித்தும் பத்திரிகைகள் எழுதியதை எல்லாம் நெஞ்சுறைய வாசிப்பேன். அவர் தூக்கிலிடப்பட்ட நாள் இரவு முழுமையும் எனக்குத் தூக்கமில்லை. அந்த இரவு அதிகாலை அவர் உயிர் பறிக்கப்பட்ட காட்சியை நான் இங்கே மனக் கண்ணில் வாசித்துக் கலங்கியிருந்தேன். கேஹர்சிங் சாகும்வரை தூக்கில் தொங்கவிடப்பட்டார். ஒரு பிரதமரைக் கொல்வதென்ன சாதாரண காரியமா? கொலையாளிகள் இருவரும் கொலை நடந்த இடத்திலேயே கொல்லப்பட்டிருந்தாலும் கூட சட்டம் சும்மா இருக்க முடியுமா? அப்படி இருந்தால் அதற்குப் பெயர் சட்டம் ஒழுங்கு நிறைவேற்றமா? கொலைக்குக் கொலை என யாரையாவது ஒருவரையேனும் பிடித்துத் தூக்கிலிட்டால்தானே இங்கே அரசு இருப்பது உறுதியாகும்.

அடுத்த நாள் பத்திரிகைகளில் கேஹர்சிங் தூக்கிலிடப்பட்ட நாள் அதே நேரத்தில் திஹார் சிறையின் இரும்புக் கதவுகளுக்கும் கடுங்காவல்களுக்கும் அப்பால் அவரது குடும்பத்தினனர் கதறி அழுது நின்ற காட்சி விவரிக்கப்பட்டிருந்தது.

சட்டத்தின் பெயரால், மனித உயிரொன்றை நாள் குறித்து நேரம் சொல்லிக் கொல்வதென்பது எத்தனை பெரிய கொடூரம். அவனது தூக்காளி பற்றியும், தூக்குக் கயிறு தயாரிக்கும் விதம் பற்றியும் பத்திரிகைகளில் எழுதி, கயிறு தாங்குமா என்பதை அறியவும் தூக்குத் தொலைவை நிர்ணயிப்பதற்காகவும் தண்டனைக்குக் காத்திருப்பவரின் உடல் எடை, உயரம் முதலியவற்றை முதல் நாள் அளவிடுவதும், விருப்பமான உணவு என்ன எனக் கேட்பதும் - ஆகா, என்ன முரண் நகை - மனித கண்ணியத்திற்கு இழைக்கப்படும் எத்தனை பெரிய

அவமானங்கள். பெற்றோர், மனைவி, பிள்ளைகள் அந்தக் கணத்தை நோக்கிக் காத்திருக்கையில் அடைகிற மனச் சிதைவை யார் சரி செய்ய இயலும்?

என்னுடைய விவரம் தெரிந்த வாழ் நாளில் இது போன்ற மரண தண்டனைகள் பலவற்றால் பாதிக்கப்பட்டுள்ளேன். போராளியும் கவிஞருமான மஹபூல் பட், இரண்டு குழந்தைகளைக் கொலை செய்த பில்லா மற்றும் ரங்கா, பாகிஸ்தான் அதிபராக இருந்த ஸல்ஃபிகார் அலிபூட்டோ, குழந்தையொன்றை பாலியல் வன்முறைக்குள்ளாக்கிக் கொலை செய்த தனஞ்சய் சட்டர்ஜி-இவர்களின் உயிர் பறிக்கப்பட்ட நிகழ்வுகள் மனசில் கருந்திட்டுகளாய் உறைந்துள்ளன.

இன்று 128 நாடுகள் மரண தண்டனையை ஒழித்துக் கட்டியுள்ளன. உலகெங்கிலுமுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர். ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து தமிழகத்தில் பெரும் இயக்கம் நடத்தப்பட்டது.

இந்த வகையில், மரண தண்டனை நாகரிக உலகிற்குப் பொருத்தமற்ற கொடூரம் என்கிற அடிப்படையில், நாம் இன்று பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்படும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுமுள்ள முகம்மத் அஃப்சல் குருவுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை எதிர்க்கிறோம்.

மரண தண்டனை மனித கண்ணியத்திற்கு எதிரானது என்பதற்காக மட்டும் நாம் அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை எதிர்க்கவில்லை. இதையும் தவிர அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை மிகவும் அநீதியானது என்பதற்காகவும் எதிர்க்கிறோம். இதை இங்கு வலியுறுத்துவது முக்கியம். அஃப்சல் தொடர்பான இந்த ஆவணத் தொகுப்பு இதைத்தான் சொல்கிறது. விரிவான காரணங்கள் உள்ளே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளன. மீண்டும் ஓர் முறை இங்கே விவரிக்கத் தேவையில்லை.

சென்ற 2001 டிசம்பர் 13 காலை 11.30 மணி அளவில் பாராளுமன்றத்தின் குளிர்காலத் தொடர் ஒன்றின் போது,

வேகமாகப் பாராளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்த வெடிகள் பொருத்தப்பட்ட ஒரு வெள்ளை அம்பாசிடரிலிருந்து குதித்த ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் ஐவர் தாக்குதலைத் தொடங்கினர். நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் அந்த ஐவரும் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படை வீரர்கள் எட்டுபேரும் தோட்டக்காரர் ஒருவரும் இச்சண்டையில் பலியாயினர்.

பாராளுமன்றத் தாக்குதல் என்பது இந்திய ஜனநாயத்தின் மீதும், அரசியல் சட்டத்தின் மீதும் தொடுக்கப்பட்ட பெருந்தாக்குதல் எனக் கண்டிக்கப்பட்டது. அமெரிக்காவின் 'டிசம்பர் 11'க்கு இணையாக இந்த 'செப்டம்பர் 13' முன் வைக்கப்பட்டது.

கொலையுண்ட பயங்கரவாதிகள், இந்தியக் காவல் துறையினர் துப்பு துலக்குவதற்கு எளிதாக, வழக்கத்திற்கு விரோதமாக, எல்லா விதமான ஆதாரங்களையும் தங்கள் சட்டைப் பையிலேயே வைத்திருந்தனர். செல்போன்கள், புகைப்படங்கள், முக்கிய போன் எண்கள், அடையாள அட்டைகள் இப்படி.

விரைவில் நால்வர் கைது செய்யப்பட்டனர். முகம்மது அஃப்சல் குரு, அவரது உறவினர்களான ஷவ்கத் குரு, ஷவ்கத்தின் மனைவி நவ்ஜோத், டெல்லி பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். கீலானி, ஆகியோரே அவர்கள். இன்று இந்த வழக்கிலிருந்து இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நவ்ஜோத்தும், கீலானியும். இவர்களில் கீலானி கீழ் நீதி மன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தின் விடுதலை செய்யப்பட்டார். முகம்மது அஃப்சலுக்கு மட்டும் இன்று மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தாக்குதலைத் திட்டமிட்ட முக்கிய மூளைகள் (master minds) என காவல் துறை சுட்டிக் காட்டும் பட்டியலில் இந்நால்வரும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் சுட்டிக்காட்டும் மூன்று பயங்கரவாதிகளும் இன்று பாகிஸ்தானில் பத்திரமாக உள்ளனர்.

ஆட்சியிலிருந்த வாஜ்பேயி அரசாங்கம் இதை ஒரு உணர்ச்சிபூர்வமான வழக்காக்கியது. அந்தத் தேவை அதற்கிருந்ததை விளக்க வேண்டியதில்லை. (தாக்குதல் நடைபெற்றபோது பாராளுமன்றத்தில் வாஜ்பேயி அரசுக்கு எதிரான ஊழல் குற்றச்

சாட்டு விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.) எனவே யாராவது ஒருவரையாவது பிடித்துத் தூக்கிலிடுவது அவசியம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது.

வழக்கம் போல காவல்துறை இவ்வாறு இவ்வழக்கு உணர்ச்சியூட்டப்படுவதற்குத் (sensationalise) தூபமிட்டது. வழக்கம் போல, பத்திரிகைகள் காவல் துறையுடன் இணைந்து, இழைந்து, உறவாடி உதவி செய்தன. வழக்கம் போல, நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் முன்னதாகவே ஊடகங்கள் தீர்ப்பளித்தன. சொலைச் சதிக்கும் அஃப்சலுக்கும் தொடர்பு இருந்ததற்கான நேரடிச் சாட்சியங்கள் ஏதுமில்லை என்பதை நீதி மன்றமே இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் கூட ஊடகங்கள் அஃப்சலை master mind என்றே குறிப்பிட்டன. பத்திரிகையாளன் என்கிற போர்வையில் உலாவரும் குருமூர்த்தி போன்ற ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் இன்றளவும் அப்படியே எழுதுகின்றனர்.

இவ்வெளியீட்டில் காணப்படும் ஆவணங்களினூடாக அஃப்சலின் கதையை நீங்கள் அறிந்தீர்களானால் அவர் இவ்வழக்கில் எவ்வாறு இந்திய உளவுத் துறையால் சிக்க வைக்கப்பட்டார் என்பது விளங்கும். சரியாகச் சொல்லப் போனால் இந்தப் பாராளுமன்றத் தாக்குதலே உளவுத்துறையால் நிறைவேற்றப்பட்ட ஒரு நாடகமோ என்கிற அய்யமும் கூட ஒருவருக்கு எழுவது இயல்பு. இப்படியான நாடகங்களையும், 'என்கவுண்டர்'களையும், தாக்குதல்களையும் நடத்தி அறியாதவையா நமது உளவுத் துறைகள். சில ஆண்டுகளுக்கு முன்னர் பட்டப் பகலில் டெல்லி அன்சர் பிளாசாவில் அரை மயக்க நிலையில் காரிலிருந்து இறக்கப்பட்ட 'பயங்கரவாதி' ஒருவர் தன் கண் முன் சுட்டுக் கொல்லப்பட்டதை நேரில் கண்ட மருத்துவர் ஒருவர் சாட்சி சொல்லவில்லையா? தாக்குதலுக்கு ஆயுதத்துடன் வந்த தீவிரவாதி மோதலில் கொல்லப்பட்டதாகத் தானே காவல்துறையும் பத்திரிகைகளும் கதைவிரித்தன.

நிற்க. இந்த அய்யத்தை நாம் பெரிதுபடுத்த வேண்டாம். பாராளுமன்றத் தாக்குதல் உண்மை என்றே கொள்வோம். இந்திய ஜனநாயத்தின் மீது நடைபெற்ற பெருந்தாக்குதல் என்றே அதைக் கண்டிப்போம். இது மிகவும் 'சீரியஸான' ஒரு வழக்கு என்றே ஏற்றுக் கொள்வோம். முக்கியமான வழக்கு என்பதாலேயே இது

மிகவும் கவனமாக விசாரிக்க வேண்டிய வழக்காகவும் உள்ளது. ஆனால் அஃப்சலுக்கு எதிரான வழக்கு விசாரணை எத்தனை அபத்தமாக, அநீதியாக, ஒருதலைப் பட்சமாக நடத்தப்பட்டது என்பதை இந்த ஆவணங்கள் பறைசாற்றுகின்றன.

கீழ் நீதி மன்றத்தில் சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்யவோ வாதிடவோ வழக்குரைஞர் இல்லை. பின்னர் நியமிக்கப்பட்ட வழக்குரைஞரோ துரோகம் செய்கிறார். உச்ச நீதிமன்றத்தில் ஒரு நல்ல வழக்குரைஞர் கிடைக்கும் போது நிலைமை கை மீறி போய்விடுகிறது. ஏற்கனவேயே வழக்கு மிகவும் பலவீனப் படுத்தப்பட்டு விடுகிறது. அஃப்சலிடம் சொல்வதற்கு ஒரு வரலாறு உண்டு. அதை நீதிமன்றம் கடைசி வரை கேட்கவில்லை.

இது ஒருதலைப் பட்சமான விசாரணை அல்லவா? மரணதண்டனை போன்ற திருப்பி இயக்க முடியாத, திருத்திக் கொள்ள முடியாத ஒரு தண்டனை இத்தனை பொய்யான நீதி விசாரணைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமா?

அட, அஃப்சல் இந்த வழக்கில் வேண்டுமென்றே உளவுத்துறையால் சிக்க வைக்கப்படவில்லை, அவருக்குத் தீவிரவாதிகளுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்தது என்றே கூட வைத்துக் கொள்வோம். போலிசின் இந்தக் கதையை நாம் அப்படியே நாம் ஏற்றுக் கொண்டால் கூட அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தத் தண்டனை அவரது 'குற்றச் செயலுக்கு'ப் பொருத்தமுடையதுதானா (proortionate)? தீவிரவாதத் தொடர்புக்கு நேரடி சாட்சியமில்லை, சந்தர்ப்ப சூழல் சாட்சியங்கள் மட்டுமே உண்டு என உச்ச நீதி மன்றமே சொல்கிறது. சொல்லிவிட்டு அடுத்த கணமே கூசாமல் மரண தண்டனை என்கிறது. பாராளுமன்றத் தாக்குதலால் அதிர்ச்சியடைந்துள்ள தேச மக்களின் கூட்டு மனத்தைத் திருப்திபடுத்த அஃப்சலை மரணக் கொட்டிலுக்கு அனுப்புகிறேன் என வெளிப்படையாகவே ஒத்துக்கொள்கிறது. இதெல்லாம் என்ன?

தேச பக்தி அரசியல் நடத்தும் கட்சிகள், பொய்க்கும் புனைசுருட்டுக்கும் பெயர்பெற்ற உளவுத் துறைகள், இவர்களுடன் கூட்டணி வைத்து இயங்கும் ஊடகங்கள் இவற்றால் இங்கே

ஒரு 'கூட்டு மனம்' கட்டமைக்கப்படுகிறது. பின் இந்தக் கூட்டுமனம் உணர்ச்சியூட்டப்பட்டு சாமியாட வைக்கப்படுகிறது. சாமியாட்டத்தை ஏதேனும் ஒரு பலிகொடுத்துத்தானே தணிக்க வேண்டும்? அதற்காகவே அஃப்சலின் ரத்தக் காவு தேவைப்படுகிறது. அதோ வேப்பிலை மஞ்சள் எல்லாம் பூசி அஃப்சல் என்கிற பலிகடா திஹார் சிறையின் கம்பிக் கதவுகளில் கட்டப்பட்டு நிற்கிறது. சுற்றிலும் அத்வானி தலைமையில் சங்கப் பரிவாரங்களும், உளவுத் துறையும், ஊடகங்களும் சாமியாட்டத்திற்கு வெறியுடன் வேப்பிலை அடித்துக் கொண்டிருக்கின்றன.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

நீங்கள் கையை உயர்த்தினால், இல்லை கையைக் கழுவினால் போதும், பலி நிறைவேற்றப்படும். என்ன செய்யப் போகிறீர்கள்?

இந்த வழக்கு விசாரணையின் ஓட்டை, உடைசல்களை எல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆனாலும் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. குடியரசுத் தலைவர் தன்னிடம் வந்துள்ள கருணை மனுவின் மீது முடிவெடுப்பதற்கு முன்பு சில சடங்குகள் உண்டு. கருத்தும் அறிவுரையும் கேட்டு அம்மனு உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்படும். உள்துறை அமைச்சு அதைச் சட்ட அமைச்சகத்திற்கும், தொடர்புடைய மாநில அரசுக்கும் (இவ்வழக்கில் டெல்லி மாநில அரசு) அனுப்பும். இவை அனுப்பிய அறிக்கைகளின் அடிப்படையில் உள்துறை அமைச்சு தனது அறிவுரையை குடியரசுத் தலைவரிடம் அளிக்கும். குடியரசுத் தலைவர் இந்த அடிப்படையில் முடிவெடுக்க வேண்டும். ஒரு வேளை இந்த அறிவுரையை அவர் ஏற்காத பட்சத்தில் மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்லி அதனை திருப்பி அனுப்பலாம். இதை எல்லாம் செய்து முடிப்பதற்கு எந்தக் காலக் கெடுவும் கிடையாது.

இரண்டு நாட்களுக்கு முன்பு (அக்டோபர் 17) சட்ட அமைச்சு தனது கருத்தைத் தெரிவித்துள்ளது. அது:

"கருணை மன்னிப்பு அளிப்பதற்கு சட்ட அடிப்படை ஏதுமில்லை. சரியான நீதி விசாரணை முறைகள்

பின்பற்றப்பட்டுள்ளன. நேரடிச் சாட்சியங்கள் இல்லையேனும் சந்தர்ப்ப சூழல் சாட்சியங்கள் உள்ளன."

இது ஒவ்வொன்றையும் நாம் மறுக்க முடியும். சட்ட அடிப்படை குறித்துப் பின்னர் பார்ப்போம். சரியான நீதி விசாரணை முறை பின்பற்றப்பட்டுள்ளதாக எப்படிச் சொல்கிறீர்கள்? குற்றம் சுமத்தப்பட்டவரின் கண் முன்னே சாட்சிகள் அப்பட்டமாகப் பொய் சொல்கின்றன. குறுக்கு விசாரணை செய்ய வழக்குரைஞர் இல்லை. நீதிமன்ற வளாகத்திலேயே போலிஸ் சாட்சியங்கள் அஃப்சலின் குடும்பப் பாதுகாப்பைச் சுட்டிக் காட்டி மிரட்டுகின்றன. பத்திரிகையாளர்கள் முன்பு அஃப்சல் போலிசால் மிரட்டப்பட்டு வாக்கு மூலம் அளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதை பதிவு செய்துள்ளார். இதை முறையான விசாரணை என எப்படிச் சொல்கிறீர்கள்?

நேரடிச் சாட்சியங்கள் இல்லை என்கிறீர்கள். சரி. அதென்ன சந்தர்ப்பவாத சாட்சியங்கள்? ஒரு லேப் டாப். 9811489429 என்கிற எண்ணுள்ள (அஃப்சலுடைய?) செல் போனிலிருந்து தாக்குதலின் போது கொல்லப்பட்ட அய்வர் கொண்ட பயங்கரவாதக் குழுவின் தலைவர் முகம்மதின் செல்போனுக்கு (எண். 9810693456) தாக்குதலன்று பேசப்பட்டதற்கான பதிவுகள், DL 03 CJ 1527 என்ற எண்ணுள்ள ஒரு கார் - கரோல்பாக்கிலுள்ள லவ்லி மோடார்ஸ் என்னும் கடையில் அஃப்சலால் இது வாங்கப்பட்டுள்ளது - இவைதான்.

ஷவ்கத், அஃப்சல், கீலானி, முகம்மத் ஆகியோருக்கிடையே தாக்குதலுக்குச் சற்று முன்பு வரை செல்போன் தொடர்பு இருந்தது என்பதற்கு போலிஸ் தரப்பில் முன்வைக்கப்படும் சாட்சியம் சான்றளிக்கப்படாத சில கணினி அச்சுப்பதிவுகள் (print outs) தான். 'டெக்ஸ்ட் ஃபைல்'களாக சேமிக்கப்பட்ட 'பில்' பதிவுகளே அவை. இவற்றை எளிதில் மாற்றியமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே நேரத்தில் ஒரே 'சிம் கார்டி'லிருந்து இரு 'கால்கள்' செய்யப்பட்டுள்ளது என இப்பதிவு தெரிவிக்கிறது. இரு வெவ்வேறு imei எண்ணுள்ள செல்போன்களிலிருந்து இவை பேசப்பட்டுள்ளன. அதெப்படி ஒரே 'சிம்கார்ட்' இரண்டு வெவ்வேறு செல்போன் களிலிருந்து ஒரே நேரத்தில் இயங்க முடியும்? பயங்கரவாதிகள் என்ன

ஒரு 'கூட்டு மனம்' கட்டமைக்கப்படுகிறது. பின் இந்தக் கூட்டுமனம் உணர்ச்சியூட்டப்பட்டு சாமியாட வைக்கப்படுகிறது. சாமியாட்டத்தை ஏதேனும் ஒரு பலிகொடுத்துத்தானே தணிக்க வேண்டும்? அதற்காகவே அஃப்சலின் ரத்தக் காவு தேவைப்படுகிறது. அதோ வேப்பிலை மஞ்சள் எல்லாம் பூசி அஃப்சல் என்கிற பலிகடா திஹார் சிறையின் கம்பிக் கதவுகளில் கட்டப்பட்டு நிற்கிறது. சுற்றிலும் அத்வானி தலைமையில் சங்கப் பரிவாரங்களும், உளவுத் துறையும், ஊடகங்களும் சாமியாட்டத்திற்கு வெறியுடன் வேப்பிலை அடித்துக் கொண்டிருக்கின்றன.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

நீங்கள் கையை உயர்த்தினால், இல்லை கையைக் கழுவினால் போதும், பலி நிறைவேற்றப்படும். என்ன செய்யப் போகிறீர்கள்?

இந்த வழக்கு விசாரணையின் ஓட்டை, உடைசல்களை எல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆனாலும் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. குடியரசுத் தலைவர் தன்னிடம் வந்துள்ள கருணை மனுவின் மீது முடிவெடுப்பதற்கு முன்பு சில சடங்குகள் உண்டு. கருத்தும் அறிவுரையும் கேட்டு அம்மனு உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்படும். உள்துறை அமைச்சு அதைச் சட்ட அமைச்சகத்திற்கும், தொடர்புடைய மாநில அரசுக்கும் (இவ்வழக்கில் டெல்லி மாநில அரசு) அனுப்பும். இவை அனுப்பிய அறிக்கைகளின் அடிப்படையில் உள்துறை அமைச்சு தனது அறிவுரையை குடியரசுத் தலைவரிடம் அளிக்கும். குடியரசுத் தலைவர் இந்த அடிப்படையில் முடிவெடுக்க வேண்டும். ஒரு வேளை இந்த அறிவுரையை அவர் ஏற்காத பட்சத்தில் மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்லி அதனை திருப்பி அனுப்பலாம். இதை எல்லாம் செய்து முடிப்பதற்கு எந்தக் காலக் கெடுவும் கிடையாது.

இரண்டு நாட்களுக்கு முன்பு (அக்டோபர் 17) சட்ட அமைச்சு தனது கருத்தைத் தெரிவித்துள்ளது. அது:

"கருணை மன்னிப்பு அளிப்பதற்கு சட்ட அடிப்படை ஏதுமில்லை. சரியான நீதி விசாரணை முறைகள்

பின்பற்றப்பட்டுள்ளன. நேரடிச் சாட்சியங்கள் இல்லையேனும் சந்தர்ப்ப சூழல் சாட்சியங்கள் உள்ளன."

இது ஒவ்வொன்றையும் நாம் மறுக்க முடியும். சட்ட அடிப்படை குறித்துப் பின்னர் பார்ப்போம். சரியான நீதி விசாரணை முறை பின்பற்றப்பட்டுள்ளதாக எப்படிச் சொல்கிறீர்கள்? குற்றம் சுமத்தப்பட்டவரின் கண் முன்னே சாட்சிகள் அப்பட்டமாகப் பொய் சொல்கின்றன. குறுக்கு விசாரணை செய்ய வழக்குரைஞர் இல்லை. நீதிமன்ற வளாகத்திலேயே போலிஸ் சாட்சியங்கள் அஃப்சலின் குடும்பப் பாதுகாப்பைச் சுட்டிக் காட்டி மிரட்டுகின்றன. பத்திரிகையாளர்கள் முன்பு அஃப்சல் போலிசால் மிரட்டப்பட்டு வாக்கு மூலம் அளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதை பதிவு செய்துள்ளார். இதை முறையான விசாரணை என எப்படிச் சொல்கிறீர்கள்?

நேரடிச் சாட்சியங்கள் இல்லை என்கிறீர்கள். சரி. அதென்ன சந்தர்ப்பவாத சாட்சியங்கள்? ஒரு லேப் டாப். 9811489429 என்கிற எண்ணுள்ள (அஃப்சலுடைய?) செல் போனிலிருந்து தாக்குதலின் போது கொல்லப்பட்ட அய்வர் கொண்ட பயங்கரவாதக் குழுவின் தலைவர் முகம்மதின் செல்போனுக்கு (எண். 9810693456) தாக்குதலன்று பேசப்பட்டதற்கான பதிவுகள், DL 03 CJ 1527 என்ற எண்ணுள்ள ஒரு கார் - கரோல்பாக்கிலுள்ள லவ்லி மோடார்ஸ் என்னும் கடையில் அஃப்சலால் இது வாங்கப்பட்டுள்ளது - இவைதான்.

ஷவ்கத், அஃப்சல், கீலானி, முகம்மத் ஆகியோருக்கிடையே தாக்குதலுக்குச் சற்று முன்பு வரை செல்போன் தொடர்பு இருந்தது என்பதற்கு போலிஸ் தரப்பில் முன்வைக்கப்படும் சாட்சியம் சான்றளிக்கப்படாத சில கணினி அச்சுப்பதிவுகள் (print outs) தான். 'டெக்ஸ்ட் ஃபைல்'களாக சேமிக்கப்பட்ட 'பில்' பதிவுகளே அவை. இவற்றை எளிதில் மாற்றியமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே நேரத்தில் ஒரே 'சிம் கார்டி'லிருந்து இரு 'கால்கள்' செய்யப்பட்டுள்ளது என இப்பதிவு தெரிவிக்கிறது. இரு வெவ்வேறு imei எண்ணுள்ள செல்போன்களிலிருந்து இவை பேசப்பட்டுள்ளன. அதெப்படி ஒரே 'சிம்கார்ட்' இரண்டு வெவ்வேறு செல்போன் களிலிருந்து ஒரே நேரத்தில் இயங்க முடியும்? பயங்கரவாதிகள் என்ன

மந்திர சக்தி கைவரப் பெற்றவர்களா? அப்படி மந்திர சக்தி இருந்திருந்தால் ஏன் இப்படி உயிரைப் பணயம் வைத்து காரியங்களைச் செய்ய வேண்டும்?

மேற்குறிப்பிட்டது அஃப்சலின் போன் எண்தான் என்பதற்கு போலிஸ் அளிக்கும் ஒரே ஆதாரம் அவரது வாக்கு மூலமே. இந்த வாக்கு மூலம் எந்த நிலையில் அவரிடமிருந்து பெறப்பட்டது என்பது இச்சிறு நூலிலுள்ள ஆவணங்களின் மூலம் நீங்கள் அறியமுடியும். சண்டையில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் அடையாள அட்டையின் பின்புறம் இந்த எண் இருந்ததாம். ஆகா, எவ்வளவு எளிதாக இந்தப் பயங்கரவாதிகள் மாட்டிக் கொள்கிறார்கள், காட்டிக் கொடுக்கிறார்கள்? இதை எல்லாம் நாம் நம்ப வேண்டும்?

நாம் நம்பாவிட்டால் என்ன, அதுதான் நீதி மன்றம் உள்ளதே, போலிஸ் சொல்லும் எல்லாவற்றையும் நம்பித் தொலைப்பதற்கு.

சரி. இந்த விஷயத்திலும் போலிஸ் சொல்வதை நாமும் கொஞ்சம் நம்புவோம். முகம்மதுடன் அஃப்சல் பேசினார் என்றே கொள்வோம். முகம்மதுக்கும் தனக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பது குறித்து அஃப்சல் ஒரு கதை சொல்கிறாரே அதற்கு என்ன சொல்கிறீர்கள்? சரி, அதையும் புறக்கணித்து விடுவோம். தனது செல்போனிலுருந்து எந்தெந்த எண்களுக்கெல்லாம் தான் பேசியுள்ளேன் என்பதை வெளிப்படுத்த முடியுமா என அஃப்சல் கேட்கிறார். போலிஸ் அதையாவதுச் செய்யுமா? செய்யாது. ஏனெனில் அந்த எண்ணிலிருந்து முகம்மதுக்குப் பேசியதைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் போலீஸ் அதிகாரிகளுடன் பேசியதற்கான பதிவுகள் அதில் இருக்கும்.

இதனால்தான் அஃப்சலின் மரண தண்டனைக்கு எதிராகப் போராடும் மனித உரிமை ஆர்வலர்கள் அஃப்சல் வழக்கு விசாரணை பற்றி விசாரிக்க ஒரு பாராளுமன்றக் குழு நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்கிறார்கள்.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

மனித உரிமை ஆர்வலர்களின் இந்த வேண்டுகோளைத் தயவு செய்து கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த ஒரு பிரச்சினையும் இன்று (அக். 11) மேலுக்கு வந்துள்ளது. அஃப்சலுக்கு மன்னிப்பு அளிப்பது குறித்து தேசிய அளவில் ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டுள்ள போது உச்சநீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பில் இது பற்றிய ஒரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஆளுநரோ இல்லை குடியரசுத் தலைவரோ கருணை மன்னிப்பு அல்லது தண்டனை குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது வேறு புறக் காரணங்களின் (extranous considerations) அடிப்படையில் அது செய்யப்பட்டிருந்தால் அதை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்பதே அது. அஃப்சலுக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாது என இன்று இயக்கம் நடத்துவோர் இதைப் பூதாகரமாக்கி ஊதிப் பெருக்குகின்றனர். குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள எச்சரிக்கை என்று கூறி மறைமுகமான அச்சுறுத்தலையும் செய்கின்றனர். குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள மறைமுகமான எச்சரிக்கை என்றும் சொல்கின்றனர்.

இதுகுறித்து நாம் சிலவற்றைக் கவனத்தில் கொள்வது பயன் தரும். மன்னிப்பு மற்றும் தண்டனை குறைப்பு அதிகாரம் பற்றி உச்சநீதிமன்றம் இப்படியான ஒரு கருத்தை தெரிவிப்பது இது முதல் முறை அல்ல. கேஹர் சிங் வழக்கு, பில்லா - ரங்கா வழக்கு, ஷெர்சிங் வழக்கு எனப் பலவற்றைச் சொல்ல முடியும். அவற்றைத் தொகுக்கும் முன் சமீபத்திய இந்த வழக்கைச் சற்று பார்ப்போம். ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற சம்பவம் இது. 1995ம் ஆண்டு இன்றைய முதல்வர் ஒய்.எஸ்.ஆருக்கு வேண்டிய கவுரு வெங்கட ரெட்டி என்னும் ஒரு காங்கிரஸ்காரர் அரசியல் விரோதம் காரணமாக இரண்டு தெலுங்கு தேச ஆட்களை கொன்று விடுகிறார். வெங்கட ரெட்டி உட்பட எட்டு பேருக்கு இவ்வழக்கில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு (2002), உயர் நீதிமன்றத்தாலும் அது உறுதி செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றமும் குற்றத்தை உறுதி செய்து ஆயுள் தண்டனையை 10 ஆண்டு சிறையாகக் குறைத்தது. 2004 தேர்தலில் வெங்கட ரெட்டியின் மனைவி சரிதா ரெட்டி வெற்றி பெற்று ஆளும் கட்சியின்

மந்திர சக்தி கைவரப் பெற்றவர்களா? அப்படி மந்திர சக்தி இருந்திருந்தால் ஏன் இப்படி உயிரைப் பணயம் வைத்து காரியங்களைச் செய்ய வேண்டும்?

மேற்குறிப்பிட்டது அஃப்சலின் போன் எண்தான் என்பதற்கு போலிஸ் அளிக்கும் ஒரே ஆதாரம் அவரது வாக்கு மூலமே. இந்த வாக்கு மூலம் எந்த நிலையில் அவரிடமிருந்து பெறப்பட்டது என்பது இச்சிறு நூலிலுள்ள ஆவணங்களின் மூலம் நீங்கள் அறியமுடியும். சண்டையில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் அடையாள அட்டையின் பின்புறம் இந்த எண் இருந்ததாம். ஆகா, எவ்வளவு எளிதாக இந்தப் பயங்கரவாதிகள் மாட்டிக் கொள்கிறார்கள், காட்டிக் கொடுக்கிறார்கள்? இதை எல்லாம் நாம் நம்ப வேண்டும்?

நாம் நம்பாவிட்டால் என்ன, அதுதான் நீதி மன்றம் உள்ளதே, போலிஸ் சொல்லும் எல்லாவற்றையும் நம்பித் தொலைப்பதற்கு.

சரி. இந்த விஷயத்திலும் போலிஸ் சொல்வதை நாமும் கொஞ்சம் நம்புவோம். முகம்மதுடன் அஃப்சல் பேசினார் என்றே கொள்வோம். முகம்மதுக்கும் தனக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பது குறித்து அஃப்சல் ஒரு கதை சொல்கிறாரே அதற்கு என்ன சொல்கிறீர்கள்? சரி, அதையும் புறக்கணித்து விடுவோம். தனது செல்போனிலுருந்து எந்தெந்த எண்களுக்கெல்லாம் தான் பேசியுள்ளேன் என்பதை வெளிப்படுத்த முடியுமா என அஃப்சல் கேட்கிறார். போலிஸ் அதையாவதுச் செய்யுமா? செய்யாது. ஏனெனில் அந்த எண்ணிலிருந்து முகம்மதுக்குப் பேசியதைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் போலீஸ் அதிகாரிகளுடன் பேசியதற்கான பதிவுகள் அதில் இருக்கும்.

இதனால்தான் அஃப்சலின் மரண தண்டனைக்கு எதிராகப் போராடும் மனித உரிமை ஆர்வலர்கள் அஃப்சல் வழக்கு விசாரணை பற்றி விசாரிக்க ஒரு பாராளுமன்றக் குழு நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்கிறார்கள்.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

மனித உரிமை ஆர்வலர்களின் இந்த வேண்டுகோளைத் தயவு செய்து கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த ஒரு பிரச்சினையும் இன்று (அக். 11) மேலுக்கு வந்துள்ளது. அஃப்சலுக்கு மன்னிப்பு அளிப்பது குறித்து தேசிய அளவில் ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டுள்ள போது உச்சநீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பில் இது பற்றிய ஒரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஆளுநரோ இல்லை குடியரசுத் தலைவரோ கருணை மன்னிப்பு அல்லது தண்டனை குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது வேறு புறக் காரணங்களின் (extranous considerations) அடிப்படையில் அது செய்யப்பட்டிருந்தால் அதை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்பதே அது. அஃப்சலுக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாது என இன்று இயக்கம் நடத்துவோர் இதைப் பூதாகரமாக்கி ஊதிப் பெருக்குகின்றனர். குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள எச்சரிக்கை என்று கூறி மறைமுகமான அச்சுறுத்தலையும் செய்கின்றனர். குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள மறைமுகமான எச்சரிக்கை என்றும் சொல்கின்றனர்.

இதுகுறித்து நாம் சிலவற்றைக் கவனத்தில் கொள்வது பயன் தரும். மன்னிப்பு மற்றும் தண்டனை குறைப்பு அதிகாரம் பற்றி உச்சநீதிமன்றம் இப்படியான ஒரு கருத்தை தெரிவிப்பது இது முதல் முறை அல்ல. கேஹர் சிங் வழக்கு, பில்லா - ரங்கா வழக்கு, ஷெர்சிங் வழக்கு எனப் பலவற்றைச் சொல்ல முடியும். அவற்றைத் தொகுக்கும் முன் சமீபத்திய இந்த வழக்கைச் சற்று பார்ப்போம். ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற சம்பவம் இது. 1995ம் ஆண்டு இன்றைய முதல்வர் ஒய்.எஸ்.ஆருக்கு வேண்டிய கவுரு வெங்கட ரெட்டி என்னும் ஒரு காங்கிரஸ்காரர் அரசியல் விரோதம் காரணமாக இரண்டு தெலுங்கு தேச ஆட்களை கொன்று விடுகிறார். வெங்கட ரெட்டி உட்பட எட்டு பேருக்கு இவ்வழக்கில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு (2002), உயர் நீதிமன்றத்தாலும் அது உறுதி செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றமும் குற்றத்தை உறுதி செய்து ஆயுள் தண்டனையை 10 ஆண்டு சிறையாகக் குறைத்தது. 2004 தேர்தலில் வெங்கட ரெட்டியின் மனைவி சரிதா ரெட்டி வெற்றி பெற்று ஆளும் கட்சியின்

சட்டமன்ற உறுப்பினர் ஆகிறார். கணவருக்கு மன்னிப்பு அளிக்கச் சொல்லி கவர்னர் சுஷில் குமார் ஷிண்டேயிடம் மனு அளித்தார் சரிதா (2004). முதலமைச்சர் அதாவது மாநில காங்கிரஸ் அரசின் ஆதரவும் இருந்தது. 2005 ஆகஸ்டில் எஞ்சிய கால தண்டனையைக் குறைத்து வெங்கட ரெட்டியை விடுதலை செய்தார் ஆளுநர். இந்தத் தண்டனை குறைப்பு ஆணையை ரத்து செய்து அளிக்கப்பட்டதே அக். 11ஆம் தேதி உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பின் போதுதான் உச்சநீதிமன்றம் மேற்குறித்த கருத்தைக் கூறியிருந்தது. தனது கட்சிக்காரருக்குச் சார்பாக ஆந்திர அரசும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆளுநரும் அளித்த இந்த தண்டனை குறைப்பை நாமும் கூடத்தான் ஏற்க இயலாது. எனினும் அஃப்சல் வழக்குடன் இதை ஒப்பிட இயலாது. முதலில் ஆளுநரின் அதிகாரத்திற்கும் குடியரசுத் தலைவரின் அதிகாரத்திற்கும் சில வேறுபாடுகள் உண்டு. குடியரசுத் தலைவரின் அதிகாரம் ஆளுநரின் அதிகாரத்தைக் காட்டிலும் விசாலமானது. கருணை மன்னிப்பும் (pardaon) தண்டனை குறைப்பும் (Commutation/Remission) வேறு வேறு. கருணை மன்னிப்பை குடியரசுத் தலைவர் மட்டுமே வழங்க இயலும். ஆளுநருக்கு அந்த அதிகாரமில்லை. கருணை மன்னிப்பின் மூலம் தண்டனை அளிக்கப்பட்டவர் குற்றச் செயலிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுகிறார். இனி அவர் அந்தக் குற்றச் செயலைச் செய்யாதவராகவே கருதப்படுவார் என்பது ஒரு வகைத் தண்டனையிலிருந்து சற்றே குறைவான வேறுபட்ட இன்னொரு வகைத் தண்டனையை (எ.டு.: மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பது) அளிப்பது. தண்டனைக் குறைப்பு (Remission/Reduction) என்பது ஒரு தண்டனையை அதன் தன்மை மாறாமல் அளவைக் குறைப்பது (எ.டு.: சிறைத் தண்டனையின் காலத்தைக் குறைப்பது). கருணை மன்னிப்பு தவிர ராணுவ நீதிமன்றம் வழங்கும் தண்டனையைக் குறைக்கும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உண்டு.

சட்டக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், இந்தியச் சட்ட நிறுவனத்தின் முன்னாள் இயக்குனருமான பி.எம்.பக்ஷி தனது நூலில் (The Constitution of India, Universal Law Publishing House, 2003)

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த 15 வழக்குகளினைப் பட்டியலிடுகிறார்

(AIR 1961 SC 122, AIR 1974 SC 31, AIR 1961 SC 600, AIR 1961 SC 334, 1975 UJSC 951, AIR 1980 SC 2147, AIR 1982 SC 774, AIR 1982 SC 849, ILR 1955 Mad 92, AIR 1960 AP 259, AIR 1959 Mys 116, AIR 1967 Punj 155, AIR 1975 P&H 902, AIR 1989 SC 653, AIR 1960 SC 1396)

முன் குறிப்பிட்ட கேஹர் சிங், பில்லா - ரங்கா முதலான வழக்குகளும் இவற்றில் அடக்கம். இத்தீர்ப்புகளில் சற்றே முரணான கருத்துக்கள் இருந்த போதிலும் மொத்தத்தில் உச்சநீதிமன்றத்தின் (சில உயர் நீதிமன்றத் தீர்ப்புகளும்) முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கிறார் பக்ஷி.

அ) அரசியல் சட்டப் பிரிவு 72ன் கீழ் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள இவ்வதிகாரம், முதன்மையாக (primarily), அவரது முடிவைப் பொறுத்த ஒரு விஷயம். இம் முடிவை அதன் தர (merits) அடிப்படையில் மதிப்பிட்டு நீதிமன்றங்கள் அதில் தலையிடாது.

ஆ) எனினும் முடிவுக்கு வருமுன் எல்லா பொருத்தமான விஷயங்களையும் குடியரசுத் தலைவர் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளாரா என்பதை உறுதி செய்யும் வகையில் அவரது முடிவை மறு பரிசீலனை செய்கிற மிகவும் குறுகிய அளவிலான அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உண்டு.

இ) குடியரசுத் தலைவர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது **சாட்சியங்களை மீண்டும் புதிதாய் ஆய்வு செய்யலாம்.** இப்படி அவர் செய்வதென்பது நீதிமன்றத் தீர்ப்பின் மீதான ஒரு மேல் முறையீட்டு விசாரணை நடவடிக்கையாகாது. அவரது அதிகாரம் நீதிமன்ற அதிகாரத்திலிருந்து சுதந்திரமாக இயங்குவது. எனவே **அவர் ஒரு தண்டனை தேவைக்கு அதிகமானது எனக் கருதினால் அதை நீக்க அல்லது குறைக்க (*releif*) செய்யலாம். வழங்கப்பட்ட தண்டனை வெளிப்படையான தவறொன்றின் அடிப்படையிலானது எனக் கருதினாலும் அவர் இதைச் செய்யலாம்.** (அழுத்தம் - நமது).

சட்டமன்ற உறுப்பினர் ஆகிறார். கணவருக்கு மன்னிப்பு அளிக்கச் சொல்லி கவர்னர் சுஷில் குமார் ஷிண்டேயிடம் மனு அளித்தார் சரிதா (2004). முதலமைச்சர் அதாவது மாநில காங்கிரஸ் அரசின் ஆதரவும் இருந்தது. 2005 ஆகஸ்டில் எஞ்சிய கால தண்டனையைக் குறைத்து வெங்கட ரெட்டியை விடுதலை செய்தார் ஆளுநர். இந்தத் தண்டனை குறைப்பு ஆணையை ரத்து செய்து அளிக்கப்பட்டதே அக். 11ஆம் தேதி உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பின் போதுதான் உச்சநீதிமன்றம் மேற்குறித்த கருத்தைக் கூறியிருந்தது. தனது கட்சிக்காரருக்குச் சார்பாக ஆந்திர அரசும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆளுநரும் அளித்த இந்த தண்டனை குறைப்பை நாமும் கூடத்தான் ஏற்க இயலாது. எனினும் அஃப்சல் வழக்குடன் இதை ஒப்பிட இயலாது. முதலில் ஆளுநரின் அதிகாரத்திற்கும் குடியரசுத் தலைவரின் அதிகாரத்திற்கும் சில வேறுபாடுகள் உண்டு. குடியரசுத் தலைவரின் அதிகாரம் ஆளுநரின் அதிகாரத்தைக் காட்டிலும் விசாலமானது. கருணை மன்னிப்பும் (pardaon) தண்டனை குறைப்பும் (Commutation/Remission) வேறு வேறு. கருணை மன்னிப்பை குடியரசுத் தலைவர் மட்டுமே வழங்க இயலும். ஆளுநருக்கு அந்த அதிகாரமில்லை. கருணை மன்னிப்பின் மூலம் தண்டனை அளிக்கப்பட்டவர் குற்றச் செயலிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுகிறார். இனி அவர் அந்தக் குற்றச் செயலைச் செய்யாதவராகவே கருதப்படுவார் என்பது ஒரு வகைத் தண்டனையிலிருந்து சற்றே குறைவான வேறுபட்ட இன்னொரு வகைத் தண்டனையை (எ.டு.: மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பது) அளிப்பது. தண்டனைக் குறைப்பு (Remission/Reduction) என்பது ஒரு தண்டனையை அதன் தன்மை மாறாமல் அளவைக் குறைப்பது (எ.டு.: சிறைத் தண்டனையின் காலத்தைக் குறைப்பது). கருணை மன்னிப்பு தவிர ராணுவ நீதிமன்றம் வழங்கும் தண்டனையைக் குறைக்கும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உண்டு.

சட்டக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், இந்தியச் சட்ட நிறுவனத்தின் முன்னாள் இயக்குனருமான பி.எம்.பக்ஷி தனது நூலில் *(The Constitution of India, Universal Law Publishing House, 2003)*

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த 15 வழக்குகளினைப் பட்டியலிடுகிறார்

(AIR 1961 SC 122, AIR 1974 SC 31, AIR 1961 SC 600, AIR 1961 SC 334, 1975 UJSC 951, AIR 1980 SC 2147, AIR 1982 SC 774, AIR 1982 SC 849, ILR 1955 Mad 92, AIR 1960 AP 259, AIR 1959 Mys 116, AIR 1967 Punj 155, AIR 1975 P&H 902, AIR 1989 SC 653, AIR 1960 SC 1396)

முன் குறிப்பிட்ட கேஹர் சிங், பில்லா - ரங்கா முதலான வழக்குகளும் இவற்றில் அடக்கம். இத்தீர்ப்புகளில் சற்றே முரணான கருத்துக்கள் இருந்த போதிலும் மொத்தத்தில் உச்சநீதிமன்றத்தின் (சில உயர் நீதிமன்றத் தீர்ப்புகளும்) முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கிறார் பக்ஷி.

அ) அரசியல் சட்டப் பிரிவு 72ன் கீழ் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள இவ்வதிகாரம், முதன்மையாக (primarily), அவரது முடிவைப் பொறுத்த ஒரு விஷயம். இம் முடிவை அதன் தர (merits) அடிப்படையில் மதிப்பிட்டு நீதிமன்றங்கள் அதில் தலையிடாது.

ஆ) எனினும் முடிவுக்கு வருமுன் எல்லா பொருத்தமான விஷயங்களையும் குடியரசுத் தலைவர் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளாரா என்பதை உறுதி செய்யும் வகையில் அவரது முடிவை மறு பரிசீலனை செய்கிற மிகவும் குறுகிய அளவிலான அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உண்டு.

இ) குடியரசுத் தலைவர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது **சாட்சியங்களை மீண்டும் புதிதாய் ஆய்வு செய்யலாம்.** இப்படி அவர் செய்வதென்பது நீதிமன்றத் தீர்ப்பின் மீதான ஒரு மேல் முறையீட்டு விசாரணை நடவடிக்கையாகாது. அவரது அதிகாரம் நீதிமன்ற அதிகாரத்திலிருந்து சுதந்திரமாக இயங்குவது. எனவே **அவர் ஒரு தண்டனை தேவைக்கு அதிகமானது எனக் கருதினால் அதை நீக்க அல்லது குறைக்க *(releif)* செய்யலாம். வழங்கப்பட்ட தண்டனை வெளிப்படையான தவறொன்றின் அடிப்படையிலானது எனக் கருதினாலும் அவர் இதைச் செய்யலாம்.** (அழுத்தம் - நமது).

ஈ) கருணை மனுவை மறுப்பதற்கு முன்னர் மனுதாரரின் கருணைக் கோரிக்கைகளைக் குடியரசுத் தலைவர் கேட்டுத்தான் ஆகவேண்டுமென்பதில்லை (தனது உறவினர்களை குடியரசுத் தலைவர் சந்திக்க வேண்டும் என கேஹர் சிங் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். சந்திப்பது கட்டாயமில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது).

எத்தகைய காரணங்கள் அல்லது எந்த அடிப்படையில் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்பது குறித்துத் தெளிவான வரைமுறை எதையும் நமது அரசியல் சட்டமோ, நீதிமன்றங்களோ வரையறுக்கவில்லை. மன்னிப்பு வழங்கும் அதிகாரமுள்ள வேறு எந்த நாட்டிலும் கூட இது பற்றிய தெளிவான வரையறுப்பில்லை. ஏனெனில் இந்த அதிகாரம் மிகவும் விசாலமானது. மன்னிப்பு வழங்க எண்ணற்ற காரணங்கள் செயல்படலாம். எல்லாவற்றையும் தெரிந்து வரையறுத்துவிட இயலாது.

கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்களென இந்திய அரசின் சட்ட ஆணையம் சிலவற்றைக் கூறியுள்ளது. அவை: **குற்றம் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக இல்லாமை,** குற்றவாளியின் வயது, அவரது உடல் மற்றும் உளநிலை, முந்தைய நடத்தைகள், **வெளிக் காரணங்களின் விளைவாகச் சுதந்திரமாகத் தீர்ப்பு அளிக்க இயலாமற் போன நிலை** (அழுத்தம் நமது) மருத்துவ ரீதியிலான பிறழ்வு நிலை ... இன்னும் இதைப் போன்ற காரணங்கள். புதிய சாட்சியங்கள், ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மன்னிப்பு அளிக்கப்படலாம்.

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் அப்பால், தண்டனை அனுபவிப்போர் செய்ததாகக் கருதப்படும் குற்றம் குறித்துச் சிறிய பொறியளவு (scintilla of doubt) அய்யமிருந்தாலும் கூட தண்டனை விலக்கு அளிக்க வேண்டும் என்பதே உலகளவில் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த அடிப்படையாக உள்ளது.

குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் தொடர்பான அமெரிக்க வழக்கொன்றில் (க்ராஸ்மன் வழக்கு) [(*1925 257 U.S. 87*] உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அடிக்கடி

மேற்கோள் காட்டப்படுகிற ஒன்று. தேவைக்கதிகமான கடுமையுடன் தண்டனை வழங்கப்பட்டுள்ள போதோ, குற்றவியில் சட்டத்தைப் பயன்படுத்தியதில் வெளிப்படையான தவறுகள் இருந்த போதோ தலையிட்டுத் துயர் நீக்குவதற்காகவே மன்னிப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என இத்தீர்ப்பு கூறுகிறது. "நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் எப்போதுமே புத்திசாலித்தனமாக இருக்க வேண்டுமென்பதில்லை. குற்றத்தின் அளவைத் தணிக்கக் கூடிய காரண காரியங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதாக இருக்கும் எனவும் சொல்ல இயலாது" எனவே இத்தகைய தருணங்களில் துயர் நீக்கி, நீதி செயல்படுத்தப் படுவதற்காகவே அரசியல் சட்டம் இத்தகைய உரிமையை நிர்வாகத் தலைமைக்கு (அதாவது குடியரசுத் தலைவருக்கு) வழங்கியுள்ளது என்று அத்தீர்ப்பு மேலும் கூறுகிறது.

இந்திய அரசியல் சட்ட ஆணையம் மரண தண்டனை குறித்த அறிக்கை ஒன்றில் கூறியுள்ள கீழ்க்கண்ட கருத்துக்களும் முக்கியமானவை.

> "நீதி மன்றங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத பல விஷயங்கள் இருப்பதற்கும் சாத்தியமுண்டு. தனக்கு முன் வைக்கப்பட்ட சான்றாதாரங்கள் நீதிமன்றத்தின் கரங்களைக் கட்டி வைத்துவிட முடியும். தனக்கு கிடைத்துள்ள எல்லா ஆதாரங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு வழங்கப்பட்டதாயினும் ஒரு மரண தண்டனை கீழ்க்கண்ட காரணங்களால் மறு பரிசீலனைக்குரியதாகவே உள்ளது. அவை: (i) நீதிமன்றத்தின் முன் வைக்கப்படாத உண்மைகள் (ii) நீதிமன்றத்திற்கு முன் உண்மைகள் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை சரியாக வைக்கப்படாத நிலை (iii) தண்டனை வழங்கப்பட்டாலும் பின் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்கள் (iv) தண்டனை வழங்கப்பட்ட பின்பு உருவான நிலைமைகள் (v) மற்ற சிறப்பு அம்சங்கள். இந்தச் சிறப்பு அம்சங்களை வரையறுத்துவிட இயலாது. ஏனெனில் அவை வரையறுக்க இயலாத அளவிற்கு எண்ணற்றவையாக இருக்கக் கூடும். *(Vol I, para 1025)*.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

ஈ) கருணை மனுவை மறுப்பதற்கு முன்னர் மனுதாரரின் கருணைக் கோரிக்கைகளைக் குடியரசுத் தலைவர் கேட்டுத்தான் ஆகவேண்டுமென்பதில்லை (தனது உறவினர்களை குடியரசுத் தலைவர் சந்திக்க வேண்டும் என கேஹர் சிங் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். சந்திப்பது கட்டாயமில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது).

எத்தகைய காரணங்கள் அல்லது எந்த அடிப்படையில் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்பது குறித்துத் தெளிவான வரைமுறை எதையும் நமது அரசியல் சட்டமோ, நீதிமன்றங்களோ வரையறுக்கவில்லை. மன்னிப்பு வழங்கும் அதிகாரமுள்ள வேறு எந்த நாட்டிலும் கூட இது பற்றிய தெளிவான வரையறுப்பில்லை. ஏனெனில் இந்த அதிகாரம் மிகவும் விசாலமானது. மன்னிப்பு வழங்க எண்ணற்ற காரணங்கள் செயல்படலாம். எல்லாவற்றையும் தெரிந்து வரையறுத்துவிட இயலாது.

கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்களென இந்திய அரசின் சட்ட ஆணையம் சிலவற்றைக் கூறியுள்ளது. அவை: **குற்றம் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக இல்லாமை,** குற்றவாளியின் வயது, அவரது உடல் மற்றும் உளநிலை, முந்தைய நடத்தைகள், **வெளிக் காரணங்களின் விளைவாகச் சுதந்திரமாகத் தீர்ப்பு அளிக்க இயலாமற் போன நிலை** (அழுத்தம் நமது) மருத்துவ ரீதியிலான பிறழ்வு நிலை ... இன்னும் இதைப் போன்ற காரணங்கள். புதிய சாட்சியங்கள், ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மன்னிப்பு அளிக்கப்படலாம்.

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் அப்பால், தண்டனை அனுபவிப்போர் செய்ததாகக் கருதப்படும் குற்றம் குறித்துச் சிறிய பொறியளவு (scintilla of doubt) அய்யமிருந்தாலும் கூட தண்டனை விலக்கு அளிக்க வேண்டும் என்பதே உலகளவில் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குறித்த அடிப்படையாக உள்ளது.

குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் தொடர்பான அமெரிக்க வழக்கொன்றில் (க்ராஸ்மன் வழக்கு) [(1925 257 U.S. 87] உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அடிக்கடி

மேற்கோள் காட்டப்படுகிற ஒன்று. தேவைக்கதிகமான கடுமையுடன் தண்டனை வழங்கப்பட்டுள்ள போதோ, குற்றவியில் சட்டத்தைப் பயன்படுத்தியதில் வெளிப்படையான தவறுகள் இருந்த போதோ தலையிட்டுத் துயர் நீக்குவதற்காகவே மன்னிப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என இத்தீர்ப்பு கூறுகிறது. "நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் எப்போதுமே புத்திசாலித்தனமாக இருக்க வேண்டுமென்பதில்லை. குற்றத்தின் அளவைத் தணிக்கக் கூடிய காரண காரியங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதாக இருக்கும் எனவும் சொல்ல இயலாது" எனவே இத்தகைய தருணங்களில் துயர் நீக்கி, நீதி செயல்படுத்தப் படுவதற்காகவே அரசியல் சட்டம் இத்தகைய உரிமையை நிர்வாகத் தலைமைக்கு (அதாவது குடியரசுத் தலைவருக்கு) வழங்கியுள்ளது என்று அத்தீர்ப்பு மேலும் கூறுகிறது.

இந்திய அரசியல் சட்ட ஆணையம் மரண தண்டனை குறித்த அறிக்கை ஒன்றில் கூறியுள்ள கீழ்க்கண்ட கருத்துக்களும் முக்கியமானவை.

> "நீதி மன்றங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத பல விஷயங்கள் இருப்பதற்கும் சாத்தியமுண்டு. தனக்கு முன் வைக்கப்பட்ட சான்றாதாரங்கள் நீதிமன்றத்தின் கரங்களைக் கட்டி வைத்துவிட முடியும். தனக்கு கிடைத்துள்ள எல்லா ஆதாரங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு வழங்கப்பட்டதாயினும் ஒரு மரண தண்டனை கீழ்க்கண்ட காரணங்களால் மறு பரிசீலனைக்குரியதாகவே உள்ளது. அவை: (i) நீதிமன்றத்தின் முன் வைக்கப்படாத உண்மைகள் (ii) நீதிமன்றத்திற்கு முன் உண்மைகள் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை சரியாக வைக்கப்படாத நிலை (iii) தண்டனை வழங்கப்பட்டாலும் பின் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்கள் (iv) தண்டனை வழங்கப்பட்ட பின்பு உருவான நிலைமைகள் (v) மற்ற சிறப்பு அம்சங்கள். இந்தச் சிறப்பு அம்சங்களை வரையறுத்துவிட இயலாது. ஏனெனில் அவை வரையறுக்க இயலாத அளவிற்கு எண்ணற்றவையாக இருக்கக் கூடும். *(Vol I, para 1025)*.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

உங்களுடைய நேரம் பொன்னானது என்பதை நானறிவேன். அதே போல உங்களின் சக குடிமகன் ஒருவனின் உயிரும் கூட அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பொன்னானது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தங்களின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தின் முக்கியத்துவம், விசாலம் ஆகியன குறித்த உலக முக்கியத்துவம் வாய்ந்த சிந்தனைகளை எல்லாம் தொகுத்துக் கொடுத்துள்ளேன். எல்லாவற்றையும் படிப்பதற்கு உங்களுக்கு நேரமில்லாத போதும் கோடிட்ட பகுதிகளையாவது தயவு செய்து பாருங்கள்.

விசாரணை நடைபெற்ற முறை குறித்தோ, வைக்கப்பட்ட சான்றாதாரங்கள் குறித்தோ, வழங்கப்பட்ட தண்டனையின் கடுமை குறித்தோ பொறியளவு அய்யம் இருந்தாலும் உங்களில் கருணை செயல் பட வேண்டுமென்பதே மன்னிப்பு வழங்கு நடைமுறையின் அடிப்படை.

உங்களின் கருணையின் கசிவிற்குக் காத்திருக்கிறோம் நாங்கள்.

இவ்வழக்கில் குடியரசுத் தலைவர் கருணை மன்னிப்பு அளிக்கக் கூடாது எனச் சொல்லிக் கொண்டுள்ள அறிவு ஜீவிகள் மற்றும் அரசியல்வாதிகள் சிலரைப் பற்றியும் இங்கே கொஞ்சம் சொல்லியாக வேண்டும்.

குருமூர்த்தி போன்ற ஆர்.எஸ்.எஸ். வெறியர்களின் கருத்துக்களைச் சற்றே ஒதுக்கி வைத்து விட்டு வேறு சில அறிவுஜீவிகளை முதலில் எடுத்துக் கொள்வோம். ‘டெக்கான் க்ரானிக்கலில்’ பத்தி எழுதும் (அக். 9) சுஹேல் சேத் இவர்களில் ஒருவர். எனக்கு மரண தண்டனை எல்லாம் பிடிக்காது எனத் தொடங்கும் கஹேல் அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை குறைக்கப்படக் கூடாது என்கிறார். அஃப்சல் குடும்பத்தினரைப் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்க முடிந்த அப்துல் கலாமுக்கு செத்துப்போன ஜவான்களின் பிள்ளைகளைப் பார்ப்பதற்கு நேரம் இருக்கவில்லையா என்கிறார். குடியரசுத் தலைவர் கலாம் அவர்கள் அஃப்சலின் குடும்பத்தினரைச் சந்திக்க நேரம் ஒதுக்கியது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. இளைஞர் காங்கிரசின் முன்னாள் தலைவர் பிட்டாவின் தலைமையில் அழைத்து வரப்பட்ட ஜவான்களின்

குடும்பத்தினரையும் கலாம் சந்திக்கவே செய்தார். இரு குடும்பத்தினரும் கலாமைச் சந்தித்துவிட்டு வெளியே வரும் படங்கள் அருகருகே எல்லா இதழ்களிலும் வெளியிடப்பட்டன. 'டெக்கான் க்ரானிக்கல்' உட்பட. 'காலம்' எழுதும் அறிவு ஜீவி ஒருவருக்கு இந்தக் காட்சி கண்ணில் படாமல் போனதெப்படி?

நான் மிகவும் மதிக்கும் இன்னொரு சட்டவியல் அறிஞர் சோலி சொராப்ஜி. வாஜ்பாயி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாண்ட போது அடர்னி ஜெனரலாக இருந்தவர். குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்திற்கு ஆதரவாக நான் மேலே சுட்டிக் காட்டிய சிலவற்றை அவரும் தனது கட்டுரை ஒன்றில் (New Indian Express, Oct. 6) சுட்டிக்காட்டியிருந்தார் எனினும் கட்டுரை இறுதியில் காஷ்மீரில் சட்ட ஒழுங்கு கெட்டுவிடும் என்கிற காரணத்தைச் சிலர் சொல்கிறார்களே, அந்த காரணத்திற்காக அஃப்சலுக்கு மன்னிப்பு அளிப்பதை ஏற்க முடியாது என்கிறார். பாதுகாப்புக்காக நின்ற ஜவான்கள் கொல்லப்பட்டதைக் கணக்கில் எடுக்க வேண்டும் என்றும் மன்னிப்பு வழங்குவதன் மூலம் கொல்லப்பட்ட ஜவான்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற கருத்து ஏற்பட்டு விடக் கூடாது என்றும் கட்டுரையை முடிக்கிறார். அஃப்சலுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கோருகிறவர்கள் குஜராத் படுகொலைகளைச் செய்தவர்களுக்கும் ஸ்டெய்ன்ஸ் பாதிரியாரைக் கொன்றவருக்கும் மன்னிப்பு வழங்க வேண்டும் எனச் சொல்வார்களா என்றும் சொராப்ஜி கேட்கிறார்.

மரண தண்டனை யாருக்கு அளிக்கப்பட்டாலும் யார் அளித்தாலும் அதைக் கண்டிப்பதும் நீக்க வேண்டும் என்பதுமே நமது கோரிக்கை. முன்பொரு கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்தது போல நாம் மிகவும் மதிக்கும் காந்தியடிகளைக் கொன்ற இந்துத்துவ வெறியர்கள் கோட்சே, ஆப்தே உட்பட மரண தண்டனைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும், வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதேபோல அரசுகள் மட்டுமின்றி அரசுக்கு அப்பாற்பட்ட இயக்கங்கள் அளிக்கும் மரண தண்டனைகளையும் கண்டிக்கும் திராணியுடையவர்கள் நாங்கள். குஜராத் கொலையாளிகளுக்கும் கூட மரண தண்டனை வழங்கப்பட்டால் மன்னிக்கச் சொல்லிக் கேட்போம் நாம்.

கூடுதலாக, அஃப்சலுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என நாம் கோருவதற்கும் காரணங்கள் உண்டு. அவற்றை விளக்குவதே இச்சிறு நூலின் நோக்கம்.

சட்ட ஒழுங்கைக் காரணம் காட்டி தண்டனை விலக்கு அளிக்க முடியாது என்கிறார். உண்மைதான். சட்ட ஒழுங்கு, சாதி, மதம் என்றெல்லாம் காரணம் சொல்லி குற்ற வழங்கு நடை முறைகளைச் திருத்தி அமைக்க இயலாதுதான். சாதி அடிப்படையிலேயே நீதி வழங்கிய வரலாறுதான் நம்முடையது என்ற போதிலும் கூட நீதி வழங்கு நடைமுறை இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட இருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். ஆனால் சொராப்ஜி போன்றவர்கள் ஒன்றை மறந்துவிடலாகாது.

அஃப்சல் வழக்கு போன்றவற்றில் வழக்கிற்கு அப்பாற்பட்ட காரணங்கள் தீர்ப்பு திருத்தப்படுவதில் செயல்படக் கூடாது என்பது எத்தனை உண்மையோ அத்தனை உண்மை தீர்ப்பு எழுதப்படுவதிலும் வழக்கிற்கு அப்பாற்பட்ட விஷயங்கள் செயல்பட்டிருக்கக் கூடாது என்பது. ஆனால் நடந்தது என்ன? வழக்குக்கு அப்பாற்பட்ட விஷயங்களின் அடிப்படையில் தானே அஃப்சலுக்கு இன்று மரண தண்டனை வழங்கப்பட்டது. தேசப் பாதுகாப்பு, மக்களின் கூட்டுணர்வைத் திருப்திப் படுத்துதல் என்பதெல்லாம் குற்றச் செயலுடனோ, சதியுடனோ நேரடித் தொடர்பு இல்லாத ஒருவருக்கு மரண தண்டனை வழங்குவதற்குக் காரணமாக முடியுமா?

முஸ்லிம் வெறுப்பை நிலைநாட்டி, சமுகத்தைப் பிளவுபடுத்தி, அரசியல் லாபம் தேட முயலும் ஒரு பிரதான அரசியல் கட்சியும், அதன் பின்னணியிலுள்ள பாசிசப் பரிவாரங்களும் இன்று ஒரு தனி மனிதனின் ரத்தத்திற்காக வெறியுடன் இயக்கம் நடத்தும் சூழலில் அஃப்சலுக்குரிய மன்னிப்பு வழங்கப்படாமற் போனால் அது வழக்குக்கு அப்பாற்பட்ட காரணத்தின் விளைவாகாதா?

ஒரு காலத்தில் (1975) மகாவீரர் ஜயந்தியைக் காரணம் காட்டி மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற இயக்கம் நடத்திய பாரதீய ஜனசங் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி இன்று குடியரசுத் தலைவரைச் சந்தித்து அஃப்சலுக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாது என்கிறார். பாகிஸ்தான் அரசால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சரப்ஜித் சிங்கிற்கு

அதை நிறைவேற்றக்கூடாது எனக் கோரிக்கை வைப்பவர்கள் இன்று மன்னிப்புக்கு எதிராக ஒரு இயக்கமே நடத்துகின்றனர். அக்டோபர் 12 முதல் 14 வரை மாநிலங்களில் ஆளுநர்களைச் சந்தித்து மன்னிப்புக்கு எதிராக பா.ஜ.க.வினர் மனு அளித்தனர். அக்டோபர் 15 முதல் 19 வரை எல்லா மாவட்டங்களிலும் ஆர்பாட்டங்கள் நடத்தினர். அஃப்சலை அக்டோபர் 20 அன்று தூக்கிலிடாவிட்டால் அவரது கொடும்பாவியைத் தூக்கிலிடுவதாக அறிவித்தனர். அஃப்சல் தூக்கிலிடப்பட்டால் அது, பாசிஸ்டுகளின் கரடு தட்டிப்போன கல் மனங்களிலிருந்து எழுந்த கோரிக்கையின் வெற்றியாக அமையாதா?

இந்த நிலை காஷ்மீரிகளின் மனத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சுட்டிக் காட்டுவது எப்படித் தவறாக முடியும்?

அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் கூறியுள்ள கருத்தை முன்னாள் சொலிசிடர் ஜெனரல் டி.ஆர். அந்த்யாருஜினா சுட்டிக் காட்டுகிறார். "நீதிமன்றம் வழங்கிய தண்டனையைக் குறைப்பது பொது நலத்திற்கு உகந்ததென இறுதி அதிகாரம் படைத்தவர் (அதாவது குடியரசுத் தலைவர்) தீர்மானிப்பதன்" விளைவே மன்னிப்பு வழங்குதல் என்கிற அவ்வாசகத்தில் 'பொது நலம்' என்கிற சொல் நமது கவனிப்பிற்குரியது, தண்டனை அளிக்கப்பட்டவருக்கு இரக்கம் என்பதைப் போலவும், சமயங்களில் இரக்கம் என்பதை விடவும் பொது நலமும், அரசியல் காரணங்களும் கூட மன்னிப்பு அளிப்பதற்கு ஒரு அடிப்படையாக முடியும். அதிலும் முறையாக வழக்கு விசாரிக்கப்படாத சூழலில் இது மேலும் முக்கியமாகிறது.

மன்னிப்பு அளிக்கக் கூடாது எனச் சொல்வதும் 'பொது நலம்' கருதித்தானே என்று இந்துத்துவவாதிகள் கூறலாம். அவர்கள் சொல்லும் ஒரே காரணம் இதுபோன்ற வழக்குகளில் மன்னிப்பு வழங்கப்படுதல் என்பது இது போன்ற குற்றங்களை மேலும் ஊக்குவிக்கும் என்பதே. ஆனால் ஒன்றைக் கவனியுங்கள். குற்றச் செயலில் நேரடியாக ஈடுபட்டவர்கள் அத்தனை பேரும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுவிட்டனர். சதிச் செயல் புரிந்த முக்கிய மூளைகள் மூன்றும் இன்று பாகிஸ்தானில் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதாக காவல்துறையே ஒத்துக் கொள்கிறது. இந்நிலையில் குற்றச் செயலுடன் நேரடித்

தொடர்பற்ற ஒருவரை அய்யத்திற்குரிய ஆதாரங்களின் அடிப்படையில் தூக்கிலிடுவதன் மூலம் குற்றச் செயல்கள் எப்படிக் குறையும்?

மாறாக ஏற்கனவே அந்நியப்பட்டுப் போயுள்ள காஷ்மீர மக்கள் மேலும் மய்ய நீரோட்டத்திலிருந்து விலகிச் செல்வதற்கல்லவா இது வழி வகுக்கும். அஃப்சல் விஷயத்தில் இன்று காஷ்மீர் மக்கள் அனைவரும் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து நிற்பதைப் பார்க்கிறோம். பர்வின் இம்ரோஸை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு "ஜம்மு காஷ்மீர் சிவில் சமுகக் கூட்டமைப்பு" (CCS) என்றொன்று உருவாகி மிகப் பெரிய கையெழுத்து இயக்கத்தையும் பிரச்சாரத்தையும் அஃப்சலுக்காக நடத்தி வருகிறது. டாக்டர் அப்லாத் ஹுஸைன், டாக்டர் ரபி பஞ்சாபி, கவிஞர் ஸரீஃப் அஹமத் ஸரீஃப் எனப் பல மனித உரிமையாளர்கள் இதில் பங்கு வகிக்கின்றனர். ஹுரியத் கட்சி (G)யின் தலைவர் சையத் அலி கீலானி, ஜனநாயக சுதந்திரக் கட்சித் தலைவர் ஷபீர் அஹமத் ஷா, ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் யாசின் மாலிக், மக்கள் மாநாட்டுக் கட்சித் தலைவர் சஜ்ஜத் லோனே போன்றோர் இன்று அஃப்சலின் தண்டனைக் குறைப்பிற்காக இயக்கம் நடத்துகின்றனர். பிரிவினைக் கோரும் கட்சிகள் தவிர மய்ய நீரோட்டக் கட்சிகளும் அஃப்சலுக்காகக் குரல் கொடுக்கின்றன. முதல்வர் குலாம் நபி ஆஸாத், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபருக் அப்துல்லா, மார்க்சிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் யூசுப் தரிகாமி ஆகியோர் அஃப்சலின் தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்கின்றனர்.

இந்திய அளவில் மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமை ஆர்வலர்களும் அஃப்சலின் மரண தண்டனைக்கு எதிராக இன்று இயக்கம் நடத்திக் கொண்டுள்ளனர். நிர்மலா தேஷ்பாண்டே போன்ற காந்தியர்கள், மேதாபட்கர் போன்ற சுற்றுச் சூழலியர்கள், அருந்ததி ராய் போன்ற எழுத்தாளர்கள் இதில் முன்னணியில் நிற்கின்றனர். தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் இம்மரண தண்டனையைக் குறைக்கக் கோரியுள்ளார்.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அவர்களே!

ஒன்றுபட்டு நிற்கும் காஷ்மீர மக்களின் கருத்தைப் புறக்கணித்து அஃப்சலைத் தூக்கில் தொங்கவிடுவதன் மூலம் அவர்களை அந்நியப்படுத்துவது தீவிரவாதத்திற்குத் தூண்டு கோலாக அல்லவா அமையும். பாசிசம் வெற்றி விழாக் கொண்டாடுவதற்கு வழி வகுப்பதென்பது இந்தியச் சமூகம் மத அடிப்படையில் மேலும் பிளவுறுவதற்கல்லவா இட்டுச் செல்லும்? இதெல்லாம் பொது நலத்திற்கெதிரானதல்லவா? இந்நிலையில் நீங்கள் அப்சலுக்கு வழங்கும் மன்னிப்பு உங்களின் கருணைக்கு மட்டுமின்றி பொது நல அக்கறைக்கும் அடையாளமாக இருக்கும் என்பதை மிக்க பணிவுடன் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இறுதியாக ஒன்று: அஃப்சலின் வரலாறு காஷ்மீர மக்களின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்கிறார் நந்திதா ஹஸ்கர் (இந்நூலிலுள்ள ஆங்கில முன்னுரையில்). போராளி இயக்கங்களிலிருந்து விலகிச் சரணடைந்த இளைஞர்கள் இந்திய உளவுத் துறையாலும் காவல் துறையாலும் என்ன மாதிரிப் பயன் படுத்தப்படுகின்றனர் என்பதற்கு அஃப்சலின் கதை ஒரு எடுத்துக்காட்டு. நக்சல்பாரி இயக்கத்திலிருந்து விலகி வருபவர்களையும் இந்திய அரசு இப்படித்தான் பயன்படுத்தி வருகிறது. போராளிகளை உளவு பார்க்கவும், மக்களைக் கொல்லவும் இயக்கங்களை எதிர்த்து மடியவும் பயன்படுத்தப்படுகிற ஆயுதந் தாங்கிய குண்டர் படைகளில் பணிபுரிய அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ‘ஆந்திர மாடல்’ என இந்தச் சட்ட விரோத நடவடிக்கையைச் சிலாகிக்கின்றனர். நமது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் சமீபத்தில் சென்ற மாதத்தில் கூட இதைக் குறிப்பிட்டார். இன்று சட்டீஸ்கர் மாநிலத்தில் ‘சல்வா ஜுடும்’ என்கிற பெயரில் இத்தகைய சட்டவிரோத குண்டர் படை ஒன்றையே அரசு உருவாக்கியுள்ளது. மத்திய அரசு மாநில அரசு, காங்கிரஸ், பாஜக என்கிற வேறுபாடின்றி இணைந்து நின்று இந்தச் சட்ட விரோத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ‘பாதுகாப்பு தொடர்பான செலவு’ என்கிற பெயரில் அரசு நிதியிலிருந்து இதற்கான செலவுகள் செய்யப்படுகின்றன.

இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகளை அரசே முன்னின்று செயல்படுத்துவதும், பிரதமரே அதை ஊக்குவிப்பதும் ...

இதெல்லாம் என்ன? வன்முறையையும் கலகத்தையும் (insurgency) எதிர் கொள்வது ஒரு அரசின் கடமை என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடு இல்லை. சட்ட ஒழுங்கு அம்சம் (policing aspect) ஒன்று இதில் ஊடாடி நிற்பதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் முற்றிலும் சட்ட விரோதமான இச்செயற்பாடுகள் மூலம் வன்முறை ஒழிந்து விடுமா?

மேன்மை தங்கிய குடியரசு தலைவர் அவர்களே!

இதையும் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

ஒரு அரசே இப்படி வெளிப்படையான சட்ட விரோதச் செயல்களில் இறங்கலாமா?

மகாத்மா காந்தியை தேசத் தந்தையாக ஏற்றுக் கொண்டுள்ள நாடு நம்முடையது. நோக்கம் எத்தனை உயர்வாக இருந்த போதிலும் அதற்கான வழி முறைகள் அறத்தின் அடிப்படையிலிருந்து வழுவக் கூடாது என்கிற அவரது உயரிய சிந்தனை இன்றைய காலத்திற்குப் பொருந்தாது என நாம் உதறிவிட்டோமோ?

வன்முறையைச் சட்டவிரோத நடவடிக்கைகளால் முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியுமா?

மேன்மை தங்கிய குடியரசு தலைவர் அவர்களே!

மிக்க பணிவுடன் இந்த விண்ணப்பத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இந்தச் சிறு வெளியீட்டை தமிழில் பெயர்த்து வெளியிட அனுமதி வேண்டி டெல்லியிலுள்ள SPDPR அமைப்புடன் நாங்கள் தொடர்பு கொண்ட போது அதற்குப் பொறுப்பான நண்பர் சொன்னார்:

"உங்கள் வெளியீட்டின் ஒரு பிரதியை எங்களுக்கு அனுப்ப மறவாதீர்கள். குடியரசுத் தலைவருக்கு மரண தண்டனைக்கு எதிராக நாங்கள் சேகரித்துள்ள கையெழுத்துக் கோப்புகளை அனுப்பும் போது உங்கள் வெளியீட்டையும் இணைத்து அனுப்புகிறோம். தமிழறிந்தவர் அல்லவா, ஒரு வேளை உங்கள் வெளியீட்டை அவர் படிக்கக்கூடும்."

மொழி, இன அடிப்படைகளில் பெருமிதம் கொள்பவனல்லன் நான், இருந்த போதிலும் அந்தத் தோழர் இப்படிச் சொன்ன போது ஒரு கணம் மகிழ்ச்சியில் துணுக்குற்றேன்.

தமிழறிந்தவர் நீங்கள். திருக்குறளைப் பயின்றவர் நீங்கள். ராமேஸ்வரத்திற்கு வரும்போதெல்லாம் பேண்ட் பையிலிருந்து தொப்பியை உருவித் தலையில் சூடி அந்தச் சிறிய பள்ளியில் தொழுகைக்குச் செல்ல மறக்காதவர்.

ஆசிரியர் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுபவர். 'விஞ்ஞானி', அரசியலைத் தொழிலாகக் கொண்டிராமலேயே மிக உயர்ந்த அரசியற் பதவியைப் பெற்றவர்.

நீதிமன்றங்களும்கூட நீதியை வழங்க இயலாமற் போகும் நிலையை நமது நீதி வழங்கு முறைகள் ஏற்றுக் கொள்கின்றன. அதன் விளைவே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த மன்னிப்பு வழங்கும் அதிகாரம். உங்களிடம் குவிந்துள்ள அதிகாரங்களிலெல்லாம் மிக உயர்ந்த அதிகாரமாக நான் இதையே கருதுகிறேன். குற்றச் செயலில் பொறியளவு அய்யமிருந்தாலும் மன்னிப்பு வழங்கும் பெரும் பொறுப்பு உங்களுக்கு உண்டு.

காந்தியைக் கொன்று சதிச் செயலுக்குத் தலைமை தாங்கியவர் சாவர்கர். எனினும் அவர் மீதுள்ள குற்றச்சாட்டு அய்யத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று காரணம் சொல்லி அவரை விடுதலை செய்தது நீதிமன்றம்.

சாவர்கரின் மெய்க்காவலர் அப்பா ராமச்சந்திர கசர், செயலாளர் கஜ்னன் விஷ்ணு தாம்லே ஆகியோரின் சாட்சியங்கள் கவனத்திற்கொள்ளப் படாததன் விளைவாக அவர் அன்று விடுதலை செய்யப்பட்டார்.

பின்னாளில் நீதியரசர் கபூர் தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இந்தச் சாட்சியங்களையும் ஏற்றுக் கொண்டது. "இவ்வுண்மைகள் அனைத்தையும் கணக்கிலெடுக்கும் போது சாவர்க்கரும் அவரது குழுவினரும் காந்தியைக் கொன்ற சதியில் பங்கு பெறவில்லை என்கிற கருத்து தவிடு பொடியாகிறது" என நீதியரசர் கபூர் அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள்.

தேசத் தந்தையைக் கொன்ற குற்றச் செயலின் தலைமைச் சதிகாரன் குற்றத் தண்டனையிலிருந்து விடுபட்ட கதை இது தான்.

ஆனால் கதை இத்துடன் முடியவில்லை.

பல பத்தாண்டுகளுக்குப் பின்னர், நான்காண்டுகளுக்கு முன்னர் உங்களின் திருக்கரங்களால் தேசத் தந்தையின் கொலைச் செயலுக்குத் தலைமை தாங்கிய அந்தச் சதிகாரனின் படத்தை பாராளுமன்ற வளாகத்தில் அதே தேசத் தந்தையின் படத்திற்கு எதிராக நீங்கள் திறந்து வைத்தீர்கள்.

உங்களுக்கு முன்பு உங்கள் நாற்காலியில் அமர்ந்திருந்த மேதகு கே.ஆர். நாராயணன் செய்ய மறுத்ததை நீங்கள் செய்தீர்கள்.

கறைபடாத உங்களின் கரங்களில் இதன் மூலம் ஒரு கறை படிந்தது. கொலைக் குற்றத்துடன் நேரடியாகத் தொடர்புடைய ஒருவரைக் கவுரவிக்க நேர்ந்ததன் விளைவு அது. குற்றச் செயலுடன் நேரடித் தொடர்பற்ற அஃப்சலை மன்னிப்பதன் மூலம் நீங்கள் அந்தக் கறையைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

உங்கள் கருணை கசிய வேண்டும்.

அஃப்சலுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

சென்னை
அக். 20, 2006

தங்கள் உண்மையுள்ள
சக குடிமகன்
அ. மார்க்ஸ்

முதல் பதிப்பின் பதிப்புரை

சமணர், பவுத்தர் படுகொலைகளை நிகழ்த்திய இந்திய வரலாறு இன்று படுகொலைகளைத் தனது நவீன நடையில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. குஜராத்திலும் காஷ்மீரிலும் கொல்லப்படும் மக்களும் ஏறக்குறைய இந்துவல்லாத மக்கள்தான் எனும்போது இவைகளின் காரணக் கண்ணிகளை எளிதில் புரிந்து கொள்ள முடியும். எனினும் இப்போது நாம் எதிர்கொள்கிற பிரச்சினைகள் உலக சட்டங்களையும், தீர்ப்புகளையும் படித்து செரித்த நீதிமான்கள் தருகின்ற நீதிமன்றப் படுகொலைகள், மூளைகள் எதையெதையோ படிக்கலாம். ஆனால் நமது வேர்கள் கொலைகளைக் (திருவிழாக்கள்) கொண்டாடும் மரபைப் பின்பற்றியுள்ளனவே. வேர்களே ஆதர்சம். எனவே நமது அடிப்படையை சீர்செய்தாக வேண்டிய அவசியத்திலுள்ளோம். அதனால் தான் மௌனப் பெரும்பான்மை மக்களை சாட்சியங்களாக்கிக் கொண்டு எந்த மரணத்தையும் நிகழ்த்துக் கலையாக்கும் போக்கினை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டியுள்ளது. ஆவணம் போன்று துவங்கும் இக்குறு நூலில் உள்ள அ. மார்க்ஸ், ராம்புனியானி கட்டுரைகள் விசாரணை முறையை அம்பலப்படுத்துவதோடு மரண தண்டனைக்கு அலையும் ரத்த வெறியர்களை விமர்சிக்கவும் செய்கின்றன. இந்த ஆவணத்தை மொழி பெயர்த்ததோடு குறிப்பானதொரு ஆய்வுரையும் வழங்கியுள்ள தோழர் அ.மார்க்சும், நாங்களும் வரலாற்றுத் திரிபுகளை எதிர்கொண்டோம். பெரியாரை திரிக்கும் செயல்களை எதிர்கொண்டோம். இன்று மரண தண்டனைக்கு எதிராகவும் நிற்கிறோம். தொடர்ந்து எல்லாவிதப் பாசிசங்களுக்கும் எதிராய் நிற்போம்.

தோழமையுடன்
நீலகண்டன்



தமிழ்ப் பதிப்பின் முன்னுரை

பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முகம்மத் அஃப்சல் குருவிற்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனைக்கு எதிராக இன்று இந்தியா முழுவதும் இயக்கம் நடைபெற்று வருகிறது. 'காவலில் வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கழகம்' (SPDPR) என்கிற அமைப்பு அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை குறைக்கப்பட வேண்டும் எனப் போராடி வருகிறது. அதே நேரத்தில் அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை குறைக்கப்படக் கூடாதென பாசிச இந்துத்துவ சக்திகளும் இயக்கம் நடத்துகின்றன. இது தொடர்பான விவாதத்தில் இன்று நாடே பிளவுண்டு கிடக்கிறது. காங்கிரசுக்குள்ளேயே இரு கருத்துக்கள். குலாம் நபி ஆஸாத் மன்னிப்பு வழங்க வேண்டும் என்கிறார். மென்மையான இந்துத்துவவாதி எனப்பெயர் பெற்ற திக் விஜய் சிங், அஃப்சல் தூக்கிலிடப்பட வேண்டும் என்கிறார். ஜம்மு-காஷ்மீர் மாநில மார்க்சிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அஃசலுக்குத் தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்கிறார். ஆனால் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ இந்தப் பிரச்சினையைப் பேசவில்லை.

மய்ய நீரோட்டக் கம்யூனிஸ்ட் கட்சிகள் மனித உரிமைப் பிரச்சினைகளைக் கையிலெடுப்பதில்லை என்றொரு விமர்சனமுண்டு. சோவியத் யூனியனிலும் இதர சோசலிச நாடுகளிலும் இறுதி வரை 'ஹேபியஸ் கார்பஸ்' உரிமை நடைமுறையில் இல்லை என்பது கவனத்திற்குரியது. இன்று பல்வேறு பிரச்சினைகளை மறுபரிசீலனை செய்வதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அடிக்கடி அறிவித்து வந்த போதிலும் இந்தப் பிரச்சினையில் கடைபிடிக்கும் மவுனம் நமக்கு அய்யத்தை

ஏற்படுத்துகிறது. இந்துத்துவ எதிர்ப்பில் மிக உறுதியாக நிற்பவை கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமே என்கிற மரியாதை நமக்குண்டு. அந்த மரியாதையுடனேயே இந்த விமர்சனத்தை நாம் முன் வைக்கிறோம்.

மரண தண்டனைக்கு எதிராக மிகப் பெரிய இயக்கம் நடத்திய பெருமை தமிழகத்திற்கு உண்டு. எனினும் அஃப்சல் பிரச்சினையில் இன்று நாடே பிளவுண்டு நிற்கையில் இங்கு அதற்குரிய வீச்சுடன் எதிர்வினை தோன்றாத நிலையில் SPDPR அமைப்புடன் நாங்கள் தொடர்பு கொண்டோம். அவர்கள் வெளியிட்டுள்ள இந்த ஆவணத் தொகுப்பை தமிழில் பெயர்த்து வெளியிட அனுமதி கேட்டோம். அவர்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புதலளித்துள்ளனர்.

மரணத்தை எதிர் நோக்கியுள்ள ஒரு கைதியும் அவரது குடும்பத்தினரும் எழுதியுள்ள கடிதங்கள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. மரணத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் சில இடங்களில் சற்றே தெளிவின்மையும், இலக்கணப் பிழையும் கலந்துள்ள இக்கடிதங்களை ஓரளவு திருத்தமாகத்தான் மொழியாக்க முடிந்தது.

'தேசபக்தி', 'தேசப்பாதுகாப்பு' என்ற சொல்லாடல்கள் இன்று உரத்து முன் வைக்கப்படக் கூடிய சூழலில் அஃப்சலுக்கான நியாயத்தைப் பேசுவதே ஒரு தேசத் துரோகச் செயலாகக் கருதப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தின் காரணமாக இன்று பலரும் மவுனம் காக்கின்றனர். ஆனால் அதிகாரத்தை நோக்கி உண்மைகளைப் பேசுபவர்களே சரியான அறிவுஜீவிகளாக இருக்க முடியும். இதே வகையில் இதே குற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு முதலில் மரண தண்டனை வழங்கப்பட்டு பின்னர் விடுதலையான டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். கீலானி மிகுந்த பாராட்டுக்குரியவர். அவமானத்தில் சோர்ந்து ஒதுங்கிவிடாமல் இன்று அஃப்சல் பிரச்சினையை எடுத்து முன்னணியில் நிற்கிறார்.

இந்த ஆவணங்களை மொழி பெயர்த்துக் கொண்டிருந்த போது ராம் புனியானியின் கட்டுரையை தோழர் தர்ஷன் பால் அவர்கள் எனக்கு அனுப்பி வைத்தார். தேசியம் மற்றும் தேச பக்தி என்கிற பெயர்களில் இங்கே விதைக்கப்படும்

சொலலாடல்களின் ஆபத்தைத் தோலுரிக்கும் இக்கட்டுரையையும் மொழி பெயர்த்துப் பின்னிணைப்பாக இணைத்துள்ளோம். தேச பக்தியைத் தோலுரித்த பெரியாரியப் பாரம்பரியம் தமிழகத்திற்கு உண்டு. வட மண்ணிற்கு அது கிடையாது. அதை மீறி எழுந்துள்ள புனியானியின் கட்டுரை இவ்வெளியீட்டின் சிறப்பு அம்சம்.

ஆங்கில வெளியீடு வெளி வந்ததற்குப் பின் பல பிரச்சினைகள் மேலெழுந்துள்ளன. உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை மன்னிக்கும் குடியரசுத் தலைவரின் அதிகாரம் குறித்த ஒரு சர்ச்சை அவற்றில் முக்கியமானது. இந்தப் பிரச்சினைகளை விரிவாக ஆய்வு செய்கிறது எனது கட்டுரை.

இப்படியான ஒரு ஆங்கில வெளியீடு வந்துள்ளதை அறிந்து அதைப் பெற முயற்சிகள் செய்த போது உடனடியாக அதைப் பெற்றுத் தந்த நண்பர் அன்வர் அவர்களுக்கும், ராம் புனியானி கட்டுரையை அனுப்பித் தந்த தோழர் தர்ஷன் பாலுக்கும் மொழிபெயர்த்து வெளியிட அனுமதி அளித்த SPDPR அமைப்பைச் சேர்ந்த வினோத் கே.ஜோஸ் அவர்களும் வெளியிடும் கருப்புப் பிரதிகளுக்கும் அஃப்சலின் மரண தண்டனையை குறைக்கக் கோரி டெல்லியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட புதுச்சேரி மக்கள் உரிமைக் கூட்டமைப்புத் தலைவர் கோ.சுகுமாரன் அவர்களுக்கும் எங்கள் நன்றிகள்.

மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம் (PUHR) சார்பில் சில ஆண்டுகட்கு முன்பு மதுரையில் மரண தண்டனை ஒழிப்பு மாநாடொன்றை நடத்தினோம். மரண தண்டனை தொடர்பான எமது அடுத்த முயற்சியாக இவ்வெளியீடு அமைகிறது.

பொதுவாக மரண தண்டனை ஒழிப்பு என்பதோடு அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள அநீதியான இம்மரண தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்பதும் இவ்வெளியீட்டின் நோக்கமாகிறது.

பயங்கரவாதச் செயல்களை நாம் எல்லோரும் கண்டிக்கவே செய்கிறோம். நோக்கம் எதுவாயினும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நாம் ஏற்க முடியாது. ஆனால் பழிக்குப் பழி, வன்முறைக்கு வன்முறை, சட்டபூர்வ மற்ற வழிமுறைகளை அரசே மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் பயங்கரவாதத்தை

முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியாது. கண்ணுக்குக் கண் என்றால் இறுதியில் குருடர்கள் மட்டுமே உலகில் எஞ்சுவர் என்றார் காந்தியடிகள்.

இந்தியச் சூழலில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்பது முதன்மையாகக் காஷ்மீரப் பிரச்சினையைச் சார்ந்துள்ளது. காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்க்காமல், அங்கே நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படைகளை நீக்காமல், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர இயலாது. இந்திய பாகிஸ்தான் அரசுகள் மனம் வைக்காமல் இது சாத்தியமில்லை.

இந்தியக் குடிமக்கள் என்கிற வகையில் நம்மை நாமே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும். சுதந்திரத்திற்குப் பிந்திய இந்திய அரசு காஷ்மீர் மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதா? காஷ்மீர மக்களுக்கு அது நியாயம் இழைத்துள்ளதா? எந்தப் பிரச்சினையிலும் மூன்றாம் நபர் மத்தியஸ்தம் என்பது யாரும் ஏற்க கூடிய ஒன்று. ஆனால் இந்திய அரசு ஏன் மூன்றாம் நபர் தலையீட்டை மறுத்து வருகிறது?

காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்க்காமல், பயங்கரவாதத்தைக் காரணம் காட்டி சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய்களை ஆண்டு தோறும் பாதுகாப்பிற்காகக் கொட்டித் தொலைப்பது ஏழை இந்தியாவிற்கு எப்படிப் பொருந்தும்? அடித்தள மக்களின் நலனைப் பேசும் கட்சிகள் ஏன் இந்த விஷயத்தின் மவுனம் காக்கின்றன?

தேசப் பாதுகாப்பு என்கிற பெயரில் இந்த அநீதிகளை எத்தனை காலத்திற்கு நாம் சகித்துக் கொள்ள போகிறோம்?

அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை குறைக்கப்படுதல் என்பது காஷ்மீரில் மேற்கொள்ளப்படும் அமைதிப் பேச்சு வார்த்தைகளுடன் தொடர்புடைய ஒரு விஷயம். இதுகாறும் தீவிரவாத அமைப்புகள் என ஒதுக்கி வைக்கப்பட்ட இயக்கங்களுடன் அரசுகள் சமரசமாகும் கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். நேபாளத்தில் ஆயுதம் தாங்கிய நக்சல்பாரிகளுடன் இணைந்து பாராளுமன்றக் கட்சிகள் போராடி மன்னராட்சியை வெற்றி கண்டுள்ளன. பாகிஸ்தான் அரசு

இன்று தலிபான்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்கா இதை ஆதரித்துள்ளது. பயங்கரவாத இயக்கமாக ஒதுக்கி வைக்கப்பட்ட ஹமாஸ் இயக்கம் இன்று பலஸ்தீனத்தில் வெற்றி பெற்று ஆட்சியமைத்துள்ளது. லெபனான் அரசு ஹிஸ்புல்லாக்களுடன் இணைந்துதான் இன்று இஸ்ரேலை வெற்றி கண்டுள்ளது.

இந்தச் சூழலில் அமைதியை நோக்கிய செயற்பாடுகள் முக்கியமாகின்றன. அஃப்சலுக்கு வழங்கப்படும் தண்டனை குறைப்பு காஷ்மீர மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உருவாக்கும். அவர்கள் அந்நியப் படுவதைத் தடுக்கும். பயங்கரவாத ஆபத்துக்கள் குறையும். இந்த வகையில் தனி நபர் நீதி என்பதையும் தாண்டி பொது நலன் சார்ந்த விஷயமாக இது அமைகிறது.

அஃப்சலுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனைக் குறைப்பு நடவடிக்கைகளில் தோழர்கள் பங்கு பெறவேண்டும். குடியரசுத் தலைவருக்கு கடிதங்கள் எழுத வேண்டும்.

சென்னை
அக். 30, 2006

தோழமையுடன்
அ. மார்க்ஸ்



மிகப் பெரும் (உயிர்) இழப்புகளுக்குக் காரணமான இச்சம்பவம் இந்தத் தேசம் முழுமையையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனச் சாட்சியைத் திருப்தி செய்ய முடியும்.

- உச்சநீதிமன்றத் தீர்ப்பு, பக். 204

மரண தண்டனையில் ஒரு சமநிலை (*Equivalence*) இருக்க வேண்டுமானால் யாருக்கு அது வழங்கப்பட வேண்டும்? எந்தத் தேதியில் உன்னைக் கொல்வேன், கொடும் மரணத்தை உன் மீது சுமத்துவேன் என்பதை ஒருவனுக்குச் சொல்லி அவனை அந்தக் கணம் முதல் எஞ்சிய நாட்களில் கருணையில் தன்னை குறுக்கிக் கொள்ள எவன் நிர்ப்பந்திக்கிறானோ அந்தக் குற்றவாளியைத்தான் அத்தண்டனைக்குள்ளாக்க வேண்டும். இத்தகைய கொடூரனை நிஜ வாழ்வில் நாம் சந்திப்பதில்லை.

- ஆல்பர்ட் காம்யூ

மனித உயிரை விரும்பியபோது எடுத்துக்கொள்ளக் கூடிய நிறுவன மயப்பட்ட அரசுரிமைதான் மனித ஆளுமையில் கண்ணியத்திற்கு இழைக்கக்கூடிய மாபெரும் இழிவாக இருக்க முடியும்.

- உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி, ஆர்தர் ஜே. கோல்ட்பெர்க், போஸ்டன் குளோப், 8.10.1976, பக். 17.

வன்முறையாளர்களைக்கூட தண்டனை என்கிற பெயரில் சிறையில் அடைப்பதை நான் விரும்பவில்லை. கொள்ளைக் காரர்களையும், ஏன் கொலையாளிகளையும் கூடத் தண்டிப்பதை என் அகிம்சைக் கோட்பாடு ஏற்கவில்லை. மரணதண்டனை என்பதை எந்த வகையிலும் என் மனசாட்சி ஏற்கவில்லை.

- காந்தியடிகள்